ஸ்ரீ:
ஸ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பகவத் கீதையும்
செம்பொருள் விளக்கமும்

உரையாசிரியர் - ஸ்ரீமான் - உ. வே. பண்டித -
திருவாலி - அ. இராமாநுஜாசாரியர்
(Retired Pandit, Sriperumbudur Sanskrit College.)

★

பதிப்பாசிரியர்
ஸ்ரீமான் பட்டு - விஜயரத்னப் பிள்ளை அவர்கள்
(பதிப்பாசிரியர் : ஸ்ரீ க்ருஷ்ணசைதன்ய ஸ்வாமிகள் சரித்திரம் 1902.)

★

Printed at The Model Press,
G. T., Madras.
1943.

TAMIL NADU ARCHIVES LIBRARY
671
R66,6
N43
Acc No 671
Dt 21.11.77
294.592
இராம-நூற்

(இராமாநுச நூற்றந்தாதி 68)

"ஆரெனக்கின்று நிகர்சொல்லில் மாயன் அன்று ஐவர்தெய்வத்
தேரினில் செப்பிய கீதையின் செம்மைப் பொருள்தெரியப்
பாரினில் சொன்ன இராமாநுசனைப் பணியுநல்லோர்
சீரினிற் சென்று பணிந்தது என்னுவியும் சிந்தையுமே."

அத்யாய அட்டவணை

அத்யாயம்	விஷயம்	பக்கம்
1.	அர்ஜுனவிஷாதயோகம்	1
2.	ஸாங்க்யயோகம்	12
3.	கர்மயோகம்	31
4.	ஞானயோகம்	42
5.	கர்ம ஸந்யாஸயோகம்	55
6.	ஆத்மஸம்யமயோகம்	63
7.	விஜ்ஞானயோகம்	75
8.	அக்ஷரபரப்பிரஹ்மயோகம்	85
9.	ராஜவித்யா ராஜகுஹ்யயோகம்	93
10.	விபூதியோகம்	104
11.	விசுவரூப ஸந்தரிசனயோகம்	111
12.	பக்தியோகம்	131
13.	க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞ விபாகயோகம்	137
14.	குணத்ரய விபாகயோகம்	149
15.	புருஷோத்தம ப்ராப்தியோகம்	158
16.	தைவாஸுரஸம்பத் விபாகயோகம்	166
17.	சிரத்தாத்ரய விபாகயோகம்	174
18.	மோக்ஷஸந்யாஸயோகம்	183
	பிற்குறிப்புகள்	209
	அநுபந்தங்கள்	228

ஸ்ரீ

பகவத் கீதை

1. கண்ணுநீ பார்த்தற்குக் காத்தற் கினிதுரைத்த
திண்ணார் திறமருளுஞ் சீர்கீதை—எண்ணாரு
நன்பொருளை யெங்கட்கு நாதா அருளுதலால்
புன்பொருளிற் போகா புலன்.

2. மாதவனு மாமாது மாறனும்வண் பூதூர்வாழ்
போதமுனி யுந்தந்தம் பொன்னடிகள்—மீதருள
உச்சிமேற் கொண்டே யுயர்கீதை மெய்ப்பொருளை
நச்சிமேற் கொண்டுரைப்பன் நான்.

3. வேதப் பொருளை விசயற்குத் தேர்மீது
போதப் புகன்ற புகழ்மாயன்—கீதைப்
பொருள்விரித்த பூதூர்மன் பொன்னருளால்வந்த
தெருள்விரிப்பன் அந்தமிழால் தோய்ந்து.

ஸ்ரீ:

தேசிகப்ரபந்தம்

(14-வது சரமஸ்லோகச்சுருக்கு.)

1. கல்லா ர்கலுங் கருமமு ஞானமுங் காதலுமற்
றெல்லா நிலைகளுக் கேற்க விதித்த கிரிசைகளும்
வல்லார் முயல்க வலியிழந்தாரென் றனைத் தொழுகென்(று)
எல்லாத் தரும முறைத்தவ ரின்னடி சேர்ந்தனமே.

2. வாரிதி விட்டு மலர்மக ளோடு மதுரைவந்து
பாரத வெஞ்சமர் பார்மகள் பாரஞ் செகவுகந்து
சாரதியாய் முன்பு தூதனுமாய்த் தளரும் விசயன்
தேரதில் நின்றவ னைத்தேற்றி னுன்திற மாயினமே.

3. அறிவு மனைத்து மிலாவடி யோமை யடைக்கலங்கொண்(டு)
உறவென நின்றதெல் லாமுற வேநின்ற தானெமக்காய்
மறுபிற வித்துயர் வாரா வகைமனங் கொண்டகலா
இறையவ னின்னரு ளாலெங்கள் சோகந் தவிர்ந்தனனே.

ஸ்ரீ கிருஷ்ணயபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பகவத் கீதை

[நான்முகன் திருவந்தாதி—71]

"சேயன் அணியன் சிறியன் மிகப்பெரியன்
ஆயன் துவரைக்கோ னய்நின்ற — மாயன் அன்று
ஓதிய வாக்கதனைக் கல்லாதார் உலகத்தில்
ஏதிலராய் மெய்ஞ்ஞான மில். —(திருமழிசையாழ்வார்.)

பதிப்புரை

"தர்மங்கள் நசித்து அதர்மங்கள் தலையெடுக்கையில், நானே என்னைப்பிறப்பித்துக்கொள்ளுகிறேன்" எனபகவான் அன்று பார்த்தன்தன் தேர்முன் நின்று விளம்பினன். அதுவே இன்று பகவத் கீதையாகப் பாரெங்கும் பரிமளிக்கிறது. சேதனர்கள் உஜ்ஜீவிக்கவும் மக்கள் திடச்சித்தம்பெறவும் மரணமாதிய துன்பங்களைக்கண்டு மயங்காமலிருக்கவும் எம்பெருமான் எடுத்துச்சொன்ன வாக்கியங்கள் அனைத்தும் பொன்னேபோல் போற்றக்கூடியனவாகும். அவற்றை ஒருதரமன்றிப் பலதரம்படித்தாலும் சலிக்காது. எத்தனைப்பிரசுரங்கள், எத்தனை செம்பொருள் விளக்கங்கள், எத்தனை பொழிப்புரைகள் எத்தனை வெளிவந்தாலும் அவற்றின் பெருமைக்கு ஈடாகாது. வடமொழியில் நல்லபயிற்சி இல்லாதார் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா வாக்கின் பெருமையை அணுவளவும் பிசகின்றித்தெளிவுபெற உணரவேண்டுமென்ற பேரவாவினல் இப்பிரசுரத்தை அடியேன் வெளியிடமுன் வந்தேன். இது வெளிவந்து பலருக்கும் பயன்படுவதற்குக்காரணமாகவிருந்த அன்பர்கள் பலராவர்.

சாந்தம் சீலம் சாற்றரும் கல்வி வாய்மை அடக்கம் முதலிய நற்குணம் ஒருங்கே வாய்க்கப்பெற்ற உலகம் போற்றும் உயர்தனி மருத்துவர் **ராவ்பகதூர் எம். ஆர். குருஸ்வாமி முதலியார் அவர்கள்** போன்ற அன்பர்கள் வரையாது பொருள்வழங்கி, அடியேனை ஊக்கப்படுத்தியதன் பயனகவே இந்நூல் இன்று இவ்வடிவம்

பெற்றுப் பலாது கைக்கும் பூஷணமாக விளங்குகிறது. அதுபற்றியும் அவர்களுக்கு என்றும் கடமைப்பட்டிருக்கிறேன். குறித்தகாலத்தில் இதனை வெளியிட முடியாதுபோனது ஒருபெருங் குறையாகும். அதற்குக்காரணம் காகிதப்பஞ்சமே. தீவிரமாக வேலையைமுடிக்க எண்ணித்துரிதப்படுத்தியதில் சிலபிழைகள் எதிர்பாராது நுழைந்து விட்டிருக்கக்கூடும். வாசகர்கள் க்ஷமிக்கவேண்டும். அடுத்தபதிப்பில் குறையின்றி அனைத்தும் நிறைவேற இறைவன் திருவருள் கூட்ட வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

அடியேன் வேண்டுகோளுக்கிணங்கி உரையெழுதி உதவிய ஸ்ரீமான் பண்டித திருவாலி - அ. இராமாநுஜாச்சாரியார் அவர்களுக்கும் அச்சிட்டு உதவிய மாடல் அச்சுக்கூட நிர்வாகிகளுக்கும் என்நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம் தங்கள் அன்பன்,

பட்டு. விஜயரத்னப் பிள்ளை,

(Publisher, Sri Krishna Chaitanya His Life and Teaching in Tamil in 1902.)

N.B.—கீதையைக் கற்பதால் உண்டாகும் நற்பலனைப்பற்றி டாக்டர் - அனிபெசன்ட் வெளியிட்டுள்ள பகவத் கீதையின் முகவுரையாக ஆங்கிலத்தில் எழுதியுள்ள பொன்போன்ற மொழிகள் அச்சிட்டு இதனுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

THE BHAGAVAD-GITA

OR

THE LORD'S SONG

AMONG the priceless teachings that may be found in the great Hindu poem of the *Mahabharata*, there is none so rare and precious as this, "The Lord's Song". Since it fell from the divine lips of Shri Krishna on the field of battle, and stilled the surging emotions of disciple and friend, how many troubled hearts has it quieted and strengthened, how many weary souls has it led to Him! It is meant to lift the aspirant from the lower levels of renunciation, where objects are renounced, to the loftier heights where desires are dead, and where the Yogi dwells in calm and ceaseless contemplation, while his body and mind are actively employed in discharging the duties that fall to his lot in life. That the spiritual man need not be a recluse, that union with the divine Life may be achieved and maintained in the midst of worldly affairs, that the obstacles to that union lie not outside us but within us—such is the central lesson of THE BHAGAVAD-GITA.

It is a scripture of Yoga: now Yoga is literally union, and it means harmony with the divine Law, the becoming one with the divine Life, by the subdual of all outward-going energies. To reach this balance must be gained, equilibrium, so that the self, joined to the Self, shall not be affected by pleasure or pain, desire or aversion, or any of the "pairs of opposites" between which untrained selves swing backwards and forwards. Moderation is therefore the keynote of the GITA, and the harmonising of all the constituents of man, till they vibrate in perfect attunement with the One, the Supreme Self. This is the aim the disciple is to set before him. He must learn not to be attracted by the attractive, nor repelled by the repellent, but must see both as manifestations of the one Lord, so that they may be lessons for his guidance, not fetters for his bondage. In the midst of turmoil he must rest in the Lord of Peace, discharging every duty to the fullest, not because he seeks the results of his actions, but because it is his duty to perform them. His heart is an altar, Love to his Lord the

flame burning upon it; all his acts, physical and mental, are sacrifices offered on the altar; and once offered, he has with them no further concern.

As though to make the lesson more impressive, it was given on a field of battle. Arjuna, the warrior prince, was to vindicate his brother's title, destroy a usurper who was oppressing the land; it was his duty as prince, as warrior, to fight for the deliverance of his nation and to restore order and peace. To make the contest more bitter, loved comrades and friends stood on both sides, wringing his heart with personal anguish, and making a conflict of duties as well as physical strife. Could he slay those to whom he owed love and duty, and trample on ties of kindred? To break family ties was a sin; to leave the people in cruel bondage was a sin; where was the right way? Justice must be done, else law would be disregarded; but how slay without sin? The answer is the burden of the book: Have no personal interest in the event; carry out the duty imposed by the position in life, realise that Ishvara, at once Lord and Law, is the doer, working out the mighty evolution that ends in bliss and peace; be identified with Him by devotion, and then perform duty as duty, fighting without passion or desire, without anger or hatred; thus activity forges no bonds, Yoga is accomplished, and the soul is free.

Such is the obvious teaching of the sacred book. But as all the acts of an Avatara are symbolical, we may pass from the outer to the inner planes, and see in the fight of Kurukshetra the battle-field of the soul, and, in the sons of Dhritarashtra, enemies it meets in its progress, Arjuna becomes the type of the struggling soul of the disciple, and Shri Krishna is the Logos of the soul. Thus the teaching of the ancient battle-field gives guidance in all later days, and trains the aspiring soul in treading the steep and thorny path that leads to peace. To all such souls in East and West come these divine lessons, for the path is one, though it has many names, and all souls seek the same goal, though they may not realise their unity.

[Extract from the Preface to the Bhagavat-Gita of :—

Dr. ANNIE BESANT.

ஸ்ரீ:

செம்பொருள்விளக்க உரையாசிரியர் முகவுரை.

"இந்நிலவுலகில் சிருஷ்டிகாலம்தொடங்கி அனேகதேசங்களில் அனேககோடிகிரந்தங்கள் உற்பத்தியாயிருக்கின்றன. இவற்றுள் குருக்ஷேத்திரத்தில் பாரதப்போர்தொடக்கத்தில் அர்ஜுநனை வியாஜமாகக்கொண்டு ஸகலலோகோஜ்ஜீவனார்த்தம் கருணையேவடிவாக அவதரித்த **ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா** திருவாய்மலர்ந்தருளிய **ஸ்ரீபகவத்கீதை**யைப்போன்ற கிரந்தம் இதற்குமுன்பும் அவதரிக்கவில்லை; இனியும் அவதரிக்கப்போகிறதில்லை. கல்விநடமாடும் நாடுகளில் கீதையின் பெயரைக்கேட்காதவர் இல்லையென்றே செல்லலாம். இவ்வுலகில் எத்தனைபாஷைகள் இருக்கின்றனவோ அத்தனைபாஷைகளிலும் கீதை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இப்பரதகண்டத்தில் மதத்ரய ஆசாரியர்கள்மாத்திரமல்லாமல், இன்னும் இந்தியாவிலும் வேறுதேசங்களிலும் உள்ள பெருங்கல்வியாளரான ஸகல வித்வான்களின் மனதையும் கீதை கவர்ந்துகொண்டுவருகிறது. கீதையைப்புகழ்ந்து இதன்மஹிமையைப்பற்றி எழுதாதபெரியார் உலகில் இல்லைஎன்றேசொல்லலாம். கீதைவிஷயமாய் அவதரித்திருக்கும் கிரந்தங்களைமாத்திரம் ஒன்றுசேர்த்தால் இதுவே ஒரு மாபெரும் புத்தகசாலையாகும். கீதை அடைந்திருக்கும் ஒரு கீர்த்தியைப்போல் வேறு எந்தகிரந்தமும் அடையவில்லை, அடையவும் முடியாதுஎன்று நிச்சயமாய்ச்சொல்லலாம்." இக்கீதைக்கு தனியேற்றம் ஒன்றுஉண்டு. எம்மதத்தினரும் தம்மதம் என்ன உச்சிமேற்கொண்டு நச்சியிருப்பதே. இத்தகைய சீரியகிரந்தத்திற்குச் செம்பொருள்உரைஒன்று இடுவதென்பது சீலமில்லாச் சிறியேனுடைய ஸாஹஸப்ரவ்ருத்தியே. இதற்குக்காரணம் ஸ்ரீபார்த்தஸாரதி ஸன்னதியில் ஸ்ரீமான். உ. வே. சிரோமணி ந்யாயவேதாந்த **வித்வான் - காரப்பங்காடு - வெங்கடாசாரியர் ஸ்வாமி** சென்ற சில காலங்களாக இக்கீதையின் செம்மைப்பொருளைப் பெண்ணுக்கும் பேதைக்கும் தெரியும்படி நிகழ்த்திவந்த உபந்யாஸங்களை அடுத்துக் கேட்கப்பெற்ற பாக்கியமேயாகும். இவ்வுரையை எழுதித்தரும்படி விரும்பியவரோ ஸ்ரீபகவத்பாகவத ஆசார்ய கைங்கர்யதுரந்தரராய் ஸ்ரீவைஷ்ணவம் ஸ்ரீஉலகெங்கும் தாண்டவமாடித்தழைத்தோங்கப் பெருமுயற்சிசெய்துவரும் ஸ்ரீமான் பட்டு - விஜயரத்னம் பிள்ளை அவர்கள். அறிவும் ஆற்றலும் லேசமுமில்லாது இவ்வுரையை இயற்றத்தொடங்கியது பொய்யில் கேள்விப்புலமையினோர் புகல் தெய்வயாக்கவிமாட்சி செந்தமிழ்நாடெங்கும் பரவவேண்டும்என்னும் பேராசையே. இரவிலும் விரைவிலும் எழுதநேர்ந்தமையின் பிழைகள் புகுந்திருக்கக்கூடும், குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல்

கற்றறிந்தமாந்தர் கடனுதலின் அப்பிழைகளைப் பொறுப்பார்கள் பெரியோர். வடமொழி சுலோகங்களைத் தமிழில் எழுதுங்கால் எழுத்துக்களின் ஓசைவேறுபாட்டைப் புலப்படுத்த தடித்தஎழுத்து கள் கையாளப்பட்டன. பாராயணத்திற்கு உபயோகப்படும்படி தெலுங்கு எழுத்தில் ஸ்ரீகீதை மூலம்முழுவதும் அச்சிட்டுச்சேர்க்கப் பட்டுள்ளது. சிலநண்பர்கள் விரும்பியவாறு கபிஸ்தலம் ஸ்ரீமான் துறைசாமிமூப்பனுர் இயற்றிய "பகவத்கீதைவசனம்" என்னும் நூலினின்று ஏற்றமேற்கோள்கள் கொள்ளப்பட்டன. 9-வது அத்தியாயம்முதல் இந்தமேற்கோள்கள் "பிறகுறிப்புகள்" என்னும் அநுபந்தத்தில் தரப்பட்டுள்ளன. இருமொழிப்புலமைமிக்குடைய பரமகாருணிகர் வாதிகேஸரி அழகியமணவாளச்சீயர் இயற்றிய "பக வத்கீதை வெண்பா" என்னும் அரியநூல் ஸ்ரீரங்கம் வாணீவிலாஸினீ அச்சுக்கூடத்தாரால் குறிப்புரையுடன் வெகுஅழகாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இதிலுள்ள வெண்பாக்கள் செம்பாகமானவை; சுலோகத்தை அப்படியே மொழிபெயர்த்ததுபோன்று அமைந்தவை. ஆதலின் பலர்க்கும் பயன்படவேண்டுமென்று கருதி பலவெண்பாக் கள் ஆங்காங்கு தரப்பட்டுள்ளன.

கர்மஜ் ஞானங்களை அங்கங்களாகக்கொண்ட பக்தியே இந்த கீதா சாஸ்த்ரத்தால் அருச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டதெனினும் நம்பூர் வாசாரியர்கள் "ஸர்வதர்மாந்" என்னும் சுலோகத்திற்கு '**ப்ரபத்தி என்னும் சரணுகதி**' பரமாகவே சிறியதும் பெரியதுமான பலரஹஸ் யங்கள் அருளிச்செய்திருக்கின்றனர். அதுவே அநுஷ்டானபர்யந்த மாக நமது ஸமூஹத்தில் வேரூன்றியிருத்தலினுல், பூர்வாசாரியர்கள் நிர்வாஹங்கள் பலவற்றைத்திரட்டி அநுபந்தங்களாக இறுதியில் தந்துள்ளேன். கைஎழுத்துப் பிரதியில் பற்பல திருத்தங்களை அன்போடு செய்துதந்த ஸ்ரீ உ. வே. S. S. ஆசார்யா (Retired French Professor, Andra Universities) அவர்கட்கு க்ருதஜ் ஞதை என்றும் உடையேன். இதை அச்சிடும்காலத்தில் 'ப்ரூப்' முதலியன பார்த்து மிகச்சிறந்த உதவியை உவந்துசெய்த ஸ்ரீமான் தி. கோவிந்தராஜுலு நாயக்கர் அவர்களுக்கும் அழகுபெற அச்சிட்டு உதவிய "மாடல் பிரஸ்" அதிகாரிகட்கும் நன்றிபாராட்டக் கடமைப் பட்டுளேன்.

நோயெல்லாம் பெய்ததோர் ஆக்கையையுடையேன் இவ்வரும் பெரும்செயலைத்தலைக்கட்ட அருந்துணையானது **பாகவதர் ஸ்ரீ உ.வே. உபந்யாஸகேஸரி ஸ்ரீரங்கம் சடகோபாசாரியர் ஸ்வாமி** ஆன்பாலும் நெய்யும் அரம்பை முதல் முக்கனியும் தேன்பாய ஊட்டியும் ஊக்கியதுமேயாகும்.

வாசகர்கள் அன்புகூர்ந்து குற்றங்குறைகளை எடுத்துக்காட்டுவ ராயின் அவற்றை மறுபதிப்பில் ஒழுகுங்பெறத் திருத்தியமைக்க அநுகூலமாகும்.

இம்மாபெருநூலை முடித்துத்தருவதற்குத் தோன்றாத்துணையாய்நின்ற ஸ்ரீ பார்த்தஸாரதியின் பாதாரவிந்தங்களை மனமொழி மெய்களால் அனவரதமும் வழிபடுகின்றேன்.

"போராழியேறி யடலாழியேவி
யருளாதுபொன்று பிறவிப்
போராழியேற விசையற்கு நெஞ்ச
மிசையப்பகர்ந்த பெரியோன்."

1/19, தேரடி வீதி,
திருவல்லிக்கேணி,
21—10—43.

இங்ஙனம்,
திருவாலி - அ. இராமாநுஜாசாரியன்.

ஸ்ரீ:

ஸ்ரீகீதாசாஸ்த்ர அவதாரிகை.

"ஏகம்சாஸ்த்ரம் தேவகீபுத்ரகீதம்
ஏகோதேவோ தேவகீபுத்ரஏவ,
ஏகோமந்த்ரஸ் தஸ்யநாமாநியாநி
கர்மாப்யேகம் தஸ்யதேவஸ்யஸேவா."

ஸ்ரீயஃபதியான ஸர்வேஶ்வரன் 'நல்லார்கள் தம்மை நலம்புரிந்து காத்தற்கும், பொல்லாரைப்பொன்று நெறிபோக்கற்கும், சொல்லாரும் முந்தை அறம் நாட்டம்உய்த்தற்கும், இந்தயுகந்தோறும் இசைந்து பிறந்தருளுவன்;' 'மேலொருபொருளும் இல்லா மெய்ப்பொருள் கால்நிலம்தோயவந்து கட்புலனாவதே' அவதாரம். தன்னை இங்ஙனம் தாழவிட்டுக்கொள்வது நிமக்னரை உயர்த்தவே. அருள் கொண்டு அவன் எடுத்தபிறவிகள் பல; அவற்றுள் இராம, கிருஷ்ண அவதாரங்கள் பூர்ணமானவை. பூர்ணாவதாரம் இரண்டினுள் ஸ்ரீராமாவதாரம் **ஆசாரப்ரதானம்** என்றும், ஸ்ரீகிருஷ்ணாவதாரம் **உபதேசப்ரதானம்** என்றும் நமது பூர்வாசார்யர்கள் நிர்வஹித்துள்ளனர். ஸ்ரீராமாவதாரத்திலும் "ஸக்ருதேவப்ரபந்நாய" என்னும் உபதேசம் விபீஷணாழ்வானைக்குறித்து நிகழ்ந்ததுண்டு. ஆனால், ஸ்ரீகிருஷ்ணாவதாரத்திலோ, "தத்வவிவேக நித்யத்வாநித்யத்வ, நியந்த்ருத்வ, ஸௌலப்ய, ஸாம்ய, அஹங்கார இந்திரியதோஷபல, மன:ப்ராதாந்ய, கரணநியமன, ஸுக்ருதிபேத, தேவாஸுரவிபாக, விபூதியோக, விஶ்வரூபதர்சன, ஸாங்கபக்திப்ரபத்தி த்வைவித்யாதிகளாலே அன்றோதிய கீதாஸமம்" என்கிற ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்தியின்படி தத்வவிவேகம்முதல் ப்ரபத்தீறாக பற்பல அர்த்தவிசேஷங்கள், அர்ஜுநனை வியாஜமாக்கி உலகெல்லாம் வாழ்ச்சி பெற எழுந்ததுபோல் வேறெங்கும் காணப்பட்டிலது.

ஸ்ரீய:பதியான நாராயணனே மேலானதத்வம், பக்தி, ப்ரபத்திகளே சிறந்தஹிதம், பகதநுபவகைங்கர்யங்களே பரமபுருஷார்த்தம் என்கிற ஸாரார்த்தங்களை மிகத்தெளிவாக விளக்குவது இந்த கீதா சாஸ்த்ரமே.

ஒரு கிரந்தத்தின்சிறப்பு என்பது அதனை ஆக்கியோன்பெருமையாலும், அதில் கூறப்பட்டுள்ளபொருளின் சீர்மையாலும், அது அவதரித்த க்ரமத்தின் வைலக்ஷண்யத்தாலும் ஸித்திக்கும்என்பர் ஆன்றோர். இம்மூவகைப்பெருமையும் இந்த கீதாசாஸ்த்ரத்திற்கு உள்ள அளவு வேறுஎந்தசாஸ்த்ரத்திற்கும் இல்லை என்று துணிந்து கூறலாம். ஏனெனில், இதனை அருளிச்செய்தவனோ ஸர்வஜ்ஞனாகிய ஸ்ரீபார்த்தஸாரதி; இதில் விளக்கப்பட்டுள்ள விஷயமோ மேலே காட்டப்பட்ட தத்வ, ஹித, புருஷார்த்தங்களின்நிரூபணம்; அவதரித்த கிரமத்தின் வைலக்ஷண்யம், சோகாவிஷ்டனான அர்ஜுநன் ஒருவனை வியாஜமாக்கி, ஸம்ஸாரிசேதனர்கள் அனைவரும் உஜ்ஜீவனத்தைப்பெறவேண்டும் என்னும் பகவானுடைய திருவருள் கரைபுரண்டு இங்ஙனே கீதாசாஸ்த்ரமாக அவதரித்தது என்பது. இத்தகைய கீதாசாஸ்த்ரத்தின் தேர்ந்தகருத்தை பரமாசார்யரான ஆளவந்தார் :—

“ ஸ்வதர்ம ஜ்ஞாந வைராக்ய ஸாத்ய பக்த்யேக கோசர:
நாராயண: பரம் ப்ரஹ்ம கீதாசாஸ்த்ரே ஸமீரித: ”

என்னும் அழகிய ஶ்லோகத்தால் அருளிச்செய்துள்ளார்.

இதன்பொருள் :—“ தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கங்களை வழுவாது ஒழுகுதல், சர்வேஶ்வரனுக்கு என்றும் அடிமையான ஜீவாத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தைப்பற்றிய அறிவு, ஈஶ்வரனையொழிந்த மற்றெல்லாப்பொருள்களிலும் சிறிதும் பற்றின்மை ஆகிய கர்ம, ஞான, வைராக்யம் என்னும் இவைகளால் உண்டாகும் பக்தியொன்றினாலேயே எய்தற்குரிய பரப்ரஹ்மமாகிய நாராயணன் கீதைஎன்னும் சாஸ்த்ரத்தில் செவ்வனே விளக்கப்பட்டுள்ளான் ” என்பது.

ஆதலால், பொய்ந்நின்றஞானமும், பொல்லாஒழுக்கும், அழுக்குடம்பும்பெற்று அவனியில் உழலாமல் நிரதிசயமான பேரின்வாழ்வைப் பெறுதற்குச் சிறந்தசாதனமாயிருப்பது கண்ணன் கனிவாயினின்றும் போந்த கீதைஎன்னும் அமுதமேயாகும்.

சாஸ்த்ரம்என்பது தேவகிபுத்ரன் அருளியகீதம் ஒன்றே. தெய்வம்என்பது தேவகீபுத்ரன் ஒருவனே; மந்த்ரம்என்பது தேவகீபுத்ரனது திருநாமமாகிய ஸ்ரீகிருஷ்ணமந்த்ரம் ஒன்றே; கருமமாவதும் அந்தத்தேவகிபுத்ரன் திருவடிகளில் பணிசெய்துகிடப்பதே,

“ ஸ்ரீக்ருஷ்ணாயநம: ”

ஸ்ரீ:
ஸ்ரீ கிருஷ்ணய பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பகவத் கீதையும்

செம்பொருள் விளக்கமும்

முதல் அத்தியாயம்

அர்ஜுன விஷாதயோகம்; அருச்சுனனது சோகத்தை உணர்த்தும் பகுதி.

[முதல் சுலோக அவதாரிகை]

(பகவத் கீதை வெண்பா.)

"வேண்டிடத்தி லன்றி வெறுத்து நலமிரக்கம்
பூண்டவற்றைப் பொல்லாப் புலமென்று—மீண்டகன்ற
சுற்றமது நோக்கியே சோகித்த தேர்விசயன்
உற்றமயல் சொல்லுமுத லோத்து."

பாண்டவரும் கௌரவரும் தத்தம் படைகளைத் திரட்டிப் போர்க்களங் குறுகிநின்ற போழ்து, வேதவியாஸ பகவான், தன் மைந்தனும் மாணவனுமான அந்தனிடம் வந்து, "பிள்ளாய்! மூண்டெழும் இப்போரில் நின்மக்கள மாள்வது திண்ணம். நீ இங்கிருந்தவாறே போர்க்களத்து நிகழ்ச்சிகளைக் காணவிரும்புவையாயின் அங்ஙனம் காண்பதற்கு ஏற்ற ஞானக்கண்ணை அளிக்கவந்துளேன்" என்ன, 'போர் நிகழ்ச்சிகளைக் காணும் விருப்பம் இலது; கேட்க மட்டும் விரும்புகிறேன்; முற்றும் அறிவித்தருளுவீர்' என்றான் குருடன் திருதராஷ்டிரன். அப்போது வேதவியாஸர், தன் மாணவனும் அந்தன் தேர்ப்பாகனுமான ஸஞ்சயனை அழைத்து, 'முக்காலங்களை உணரும் ஆற்றலை உனக்கு அருளியுள்ளேன்; போர் நிகழ்ச்சிகளனைத்தும் உன் கண்முன்னே தோற்றும்; அவை அனைத்தையும் ஒன்றும் விடாமல் அப்படியே அந்தனுக்கு உரைப்பாயாக" என்று ஆணையிட்டகன்றனர்.

அவ்வாறே அனைத்தையும் கண்கூடாகக் கண்ட ஸஞ்ஜயன், அவற்றை ஆதியோடந்தமாய், அந்தகனுக்கு உரைக்கத் தொடங்கி

னன். ஸ்ரீகிருஷ்ணபகவான், அருச்சுனனை முன்னிலைப் படுத்தித் திருவாய் மலர்ந்தருளிய கீதை என்னும் அமுதத்தைச் செவிவாயாக, நெஞ்சுகாளுக உட்கொண்ட ஸஞ்சயன், "நின்புதல்வர் பற்பல அரசரும் அரசிளங்குமரரும் புடைசூழப் பெரும் படை திரட்டிக் குருக்ஷேத்திரம் குறுகினர்" என்றனன்.

அச்சொற்கேட்ட அந்தகன், மக்கள்பால் வைத்த நேயத்தால், அவர்கட்குப் போரின்றியே குருநாடு கைப்புகவேண்டும் என்னும் அவாக்கொண்டு மறைபொருள்படச் சஞ்சயனை நோக்கி இங்ஙனே உசாவுவானயினன்.

த்ருதராஷ்டிர உவாச - திருதராஷ்டிரன் வினவுவது.

1. தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ:
மாமகா: பாண்டவாஶ்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய!

சஞ்சய! அற நிலமாகும் குருநிலத்தில் போர்புரிய விரும்பித் திரண்டுள நம்மனேரும் பாண்டவர்களும் யாது செய்தனர்?

குருக்ஷேத்திரத்தைத் தருமக்ஷேத்திரமென விசேடித்தது, அறம் விளையும் நிலமாகியும், அறம் மேல் மேல் வளர்ந்து தழைக்கும் தலமாகியும் உளது குருக்கள் தொன்றுதொட்டு ஆண்டுவந்தமை பற்றி என்பது தோன்ற; இங்கு இவ்வாறு இதனைக் கூறிய அந்தன் உள்ளக்கருத்து யாதெனில், தரும நிலத்தின் மாட்சியால் இங்கு வந்தவுடன் பாண்டவர் மனம் மாறிப் போர்புரிதல் பாவமாகுமெனக் கருதித் திரும்பக் காட்டிற்கே போய்விடமாட்டார்களா என்பது ஒன்று; தன் மக்களே தரும நிலத்தை மிதித்த மாத்திரத்தால் மனம் தெளிந்து தாயபாகத்தைத் தருமனுதியர்க்கும் வழங்கி விடுவார்களாகில் என்ன செய்வது என்ற தடுமாற்றம் மற்றென்று. 'என் மைந்தரும்' 'பாண்டவர்' என்று பிரித்துப் பேசியதில் பாண்டவர்பால் அந்தனுக்குள்ள அழுக்காறு வெளியாகும். சஞ்சயன் - விருப்பு வெறுப்புக்களை நன்ருக வென்றவன் எனப் பொருள் படும் காரணப் பெயர்.

ஸஞ்சய உவாச - ஸஞ்சயன் சொல்வது.

2. த்ருஷ்ட்வாது பாண்டவாநீகம் வ்யூடம் துர்யோதனஸ் ததா
ஆசார்ய முபஸங்கம்ய ராஜா வசன மப்ரவீத்.

(இருதிறப் படைகளும் போர்க்களத்தே கூடிய) அப்பொழுது, துரியோதன மன்னன், பாண்டவர் படை அணிவகுக்கப் பட்டுள்ளதைக் காண்டலும் துரோணுசாரியரைக்கிட்டிப் (பின்வரும்) வசனத்தைப் புகன்ருன்.

இங்கு, தருமநிலம் சேர்ந்தும் நின்மகன், மனம் தெளிவடையாது போர்புரியவே முனைந்துள்ளான் என்று கருத்துப்படப் பேசுகிருர் ஸஞ்சயன்.

3. பஶ்யைதாம் பாண்டுபுத்ராணும் ஆசார்ய மஹதீம் சமூம்
வ்யூடாம் த்ருபதபுத்ரேண தவஶிஷ்யேண தீமதா.

(துரியோதனன் துரோணரிடம் கூறுவதாகச் சஞ்ஜயன் திருத ராஷ்டிரனிடம் சொல்வது) :—ஆசார்ய ! பேரறிவுனன உமது சீடன் துருபதன் மகன் வகுத்துள பாண்டு மக்களின் பெரும் படைகளைப் பார்த்தருள்வீர்.

4. அத்ர ஶூரா மஹேஷ்வாஸா : பீமார்ஜுன ஸமா யுதி
யுயுதானோ விராடஶ்ச த்ருபதஶ்ச மஹாரத :

5. த்ருஷ்டகேதுஶ் சேகிதாந : காஶீ ராஜஶ்ச வீர்யவாந்
புருஜித் குந்திபோஜஶ்ச ஶைப்யஶ்ச நரபுங்கவ:

6. யுதா மந்யுஶ்ச விக்ராந்த உத்தமௌஜாஶ்ச வீர்யவாந்
ஸௌபத்ரோ த்ரௌபதேயாஶ்ச ஸர்வஏவ மஹாரதா :

இப்பாண்டவப் படையில் வலிமை மிக்க சூரர்களும், பெரும் வில்லாளிகளும், வீமனையும் பார்த்தனையும் ஒத்த யுயுதானன் (சாத்தகி) ; விராடன் ; மஹாரதியாகிய துருபதன் ; திருஷ்டகேது ; சேகிதானன் ; வீர்யவானுன காசிநாட்டிறைவன் ; புருஜித் ; குந்தி போஜன் ; மனிதரில் உயர்ந்தோனுகிய சைப்பியன் ; விக்கிரமசாலி யான யுதாமந்யு ; வீரம் நிறைந்த உத்தமௌஜா ; சுபத்திரை புதல் வன் (அபிமந்யு); திரௌபதி மக்களும் உள்ளார் ; இவர்கள் யாவரும் மஹா ரதிகர்களே.

7. அஸ்மாகந்து விஶிஷ்டாயே தாந்நிபோத த்விஜோத்தம !
நாயகா மமஸைந்யஸ்ய ஸம்ஜ்ஞார்த்தம் தாந்ப்ரவீமிதே.

இருபிறப்பாளரில் மிக்கோய் ! நம்மவர்களிற் சிறந்தோரை நீரறிவீர். என் படைத்தலைவர்களைக் குறிக்கொள்ளுமாறு நுமக்கு எடுத்துரைக்கிறேன்.

8. பவாந் பீஷ்மஶ்ச கர்ணஶ்ச க்ருபஶ்ச ஸமிதிஞ்ஜய :
அஶ்வத்தாமா விகர்ணஶ்ச ஸௌமதத்திஸ் ததைவச.

9. அந்யேச பஹவஶ் ஶூரா மதர்த்தே த்யக்தஜீவிதா :
நாநாஶஸ்த்ர ப்ரஹரணஸ் ஸர்வே யுத்த விஶாரதா :

தேவரீர் ; பீஷ்மர் ; கர்ணன் ; மாற்றுரை மாற்றழிக்கவல்ல கிருபன் ; அசுவத்தாமா ; விகர்ணன் ; ஸோமதத்தன் மகன் பூரி சிரவசு ; இவர்களன்றி என்பொருட்டு உயிர்துறக்க வேறுபல

சூரர்கள் பல்வகைப் படைக்கலனுடையாராய் உள்ளார்; அனைவரும் போர்த்திறம் மிக்கோரே.

10. அபர்யாப்தம் ததஸ்மாகம் பலம் பீஷ்மாபிரக்ஷிதம்,
பர்யாப்தம் த்வித மேதேஷாம் பலம் பீமாபிரக்ஷிதம்.

ஆயினும், பீஷ்மரால் காக்கப்படும் நமது படை அளவு போதாது (அதாவது, பாண்டவர் படையை வெல்லும் திறனில்லாதது) பீமனால் காக்கப்படும் அப்படையோ போதிய அளவுடையது (அதாவது, நம்மை வெல்லுந் திறனுடையது.)

11. அயனேஷு ச ஸர்வேஷு யதா பாக மவஸ்த்திதா :
பீஷ்ம மேவாபிரக்ஷந்து பவந்தஸ் ஸர்வஏவஹி.

ஆதலின், நீங்கள் எல்லோருமே எல்லா வழிகளிலும் அவரவர்கட்கு வகுத்த இடங்களில் உறுதியாக இருந்து பீஷ்மரையே பாதுகாக்கக் கடவீர்.

12. தஸ்ய ஸஞ்ஜநயந் ஹர்ஷம்
குருவ்ருத்த: பிதாமஹ :
ஸிம்ஹநாதம் விநத்யோச்சைஶ்
ஶங்கம் தத்மௌ ப்ரதாபவான்.

குருகுலப் பெரியோர் புகழ்சான்ற பாட்டனார் பீஷ்மர், அத்துரியோதனனுக்குக் களிப்பூட்ட, உரத்த ஸிம்ஹநாதம் எழத் தன்சங்கை ஊதினர்.

13. ததஶ் ஶங்காஶ்ச பேர்யஶ்ச பண வாநக கோமுகா :
ஸஹஸை வாப்ய ஹந்யந்த ஸ ஶப்தஸ் துமுலோபவத்.

அதிலிருந்து சங்குகள் பேரிகைகள், மிருதங்கங்கள், பறைகள், கொம்புகள் முதலியன ஒரே காலத்தில் முழங்கலாயின; அவ்வொலி எங்கெங்கும் பேரதிர்ச்சியுடன் பரவியது.

14. ததஶ்வேதைர் ஹயைர்யுக்தே மஹதி ஸ்யந்தநே ஸ்திதௌ
மாதவ: பாண்டவஶ்சைவ திவ்யௌ ஶங்கௌ ப்ரதத்மது:

பின்னர், வெண்குதிரைகள் பூட்டிய * பெருந்தேரில் வீற்றிருக்கும் மாதவனும், அருச்சுனனும் தெய்விகமான, சங்குகளை நன்கு ஊதினர்.

---

*பார்த்தசாரதி, (பெரியதிருமொழி. II-3-1.)
விற்பெரு விழவுங் கஞ்சனும் மல்லும், வேழமும் பாகனும் வீழச்
செற்றவன் தன்னைப் புரமெரி செய்த சிவனுறு துயர்களை தேவைப்
பற்றலர் வீயக் கோல்கையிற்கொண்டு, பார்த்தன்தன் தேர்முன் நின்றானைச்
சிற்றவை பணியால் முடிதுறந்தானைத், திருவல்லிக்கேணிக் கண்டேனே.

15. பாஞ்சஜந்யம் ஹ்ருஷீகேஶோ
தேவதத்தம் தநஞ்ஜய:
பௌண்ட்ரம் தத்மௌ மஹாஶங்கம்
பீமகர்மா வ்ருகோதர:

இருடீகேசன் * பாஞ்சஜந்யத்தையும், தனஞ்ஜயன் தேவதத்தத்தையும், விருகோதரன் பௌண்ட்ரம் என்னும் பெருஞ்சங்கையும் ஊதினர்.

16. அநந்தவிஜயம் ராஜா குந்தீபுத்ரோ யுதிஷ்டிர:
நகுலஸ் ஸஹதேவஶ்ச ஸுகோஷ மணிபுஷ்பகௌ.

குந்தியின் மகன் யுதிஷ்டிரராஜன் அனந்தவிஜயத்தையும் நகுல ஸஹதேவர் முறையே ஸுகோஷ மணிபுஷ்பகங்களையும் ஊதினர்.

17. காஶ்யஶ்ச பரமேஷ்வாஸ: ஶிகண்டீச மஹாரத:
த்ருஷ்டத்யும்நோ விராடஶ்ச ஸாத்யகி ஶ்சாபராஜித:

18. த்ருபதோ த்ரௌபதேயாஶ்ச
ஸர்வஶ: ப்ருதிவீபதே
ஸௌபத்ரஶ்ச மஹாபாஹு:
ஶங்காந்தத்மு: ப்ருதக் ப்ருதக்:

சீரியவில்லை யேந்திய காசியரசனும், மஹாரதிகனுன சிகண்டியும், த்ருஷ்டத்யும்நனும், விராடனும், ஒருவராலும் வெல்ல முடியாத ஸாத்யகியும், துருபதனும், திரௌபதிமைந்தரும், தடக்கையன் ஸுபத்ரைமகன் அபிமந்யுவும் தத்தம் சங்குகளைத் தனித்தனியே நாற்புறமும் ஊதினர், பூபதியே!

---

*பஞ்சஜனன் என்னும் அசுரன் வயிற்றைக் கிழித்து அவன் எலும்பினின்று மெடுத்தமையால் பாஞ்சஜன்னியம் என்னும் பெயர் பெற்றது.

இச்சங்கைக் குறிக்கும் சில பாசுரங்கள்:

"படைபோர்புக்கு முழங்கும் அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே." (திருப்பல்லாண்டு.)

"பந்தார் விரலாள் பாஞ்சாலி கூந்தல் முடிக்கப்பாரதத்துக், கந்தார் களிற்றுக் கழல் மன்னர் கலங்கச் சங்கம் வாய்வைத்தான்;" (பெரிய திருமொழி VI-7-8.)

"கடலில் பிறந்து கருதாது பஞ்சசனன், உடலில் வளர்ந்துபோய் ஊழியான் கைத்தலத்துத், திடரிற் குடியேறித் தீய அசுரர், நடலைப்பட முழங்குந் தோற்றத்தாய் நற்சங்கே." (நாச்சியார் திருமொழி. 7-2.)

விருகோதரன் - எல்லாவற்றையும் ஜீரணம் செய்யும் விருகம் என்னும் தீயை வயிற்றிலுடையவன். இங்கு பீமனைக் குறிக்கும்.

19. ஸகோஷோ தார்த்தராஷ்ட்ராணும் ஹ்ருதயானி வயதாரயத்
நபஶ்ச ப்ருதிவீம்சைவ துமுலோ வ்யநுநாதயந்.

அந்த * நாதம் விண்ணிலும் மண்ணிலும் பேரதிர்ச்சியாய் எதிரொலித்து திருதராஷ்டிரன் மைந்தர் நெஞ்சைப் பிளந்தது.

20. அத வ்யவஸ்திதாந் த்ருஷ்ட்வா
தார்த்த ராஷ்ட்ராந் கபித்வஜ:
ப்ரவருத்தே ஶஸ்த்ரஸம்பாதே
தநுருத்யம்ய பாண்டவ:

21. ஹ்ருஷீகேஶம் ததாவாக்ய மிதமாஹ மஹீபதே!

அரசே! அப்பால், அனுமத் கொடியுடைய அருச்சுனன், திருதராஷ்டிரன்மைந்தர் போர்புரிய முனைந்து நிற்பதைக் கண்டு, அம்புகள் எய்யப்புகும் தருணத்தில், வில்லை எடுத்துக்கொண்டு ஹ்ருஷீகேசனுக்கு இம்மொழிகளைச் சொன்னான்.

21½. ஸேநயோ ருபயோர்மத்யே ரதம் ஸ்தாபயமேச்யுத!

22. யாவதேதாந் நிரீக்ஷேஹம் யோத்து காமாநவஸ்திதான்
கைர்மயா ஸஹயோத்தவ்ய மஸ்மிந் ரணஸமுத்யமே.

23. யோத்ஸ்ய மாந நவேக்ஷேஹம் யஏதேத்ர ஸமாகதா:
தார்த்தராஷ்ட்ரஸ்ய துர்புத்தேர் யுத்தே ப்ரியசிகீர்ஷவ:

அச்சுத! இப்படை யெழுச்சியில் போர்விரும்பி நிற்போரையும், யாருடன் நான் போர்புரிய வேண்டுமென்பதையும் கெட்ட எண்ணங்கொண்ட துரியோதனனுக்கு இச்சகம் செய்ய இங்கு போரிடத்திரண்டு நிற்போரையும் நான் காணுமாறும், இருபடைகட்கும் இடையே என் தேரை நிறுத்து.

ஸஞ்ஜய உவாச - ஸஞ்சயன் சொல்வது.

24. ஏவமுக்தோ ஹ்ருஷீகேஶோ குடாகேஶேந பாரத!
ஸேநயோ ருபயோர் மத்யே ஸ்தாபயித்வா ரதோத்தமம்.

25. பீஷ்ம த்ரோண ப்ரமுகதஸ் ஸர்வேஷாம்ச மஹீக்ஷிதாம்
உவாச பார்த்த பஶ்யைதாந் ஸமவேதாந் குரூநிதி.

பாரத! இங்ஙன் † குடாகேசன் உரைக்கக்கேட்ட ‡ ஹ்ருஷீகேசன், இரண்டு படைகட்கு மிடையே, பீஷ்மர், துரோணர் மற்றெல்லா அரசர்கட்கு மெதிரே, சாலச்சிறந்த அத்தேரை

---

* 15-வது சுலோகக் கீழ்க்குறிப்பைப் பார்க்கவும்.

† நித்திரையை வென்றவன் - அருச்சுனன். ‡ இந்திரியங்களை வென்றவன் - கண்ணன். "பொறிவாயில் ஐந்து அவித்தான்" குறள்.

தேரை நிறுத்தி, "பார்த்த! ஒன்று கூடியிருக்கும் இக்கௌரவர் களைப்பாராய்" என்றான்.

26. தத்ரா பஸ்யத் ஸ்திதாந் பார்த்த:
பித்ரூநத பிதாமஹாந்
ஆசார்யாந் மாதுலாந் ப்ராத்ரூந்
புத்ராந் பௌத்ராந் ஸகீம்ஸ்ததா.

27. ஶ்வஶுராந் ஸுஹ்ருதஶ்சைவ ஸேநயோ ருபயோரபி

பிறகு பார்த்தன், அவ்விரு படைகளிலு மிருக்கும் தன் தந்தையர், பாட்டன்மார், ஆசாரியர், தாயுடன் பிறந்தோர், தன்னுடன் பிறந்தோர், மக்கள், பேரன்மார், அங்ஙனமே தோழர், மாமன்மார், அன்பர்கள் இன்னோர்களை ஆங்கு நிற்கக் கண்டான்.

27½. தாந் ஸமீக்ஷ்யஸ கௌந்தேயஸ் ஸர்வாந் பந்தூ நவஸ்திதாந்.

28. க்ருபயா பரயாவிஷ்டோ
விஷீதந்நித மப்ரவீத்

அந்த குந்தியின் மகன் அங்கே நிற்கும் உற்றாரனைவரையும் உற்று நோக்கி இரக்கம் மீதூரத் துயருற்று இவ்வண்ணம் கூறினன்.

அர்ஜுன உவாச - அர்ஜுனன் சொல்வது.

28½. த்ருஷ்ட்வேமம் ஸ்வஜநம் க்ருஷ்ண
யுயுத்ஸும் ஸமுபஸ்திதம்

29. ஸீதந்தி மம காத்ராணி முகஞ்ச பரிஶுஷ்யதி
வேபதுஶ்ச சரீரேமே ரோமஹர்ஷஶ்ச ஜாயதே.

ஓ! கிருஷ்ண! போர்புரிய விருப்பங்கொண்டு நெருங்கி வந்திருக்கும் இச்சுற்றத்தினரைப் பார்த்து எனது அவயவங்கள் குன்றிப் போகின்றன; வாயும் உலர்ந்து போகின்றது; உடலில் நடுக்கமும் மயிர் சிலிர்ப்பும் உண்டாகின்றது.

30. காண்டீவம் ஸ்ரம்ஸதே ஹஸ்தாத் த்வக்சைவ பரிதஹ்யதே
நசஶக்நோம் யவஸ்தாதும் ப்ரமதீவச மே மந:

காண்டீவம் எனது கையினின்று நழுவுகின்றது; தோல் முற்றும் எரிகின்றது; மனம் சுழல்கின்றது; நிற்கவும் மாட்டுகிறிலேன்.

31. நிமித்தாநி ச பஶ்யாமி விபரீதாநி கேஶவ!
நசஶ்ரேயோநு பஶ்யாமி ஹத்வா ஸ்வஜந மாஹவே.

கேசவா! கேடுவிளைவிக்கும் சகுனங்களையும் காண்கிறேன். போரில் நம்மனோர்களைக் கொன்றுவிட்டுப் பிறகு எவ்வித மேன்மையும் நான் எதிர்பார்க்கவில்லேன்.

32. நகாங்க்ஷே விஜயம் க்ருஷ்ண நசராஜ்யம் ஸுகாநிச
கிம்நோ ராஜ்யேந கோவிந்த கிம் போகைர்ஜீவிதேநவா.

கிருஷ்ணா! நான் வெற்றியும், இவ்வரசும், இன்பமும் விரும்பேன். கோவிந்தா! நங்கட்கு ராச்சியத்தாலாவதென்? இன்பங்களாலாவதென்? உயிர் வாழ்க்கையும்தான் எதற்கு?

33. யேஷாமர்த்தே காங்க்ஷிதம்
நோராஜ்யம் போகாஸ்ஸுகாநிச
தஇமே வஸ்திதா யுத்தே
ப்ராணும்ஸ்த்யக்த்வா தநாநிச.

எவர் பொருட்டு நாம் ராச்சியத்தையும், நுகரப்படுமவைகளையும், இன்பங்களையும் விரும்புகின்றோமோ, அப்படிப்பட்டவர்கள், தங்கள் உயிர்களையும் செல்வங்களையும் வெறுத்து, இதோ போர்க்களத்தில் நிற்கின்றனர்.

34. ஆசார்யா: பிதர: புத்ராஸ்
ததைவச பிதாமஹா:
மாதுலாஸ் ஸ்வஸுரா: பௌத்ரா
ஸ்யாலாஸ் ஸம்பந்திநஸ்ததா.

(அவர்கள் யாவரெனில்); ஆசார்யர்கள், தகப்பன்மார், மக்கள், பாட்டன்மார், அம்மான்மார், மாமன்மார், பேரன்மார், மைத்துனன்மார் அவ்வாறே சம்பந்திகளும்.

35. ஏதாந் நஹந்து மிச்சாமி
க்நதோபி மதுஸூதந!
அபி த்ரைலோக்ய ராஜ்யஸ்ய
ஹேதோ: கிந்து மஹீக்ருதே.

மதுஸூதன! யான் கொல்லப்படினும், மூவுலகாட்சி கிடைப்பதெனினுங்கூட, இவர்களைக்கொல்ல ஒருப்படேன்; அப்படியிருக்க, இப்பூமி எம்மாத்திரம்?

36. நிஹத்ய தார்த்தராஷ்ட்ராந்ந: காப்ரீதி ஸ்யாஜ் ஜநார்த்தந!
பாபமேவாஸ்ரயே தஸ்மாந் ஹத்வைதாந் ஆததாயிந:

ஜனார்த்தன! திருதராஷ்டிரன் மக்களைக்கொன்று நமக்கு என்ன இன்பம் உண்டாகும்? * ஆததாயிகளான இவர்களைக்கொன்றால் நம்மைப் பாவமேசாரும்.

37. தஸ்மாந் நார்ஹாவயம் ஹந்தும்
தார்த்தராஷ்ட்ராந் ஸபாந்தவாந்
ஸ்வஜநம் ஹி கதம் ஹத்வா
ஸுகிந ஸ்யாம மாதவ!

மாதவ! ஆதலின், உற்றாருடன் கூடிய துர்யோதனாதியரைக் கொல்வதற்கு நாம் தகுதியற்றவர்கள்; (ஏனெனில்) நம்மவர்களைக் கொன்று எங்ஙனே இன்பமுடையோர் ஆவோம்?

38. யத்யப்யேதே நபஸ்யந்தி லோபோபஹத சேதஸ:
குலக்ஷய க்ருதம் தோஷம் மித்ர த்ரோஹே ச பாதகம்.

39. கதம் நஜ்ஞேய மஸ்மாபி: பாபா தஸ்மாந் நிவர்த்திதும்
குலக்ஷயக்ருதம் தோஷம் ப்ரபஸ்யத்பிர் ஜநார்த்தந!

குலநாசத்தால் விளையும் பாவத்தையும், நட்பினர்க்குக்கேடு சூழ்வதால் பிறக்கும் பாதகத்தையும், பேராசையால் மதியிழந்த இவர்கள் காணாது போயினும், ஜனார்த்தன! குல நாசத்தால் உண்டாகும் கேட்டை நன்குணர்ந்த நாம் இப்பாவத்தினின்றும் விலக எப்படி அறியாமற் போனோம்?

40. குலக்ஷயே ப்ரணஸ்யந்தி குலதர்மாஸ் ஸநாதநா:
தர்மே நஷ்டே குலம் க்ருத்ஸ்நம் அதர்மோபிபவ த்யுத.

குலநாசத்தால் பண்டைக் குலதர்மங்கள் முற்றும் அழிந்து விடும்; தர்மங்கள் அழிய அதர்மங்கள் குலம் முழுவதையும் கவரும் அல்லவா?

41. அதர்மாபி பவாத் க்ருஷ்ண
ப்ரதுஷ்யந்தி குலஸ்த்ரிய:
ஸ்த்ரீஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய
ஜாயதே வர்ணஸங்கர:

* ஆததாயிகளாவார் வீடு முதலியவற்றில் தீ யிடுபவன், உண்ணுஞ்சோற்றில் நஞ்சுகலப்பவன், கொடும்படைகொண்டு கொல்லவருபவன், பொருளைத் திருடுபவன், பூமியைக் கைபற்றுபவன், பிறன் மனைவியை வலியக்கொள்பவன் எனஇவர். இவ்வாறு வரையும் ஆராயாது கொல்லலாம். அதனால் ஒரு சிறிது பாவமும் இல்லை. இவ் வறுவகைச் செயல்களையும் பாண்டவர் பால் புரிந்த பாவிகள் கௌரவர்,

கண்ணா! அதர்மக் கவர்ச்சியினால் குலமாதர்கள் கெட்டுப் போவர்கள். யாதவ! மாதர்கள் நிலைகெட, சாதிகள் ஒன்றோ டொன்று கலந்து விடும்.

42. ஸங்கரோ நரகாயைவ குலக்நாநாம் குலஸ்யச
பதந்தி பிதரோ ஹ்யேஷாம் லுப்த பிண்டோதக க்ரியா:

அந்த சாதிக்கலப்பு குலங்களையும் குலத்தைக்கெடுத்தோரையும் நரகில் வீழ்த்தும்; அப்போது பிண்டமும் நீர்க்கடனு மின்றி இவர்களுடைய பித்ருக்களும் நரகில் வீழ்வர்களன்றோ!

43. தோஷை ரேதை: குலக்நாநாம் வர்ண ஸங்கர காரகை:
உத்ஸாத்யந்தே ஜாதிதர்மா: குலதர்மாஶ்ச ஶாஶ்வதா:

குலத்தைக் கெடுத்தவர்களின் இத்தீச்செயல்கள் சாதிக் கலப் புண்டாக்குவதுடன் வெகுகால சாதிகுல ஒழுக்கங்களை அழிக்கும்.

44. உத்ஸந்ந குலதர்மாணாம் மநுஷ்யாணாம் ஜநார்த்தந!
நரகே நியதம் வாஸோ பவதீத்யநு ஶுஶ்ரும.

ஜனார்த்தன! குல தருமங்கள் அழிந்த மக்கட்கு என்றுமே நரக வாசம் உண்டு என்று அடிக்கடி கேட்டிருக்கின்றோம்.

45. அஹோபத மஹத்பாபம் கர்த்தும் வ்யவஸிதாவயம்
யத்ராஜ்ய ஸுக லோபேந ஹந்தும் ஸ்வஜந முத்யதா:

அந்தோ! ராச்சியத்தையும், இன்பத்தையும் விழைந்து நம்மவரைக் கொல்லத் துணிந்த நாம் பெரும்பாவம் செய்ய அல்லவோ முனைந்தோம்!

46. யதி மாமப்ரதீகாரம் அஶஸ்த்ரம் ஶஸ்த்ர பாணய:
தார்த்தராஷ்ட்ரா ரணே ஹந்யு: தந்மே க்ஷேமதரம் பவேத்.

எதிர்க்காமல் ஆயுதமின்றி நிற்கும் என்னை ஆயுதமேந்திய திருதராஷ்டிர புத்திரர்கள் போரில் கொல்வார்களேயானால் அது எனக்கு மேலான க்ஷேமமேயாகும்.

ஸஞ்ஜய உவாச - ஸஞ்ஜயன் விளம்பினன்.

47. ஏவமுக்த்வார்ஜுநஸ் ஸங்க்யே ரதோபஸ்த உபாவிசத்
விஸ்ருஜ்ய ஸஶரம் சாபம் ஶோகஸம்விக்ந மாநஸ:

அருச்சுனன் இவ்வண்ணம் கூறித் துயராலே துடிக்கும் மனத்தினனாய் அம்புடன் வில்லையும் நழுவவிட்டுப் போர்க்களத்தே தேர்த்தட்டில் உட்கார்ந்தான்.

"இவ்வாறு சொல்லி இகல்விசயன் அம்புடனே
தெவ்வார் சிலை பொகட்டுச் சிந்தைதளர்ந்—தவ்வாறு
நின்ற தேர்மீது நிலை குலைந்து தானிருந்தான்
துன்றுசோகத்தால் திகைத்து." (பா. கீ. வெ. I-34)

முதல் அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ :

இரண்டாவது அத்தியாயம்

ஸாங்கிய யோகம்

" மேலிரண்டா மோத்தால் விசயன் வெறுப்பகற்றக்
கோலியுயி ருடலின் கூற்றிவைகள்—காலியுடன்
போமாயன் மன்னுயிர்கள் போன்ருமை முன்னகலா
மாமாயன் சொன்னன் மகிழ்ந்து."

ஸஞ்ஜய உவாச - ஸஞ்சயன் சொல்வது.

1. தம்ததா க்பயா விஷ்டம் அஸ்ருபூர்ணுகுலேக்ஷணம்
விஷீதந்த மிதம் வாக்யம் உவாச மதுஸூதந:

இவ்வண்ணம் அருள்விஞ்சிக் கண்களில் சோகநீர்மல்கத் துயருற்ற அவனைநோக்கி மதுஸூதனன் இந்த வசனத்தை இயம்புகின்ருர்.

ஸ்ரீ பகவாநுவாச - பகவான் பணிப்பான்.

2. குதஸ் த்வா கஸ்மலமிதம் விஷமே ஸமுபஸ்திதம்
அநார்யஜுஷ்டம் அஸ்வர்க்யம் அகீர்த்திகரம் அர்ஜுந!

அர்ஜுன! இடமில்லாத விடத்தில் இத்தகைய் மனச்சோர்வு உன்னை ஏன் அண்டியது? இது அறிவிலிகளை யன்ருே அடைய வேண்டியது; விண்ணுலகு புகத் தடையாகுமே; பழியை விளைவிக்குமே.

3. க்லைப்யம் மாஸ்மகம:
பார்த்த நைதத்வை யுபபத்யதே
க்ஷுத்ரம் ஹ்ருதய தௌர்பல்யம்
த்யக்த்வோத்திஷ்ட பரந்தப!

பார்த்தனே! பயங்கொள்ளாதே; இது உனக்குத் தக்கதன்று. பகைவர்களைப் பொசுக்க வல்லோனே! மிக இழிவான உனது கோழைத் தனத்தைவிட்டு எழுந்திரு.

அர்ஜுந உவாச - அருச்சுனன் வினவுதல்.

4. கதம் பீஷ்ம மஹம் ஸங்க்யே த்ரோணஞ்ச மதுஸூதந!
இஷுபி: ப்ரதியோத்ஸ்யாமி பூஜார்ஹா அரிஸூதந!

மதுஸூதன! மாற்றாரை மாற்றழிக்கவல்லோய்! பீஷ்மரையும் துரோணரையும் விற்போரில் அம்புகொண்டு எப்படி எதிர்த்துப் போர் புரிவேன்? அவர்கள் தொழுதற்குரியராயிற்றே.

5. குரூ நஹத்வா ஹி மஹாநுபாவாந்
ஸ்ரேயோ போக்தும் பைக்ஷமபீஹலோகே
ஹத்வார்த்த காமாம்ஸ்து குரூநிஹைவ
புஞ்ஜீய போகாந் ருதிர ப்ரதிக்தாந்

மஹாநுபாவர்களாகிய ஆசார்யர்களைக் கொல்லாமல் இரந்துண்டு வாழ்தல் இனிதாகும். *பொருள் நசையுள்ள ஆசார்யர்களைக் கொன்றால் இவ்விடத்திலேயே அவர்களது உதிரந் தோய்ந்த இன்பங்களை எவ்வாறு நுகருவேன்?

6. நசை தத்வித்ம: கதரந்நோ கரீயோ
யத்வாஜயேம யதிவாநோ ஜயேயு:
யாநேவஹத்வா நஜிஜீவிஷாம:
தேவஸ்திதா: ப்ரமுகே தார்த்தராஷ்ட்ரா:

நாம் வெல்வோமா? அவர்கள்தான் நம்மை வெல்வார்களோ? எதுமிகவும் மேலானது என்று அறியகில்லோம். எவர்களைக் கொன்று நாம் உயிர் வாழ விரும்பமாட்டோமோ அவர்களே - துரியோதனாதியரே - போர் முகத்தில் வந்து நிற்கின்றார்களே.

7. கார்ப்பண்ய தோஷோபஹத ஸ்வபாவ:
ப்ருச்சாமித்வாம் தர்மஸம்மூடசேதா:
யச்ச்ரேயஸ்யாந் நிஸ்சிதம் ப்ரூஹிதந்மே
ஸிஷ்யஸ்தேஹம் ஸாதிமாம் த்வாம் ப்ரபந்நம்.

நான் †கார்ப்பண்ய தோஷத்தால் எனது இயற்கை நிலையழிந்து தருமத்தில் ஐயம் கொண்ட உள்ளத்துடன் தேவரீரை வினவுகின்றேன்; எது எனக்கு மேலான நன்மையைப் பயக்குமென்று தேவரீர் உறுதிகொண்டுள்ளீரோ அதனை அடியேனுக்கு அருளல்வேண்டும்; தேவரீர்க்கு அடியேன் சீடன்; தேவரீரைச் சரணம்பற்றிய அடியேனை தெளிவித்தருளுவீர்.

---

*இங்கு நன்மையை நாடுபவரான என்றும் பொருள் காணப்படுகிறது.

† தத்வஜ்ஞானமின்மையால்நேர்ந்த குற்றம்.

8. நஹி ப்ரபஶ்யாமி மமாபநுத்யாத்
யச்சோக முச்சோஷண மிந்த்ரியாணாம்
அவாப்ய பூமா வஸபத்ந ம்ருத்தம்
ராஜ்யம் ஸுராணாம் அபிசாதிபத்யம்.

பூமியின்மேல் பகையொன்று மின்றி வளமே மல்கிய இராச்சியத்தை யடைந்தாலும், விண்ணுலகில் வானவர் பதியின் பதவியைப் பெற்றாலும், எனது புலன்களை வறளச்செய்யும் இத்துயரம் தீராதெனவே தோற்றுகின்றது; எது தீர்க்குமென்றும் அறிகிலேன்.

ஸஞ்ஜய உவாச - ஸஞ்சயன் சொல்வது.

9. ஏவமுக்த்வா ஹ்ருஷீகேஶம்
குடாகேஶ: பரந்தப:
நயோத்ஸ்ய இதி கோவிந்தம்
உக்த்வா தூஷ்ணீம் பபூவஹ.

பகைவரைப் பொசுக்கவல்ல அருச்சுனன் ஹ்ருஷீகேசனை நோக்கி இவ்விதம் கூறி மீண்டும் கோவிந்தனிடம் 'நான் போர் புரிய ஒருப்படேன்' என்றுரைத்து வாய்திறவா திருந்தான்.

10. தமுவாச ஹ்ருஷீகேஶ: ப்ரஹஸந்நிவ பாரத
ஸேநயோ ருபயோர் மத்யே விஷீதந்த மிதம் வச:

பாரத! இருபடைகளின் இடையே துயருழந்துள்ள அருச்சுனனை நோக்கி ஹ்ருஷீகேஶன் பரிஹாஸம் செய்பவன் போல் இந்த வசனத்தைச் சொன்னான்.

ஸ்ரீபகவாநுவாச - ஸ்ரீபகவான் பதில் அருளுகிறார்.

11. அஶோச்யா நந்வஶோசஸ்த்வம்
ப்ரஜ்ஞா வாதாம்ஶ்ச பாஷஸே
கதாஸூநகதாஸூம்ஶ்ச
நாநுஶோசந்தி பண்டிதா:

துக்கிக்கத் தகாதவர்களைக்குறித்து துக்கிக்கிறாய்; ஞானவான்கள் சொல்லக்கூடிய வசனங்களையும் பேசுகிறாய். பண்டிதர்களோ உடலங்களைக்குறித்தும் உயிரினைக்குறித்தும் துக்கிக்கிறதில்லை.

அவ [ஆத்மாக்களின் இயல்பை முன்னதாகக் கேள் என்கிறார்.]

12. நத்வேவாஹம் ஜாதுநாஸம் நத்வம்நேமே ஜநாதிபா:
நசைவ நபவிஷ்யாம: ஸர்வேவய மத:பரம்.

A cc. No. 671
Dt 21.11.27.

"இறையா கியநானு மிவ்வுயிராம் நீயும்
முறையால் அரசரிவர் முற்றும்—மறையாலே
முன்னாளும் இன்மையிலே முற்றுமிதன் மேலாகும்
எந்நாளும் இன்மையிலம் யாம்." (ப. கீ. வெ. 12)

இச்சுலோகத்தின் கருத்து கூர்ந்து கவனிக்கத்தக்கது; இதி லிருந்தே கீதோபதேசம் தொடங்குகின்றது. ஜீவாத்மாவின் தன்மையை பிரமித்த அருச்சுனனுக்குத் தெளிவு படுத்தவேண்டியிருக்கிறது. ஜீவாத்மா நித்யம், என்றும் அழிவில்லாதது என்பதையே விளங்கக்கூறுகிறார். நானும், நீயும், இவர்கள் எல்லோரும் எப்போதும் இருக்கிறோம் என்றதில், நான் என்றது எல்லா உலகங்கட்கும் இறைவனாகிய நான் எப்படி நித்தியன் என்பதில் உனக்குச்சிறிதும் ஐயப்பாடில்லையோ அப்படியே ஜீவாத்மாவாகிய நீயும் நித்யன் என்கிறார். இவர்கள் என்ற பன்மை ஜீவாத்மாக்கள் பல என்பதை விளக்கும். மோஹமடைந்த அருச்சுனனுக்கு ஜீவாத்மாவின் உண்மைநிலையை உரைக்கும் இவ்விடத்தில் பகவானே இவ்வாறு கூறியிருப்பதால் இதை தத்துவமாகவே கொள்ளவேண்டும். இது "நித்யோ நித்யானாம் சேதனஸ்சேதனானாம் ஏகோபஹூனாம் யோவிததாதிகாமான்" என்னும் சுருதிப் பொருள் பற்றியது.

13. தேஹிநோஸ்மிந் யதாதேஹே
கௌமாரம் யௌவநம் ஜரா
ததா தேஹாந்தர ப்ராப்தி:
தீரஸ் தத்ர ந முஹ்யதி.

இவ்வுடலிலுள்ள ஆத்மாவிற்கு பிள்ளைப்பருவமும், இளமையும், மூப்பும் எங்ஙனமோ அங்ஙனமேயாகும் மற்றொரு உடலிற் பிறத்தலும்; மனத்திண்மை யுடையோன் அதில் கலக்கங் கொள்ளான்.

14. மாத்ராஸ்பர்ஶாஸ்து கௌந்தேய!
ஶீதோஷ்ண ஸுகதுக்கதா:
ஆகமா பாயிநோ நித்யா:
ஸ்தாம்ஸ்திதிக்ஷஸ்வ பாரத!

கௌந்தேய! புலனைந்தும் பொறிகளுடன் இணைந்து தண்மை, வெம்மையால் இன்பு துன்பை எய்துவிக்கின்றன; இவை இடையே தோன்றியொழிவன; (இவை நிலைத்திருத்தலில்லை. பாரத! இவைகளைப் பொறுத்துக்கொள்.

அவ [அவைகளைப் பொறுப்பது எதற்கு என்று விளக்குகிறார்.]

15. யம் ஹி ந வ்யதயந்த்யேதே புருஷம் புருஷர்ஷப!
ஸமதுக்க ஸுகம் தீரம் ஸோம்ருதத்வாய கல்பதே.

ஆடவருட் சிறந்தோனே! இன்பமும் துன்பமும் ஒன்றெனநினைக்கும் ஆற்றல் மிக்கோனை இவை ஊறு செய்யமாட்டா; அவனே ஈறிலின்ப ரூபமானவீடு பேற்றுக்குத்தக்கவன்.

அவ [ஆத்மா என்றுமுளது, உடல் அழியுந் தன்மையுடையது; ஆதலின் பண்டிதர்கள் துக்கப்படக்காரணமில்லை என்று கீழே கூறியதையே விவரிக்கத் தொடங்குகிறார்.]

16. நாஸதோ வித்யதேபாவோ நாபாவோ வித்யதேஸத:
உபயோரபி த்ருஷ்டோந்த: த்வ நயோஸ்தத்வ தர்ஸிபி:

அழியும் இயல்புடைய உடலுக்கு நிலைத்திருக்கை என்பதில்லை; எப்பொழுதும் மாறுபாடென்பதே இல்லாத ஆத்மாவிற்கு இல்லாமை என்பதில்லை. இவை இரண்டின் முடிவான நிலையினை மெய்யுணர்வு பெற்றோர் காண்பர்.

அவ [ஆத்மாவின் அழிவற்ற தன்மை எங்ஙனம் அறியத்தகும் என்று விளக்குகிறார்]

17. அவிநாஸிது தத்வித்தி யேந ஸர்வ மிதம் ததம்
விநாஸ மவ்யயஸ்யாஸ்ய நகஸ்சித் கர்த்து மர்ஹதி.

எந்த ஆத்மா இந்த அசேதனப் பொருள்கள் யாவற்றையும் பற்றிப் பரவியிருக்கின்றதோ அது மாயாது என்று உணர்வாய். மாய்வற்ற இதற்கு ஒரு பொருளும் மாய்தலைச் செய்ய இயலாது.

அவ [உடம்புக்கு மாய்வதே இயற்கை என்கிறார்]

18. அந்த வந்த இமே தேஹா நித்யஸ்யோக்தாஸ் ஸரீரிண:
அநாஸிநோ ப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வ பாரத!

என்றும் உள்ளதும், அழிக்கக்கூடாததும், அறிவினுக்கு எட்டாததுமான சரீரி என்கிற ஆத்மாவின் இந்த உடலங்கள் அழிகையே இயல்பாக உடையன; ஆதலின் பாரத! போர் புரிவாய்.

19. யஏநம் வேத்தி ஹந்தாரம் யஸ்சைநம் மந்யதே ஹதம்
உபௌதௌ நவிஜாநீதோ நாயம் ஹந்தி நஹந்யதே.

ஆத்மாவைக் கொல்வதற்குக் கருவியுளதென்றெண்ணுபவனும், கொல்லப்பட்டவனாக எண்ணுபவனும் ஆகிய இருவரும் ஆத்மஸ்வரூபத்தை அறியாதார். இவன் கொல்வதுமில்லை கொலையுண்பதுமில்லை.

20. நஜாயதே ம்ரியதேவா கதாசித்
நாயம்பூத்வா பவிதாவா நபூய:
அஜோ நித்யஸ் ஸாஸ்வதோயம் புராணோ
நஹந்யதே ஹந்யமாநேஸரீரே.

இந்த ஆத்மா என்றும் பிறப்பதுமில்லை; எக்காலத்திலும் இறப்பதுமில்லை; இவன் முன்பொருகாலிருந்து பின்பு இல்லாது போவதுமில்லை, இங்ஙனம் பிறப்பில்லாதவனும், என்றும் உள்ளவனும், எப்பொழுதும் ஒரேவிதமாய் இருக்கிறவனும், முக்காலத்திலும் புதிதுபோல் நுகரக்கூடியவனுமிருக்கிற இவ்வாத்மா, தன் உடல் கொல்லப்பட்டபோதிலும் தான் கொல்லப்படுவதில்லை.

21. வேதா விநாஸிநம் நித்யம் யஏநம் அஜம் அவ்யயம்
கதம் ஸ புருஷ: பார்த்த! கம் காதயதி ஹந்திகம்.

பார்த்தனே! இந்த ஆத்மா நாசமற்றவன், பிறப்பற்றவன், வேறுபாடற்றவனுதலின் என்று முள்ளவன் என்று எவன் அறிந்து கொள்கின்றனனே, அப்புருடன்எங்ஙனம் எவனைக் கொல்விக்கிருன்? எவனைக்கொல்கிருன்?

22. வாஸாம்ஸி ஜீர்ணாநி யதா விஹாய
நவாநி க்ருஹ்ணாதி நரோபராணி
ததா ஶரீராணி விஹாய ஜீர்ணாந்
யந்யாநி ஸம்யாதி நவாநி தேஹீ.

“ பீறும் பழம்புடவை பேணுது விட்டொருவன்
வேறு புதுப்புடவை மேவுதல்போல்—ஈறிலவன்
முத்துடம்பை விட்டு முதிராது வேறுவரும்
புத்துடம்பைச்சேரும் புகுந்து.” (ப. கீ. வெ. II - 22.)

[பீறும் - கிழிந்த; முத்துடம்பு - முது; உடம்பு - கிழத்தனம் அடைந்த உடம்பு.]

அவ [ஆத்மா அழிவற்றது என்று கீழ்க்கூறியதை மனதில் எளிதில் படும்படி மறுபடியும் தெளிவுபடக் கூறுகிருர்.]

23. நைநம் சிந்தந்தி ஶஸ்த்ராணி நைநம் தஹதி பாவக:
ந சைநம் க்லேதயந்த்யாபோ ந ஶோஷயதி மாருத:

இவனை ஆயுதங்கள் வெட்டுகிறதில்லை; தீ இவனை எரிக்கிறதில்லை; நீர் இவனை நனைக்காது; காற்று இவனை உலர்த்தாது.

24. அச்சேத்யோயம் அதாஹ்யோயம்
அக்லேத்யோ ஶோஷ்ய ஏவச
நித்யஸ் ஸர்வகத: ஸ்தாநு:
அசலோயம் ஸநாதந:

ஆதலின், இவன் வெட்டற்கு அரியவன்; எரிக்கத்தக்கவனுமல்லன்; நனைக்கத்தக்கவனுமல்லன்; உலர்த்தத்தக்கவனுமல்லன்; ஆதலின் நித்யன்; எல்லாப் பொருள்களிலும் நிறைந்து நிற்பவன்; உறுதியாயிருப்போன்; வேறொன்றினாலும் அசைக்கக்கூடாதவன்; அனாதியாயிருக்கிறவன்.

25. அவ்யக்தோயம் அசிந்த்யோயம் அவிகார்யோயம் உச்யதே
தஸ்மாதேவம் விதித்வைநம் நாநுஶோசிது மர்ஹஸி.

இவன் புலன்களுக்குத் தோற்றாதவன்; இப்பொருட்கு ஒப்பெனக் கருதக்கூடாதவன்; மாறுதலில்லாதவன்; ஆதலின், இவனை இவ்வாறு தெரிந்துகொண்டு நீ துயரப்படாதிருக்க வேண்டியவனாகிறாய்.

26. அதசைநம் நித்யஜாதம் நித்யம்வா மந்யஸே ம்ருதம்
ததாபி த்வம் மஹாபாஹோ! நைநம் ஶோசிது மர்ஹஸி.

தடந்தோளாய்! இந்த ஆத்மாவை நித்தமும் பிறந்து நித்தமும் இறப்பானாகும் உடலேயெனக் கருதினாயேல், அப்போதும் நீ துயரடையத்தக்கவனல்லன்.

அவ [மாறுதலடைவதையே இயற்கையாயுடைய சரீரத்திற்கு பிறப்பு, இறப்பு ஒழிக்க முடியாதவை; ஆதலின் ஆத்மாவைப்பற்றிக் கூறியுள்ள வேறுபாட்டை நீ உணராயாயினும், நீ இவ்வாறு துன்பமடையத் தக்கவனல்லன் என்கிறார்.]

27. ஜாதஸ்யஹி த்ருவோ ம்ருத்யு: த்ருவம்ஜந்ம ம்ருதஸ்யச
தஸ்மா தபரிஹார்யேர்த்தே நத்வம் ஶோசிது மர்ஹஸி.

"பிறந்தவனுக்கு ஆங்கிறத்தல் பின் அறுதி அவ்வா(று)
இறந்தவனுக் கும்பிறப்பும் எய்தும்—திறந்தன்னால்
ஒன்றும் பரிகார மில்லாவொரு பொருட்கு
நின்று மனந்தளரேல் நீ" (ப. கீ. வெ-26.)

28. அவ்யக்தாதீநி பூதாநி வயக்தமத்யாநி பாரத!
அவ்யக்த நிதநாந்யேவ தத்ரகா பரிதேவநா?

பாரத! சரீரங்கள் மூலத்தில் அவ்யக்தமாயிருக்கின்றன; இடையே தோன்றுகின்றன; இறுதியிலும் அவை அவ்யக்தமாகின்றன; இதில் என்ன துக்கம்?

29. ஆஶ்சர்யவத் பஶ்யதி கஶ்சிதேநம்
ஆஶ்சர்யவத் வததி ததைவசாந்ய :
ஆஶ்சர்யவச்சைந மந்ய ஶ்ருணோதி
ஶ்ருத்வாப்யேநம் வேத நசைவகஶ்சித்.

இவனை ஒருவன் வியப்புள்ளனுய்க் காண்பான்; ஒருவன் வியப்புள்ளனுய்க் கூறுவான்; மற்ருெருவன் வியப்புள்ளனுய்க் கேட்பான்; கேட்டும், இவனை ஒருவனும் உண்மையாக அறிந்ததில்லை.

30. தேஹீ நித்ய மவத்யோயம் தேஹே ஸர்வஸ்ய பாரத!
தஸ்மாத் ஸர்வாணி பூதாநி நத்வம் ஶோசிது மர்ஹஸி.

பாரத! எல்லாஉடம்புகளும் அழிக்கப்பட்டாலும் அவற்றினுள்ளுறையும் ஆத்மா ஒரு காலத்திலும் அழிக்கக்கூடாதது. ஆதலின், நீ எல்லாப்பிராணிகளைக் குறித்தும் துயர் எய்தல் தக்கதன்று.

31. ஸ்வதர்ம மபி சாவேக்ஷ்ய
நவிகம்பிது மர்ஹஸி
தர்ம்யாத்தி யுத்தா ச்ரேயோ
(அ)ந்யத் க்ஷத்ரியஸ்ய நவித்யதே.

உனக்கு உரிய தருமத்தைக் கருதியும் நீ நடுங்கக்கூடாது; அரசகுலத்தினனுக்கு அறப்போர் புரிவதினும் சீரியது வேறில்லை.

32. யத்ருச்சயா சோபபந்நம் ஸ்வர்கத்வார மபாவ்ருதம்
ஸுகிந: க்ஷத்ரியா : பார்த்த! லபந்தே யுத்தமீத்ருஶம்.

பார்த்த! முயற்சியுன்பாலின்றியே நேர்ந்துள்ளதும், திறந்துகிடக்கும் விண்ணுலகவாயிலாயுளதுமாகிற இத்தகைய பூசல் கிடைக்கப்பெறும் அரசர்களே சுகிகளாவார்,

வென்ருலும் சுகமுண்டு; போரில் இறந்தாலும் வீரசுவர்க்கம் புகுந்து சுகம் பெறலாம் என்று கருத்து.

33. அதசேத்வம் தர்ம்யமிமம் ஸங்க்ராமம் நகரிஷ்யஸி
தத ஸ்வதர்மம் கீர்த்திஞ்ச ஹித்வா பாபமவாப்ஸ்யஸி.

அன்றி, இந்த தருமயுத்தத்தை நீ நடத்தத் தவறுவாயானல், அதனல், ஸ்வதர்மப்பயனையும் புகழையும் இழந்து, பாவத்தையும் அடைவாய்.

34. அகீர்த்திஞ்சாபி பூதாநி கதயிஷ்யந்தி தேவ்யயாம்
ஸம்பாவிதஸ்ய சாகீர்த்தி மரணு ததிரிச்யதே.

அன்றியும், நிலைநிற்கும் உனது பழியையும் பிராணிகள் கூறுவார்கள்; நன்மதிப்பைப் பெற்றவனொருவனுக்கு அப்பழிச்சொல் சாதலினும் கொடிதாகுமே!

35. பயாத்ரணு துபரதம் மஸ்யந்தேத்வாம் மஹாரதா:
யேஷாஞ்சத்வம் பஹுமதோ பூத்வா யாஸ்யஸி லாகவம்.

முன்னர் எவர்கள் உன்னை நன்கு மதித்தனரோ அம்மகாரதிகர்களே, அச்சத்தால் போரில் புறங்கொடுத்தவனாக உன்னைக் கருதுவர்; இதனால் நீ சிறுமையை யடைவாய்.

36. அவாச்ய வாதாம்ஶ்ச பஹூந் வதிஷ்யந்தி தவாஹிதா:
நிந்தந்தஸ்தவ ஸாமர்த்யம் ததோ து:கதரந்நுகிம்.

உன்பகைவர் உனது ஆற்றலையும் நிந்தனைசெய்து சொல்லத்தகாத பல வசனங்களைச்சொல்லுவர்; அதனினும் அதிகதுக்கம் யாது உள்ளது?

37. ஹதோ வாப்ராப்ஸ்யஸே ஸ்வர்க்கம்
ஜித்வா வாபோக்ஷ்யஸே மஹீம்
தஸ்மாதுத்திஷ்ட கௌந்தேய!
யுத்தாய க்ருதநிஶ்சய.

கௌந்தேய! நீ கொல்லப்படின் துறக்கம் புகுவாய்; வென்றால் அவனியை ஆண்டு ஸுகிப்பாய். ஆதலால், போர்புரியத்துணிந்து எழுந்திரு.

38. ஸுகது:கே ஸமேக்ருத்வா லாபாலாபௌ ஜயாஜயௌ
ததோயுத்தாய யுஜ்யஸ்வ நைவம் பாப மவாப்ஸ்யஸி.

இன்பமும் துன்பமும், இழவும் பேறும், வெற்றியும் தோல்வியும் ஒன்றையொன்று நிகர்த்தனவாய்க்கொண்டு, அதன்பின் போருக்கு முனையக்கடவை; இத்தகைய உறுதிப்பாடுடையோனாயின் பாவம் எய்தப்பெறுவாயில்லை.

39. ஏஷா தேபிஹிதா ஸாங்க்யே
புத்திர்யோகே த்விமாம் ஶ்ருணு
புத்யாயுக்தோ யயாபார்த்த!
கர்மபந்தம் ப்ரஹாஸ்யஸி.

பார்த்த! * சாங்க்யத்தின் தன்மைப்படி இந்தப் புத்தி உனக்கு உரைக்கப்பட்டது; இனி † யோகத்தின் தன்மைப்படி கூறுவன் கேள். இவ்வுபதேசத்தைக்கொண்டு கருமத்தளையை விடுவித்துக் கொள்ளக்கடவை.

40. நேஹாபிக்ரமநாஶோஸ்தி ப்ரத்யவாயோ நவித்யதே
ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்.

பலத்தில் நசையின்றிப் பகவதர்ப்பணமாகச் செய்யப்படும் கருமயோகத்தில் எத்தனிப்பது வீணுகாது; இடையே விட்டிட்டாலும் பாவம் இல்லை. இந்த நிஷ்காம கருமமாகிய தருமத்தின் ஒரு சிறுபகுதியும் மிகப்பெரிய பிறப்பிறப்புப் பயத்தினின்று விடுவிக்கும்.

அறம் வீடுபயக்கும். "வீழ்நாள்படாமை நன்றாற்றின் அஃதொருவன், வாழ்நாள் வழியடைக்குங்கல்." [திருக்குறள். அறன் வலியுறுததல். 8.]

41. வ்யவஸா யாத்மிகா புத்தி: ஏகேஹ குருநந்தந!
பஹுஶாகா ஹ்யநந்தாஶ்ச புத்தயோவ்யவஸாயிநாம்.

குருநந்தன! இந்த யோகசாஸ்திரத்தில் சொல்லிய கர்மத்தில் ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தைப்பற்றிய தீர்ந்த அறிவு ஒன்றே; உறுதி யற்றவர்களது ஞானங்கள் எண்ணிறந்தவை; பல பல உட்பிரிவுகளையுடையவை.

42. யாமிமாம் புஷ்பிதாம் வாசம் ப்ரவதந்த்ய விபஶ்சித:
வேதவாதரதா: பார்த்த! நாந்யதஸ்தீதி வாதிந:

43. காமாத்மாந: ஸ்வர்கபரா ஜந்மகர்ம பலப்ரதாம்
க்ரியாவிசேஷ பஹுளாம் போகைஶ்வர்ய கதிம்ப்ரதி.

44. போகைஶ்வர்ய ப்ரஸக்தாநாம் தயாபஹ்ருதசேதஸாம்
வ்யவஸாயாத்மிகா புத்தி: ஸமாதௌ ந விதீயதே.

பார்த்த! வேதங்களில் காணும் சுவர்க்கம் முதலிய பலவாதங்களுக்கு இச்சையுற்று, வேறுபலன்கள் இல்லையென்று தர்க்கித்துக் கொண்டு, காம்யங்களில் மனதைவைத்து, சுவர்க்கமே மேலான பலம் எனக்கருதித்திரியும் மூடர்கள் சிலர், ஜன்மம், கருமம் என்னும் பயனளிப்பதும், எண்ணிறந்த கிரியைகள் நிறைந்து சுவர்க்காதி

* ஆத்துமதத்வ விசாரம்.

† ஆத்துமதத்வத்திற்குக் காரணமாகிய கருமயோகம்.

போகஐசுவர்யங்களைக் குறிக்கொண்டுள்ள பூக்களைப்போன்ற அதாவது பயனற்ற வாசகங்களைப் பேசுகிறார்கள். அச்சொற்களால் மதி மயங்கி, போகஐசுவர்யங்களில் பற்றுண்டாயிருப்பவர்க்குச் சிந்தையில் உண்மையான அறிவு உண்டாகாது.

45. த்ரைகுண்ய விஷயாவேதா
நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுந !
நிர்த்வந்த்வோ நித்யஸத்வஸ்தோ
நிர்யோகக்ஷேம ஆத்மவாந்.

அருச்சுன! வேதங்கள் முக்குணங்களைக் குறிக்கொண்டன. நீ அந்த முக்குணங்களில்லாதவனாகவும், (ஸத்வகுணம் மாத்திரமுடையவனாகவும்), நன்மை, தீமைபோன்ற இரட்டை அற்றவனாகவும், எப்பொழுதும் ஸத்வகுணத்திலேயே இருப்பவனாகவும், * யோகக்ஷேமமற்றவனாகவும், ஆத்மவஸ்துவை அறிவதில் ஆசையுள்ளோனாகவும் இருக்கக்கடவாய்.

46. யாவாநர்த்த உதபாநே
ஸர்வதஸ்ஸம் ப்லுதோதகே
தாவாந் ஸர்வேஷு வேதேஷு
ப்ராஹ்மணஸ்ய விஜாநத :

சிறிது நீர்நிற்கும் கிணறு முதலியவற்றில் எவ்வளவுபயனோ அவ்வளவுபயன் எல்லாப்பக்கங்களிலிருந்தும் வந்துசேரும் நீர் மிகுந்த பெரிய ஏரியிலும் உண்டாவதேபோல், ஆத்ம தத்வஜ்ஞானமுள்ள முமுக்ஷுவுக்கு, வேதோக்தமான சகலகருமங்களிலும், அவ்வளவு உபயோகமே உண்டாகும்.

நீர் நிறைந்த ஓர் ஏரியில் விடாய்மிகுந்து நீர் அருந்தப்புக்கவன் தன்விடாய் தீர்க்கும் அவ்வளவே நீரைக்கொள்வன். அதுவேபோல் வேதம் எவ்வளவு விரிந்து பரந்திருப்பினும் வேதோக்த கருமாநுஷ்டானமுள்ள வேதார்த்தங்களை அறிந்தவன் தனக்கு வேண்டியதெவ்வளவோ அவ்வளவே உபயோகம் செய்துகொள்வன் என்று கருத்து.

47. கர்மண்யேவாதி காரஸ்தே மாபலேஷு கதாசந
மாகர்ம பலஹேதுர்பூ ர்மாதேஸங்க ஸ்த்வகர்மணி.

உனக்குக் கருமம் புரிவதில்மட்டும் அதிகாரமிருக்கிறது; அதன் பலன்களில் எப்பொழுதுமே உனக்கு அதிகாரமில்லை, கரும

* இல்லாத பொருளையடைவது யோகம்; அடைந்ததைக் காப்பது க்ஷேமம்.

பலன்களில் உனக்கு உத்தேசம்கூடாது. கருமங்களை விட்டுவிடவும் உனக்கு விருப்பம் உதவாது.

நீ கருமத்தை பகவதீனமாகச் செய்யவேண்டியவன். பலனில் விருப்பின்றி, நான் செய்கிறேன் என்கிற அபிமானமுமின்றிச் செய்வையேல், கருமபலனையடையாமல் மோக்ஷபலனையடைவாய். கருமத்தை விட்டுவிட உனக்கு அதிகாரமில்லை; ஏனெனில் பகவததீனமாகச் செய்யவேண்டியவன் என்பது கருத்து.

48. யோகஸ்த: குருகர்மாணி ஸங்கம் த்யக்த்வா தநஞ்ஜய !
ஸித்யஸித்யோஸ் ஸமோபூத்வா ஸமத்வம்யோக உச்யதே.

தனஞ்சய! நீ யோகத்தில் நின்றுகொண்டு, அபிமானத்தை விட்டு, சித்திபெறினும் பெறுவிடினும் அதில் சமமாயிருந்து கருமங்களைச்செய். சித்திபெறினும் பெறுவிடினும் சமமாயிருப்பதே யோகம் எனப்படும்.

"நீ பகவந்நிஷ்டையிலிருந்துகொண்டு இராச்சியம், உற்றார், உறவினர், மக்கள், மனைவியர்பால் அபிமானத்தைவிட்டு, வெற்றியாகிய சித்திபெறினும், தோல்வியாகிய அசித்திபெறினும் இரண்டையும் சமமாய்க்கருதிப் போர்புரிதலாகிய கருமங்களைச் செய்" என்றபடி.

49. தூரேண ஹ்யவரங்கர்ம புத்தியோகாத் தநஞ்ஜய!
புத்தௌ சரணமந்விச்ச க்ருபணா: பலஹேதவ:

கீழ்விளக்கப்பட்ட புத்தியுடன் இயைந்த கருமத்தைவிட, ஏனையகருமங்கள் மிகமிக இழிந்தவையாதலின், கீழ்ச்சொல்லிய புத்தியிலேயே எப்பொழுதும் இச்சை கொண்டிரு; பலத்திற்குக் காரணமானவர்கள் நித்யஸம்ஸாரிகளான நீசர்களாவர்.

கருமங்கள் காம்யம், நிஷ்காம்யம் என இருவகைப்படும். முன்னது அளவிறந்த துக்கமய ஸம்ஸாரத்தையும், பின்னது இத்தகைய ஸம்ஸாரதுக்கத்தைப் போக்கி வீடு பேற்றையும் அடைவிக்கும்.

50. புத்தியுக்தோ ஜஹாதீஹ
உபே ஸுக்ருத துஷ்க்ருதே
தஸ்மாத்யோகாய யுஜ்யஸ்வ
யோக: கர்மஸு கௌஶலம்.

புத்தியோகத்தை அடைந்து கருமத்தைச்செய்கிறவன் நல்வினை, தீவினை இரண்டையும் தவிர்த்துக்கொள்கிறான்; ஆகையினால், கீழேகூறிய புத்தியோகம் செய்யமுயல்வாய். கர்மங்களைச் செய்து கொண்டிருக்கும்பொழுதே இந்த புத்தியோகம் மிக்க ஸாமர்த்யத்தினால் உண்டாகக்கூடியது.

51. கர்மஜம் புத்தியுக்தாஹி பலம்த்யக்த்வா மனீஷிண:
ஜந்ம பந்த விநிர்முக்தா: பதம் கச்சந்த்யநாமயம்.

" தீர்ந்த மனத்துத் தெளிவுற்றார் செய்கருமத்(து)
ஆர்ந்த பயனை யறத்துறந்து—சேர்ந்த
பிறப்பணையும் கட்டவிழ்ந்து பெய்துயர் நோய்தீர்ந்த
சிறப்பணைவர் நன்மையினைச் சேர்ந்து." (ப. கீ. வெ, II 47).

[சிறப்பு - ஸ்தானம், பதவி.]

52. யதாதே மோஹ கலிலம் புத்திர்வ்யதிதரிஷ்யதி
ததா கந்தாஸி நிர்வேதம் ஶ்ரோதவ்யஸ்ய ஶ்ருதஸ்யச.

எப்பொழுது நினது புத்தியானது பொய்நின்ற ஞானமாகும் கலக்கத்தைத் தாண்டிடுமோ, அப்பொழுது இதுகாறும் என்னிடம் கேட்டவற்றிலும் இனி கேட்கப்புகுமவற்றிலும் விசனம் அடைவாய்.

53. ஶ்ருதி விப்ரதிபந்நாதே யதாஸ்தாஸ்யதி நிஶ்சலா
ஸமாதா வசலாபுத்தி ஸ்ததா யோகம் அவாப்யஸி.

யான் இதுகாறுங் கூறிப்போந்த சாஸ்திரப்பொருளை நீ கேட்டு வந்ததன்பயனாய் விசேஷமாக ஆத்மாவை பிரபஞ்சத்தைக் காட்டிலும் விலக்ஷணன், நித்யன், நிரதிசயன், சூட்சுமன் என்று உணர்ந்துள்ள உனது புத்தியானது, எப்போது, கரும அநுஷ்டானத்தினால் தூய்மையடைந்திருக்கிற மனதில் அசைவற்று நிலையாய் நிற்குமோ, அப்போது ஆத்மாவலோகனத்தை (தன் ஆத்மாவை தானே நேரில்பார்ப்பது) அடைவாய்.

அர்ஜுந உவாச - அருச்சுனன் வினவுவான்.

54. ஸ்திதப்ரஜ்ஞஸ்ய காபாஷா? ஸமாதிஸ்தஸ்ய கேஶவ!
ஸ்திததீ: கிம்ப்ரபாஷேத? கிமாஸீத? வ்ரஜேதகிம்.

கேசவ! ஸமாதியிலிருக்கின்ற ஞானயோகநிஷ்டன் லக்ஷணம் எத்தகைத்து? எவ்வண்ணம்பேசுவான்; எவ்வாறிருப்பான்? எவ்விதம் நடப்பான்?

இங்கு அவனது ஸ்வரூபம், உள்ளம், உரைசெயல் உசாவப்படுகின்றன என்று கருத்து.

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ கிருஷ்ணபகவான் விளம்புவான்.

55. ப்ரஜஹாதி யதா காமாந்
ஸர்வாந் பார்த்த! மநோகதாந்
ஆத்மந்யே வாத்மநா துஷ்ட:
ஸ்திதப்ரஜ்ஞ ஸ்ததோச்யதே.

பார்த்த! ஆத்மா ஒன்றையே பற்றியிருக்கிற மனதினால் இன்புற்றவனாய், அதனால் ஆத்மாவை ஒழிந்த மனதிலிருக்கும் மற்றெல்லாப் பற்றுக்களையும் எப்பொழுது மறுமுளை காணவொட்டாமல் விடுகிறானோ அப்பொழுது இவன் ஸ்திரப்ரஜ்ஞன் என்று சொல்லப்படுகிறான்.

இதுவே ஞானயோகநிஷ்டையின் முதிர்ந்த தசை.

(அவ)—[பின்பு, ஞானநிஷ்டன் நிலையில் தாழ்ந்ததாய் வேறுபாடு மிக்கில்லாததசை கூறப்படுகிறது.]

56. து:கேஷ்வநுத் விக்நமநா: ஸுகேஷு விகதஸ்ப்ருஹ:
வீதராக பயக்ரோத: ஸ்திததீர் முநிருச்யதே.

“ துன்பத்தில் என்றும் துளங்கா மனத்தனனாய்
இன்பத்திடையாசை இல்லவனாய்—புன்பற்றில்
அன்புபயம் வெகுளி அற்றவனே ஆங்குணர்வின்
வன்பு பெறுமுனியாமற்று.” (ப. கீ. வெ. II 52.)

[துளங்கா - கலங்காத; வன்பு - உறுதி.]

அவ [இன்னும் தாழ்ந்தநிலை உரைக்கப்படுகின்றது.]

57. யஸ்ஸர்வத்ரா நபிஸ்நேஹ: தத்தத்ப்ராப்ய ஶுபாஶுபம்
நாபிநந்ததி நத்வேஷ்டி தஸ்யப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா.

“ எங்கு மருவு நசையேது மறத்துறந்து
தங்குநலம் தீங்கு தானணைந்தே—அங்கங்கு
முந்துமுகப்பும் முதிர்வெறுப்பு மற்றார்க்கு
வந்து நிலையாமதி.” (ப. கீ. வெ. 53.)

[மருவுநசை - அதிகப்ரீதி; நலம் தீங்கு - சுபம் அசுபம்; உகப்பு - சந்தோஷம் வெறுப்பு - த்வேஷம்; நிலையாம் மதி - ப்ரஜ்ஞாப்ரதிஷ்டிதா.]

அவ [முன்னதினும் தாழ்ந்தநிலையைச் சொல்லுகிறான்.]

58. யதா ஸம்ஹரதே சாயம் கூர்மோங்காநீவ ஸர்வஶ:
இந்த்ரியா ணீந்த்ரியார்த்தேப்ய: தஸ்யப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா

அங்கங்க ளாமையகத்தடக்கு மாறுபோல்
இங்கைம் பொறிகளியல் பணைத்தும்—பொங்கைம்
புலனின் றகத்தடக்கும் போதத்தனுக்கு
வலனின்ற வேற்றமே வந்து.

[ஆறு—விதம்; இவ்கு—ஐம்பொறிகள்; பொறி - கருமேந்திரியம்; புலன் - ஞானேந்திரியம்; போதத்தன் - அறிவுடையோன்.]

(இவ்வாறு ஜ்ஞானயோகநிஷ்டை நான்குவகைப்படும். பின்நிலை ஒவ்வொன்றும் முறையே முன்னிலைக்குக் கொண்டுசேர்க்கும்.)

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல்—ஆற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து." (குறள்—126.)

2. "ஆமை தன்னுறுப்போரைந்துந் தன்னுளே யடக்குமாபோல், தீமைசெய் புலன்களைந்துந் தன்னுளே செறியச்சேர்த்தின், வாய்மையுள் நிகழுமென்னை வழுத்தவும் படநின்றானேல், தூய்மைசெய்தவர்கள் நாளும் சொல்லுவ தவன்தன்சொல்லே."

அவ [இனி ஜ்ஞானயோகநிஷ்டை எய்தற்கு அரியதென்றும்,
அதைப்பெறும் உபாயம் இன்னதென்றும்
கூறுகின்றார்.]

59. விஷயா விநிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹிந:
ரஸவர்ஜம் ரஸோப்யஸ்ய பரம்த்ருஷ்ட்வா நிவர்த்ததே.

கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு உழலும் அநுபவமாகிய உணவற்ற ஜீவாத்மாவிற்கு விஷயங்கள் தாமே விலகிக்கொள்ளும். எனினும், அவற்றினிடமுளதாகும் சுவையைமட்டும் இவன் விட முடிவதில்லை. விஷயங்களைவிட மேலான இன்பமாகிய ஆத்ம ஸ்வரூபத்தைக்கண்டு அச்சுவையும் விட்டுப்போகிறது.

60. யததோயஹ்பி கௌந்தேய! புருஷஸ்ய விபஸ்சித:
இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம்மந:

கௌந்தேய! யோகத்தில் முயற்சி மிக்குடைய விவேகியையும் கூட கலங்கச்செய்யும் இந்திரியங்கள் அவன்மனதை வலிந்து இழுத்துச்செல்லுகின்றது.

இங்கு யோகநிஷ்டையின் அடைதற்கருமையை விளக்குகிறார். ஆத்ம ஸாக்ஷாத்காரம் இந்திரியஜயத்தாலும் இந்திரியஜயம் ஆத்மஸாக்ஷாத்காரத்தாலும் உண்டாகவேண்டியிருக்கிறது என்று அந்யோந்யாஸ்ரய தோஷத்தைக் காட்டுகிறான்.

61. தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்தஆஸித மத்பர:
வஶே ஹியஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா.

எல்லா இந்திரியங்களையும் நன்றாகஅடக்கிய மனநிலையுடையனாய், என்னிடத்தில் மனத்தை வைக்கக்கடவன்; இந்திரியங்கள் எவனுக்குவசமோ அவனுடைய ஜ்ஞானமானது நிலைத்திருக்கின்றது.

இங்கு, வெல்லற்கரிய இந்திரியங்களை அடக்கி, மனதிற்கு "சுபாச்ரயனுகிய" ("நற்றுணையாகிய") தன்னிடத்தில் மனதை நிலைநிறுத்தவேண்டும் என்கிறான்.

மனமானது நிலையாக பகவானிடத்தில் நிறுத்தப்பட்டால் "போயபிழையும் புகுதருவான் நின்றனவும் * தீயினில் தூசாகும்" என்கிறபடியே பாவங்கள் தீரப்பெற்று மனம் மாசுநீங்கி விஷயங்களிலும் நசையற்று இந்திரியங்களைத் தனக்குவசமாக்கும்; தன் வசப்பட்ட இந்திரியங்களையுடைய மனது, ஆத்மாவையே நேரில் பார்ப்பதற்குத் திறமையுடையதாகிறது.

அவ [இங்ஙனம் என்னிடம் மனஞ்செலுத்தாது தன் முயற்சியின்
சீர்மையேபற்றி இந்திரியஜயத்தை அடைய முற்படுபவன்
புத்திநாசம் அடைவான் என்கிறார்.]

62. த்யாயதோ விஷயாந் பும்ஸ:
ஸங்கஸ்தேஷூபஜாயதே
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:
காமோத்க்ரோதோபிஜாயதே.

63. க்ரோதாத்பவதி ஸம்மோஹ:
ஸம்மோஹாத் ஸ்ம்ருதி விப்ரம:
ஸம்ருதி ப்ரம்ஶாத் புத்திநாஶோ
புத்திநாஶாத் ப்ரணஶ்யதி.

புருஷன் விஷயங்களை நினைத்துக்கொண்டிருப்பனுயின் அவற்றில் அவனுக்கு அதிகமான பற்று உண்டாகிறது; பற்றினின்றும் காமம் என்னும் இச்சை பிறக்கும்; இச்சையினின்றும் எல்லா இடத்திலும் கோபம் உதிக்கிறது; சினம் மோஹத்தையும், மோஹம் நினைவின்மையையும் நினைவின்மை புத்திநாசத்தையும், விளைவிக்கிறது. புத்திநாசம் ஸம்ஸாரத்தில் அழுத்தி ஸர்வநாசத்தை உண்டுபண்ணும்.

---

*ஸ்ரீ வி—பு. VI—7—74. "யதாக்நிருத்ததஸிக: கக்ஷந்தஹதி ஸாநில: ததா சித்த ஸ்திதோ விஷ்ணு: யோகிநாம் ஸர்வகில்பிஷம்" மேன்மேல் கொழுந்து விட்டெரியும் காற்றுடன்கூடிய நெருப்பு உலர்ந்தபுல்லை எவ்வாறு எரிக்கிறதோ அவ்வாறே, † தியானம் செய்பவர்களது மனதில் வீற்றிருக்கும் விஷ்ணுபகவான் அதைப்பற்றிக்கிடக்கும் எல்லா பாபங்களையும் எரிக்கிறார்.

1. † "மன்னகமலமற மலர்மிசைஎழுதரும் இனன்"
2. "மலர்மிசையேகினன்."

64. ராகத்வேஷ வியுக்தைஸ்து விஷயாந் இந்த்ரியைஶ்சரந்
ஆத்மவஶ்யைர்விதேயாத்மா ப்ரஸாத மதி கச்சதி.

விருப்பு வெறுப்பு இவையின்றி தன்வசமான இந்திரியங்களி ஞல் ஒலிமுதலிய விஷயங்களே அநாதரம் செய்துகொண்டு தன் வசப்பட்ட மனதையுடையவன் மனத்தெளிவை அடைகிருன்.

65. ப்ரஸாதே ஸர்வது:காநாம் ஹாநிரஸ்யோபஜாயதே
ப்ரஸந்ந சேதஸோஹ்யாஶு புத்தி: பர்யவதிஷ்டதி.

இச்சீவனுக்கு மனம் தெளிந்ததாயின், எல்லா துக்கங்களும் நீங்கிவிடும். ஏனெனில், ஆத்மதரிசனத்திற்கு விரோதமான தோஷங்கள் ஒழிந்த மனதையுடையவனுக்கு அப்போதே பரிசுத்த மான ஆத்மாவைப்பற்றிய அறிவு நிலேத்துநிற்கும்.

66. நாஸ்திபுத்தி ரயுக்தஸ்ய நசாயுக்தஸ்ய பாவநா
நசாபாவ யதஶ்ஶாந்தி: அசாந்தஸ்ய குதஸ்ஸுகம்.

என்னிடத்தில் மனத்தைவைக்காமல் தன் முயற்சிகொண்டே இந்திரியங்களே வென்றடக்கத் தொடங்குபவனுக்கு ஒருகாலும் ஆத்மாவைப்பற்றிய அறிவு உண்டாகாது; அவ்வறிவின்றி ஆத் மாவை நீடித்துச் சிந்திக்கமுடியாது; இந்த நீடித்தசிந்தையில்லாது விஷயப்பற்று ஒழிவதில்லே; பற்று ஒழியாதவனுக்கு நிலேயானதும் எல்லேகடந்ததுமான ஸுகம் ஏது? (இல்லே.)

இங்கு, பிரத்தியாஹாரம், தாரணே, தியானம், ஸமாதி (ஆத்ம ஸாக்ஷாத்காரம்), சாந்தி, ஸுகம் என்னும் யோகஅங்கங்கள் சங் கிலித்தொடர்போல் ஒன்றைப்பற்றி ஒன்று வருவதும், முன்னது இன்றிப் பின்னது உண்டாகாது என்பதும் சொல்லாலும் பொரு ளாலும் உணர்த்தப்படுவது காண்க.

67. இந்த்ரியாணும் ஹி சரதாம் யந்மனேநு விதீயதே
ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர்நாவ மிவாம்பஸி.

விஷயங்களே நுகர்ந்துகொண்டுகிடக்கும் இந்திரியங்களேப் பின் தொடரும் மனம், இச்சீவனுடைய அறிவை, புனலிலே கப்பலே இழுத்துச்செல்லும் எதிர்காற்றைப்போல், வலித்துகொண்டு போகும்.

68. தஸ்மாத்யஸ்ய மஹாபாஹோ!
நிக்ருஹீதாநி ஸர்வஶ:
இந்த்ரியாணீந்த்ரி யார்த்தேப்ய:
தஸ்யப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா.

தடந்தோளாய்! ஆதலின் கீழேகூறியுள்ளவாறு "சுபாஶ்ரய" மாகிய என்னிடத்தில் மனத்தைச்செலுத்தி, எவன் இந்திரியங்களை எல்லாவகையிலும் விஷயங்களினின்று அடக்குகின்றனனோ அவன் ஒருவனுக்கே ஆத்மாவினிடத்தில் அறிவு நிலைபெற்றிருக்கும்.

"யதாஸம்ஹரதே" என்றுதொடங்கி உபதேசிக்கப்பட்ட இந்திரியங்களை அடக்குதல் என்னும் விஷயம் இங்கு முடிவுபெறுகிறது.

அவ [இந்திரியங்களையும் வென்று அடக்கி மனமாசுந்தீரப் பெற்றவனுக்குண்டாம்பயன் கூறுகிறார்.]

69. யாநிஶா ஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்த்திஸம்யமீ
யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸாநிஶா பஶ்யதோமுநே:

எல்லாச்சீவராசிகட்கும் எது (எந்த ஆத்மாவைப்புற்றிய அறிவானது) இரவோ (இரவு போன்றதோ) அந்த ஆத்மஜ்ஞானத்தில் இந்திரியங்களை அடக்கிய விவேகி விழித்துக்கொண்டிருக்கிறான். எந்த சப்தாதி விஷயஅறிவில் சீவராசிகள் விழித்துக்கொண் டுளவோ, அந்த அறிவானது ஆத்மதரிசனம்செய்யும் முனிவனுக்கு இரவாகும் (இரவு போன்றது).

70. ஆபூர்யமாணம் அசலப்ரதிஷ்டம்
ஸமுத்ரமாப: ப்ரவிஶந்தி யத்வத்
தத்வத்காமாயம் ப்ரவிஶந்தி ஸர்வே
ஸஶாந்திம் ஆப்நோதி நகாமகாமீ.

தனக்குத்தானே நிறைந்து ஒரே தன்மையையுடைய கடலில் நதிகள்வந்து எப்படிக்கலக்கின்றனவோ, அப்படியே சப்தம் முதலிய விஷயங்கள்யாவும், எந்த ஆத்மநிஷ்டனைக் கலக்கின்றனவோ, அவன் சாந்தியையடைகிறான்; சப்தாதி விஷயங்களால் வேறுபாட்டையடைபவன் எக்காலத்திலும் சாந்தியடையமாட்டான்.

71. விஹாயகாமாந் யஸ்ஸர்வாந் புமாம்ஶ்சரதி நிஸ்ப்ருஹ:
நிர்மமோ நிரஹங்கார: ஸஶாந்திம் அதிகச்சதி.

எந்த புருஷன் சப்தாதிவிஷயங்கள் யாவற்றையும்விட்டு, அவைகளில் அவா அற்றவனுய், யான், எனது என்னும் அஹங்கார

மமகாரமின்றி யிருப்பனே, அவன் சாந்தியை ஆத்மாவலோகனத்தினல் அடைகிறான்.

72. ஏஷா ப்ராஹ்மீஸ்திதி: பார்த்த!
நைநாம்ப்ராப்ய விமுஹ்யதி
ஸ்தித்வா ஸ்யாமந்தகாலேபி
ப்ரஹ்மநிர்வாண ம்ருச்சதி.

பார்த்த! இந்நிலைமை ப்ரஹ்மத்தை எய்துதற்குக் கருவியாகும். இதை எய்தியபின்பு ஸம்ஸாரத்தை அடைவதென்பதில்லை. இந்நிலையில் முதிர்ந்தவயதிலும் இருந்துகொண்டு ஸ்வரூபமான பரிசுத்த ஆத்மாவை அடைகிறான்.

இந்த ஆத்மா அழிவற்றதுஎன்ற அறிவுடன், பயனைக்கருதாமலும், 'நான் செய்யவில்லை' என்னும் எண்ணத்துடனும் கருமத்தைச்செய்தால் நிலையான அறிவுடன் ஆத்மாவை தரிசிக்கலாம் என்று கருத்து.

இரண்டாம் அத்யாயம் முற்றற்று.

ஸ்ரீ:

மூன்றாவது அத்யாயம்

கர்மயோகம்.

“ மூன்றுமோத் தாகுமிது முன்னுரைத்த புந்தியினுக்
கேன்று வதுகரும மேன்பதனல்—ஆன்றமைந்த
தன்கருமம் செய்யுமதே தக்கதேன மிக்குரைக்கும்
வன்கருமம் தீரும் வகை.”

அர்ஜுந உவாச - அருச்சுனன் வினவுவான்.

1. ஜ்யாயஸீசேத் கர்மணஸ்தே மதாபுத்திர் ஜநார்த்தந !
தத்கிம்கர்மணி கோரேமாம் நியோஜயஸி கேஶவ ?

ஜநார்த்தந! நீ கருமயோகத்தைவிட ஜ்ஞானயோகமே மேம்பட்டது என்று கருதுவையாயின், அப்போது கோரமான கருமயோகத்தில் என்னை ஏன் ஏவுகிறாய் ?

2. வ்யாமிஶ்ரேணேவ வாக்யேந புத்திம் மோஹயஸீவ மே
ததேகம்வத நிஶ்சித்ய யேந ஶ்ரேயோஹமாப்நுயாம்.

கலக்கத்தை விளைவிக்கும் வாக்கியங்களால் எனது புத்தியை மயக்குகின்றனைபோலும்! நான் எந்தஉபதேசத்தால் உறுதியுடையேனாய்க் கீர்த்திஎய்துவேனோ அதுஒன்றையே கூறிஅருளுவாய்.

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ பகவான் சமாதானம்கூறுகிறார்.

3. லோகேஸ்மிந் த்விவிதா நிஷ்டா புராப்ரோக்தா மயாநக !
ஜ்ஞாநயோகேந ஸாங்க்யாநாம் கர்மயோகேந யோகிநாம்.

குற்றமற்றவனே! இவ்வுலகில், இருவகைத்தான நிஷ்டைகள் முன்பே என்னால்கூறப்பட்டுள ; ஆத்மஜ்ஞானமுடைய ஸாங்கியர் பொருட்டு ஜ்ஞானயோகமும், அஃதில்லாது கருமயோகத்தில் அதிகாரமுள்ள யோகிகள்பொருட்டு கருமயோகமும் வகுத்துரைக்கப் பட்டன.

“ அண்ணலவன்கேட்க அதன்இயல்கள் அங்குரைத்தான்
எணணமருஞ் சாங்கியருக்கு இன்னறிவு—வண்ணநிகழ்
சீருடைய யோகியர்க்குச் செய்கருமம் என்றிரண்டும்
பேருலகில் சொன்னேன் பிரித்து. ” (ப. கீ. வெ. 2.)

4\. நகர்மணாம் அநாரம்பாம் நைஷ்கர்ம்யம் புருஷோஸ்நுதே
நச ஸந்யஸநாதேவ ஸித்திம் ஸமதிகச்சதி.

ஒரு புருஷன் சாஸ்திரங்களில் விதித்துள்ள கருமங்களைத் தொடங்காமலிருப்பதினுலேயே ஜ்ஞானநிஷ்டையைப் பெறுவதில்லை; தொடங்கிய சாஸ்திரீயகருமங்களை விடுவதினுலேயே ஜ்ஞானயோகத்தின் ஸித்தியைப் பெறுவன்என்பதுமில்லை.

5\. நஹீகஸ்சித் க்ஷணமபி ஜாதுதிஷ்ட த்யகர்மக்ருத்
கார்யதே ஹ்யவச: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர்குணை:

இப்பூவுலகினுள் மனிதன் எவனும் ஒருகணமேனும் கருமம் செய்யாதானாய் ஒருகாலும் இரானன்றோ! ஒவ்வொருவனும் தன்வசமின்றி, பிரகிருதியினின்றெழூம் குணங்களாலே, கருமங்கள் செய்யவேண்டியதாகிறது.

6\. கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய யஆஸ்தே மநஸாஸ்மரந்
இந்த்ரியார்த்தாந் விமூடாத்மா மித்யாசாரஸ் ஸஉச்யதே.

எவன் கருமேந்திரியங்களை அடக்கி, மனத்தால் விஷயங்களை நினைத்துக்கொண்டிருக்கிறானோ விவேகசூனியனாகிய அவன், பொய் ஆசார முடையோனென்று சொல்லப்படுகிறான்.

7\. யஸ்த்விந்த்ரியாணி மநஸா நியம்யாரபதேர்ஜுந!
கர்மேந்த்ரியை: கர்மயோகம் அஸக்தஸ்ஸ விஶிஷ்யதே.

அர்ஜுன! எவன் ஜ்ஞானேந்திரியங்களை மனத்தினால் அடக்கிக் கருமேந்திரியங்களால் கருமயோகத்தை பயனில் விருப்பின்றித் துவக்குகின்றனனோ அவன், ஜ்ஞானயோக நிஷ்டனைக்காட்டிலும் மேன்மையை எய்துகிறான்.

8\. நியதம் குரு கர்மத்வம் கர்மஜ்யாயோ ஹ்யகர்மண:
சரீரயாத்ராபிச தே நப்ரஸித்யே தகர்மண:

நித்தியமாய்ச்செய்யும் கருமத்தை நீ செய்வாயாக; ஜ்ஞானயோகத்திலும் கர்மயோகமே மேலானது, ஒருகருமமும் இல்லாமல் சரீர ரக்ஷணமும் ஸித்திக்காது.

இங்கு பிரகிருதித்தொடர்பு உள்ள அளவும் கருமம்விடமுடியாது, செய்தே தீரவேண்டிய நித்யநைமித்திக கருமங்களைப் பலன்கருதாமல்செய் என்கிறார்.

9. யஜ்ஞார்த்தாத் கர்மணோऽந்யத்ர லோகோயம் கர்மபந்தந:
ததர்த்தம் கர்ம கௌந்தேய! முக்த ஸங்கஸ் ஸமாசர.

கௌந்தேய! இவ்வுலகமக்கள் பகவதாராதனரூபமான யாகங்களுக்காக ஏற்பட்ட கருமங்களைத்தவிர வேறுகருமங்கள் செய்வராயின், அக்கருமங்களால் கட்டப்பட்டவராகின்றனர். அந்த பகவதாராதனரூபமான யாகங்களுக்காக ஏற்பட்ட கருமங்களை பலத்தில் பற்றின்றி நன்றாகச் செய்.

10. ஸஹயஜ்ஞா: ப்ரஜாஸ் ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதி.
அநேநப்ரப்ரஸவிஷ்யத்வம் ஏஷவோஸ்த்விஷ்டகாமதுக்.

ஸ்ருஷ்டிகாலத்திலே ஸர்வேஸ்வரனாகிய பகவான் யஜ்ஞங்களோடு பிரஜைகளையும் ஸ்ருஷ்டித்து, 'இந்த யஜ்ஞங்களினாலேயே நீங்கள் உங்களை விருத்திசெய்துகொள்ளுங்கள்; இந்த யஜ்ஞம் நீங்கள் விரும்பும் பலன்களைத் தரவல்லதாகட்டும்' என்று நியமித்தனன்.

11. தேவாந் பாவயதாநேந தேதேவா பாவயந்துவ:
பரஸ்பரம் பாவயந்த: ஶ்ரேய: பரமவாப்ஸ்யத.

"இந்த வேள்வியால் எனக்குச் சரீரங்களான தேவதைகளை ஆராதியுங்கள்; அந்த தேவதைகள் உங்களை வ்ருத்திசெய்யக் கடவர்கள். ஒருவரையொருவர் திருப்திசெய்துகொண்டு மோக்ஷமாகிய மேலான நன்மையை அடையப்பெறுவீர்."

12. இஷ்டாந் போகாந் ஹிவோ தேவா
தாஸ்யந்தே யஜ்ஞபாவிதா:
தைர்தத்தாந ப்ரதாயைப்யோ
யோபுங்க்தே ஸ்தேந ஏவஸ:

"அன்னபெரு வேள்வியால் ஆங்கிறைஞ்சப் பட்டமரர்
மன்ன பெரியவள மற்றளிப்பர்—இன்னே
அவர்தந்த போகம் அவர்க்களியா துண்பான்
கவர்கின்றான் கள்வனேகாண்." (ப. ஶ்ரீ. வெ. 10).

[வளம் - போகம்; கவர்கின்றான் - அபகரிப்பவன்.]

13. யஜ்ஞஶிஷ்டாஶிநஸ் ஸந்தோ முச்யந்தே ஸர்வகில்பிஷை:
தே த்வகம் புஞ்ஜதே பாபா யே பசந்த்யாத்மகாரணாத்.

" வேள்வியினின் மிக்கதனை யுண்பார் விடப்படுவர்
ஊழ்வினைகளின் தொடர்ச்சியுள்நின்றும்—கேள்வியிலாத்
தன்னுடம்புக்காகச் சமைத்துண்பார் பாவத்தை
முன்னுடனே யுண்பார் முயன்று." (ப. கீ. வெ. 11).

[மிக்கதனை - மிகுதியை, சேஷத்தை; ஊழ்வினை - முற்பிறவிகளில் செய்த புண்ணியபாவங்கள்.]

14. அந்நாத் பவந்தி பூதாநி பர்ஜந்யா தந்நஸம்பவ:
யஜ்ஞாத்பவதி பர்ஜந்யோ யஜ்ஞ: கர்மஸமுத்பவ:

" அன்னத்தால்பூதங்க ளுண்டாகும் அன்னந்தான்
மின்னத்தாழ் மாரியான் மிக்கியலு—மன்னத்தான்
மாரியது வேள்வியால் வந்தியலு மவ்வேள்வி
காரியம தாலாகுங்காண்." (ப. கீ. வெ. 12).

[பூதங்கள்—சீவர்களால் அதிஷ்டானம்செய்யப்பட்ட சரீரங்கள்; மாரி - மழை; காரியமதால் - கருமத்தால்.]

15. கர்ம ப்ரஹ்மோத்பவம் வித்தி ப்ரஹ்மாக்ஷர ஸமுத்பவம்
தஸ்மாத் ஸர்வகதம் ப்ரஹ்ம நித்யம் யஜ்ஞே ப்ரதிஷ்டிதம்.

கருமம் யாக்கையாலுண்டானதாயுணர்; யாக்கையோ அக்ஷரம் என்னப்படும் சீவாத்மாவின் அதிஷ்டானத்தினுல் உண்டாகின்றது; ஆதலின், எவ்லா ஜீவன்களையும் அடைந்திருக்கிற யாக்கை எப்பொழுதும் வேள்வியையே ஆதாரமாய்ப் பற்றியிருக்கின்றது.

[யாக்கை - உடல் - சரீரம். இங்கு "ப்ரஹ்மம்" என்னும் சொல் பிரகிருதியின் விகாரமாகிய சரீரத்தைக்குறிக்கும். முண்டகோபநிஷத் I—1—9-ல் "அந்த பரமாத்மாவிடமிருந்து பெயர் வடிவு இவைகளை உடையதாய் ஜீவர்களால் அநுபவிக்கப்படும் ப்ரஹ்மம் உண்டாகிறது" என்ற இடத்தில் ப்ரஹ்மம் என்னும் சொல் சரீரம் என்று பொருள்படுதல் காண்க. ப. கீ. 14—6-லும் காண்க.]

16. ஏவம் ப்ரவர்த்திதம் சக்ரம் நாநுவர்த்தயதீஹய:
அகாயு ரிந்த்ரியாராமோ மோகம் பார்த்த ஸஜீவதி.

" இப்படியே ஈங்கமைந்த சக்கிரத்தை எவன்தான்
மெய்ப்படியே தான்சென்று மேவலுறான்—எப்படியும்
பாவி யுயிராகிப் பழுதே படர்பொறிப்பட்(டு)
ஆவி சுமப்பான் அவன்." (ப. கீ. வெ. 14).

17. யஸ்த்வாத்மரதி ரேவஸ்யா தாத்மத்ருப்தஶ்ச மாநவ:
ஆத்மந்யேவச ஸந்துஷ்ட: தஸ்ய கார்யம் நவித்யதே.

எந்த மனிதன் தன் ஆத்மாவினிடத்திலேயே பிரீதியும், திருப்தியும், மகிழ்ச்சியும் உடையவனுவனே அவன் ஆத்மஜ்ஞாநத்தின் பொருட்டு செய்யவேண்டியது வேறென்றுமில்லை.

18. நைவ தஸ்ய க்ருதேநார்த்தோ நாக்ருதே நேஹகஶ்சந
நசாஸ்ய ஸர்வபூதேஷு கஶ்சிதர்த்தவ்ய பாஶ்ரய:

அவனுக்குக் கருமம்செய்கையில் யாதொருபயனுமில்லை; செய்யாமையில் இழவு ஒன்றுமில்லை. இவனுக்கு ஐம்பூதங்கள் யாவற்றிலும் பயன் பெறக்கூடியது ஒன்றுமில்லை.

19. தஸ்மா தஸக்தஸ் ஸ்ததம் கார்யம் கர்மஸமாசர
அஸக்தோஹ்யாசரந் கர்ம பரமாப்நோதி பூருஷ:

" ஆதலினுல் பற்றற்று அமர்இயல்பாய் நின்கருமம்
நீதகவு தன்னுடனே நின்றியல்வாய்—மீததனைப்
பற்றற்று இயன்ருல் பரமாம் உயிரினையே
பெற்றத்தை நின்றுய்யும் பின்." (ப. கீ. வெ. 16).

20. கர்மணைவஹி ஸம்ஸித்திம் ஆஸ்த்திதா ஜநகாதய:
லோகஸங்க்ரஹ மேவாபி ஸம்பஶ்யந் கர்த்து மர்ஹஸி.

" முன்னம் சனகாதி யோகியரு மூண்டியன்ற
அன்ன கருமத்தால் ஆனபயன்—மன்னினர்காண்
இந்த வுலகம் இசைவகையும் பார்த்தியலாய்
அந்த வுயர் கருமம் ஆய்ந்து." (ப. கீ. வெ. 17).

[மன்னினர் – அடைந்தனர்; உலகம் இசைவகையும் – மக்கள் தருமநெறுயில் ஒழுகும்வண்ணம்.]

21. யத்யதாசரதி ஶ்ரேஷ்ட: தத்ததேவ இதரோஜந:
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ் ததநுவர்த்ததே.

" மேலொருவன் செய்த மிகுகருமம் தானெதுவென்(று)
ஏலுமதில் மற்றிங் கியல்சனமும்—சாலவவன்
யாதைத்தன் அங்கம் எனவியலும் இவ்வுலகம்
ஆதைப்பின்செல்லும் அமர்ந்து." (ப. கீ. வெ. 18).

[மேலொருவன் - சிரேஷ்டன்; ஏலும் - பின்பற்றும்; ஆதை - அதனை.]

22. நமே பார்த்த அஸ்தி கர்த்தவ்யம் த்ரிஷுலோகேஷு கிஞ்சந
நாநவாப்த மவாப்தவ்யம் வர்த்த ஏவச கர்மணி.

“மூவுலகும் தன்னுள்ளு முன்பெய்த தாய்ப்பின்பு
மேவுமியல் பாலெய்த வேண்டுவதொன்—றுவதெனக்
கில்லையா யேயிருக்க வெல்லாக் கருமத்தும்
ஒல்லையால் நின்றியல்வன் ஓர்ந்து.” (ப. கீ. வெ. 19).

[நின்று இயல்வன் - நின்று அனுஷ்டிப்போன்]. என்பால் எய்தவேண்டுவதொன் றுவதெனக்கில்லை - ஸர்வேசுவரனுகியும், ஸர்வஜ்ஞனுகவும் மூவுலகிலும் தேவமனித உருவுடன் அவதாரம் செய்பவனுயும் உள்ள என்னிடத்தில் இல்லாத பொருள் ஒன் றில்லையாதலால் அடையவேண்டுவ தொன்றுமில்லாதவனுயுமுள்ள எனக்கு என்றபடி.

23. யதி ஹ்யஹம் நவர்த்தேயம் ஜாது கர்மண்யதந்த்ரித:
மம வர்த்மாநு வர்த்தந்தே மநுஷ்யா: பார்த்த ஸர்வஶ:

24. உத்ஸீதேயு ரிமே லோகா நகுர்யாம் கர்மசேதஹம்
ஸங்கரஸ்யச கர்த்தாஸ்யாம் உபஹந்யா மிமா : ப்ரஜா:

“யானியலா திங்கொழியில் என்வழியைப் பின்செல்வர்
மானிடர்மற் றிவ்வுலக மாயுமால்—தானிலேசேர்
நன்மரபு தான்கலக்கி நானே இவர்தம்மைப்
புன்மையினில் உய்த்தேனுய்ப் போம்.” (ப. கீ. வெ. 20).

25. ஸக்தா : கர்மண்ய வித்வாம்ஸோ
யதா குர்வந்தி பாரத
குர்யாத்வித்வாம் ஸ்ததாஸக்த:
சிகீர்ஷுர் லோகஸங்க்ரஹம்.

26. ந புத்திபேதம் ஜநயேத் அஜ்ஞாநாம் கர்மஸங்கிநாம்
ஜோஷயேத் ஸர்வகர்மாணி வித்வாந்யுக்தஸ் ஸமாசரந்.

“நசையுடையார் செய்கைபோல் ஞானி நசையின்றி
இசையுலகுக்காக இயல்வான்—பசைகருமத்(து)
ஆன அறிவில்லார்க்கு அதில் நெஞ்சைப் பேதியேல்
தானிசைவு செய்க அதில் சார்ந்து.” (ப. கீ. வெ. 21).

27. ப்ரக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வஶ:
அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹம் இதிமந்யதே.

28. தத்வவித்து மஹாபாஹோ குணகர்ம விபாகயோ:
குணா குணேஷு வர்த்தந்த இதி மத்வா நஸஜ்ஜதே.

"மெய்க்கருமம் தன்குணத்தால் மேவிவரும் வேறறியான்
இக்கருமம் யான்செய்தேன் என்றிருக்கும்—மக்கருமத்(து)
ஏயகுணம் வேறு அறிவான் இக்குணங்கள் தன்னில்தான்
ஆயவென வுன்னுநசை யற்று." (ப. கீ. வெ. 22).

29. ப்ரக்ருதேர் குண ஸம்மூடா: ஸஜ்ஜந்தே குணகர்மஸு
தாநக்ருத்ஸ்நவிதோ மந்தாந் க்ருத்ஸநவிந் நவிசாலயேத்

"முக்குணத்தால் மூடரா மாந்தர் முயல்கருமம்
அக்குணத்து நாளும் அமர்வுறுவர்—மிக்க
அறிவுடையா ரல்லாரை ஆங்கசைவு செய்யார்
செறிவுடைய ஞானத்தன் சேர்ந்து." (ப. கீ. வெ. 23).

30. மயி ஸர்வாணி கர்மாணி ஸந்யஸ்யாத்யாத்மசேதஸா
நிராஸீர்நிர்மமோ பூத்வா யுத்யஸ்வ விகதஜ்வர:

"என்னிடையே இக்கருமம் எல்லாம் இனிதிருத்தி
நின்னிடையின் மிக்கமர்ந்த நெஞ்சினால்—மன்னியபேர்
ஆசையுடன் நீமமதையற்று அங்கு அமர்முயல்வாய்
ஆசையுடன் உள்வெதுப் பற்றாய்ந்து." (ப. கீ. வெ. 24).

31. யேமே மதமிதம் நித்யம் அநுதிஷ்டந்த்தி மாநவா:
ஶ்ரத்தாவந்தோ நஸூயந்தோ முச்யந்தே தேபிகர்மபி:

எந்த மனிதர்கள் எனது இக்கொள்கைப்படி எப்பொழுதும் ஒழுகுகின்றனரோ, (அங்ஙனம் ஒழுக இயலாராயினும்) இதில் சிரத்தையுடையரோ, (சிரத்தையிலராயினும்) பொறாமையின்றி யிருக்கின்றனரோ, அவர்கள் எல்லாக்கருமங்களினின்று விடப்படுகின்றனர்.

ஒரு நற்கருமத்தில் பொறாமை யொழிந்தால் அதை இயற்றுவதில் இச்சைஎழுகின்றது. இச்சை, செய்கையில்மூட்டும் என்றபடி.

32. யேத்வேத தப்யஸூயந்த்தோ நாநுதிஷ்டந்த்தி மேமதம்
ஸர்வஜ்ஞாநவிமூடாம் ஸ்தாந் வித்தி நஷ்டாநசேதஸ:

எவர்கள் எனது இக்கொள்கைப்படி ஒழுகுவதில்லையோ, இதில் பொறாமைகொண்டுளரோ, அவர்கள் ஸர்வஞானங்களிலும் மூடர்களாகவும், நாசமடைந்தவர்களாகவும், அறிவில்லாதவர்களாகவும் ஆவார்கள் என்று அறி.

33. ஸத்ருஶம் சேஷ்டதே ஸ்வஸ்யா: ப்ரக்ருதேர் ஜ்ஞானவானபி
ப்ரக்ருதிம் யாந்தி பூதானி நிக்ரஹ: கிங்கரிஷ்யதி.

ஞானமுள்ளோனும் தனது பூர்வகருமவாஸனைக்குத் தக்கபடி கருமத்தில் தலையிடுகிறான். பிராணிகள் பிரகிருதிவாஸனையை ஒட்டி நடக்கின்றன. சாஸ்திரங்களில் கூறியுள்ள விலக்குகள் என்ன செய்யும்?

34. இந்த்ரியஸ்யேந்த்ரி யஸ்யார்த்தே
ராகத்வேஷௌ வ்யவஸ்திதௌ
தயோர் நவசமாகச்சேத்
தௌஹ்யஸ்ய பரிபந்தினௌ.

ஞானேந்திரிய கர்மேந்திரியங்கட்கு அவ்வவற்றிற்கு வகுத்த விஷயங்களில் விருப்பும் அவை கிட்டப்பெறுவிடில் வெறுப்பும் உண்டாவது இயற்கை. இவை இவனுக்குச் சத்துருக்களாதலின் இவற்றின் வசப்படல்கூடாது.

35. ஶ்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத்ஸ்வநுஷ்டிதாத்
ஸ்வதர்மே நிதநம் ஶ்ரேய: பரதர்மோ பயாவஹ:

நன்ருகச்செய்யப்படும் பரதருமத்தைக்காட்டிலும் குணமில்லாத ஸ்வதருமமே சிறந்தது; ஸ்வதருமத்தால் இறக்கநேரினும் நலமேயாம்; பரதருமமோ அச்சந்தரத்தக்கது.

இங்கு ஸ்வதருமமென்பது கருமயோகத்தை; பரதருமமென்பது ஞானயோகத்தை. வேறுவகையாகப் பொருள்விரித்தல் இவ்விடத்தில் ஒட்டாது. குணமில்லாத ஸ்வதருமம் என்றது சிறிது குறைவாக அநுஷ்டிக்கப்படும் கருமயோகம்.

அர்ஜுன உவாச - அருச்சுனன் கேட்பான்.

36. அதகேந ப்ரயுக்தோயம் பாபஞ் சரதி பூருஷ:
அநிச்சந்நபி வார்ஷ்ணேய பலாதிவ நியோஜித:

ஏ! வார்ஷ்ணேய! அங்ஙனமாயின், இந்தபுருஷன் எதனால் தூண்டப்பட்டவனாய், இச்சையற்றிருந்தும் வலிய ஏவப்பட்டவன் போல் பாவத்தைச் செய்கிறான்?

ஞானயோகம் செய்யப்புகும் புருஷன், தான் விஷயநுகர்ச்சியில் இச்சையற்றிருந்தும் எதனாலே தூண்டப்பட்டவனாய் விஷயாநுபவமாகிய பாவத்தை வலிய ஏவப்பட்டவன்போல்செய்கிறான் என்று கருத்து. இது சூறாவளியில் சுழல்பவனும் நீரோட்டத்தகப்பட்டானும் இச்சையின்றியே செய்வதுபோல என்க.

ஸ்ரீபகவாநுவாச - ஸ்ரீ பகவான் உபதேசிக்கிறார்.

37. காம ஏஷ : க்ரோத ஏஷ : ரஜோகுணஸமுத்பவ:
மஹாஶநோ மஹாபாப்மா வித்யேநம் இஹ வைரிணம்.

"காம மிதுதான் கடுங்கோ பமுமாகித்
தீமை நடுக்குணத்துச் சேர்ந்துதிக்கும்—ஆமதெல்லாம்
வாரியுடன் புசிக்கு மாபாவ மாமிதனை
வைரியெனவே மதி." (ப. கீ. வெ. 30).

[நடுக்குணம் - ரஜோகுணம்; வைரி - பகை, சத்துரு.]

ஜீவனைப்போர்த்த உடல் முக்குணங்களுடையது. ஒரோ வேளைகளில் ஒரோ குணங்கள் ஏனை இரண்டனையும் அடக்கித் தான்மிக்குத் தோன்றுதலுடையது. இங்ஙனம் மிக்குத்தோன்றும் ரஜோகுணத்தாலும், பழையவாஸனையாலும், பொருள்களைக்காணும் ஆசையும், சப்தங்களைக்கேட்கவேண்டும் என்னும் விருப்பமும் மிகுந்தெழும். இது ஞானயோகம் செய்யப்புகுந்தவனுக்குப் பெரும்பகையாகி அவனை விஷயங்களில் மண்டும்படிச்செய்கிறது. காமம் மிகமிக, விஷயநுகர்ச்சி எதிலும் அளவுகடந்துசெல்லும். இதுவே "மஹாசன:", அதாவது, பெருந்தீனிக்காரன் எனப்படுகிறது. இச்சைப்படி நுகரும் நுகர்ச்சிக்குத் தடைவரின், அவ்விச்சை தடைசெய்வோன்மீது சினமாக மாறிவிடுகிறது. 'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி' என்று பெருப்பெருத்த பாபச்செயலுக்குக் காரணமாகிறது. இப்படி ரஜோகுணத்தால் மிக்குத்தோன்றும் காமம் ஞானயோகிக்கு உடனிருக்கும் விரோதியென்றறி என்கிறார்.

38. தூமேநாவ்ரியதே வஹ்நி: யதாதர்ஶோ மலேநச
யதோல்பேநாவ்ருதோர் கர்ப: ததா தேநேத மாவ்ருதம்.

"தூமத்தா லங்கி சுணையமுக்காற் கண்ணடி
காமக் கருவுற்பக் கட்டதனல்—ஏமத்துச்
சூழ்வுற்றதென்னவே சூழப்பட்டிங்கதனல்
தாழ்வுற்றதிச் செந்துத்தான்." (ப. கீ. வெ. 33).

[தூமம் - புகை; அங்கி - அக்நி, நெருப்பு; உற்பம் - உல்பம், கருப்பப்பை.]

அவ [சூழ்த்துக்கொள்ளும் முறை விரிக்கப்படுகின்றது-]

39. ஆவ்ருதம் ஜ்ஞாந மேதேந ஜ்ஞாநிநோ நித்யவைரிணா
காமரூபேண கௌந்தேய! துஷ்பூரேண அநலேநச.

கௌந்தேய! ஆத்மாக்கள் யாவும் ஞானத்தைத் தந்தாமே இயற்கையாயுடையன. எனினும், பொருள்களில் மோகத்தைவிளைப்பது; எய்தற்கரியவற்றில் வறிதே திரிந்து இளைப்பது; போது

மென்னும் திருப்தியற்றது; நித்யசத்துருவாகியதும் காமமே; அதுவே ஆத்மஞானத்தை மறைப்பது.

[காமத்தைத் தீயைப்போன்றதென்றது, எல்லாப்பொருள்களையும் பற்றுவதையும், எவ்வளவு எரித்தும் போதும் என்பததில்லாதிருத்தலையும் பற்றிய உவமை என்க.]

அவ [இக்காமம் ஆத்மாவைச் சூழ்த்துக்கிடப்பதற்கு துணைக்கருவிகள் யாவைஎன விளக்குகிறார்.]

40. இந்த்ரியாணி மநோ புத்தி: அஸ்யாதிஷ்டாந முச்யதே
ஏதைர் விமோஹயத்யேஷ: ஜ்ஞாநமாவ்ருத்ய தேஹிநம்.

இந்திரியங்கள், மனம், புத்தி என்பன காமத்திற்கு இருப்பிடங்களெனப்படுகின்றன. இக்காமம் தனதிருப்பிடங்களாகிய இவைகளாலேயே ஞானத்தைச் சூழ்த்துக்கொண்டு ஆத்மாவை விசேஷமாக மயக்குகின்றது.

41. தஸ்மாத்வ மிந்த்ரியாண்யாதௌ நியம்ய பரதர்ஷப!
பாப்மாநம் ப்ரஜஹி ஹ்யேநம் ஜ்ஞாநவிஜ்ஞாந நாஶநம்.

பரதர்ஷப! ஆதலின், நீ, மோக்ஷஉபாயத்தைத் துவக்குகையில், இந்திரியங்களை வசம்செய்துகொண்டு * ஞான விஜ்ஞானங்களை அழியச்செய்யும் இந்த பாவஸ்வரூபமான காமத்தை நசிக்கச்செய்வாயாக.

அவ [மெய்யுணர்வைக் கெடுப்பவற்றில் முக்யமானவை இவை என்கிறார்.]

42. இந்த்ரியாணி பராண்யாஹு: இந்த்ரியேப்ய: பரம் மந:
மநஸஸ்து பராபுத்தி: யோபுத்தே: பரதஸ்துஸ:

ஞானத்திற்கு விரோதம்புரிவதில் இந்திரியங்களே முக்யமானவை என்கின்றனர்; இவ்வைந்து இந்திரியங்களினும் மனம் மேலானது; மனதினும் புத்தி இன்னும் மேற்பட்டது; புத்தியினும் மேம்பட்டது ரஜோகுணவிளைவாகும் காமமே.

---

* ஞானம் — ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடி தெரிந்துகொள்ளுதல்.
விஜ்ஞானம் — ஆத்மா தேஹத்தில் வேறுபட்டது என்றறிதல்.

43. ஏவம் புத்தே: பரம் புத்வா ஸம்ஸ்தப் யாத்மாந மாத்மநா
ஜஹி ஶத்ரும் மஹாபாஹோ காமரூபம் துராஸதம்.

மஹாபாஹோ! இங்ஙனம் புத்தியினும் மேலானகாமத்தை ஞானயோகத்துக்கு முக்கியவிரோதி என்று உணர்ந்து, புத்தியினால் மனதை கருமயோகத்தில் நிலைநிறுத்தி, இக்காமமென்னும் வெலற்கரும் வைரியையும் நிரஸனம்செய்ய முற்படுவாய்.

இங்கு தடந்தோளாய் என்று அருச்சுனனை விளித்தது, உன்புயவலியால் காமத்தை வெல்லமுடியாது; அறிவின் வலியாலேயே வெல்லவேண்டும் என்று குறிப்பித்தபடி.

மூன்றும் அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ :

நான்காவது அத்தியாயம்.

ஞானயோகம்.

"நாரா யணன்கீதை நாலாமோத் திற்றனது
சீரார் பிறவிச் சிறப்புடனே—ஏராரும்
யோகத் துடன்கரும முற்றியலு மாறுரைக்கும்
ஏகப் பலபரிசால் ஏய்ந்து."

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ பகவான் உபதேசிக்கிறார்.

1. இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவா நஹ மவ்யயம்
விவஸ்வாந் மநவேப்ராஹ மநு ரிக்ஷ்வாகவே ப்ரவீத்.

"இந்த யோகத்தை இரவிக்குயா னுரைத்தேன்
வந்தவவன் மனுவுக்காங் குரைத்தான்—மைந்தனும்
இக்குவாகுக்கவனு மேன்றுரைத்தான் இப்படியால்
தக்குவாய்ந்துற்றது தான்." (ப. கீ. வெ. 1).

2. ஏவம் பரம்பராப்ராப்தம் இமம் ராஜர்ஷயோ விது:
ஸகாலேநேஹ மஹதா யோகோ நஷ்ட: பரந்தப!

"இன்னே பரம்பரையா லேய்ந்ததனை யீங்கறிவர்
முன்னே யரைச முனிவர்கள்—பின்னேபோய்க்
காலத்தினுன் மறைந்து கைகழிந்து விட்டதே
ஞாலத்தில் யோக நலம்." (ப. கீ. வெ. 2).

3. ஸ ஏவாயம் மயாதேத்ய யோக: ப்ரோக்தஃ புராதந:
பக்தோஸிமே ஸகாசேதி ரஹஸ்யம் ஹ்யேததுத்தமம்.

"போதமிகு மிந்தப் புராதனமாம் யோகத்தை
ஏத மறவுனக்கிங் கியானுரைத்தேன்—காதலமர் [ளாம்
பத்தனுமாய்த் தோழனுமாய்ப் பண்பான் மறைப்பொரு
உத்தம மீதென்றோர்ந் துகந்து." (ப. கீ. வெ. 3).

அர்ஜுந உவாச - அருச்சுனன் வினவுதல்.

4. அபரம் பவதோ ஜந்ம பரம் ஜந்ம விவஸ்வதஃ
கதமேத த்விஜாநீயாம் த்வமாதௌ ப்ரோக்தவாநிதி.

" ஆங்கு விசயன் தான் ஆதித்தன் முன்பிறந்தான்
ஈங்குநீ பின்பிறந்தாய் எங்ஙனநான்—பாங்கினின் [கத்
முன்னுரைசெய் வண்ணமிது முற்றுணர்வ னென்றுரைக்
தன்னுரை செய்தான் பரமன்தான்." (ப. கீ. வெ. 4).

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ பகவான் விளக்குகிறார்.

5. பஹூநி மேவ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந!
தாந்யஹம் வேத ஸர்வாணி நத்வம் வேத்த பரந்தப!

" என்பிறவியான தியம்பிற் பலவாகும்
உன்பிறவி யானவையு மொக்குமவை—தன்படியை
யானறிவனெல்லாம் இகல்விசயா இங்குநீ
தானறியா யத்தகைமை தான்." (ப. கீ. வெ. 5).

6. அஜோபிஸந் நவ்யயாத்மா பூதாநா மீஸ்வரோபிஸந்
ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம் யாத்மமாயயா.

" மேவுபிறப் பில்லனுமாய் மெய்த்தன்மை குன்றானாய்
மூவுலகுக் கெண்ணுமுறை யிறையாந்—தேவுடனே
என்னுடையா மூர்த்தியினை எய்தியே என்நினைவு
தன்னியல்வாலே பிறப்பன் சார்ந்து." (ப. கீ. வெ. 6).

பகவதவதாரங்கள் எண்ணிறந்தனவாயினும் முக்யமானவை பத்து என்ப.

" தேவுடைய மீனமாய் ஆமையாய் ஏனமாய் அரியாய்க் குறளாய், மூவுருவில் இராமனாய்க் கண்ணனாய்க் கற்கியாய் முடிப்பான் கோவில், சேவலொடு பெடையன்னம் செங்கமலமலரேறி யூசலாடிப், பூவணைமேற்றுதைந்தெழு செம்பொடியாடி விளையாடும் புனலரங்கமே. (பெரியாழ். தி. 9—9).

7. யதா யதாஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத!
அப்யுத்தாந மதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்.

" அறந்தளரும் அக்காலம் எக்காலம் ஆங்கே
மறங்கிளர்ந்து பாவம் வளரும்—பிறங்கரசர்
வெந்நைத் தருவிக்கும் வில்விசயா அக்காலத்
தென்னைப் பிறப்பிப்பன் யான்." (ப. கீ. வெ. 7).

தன்னைத்தானே படைத்துக்கொண்டான் என்பதற்கு மேற்கோள்:

1. " தன்னாலே தன்னுருவம் பயந்துதானாய்த்
தயங்கொளிசேர் மூவுலகுந்தானாய் வானாய்த்
தன்னாலே தன்னுருவின் மூர்த்தி மூன்றாய்த்
தானயனாயினான் சரணென்றுய்வீர்;

மின்னாடு வேலேந்து விளந்தை வேளே
விண்ணேறத் தனிவேலுய்த் துலகமாண்ட
தென்னாடன் குடகொங்கன் சோழன்சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே.''
(பெரிய தி. 6—6).

2. '' தன்னைப்படைத்ததுவுந் தானே யெனுந்தன்மை
பின்னைப்படைத்ததுவே காட்டும் பெரும்பெருமை
உன்னைப்படைத்தாய் நீயென்றாலுயிர் படைப்பான்
என்னைப்படைத்தாய் எனுமிதுவு மேதாமோ.''
(கம்ப. ரா. யுத். இரணியன் வதைப்படலம். 157).

8. பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாயச துஷ்க்ருதாம்
தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே.

'' நல்லார்கள் தம்மை நலம்புரிந்து காத்தற்கும்
பொல்லாரைப் பொன்றுநெறி போக்கற்கும்—சொல்லாரும்
முந்தையறம் நாட்ட முய்த்தற்கும் நான்பிறப்பன்
இந்தவுகந்தோறும் இசைந்து.'' (ப. கீ. வெ. 8).

'' அறந்தலை நிலுத்தி வேதத்தருள்சுரந்தறைந்த நீதித் திறந்தெரிந்துலகம் பூணச் செந்நெறிநிறுத்தித் தீயோர், இறந்துக நூறித்தக்கோர் இடர்துடைத்து ஏக விண்டுப், பிறந்தனன் அவன் பொற்பாதம் ஏத்துவார் பிறப்பறுப்பான்.'' (கம்பர்).

9. ஜந்ம கர்மச மே திவ்யம் ஏவம்யோ வேத்தி தத்வத:
த்யக்த்வா தேஹம் புநர்ஜ்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜ்ஜுந!

'' என்பிறவி என்கருமம் இவ்வண்ணம் திவ்யமென்(று)
அன்பினொடும் உண்மை அறிவுற்றான்—முன்பிறவி
எய்ந்த உடல்விட்டே எதிர்ப்பிறவி ஏலாதே
ஆய்ந்தென்னையே யெய்துமவன்.'' (ப. கீ. வெ. 9).

[திவ்வியம் - அப்பிராகிருதம்].

10. வீதராகபயக்ரோதா மந்மயா மாமுபாஶ்ரிதா:
பஹவோ ஜ்ஞாநதபஸா பூதா மத்பாவ மாகதா:

'' நேயம் பயம்வெகுளி நீக்கியென் தன்மையரே
ஆய திறத்தா லடைந்தென்னைத்—தூய
அறிவாந்தவத்தால் அநேகர் என் தன்மை
செறிவார்கள் பூதராய்ச் சேர்ந்து.'' (ப. கீ. வெ. 10).

[வெகுளி - குரோதம், சீற்றம்; அறிவாந்தவம் - ஞானதபஸ்;
பூதராய் - பரிசுத்தராய்].

இங்கு, "மத்பாவம் ஆகதா:" என்றது என்னைப்போல் கருமமலம்பந்தமற்றிருத்தல், முற்றுமுணர்தல் முதலியவற்றில் ஒத்தவராயாகின்றனர் என்றே கருத்து.

ப. கீ. 14-2-ல் 'மமஸாதர்ம்யமாகதா:' என்றும்காணலாம். இங்கு சாயுஜ்யம் என்னும்நிலை எம்பெருமானுடன் மிக்க ஒற்றுமையுடைமையே. இதன் உண்மை பலவாறு சமயவாதிகள் கூறுகின்றனராதலின், கம்பநாட்டாழ்வார் "அன்னமாய்" என்னும்துதியில் விராதன்வாயிலால் இதன்பொருளை இறைவனையே வினவினர்;

"அன்னமா யருமறைக ளறைந்தாய் நீயவையுன்னை
முன்னமாகோது வித்தாரெல்லாரு முடிந்தாரோ
பின்னமா யொன்றுதல் பிரிந்தேயே பிரியாதோ
என்னமா மாயமிவை ஏனமாய் மண்ணிடந்தாய்."

(கம்ப. ரா. ஆரண். சரபங். பி. கீ. ப. 60.)

11. யேயதா மாம் ப்ரபத்யந்த்தே தாம் ஸ்ததைவ பஜாம்யஹம்
மம வர்த்மாநுவர்த்தந்த்தே மநுஷ்யா: பார்த்த ஸர்வஶ:

"என்னை யெவரெவ்வா றடைந்தியல்வர் யானவரை
அன்னவகையால் மிகவுமன்புற்றே—பின்னடைந்து
காட்டுவன் மற்றுதலினுல் என்நெறியைக் காதலினுல்
நாட்டெவரும் பின்செல்வர் நன்கு." (ப. கீ. வெ. 11).

"தேருங்கால் தேவனொருவனே என்றுரைப்பன்
யாருமறியார் அவன்பெருமை—ஒரும்
பொருண்முடிவு மித்தனையே எத்தவம்செய்தார்க்கும்
அருண்முடிவ தாழியான் பால்." (நான். தி. அ. 2).

12. காங்க்ஷந்த: கர்மணாம் ஸித்திம் யஜந்த இஹ தேவதா:
க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே ஸித்திர்ப்பவதி கர்மஜா.

"கருமபயன் காமித்தார் காமத்தால் இங்கே
ஒருமையுடன் தேவருடன் ஒன்றி—அருமையினுல்
தாங்கிநின்று அஞ்சாநிற்பர் தாழாது உலகுதனில்
ஆங்கருமத் தானபயன் ஆர்ந்து." (ப. கீ. வெ. 12).

[காமித்தார் - விரும்பியவர்; தாங்கிநின்று - ஆராதனம் செய்துகொண்டு; தாழாது - தாமதமில்லாமல், விரைவாக.]

13. சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்மவிபாகஶ:
தஸ்ய கர்த்தார மபி மாம் வித்யகர்த்தார மவ்யயம்.

குணப்பிரிவினுலும் கருமப்பிரிவினுலும் நாற்குலப்பாகுபாடு என்னுல் உண்டாக்கப்பட்டது. அவைகளை உண்டாக்கியவனுயினும் என்னை உண்டாக்காதவன் என்றே அறி.

ஸத்வ, ராஜஸ், தாமஸ் என்னும் முக்குணங்களின் பிரிவினாலும் சாந்திமுதலிய கருமங்களின் பிரிவினாலும் வேதியராதி நால்வகைக் குலங்கள், படைக்கப்பட்டன என்றது. இத்தகைய நால்வகைப்பட்ட ஸமூஹங்கள் அடங்கியுள்ள இவ்வுலகேயன்றி, பிரமன்முதல் எறும்பு புல் ஈருகவுள்ள எவ்வுலகும் உண்டாக்கியும், காத்தும், அழித்தும் போருமவன், தானேஎன்று உபலக்ஷணத்தால் கொள்ளவேண்டுமென்று கருதி; விசித்திரங்களான இம்முத்தொழில்கட்கும் தானே கருத்தாவாயினும் தான் கருத்தா அல்லன் என்றும் அறிதல்வேண்டும் என்கிறார். கருமாநுகுணமாக அவை நிகழ்தலின்.

14: நமாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்மபலஸ்ப்ருஹா
இதி மாம் யோபிஜாநாதி கர்மபிர் நஸபத்யதே.

என்னைப் படைத்தலாதிகருமங்கள் அண்டுவதில்லை. இந்த படைத்தலாதி கருமபலன்களான போகாதிகளில் எனக்கு விருப்பம் என்பதில்லை. இத்தகையோன் யான் என்று எவன் தெரிந்துகொள்கின்றனனோ அவன் நல்வினை தீவினைகளால் கட்டுப்படுகிறதில்லை.

15. ஏவம் ஜ்ஞாத்வா க்ருதம் கர்ம பூர்வைரபி முமுக்ஷுபி:
குரு கர்மைவ தஸ்மாத்வம் பூர்வை: பூர்வதரங்க்ருதம்.

இவ்விதமறிந்து முன்னோர்களான மோக்ஷ இச்சையுள்ளவர்களாலும்கூடக் கருமம்செய்யப்பட்டது. ஆதலால், முன்னோர்களால் இயற்றப்பட்டதும் புராதனமானதுமான கருமத்தையே நீயும்செய்.

அவ [மேல் விவரிக்கப்படும் கருமம் உணர்தற்கு மிகஅறிது என்கிறார்.]

16. கிம் கர்ம கிமகர்மேதி
கவயோப்யத்ர மோஹிதா:
தத்தே கர்ம ப்ரவக்ஷ்யாமி
யத்ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸே ஸுபாத்.

எது கருமம்; எது அகருமம்; என்னும் இந்தவிசாரத்தில் பண்டிதர்களும் மயக்கமெய்தியுள்ளனர். எந்தகருமத்தை அறிந்து அசுபத்திலிருந்து விடுபடுவாயோ அந்தகருமத்தை உனக்கு கூறப் போகிறேன்.

இங்கு கருமம் என்பது முமுக்ஷுவால் இயற்றப்படுவது; அகர்மம் என்றது ஞானத்தை; அசுபம் என்றது பிறவிப்பிணியை.

அவ [இதை உணர்ந்துகொள்வதில் இவ்வளவு வருத்தமிகுதி என்னென்று எழும் வினாவிற்று விடைதருகின்றார்.]

17. கர்மணோஹ்யபி போத்தவ்யம்
போத்தவ்யஞ்ச விகர்மண:
அகர்மணஸ்ச போத்தவ்யம்
கஹநா கர்மணோ கதி:

கருமத்தில் தெரிந்துகொள்ளவேண்டியது இருக்கின்றது; விகர்மத்திலும் தெரிந்துகொள்ளவேண்டியது இருக்கின்றது; அகர்மத்திலும் தெரிந்துகொள்ளவேண்டியது உண்டு; கருமத்தின் இயல்போ அறியமுடியாதது.

இங்கு விகர்மம் என்றது நித்தியம், நைமித்திகம், காமியம் என்று பலதிறப்பட்ட கருமங்களும் அவற்றிற்குக்காரணமான பொருளீட்டல் முதலியனவும.

அவ [கருமம், அகருமம் எனுமிவ்விரண்டினும் அறிதற்குரியவற்றை விளக்குகின்ருர்.]

18. கர்மண்ய கர்மய: பஶ்யேத் அகர்மணிச கர்மய:
ஸபுத்திமாங் மநுஷ்யேஷு ஸயுக்தஃ க்ருத்ஸ்ந கர்மக்ருத்.

"கன்மத்தின் ஞானத்தைக் காணுமவன் எவன்தான்
கன்மத்தின் ஞானத்தைக் கண்டியல்வான்—நன்மைக்கே
தக்க பெரும்புத்தி சமைந்தானவன் அவனே
எக்கருமம் செய்தானுமிங்கு." (ப. கீ. வெ. 18).

இங்கு அகருமம் என்றது ஞானத்தை.

அவ [கண்ணல்காண்பது, கருமம் ஒரு செய்கையென்றே; அது எங்ஙனம் ஞானஸ்வரூபமாக இருத்தல்கூடும் என்பதற்கு விடைதருகின்ருர்.]

19. யஸ்ய ஸர்வே ஸமாரம்பா: காமஸங்கல்ப வர்ஜிதா:
ஜ்ஞாநாக்நி தக்தகர்மாணம் தமாஹுஃ பண்டிதம் புதா:

எவனுடைய கருமங்களின் தொடக்கங்கள் அனைத்தும் பலத்தில்நசையும், சங்கல்பமும் அற்றனவோ, அந்த விவேகியான பண்டிதனை, பழவினைகளை ஆத்மஞானமாகிய தீயினுல் எரித்தொழித்தவன் என்று புத்திமான்கள் கூறியுள்ளனர்.

அவ [மேலும் விவரணம் செய்கிருர்.]

20. த்யக்த்வா பலாஸங்கம் நித்யத்ருப்தோ நிராஶ்ரய:
கர்மண்யபி ப்ரவ்ருத்தோபி நைவ கிஞ்சித்கரோதிஸ:

கருமபலத்தில் விருப்பத்தை ஒழித்து நித்யமான ஆத்மாவினிடத்திலேயே திருப்தியை யுடையனுய், நிலையற்றனவாகிய பிரகிருதிப்பொருள்களில் தான் நுகருதல்வேண்டும் என்னும் புத்தி

யில்லாதவனாய், எவன் கருமங்களை இயற்றுகின்றனனோ, அவன் கருமங்களில் நேராகவே முயற்சியுடன் தலையிட்டு நின்றனனாயினும், அவன் ஒரு கருமத்தையும் செய்தவனல்லன்.

கர்மத்தைமுன்னிட்டு ஜ்ஞானஅப்யாஸமே செய்பவனாகிறான் என்று கருத்து.

அவ [மறுமுறையும் கருமயோகம் ஞானஸ்வரூபம் என்பதே விளக்கப்படுகிறது.]

21. நிராஶீர்யத சித்தாத்மா த்யக்தஸர்வபரிக்ரஹ:
ஶாரீரம் கேவலம் கர்ம குர்வந் நாப்நோதி கில்பிஷம்.

பலன்களில் நசையற்றவனாய், தன்வசப்பட்ட சித்தம் என்னும் நிலையுடைய மனமுடையவனாய், பிரக்ருதி பிராகிருத பதார்த்தங் களில் அபிமானம்அற்றவனாய், வாழ்நாளளவும் உடலைப்பற்றிவரும் கருமங்களைமாத்திரம் இயற்றிக்கொண்டுவருபவன் மோக்ஷ விரோதி யாகிய பாபத்தை அடைகிறதில்லை.

ஞானயோகத்தினால் இடையே காலக்கழிவின்றி கர்மயோகத்தினாலேயே ஆத்மாவைப் பார்க்கிறான் என்று கருத்து.

22. யத்ருச்சா லாபஸந்துஷ்டோ த்வந்த்வாதீதோ விமத்ஸர:
ஸமஸ்ஸித்தா வஸித்தெளச க்ருத்வாபி நநிபத்யதே.

தன்னடையே உண்டான ஊதியத்தால் உகப்படைந்தோனாயும், குளிர், வெப்பம், இன்பம், துன்பம் என்னும் மறுதலைத்த இரட்டை களைக் கடந்தவனாகவும், அழுக்காறற்றவனாகவும், வெற்றிமுதலாய பயன்பெறினும் பெறாவிடினும் பாராட்டாமல் சமநிலையுடையோ னாகவும் இருப்போன், கருமங்களைப்புரிந்தும் கட்டுப்படுகிறதில்லை.

இங்கு இத்தகையோன் தனித்து ஞானயோகமின்றியே ஸம்ஸாரத்தைக் கடந்து விடுவான் என்றே கருத்து.

23. கதஸங்கஸ்ய முக்தஸ்ய ஜ்ஞாநாவஸ்த்தித சேதஸ:
யஜ்ஞாயாசரத: கர்ம ஸமக்ரம் ப்ரவிலீயதே.

ஆத்மஜ்ஞானத்தில் ஊன்றியஉள்ளம் உடையனாய் அதனா லேயே ஏனையவற்றில்உள்ள பற்றுதல்முற்றும் தனக்குத்தானே நீங்கப்பெற்றவனாய், அதனால் இவனைச்சேர்ந்தவையாவும் இவனை விட்டுஒழிந்தவனாய், பகவதாராதனரூபமான யஜ்ஞாதிகருமங்கள் நிறைவேறவேண்டிப் பொருளீட்டல் முதலியவற்றைச்செய்து வரு மவனுக்குப் பண்டைப்பழவினையாவும் முழுமுற்றும் நசித்துவிடும்.

அவ [இதுகாறும், உடம்பில்வேறுபட்ட ஆத்மஸ்வரூப அநுஸந்தானத்துடன் சேர்ந்தேயிருத்தலால் கருமமும் ஞானரூபம்என்று நாட்டப்பட்டது; இனி, அனைத்துக்கருமங்களும் அவற்றைச்சார்ந்துள்ளனவும் பரம புருஷனை ஆத்மாவாகவுடையன (அனைத்தும் பரமபுருஷனுக் குச்சரீரம் என்றபடி) என்னும் அநுஸந்தானத்துடன் கூடியிருத்தலால் அவை ஞானகாரம் என்று கூறுகின்றார்].

24. ப்ரஹ்மார்ப்பணம் ப்ரஹ்ம ஹவி: ப்ரஹ்மாக்னௌ ப்ரஹ்மணா ப்ரஹ்மைவ தேந கந்தவ்யம் ப்ரஹ்மகர்ம ஸமாதிநா. [ஹுதம்

பிரமஸ்வரூபமான கருவிகளையுடைய பிரமஸ்வரூபமான அவி புணவானது பிரமமாகிய ஓமத்தீயில் பிரமரூபியான வேள்வித்தலை வனால் ஓமம் சொரியப்பட்டது; அவ்வாறு கருமங்களனைத்தையும் பிரமரூபமாகத் தியானம்செய்வோனால் பிரமம் எனப்படும் சுத்த ஆத்மாவே அடையத்தக்கது.

இங்கு பிரஹ்மம் என்றது ஆத்மாவை; ஞானத்தால் பெரியதுஎன்று பொருள் படும்.

பிரஹ்மம் என்னும்சொல் பகவானைக் குறிக்கும்போது, ஸ்வரூபத்தாலும், ஸ்வபாவத்தாலும் பெரியதும், சிறியதைப் பெரியதாக்கவல்லதும் என்று பொருள் படும்.

அவ [மோக்ஷத்தில் இச்சையுடன் இயற்றப்படும் கருமங்கள் ஆத்மஞானத் துடன் கூடியவைஎன்று நிறுவிப் பின்னர் கருமத்தின் பாகுபாடுகளைப்பற்றி விளக்குகின்றார்].

25. தைவமேவாபரே யஜ்ஞம் யோகிந: பர்யுபாஸதே ப்ரஹ்மாக்நா வபரே யஜ்ஞம் யஜ்ஞேநைவோப ஜுஹ்வதி.

சில கர்மயோகிகள் தேவதையின் அர்ச்சனமாகிய யஜ்ஞத்தை இடைவிடாமல் அநுஷ்டிக்கின்றனர். (அதிலேயே நிஷ்டையைச் செய்கின்றனர் என்றபடி) வேறுசிலரோ, பிரமரூபமான அக்கினியில் அவியை அகப்பைமுதலிய கருவிகளால்சொரிந்து ஓமம்புரிகின்றனர்.

இங்கு, தேவதார்சனம், யாகம், ஓமம் என்ற மூவகைப்பாகுபாடு உணர்த்தப்பட் டுள்ளது.

26. ஶ்ரோத்ராதீநீந்த்ரியாண்யந்யே ஸம்யமாக்நிஷு ஜுஹ்வதி
ஶப்தாதீந் விஷயா நந்யேபி இந்த்ரியாக்நிஷு ஜுஹ்வதி.

* மற்றும் சிலர், செவிமுதலிய இந்திரியங்களை புலன்களில் செல்லாது அடக்குதலாகிய 'ஸம்யமம்' என்னும் தீயில், ஓமஞ்செய்கின்றனர்; இன்னும்சிலர், ஓசைமுதலிய புலன்களைப் பொறிகளாகிய தீயில் ஓமஞ்செய்கின்றனர்.

எனவே சிலர் செவிமுதலிய இந்திரியங்களை அடக்க முயற்சி செய்கின்றனர்என்றும், பொறிகட்கு ஓசைமுதலிய புலன்களில் எழும் அவாவினைத்தகைவதற்கு முயல்கின்றனர் என்றும் கருத்து.

27. ஸர்வாணீந்த்ரிய கர்மாணி ப்ராணகர்மாணி சாபரே
ஆத்மஸம்யமயோகாக்நௌ ஜுஹ்வதி ஜ்ஞாநதீபிதே.

வேறுசிலர், ஆத்மஜ்ஞானத்தால் சுடரெழச்செய்த மனத்தை அடக்குதலாகிய தீயினில், எல்லா இந்திரியங்களின் செயல்களையும், † பிராணவாயுவின் செயல்களையும் ஓமஞ்செய்கிறார்கள்.

---

(1) * " உரன் என்னும் தோட்டியான் ஓரைந்துங்காப்பான்
வரன் என்னும் வைப்புக்கோர் வித்து." (திருக்குறள் - 24).

(2) " மெய்வாய் கண்மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாவினைக்—கைவாய்க்
கலங்காமற் காத்துய்க்கும் ஆற்றலுடையான்
விலங்காது வீடுபெறும்." (நாலடி).

† பிராணன்முதலிய பத்து வாயுக்களும், அவற்றின் செயல்களும் :—

1. பிராணன்—உடற்கண் உறைந்தவண்ணம் ஞானேந்திரியங்கள்வழியாகச் சிறிதளவு வெளிப்போவது வருவதாவது ;
2. அபானன்—அபானத்தின்வழியாகச் சிறிதளவு வெளிப்போவது வருவதாவது ;
3. வியானன்—உதிரம் உடல்முழுதும் ஓடும்படி, இது உடல்முழுதும் சஞ்சரிப்பது;
4. உதானன்—கொப்பூழினின்று உச்சந்தலைவரை போக்குவரவுடையது ;
5. சமானன்—உணவுகளைச் சீரணம்செய்வித்து அவற்றினின் சத்தைப்பிரித்து உள்ள இடத்தில்சேர்த்து அசத்தை மலசலமாக வெளிப்படச்செய்வது ;
6. நாகன்—வாந்தியை உண்டாக்குவது ;
7. கூர்மன்—கண்களை மலரச்செய்வது ;
8. கிருகரன்—தும்மலை உண்டாக்குவது ;
9. தேவதத்தன்—கொட்டாவி உண்டாக்குவது ;
10. தனஞ்சயன்—உயிர் நீங்கியபிறகும் உடலில்தங்குவது.

28. த்ரவ்யயஜ்ஞா ஸ்தபோயஜ்ஞா யோகயஜ்ஞா ஸ்ததாபரே
ஸ்வாத்யாயஜ்ஞா நயஜ்ஞாஸ்ச யதயஸ் ஸம்ஸ்ரிதவ்ரதா:

சிலர் திரவியங்களினால் செய்வதையும், வேறுசிலர் தவத்தையும், சிலர் யோகத்தையும், சிலர் வேதம் ஓதுதலையும் அதன்பொருள் உணர்தலையும் யஜ்ஞமாகவுடையவர்கள். இத்தகைய யஜ்ஞங்களைச் செய்வோர் உறுதியான நோன்புடையோர்; கருமயோகம் செய்ய முயல்பவர்.

29. அபானே ஜுஹ்வதி ப்ராணம் ப்ராணேபாநந் ததாபரே
ப்ராணாபாநகதீ ருத்வா ப்ராணாயாம பராயணா:

29½. அபரே நியதாஹாரா: ப்ராணாந் ப்ராணேஷு ஜுஹ்வதி.

பிராணாயாமத்தில் நிஷ்டையும் ஆஹாரநியமமும் உடையசிலர், பிராணவாயுவை அபானவாயுவில் ஓமம் செய்கின்றனர்; அங்ஙனமே மற்றும்சிலர் பிராணனில் அபானனை ஓமம்செய்கின்றனர்; வேறு சிலர் பிராணாபான இயக்கங்களைத்தடுத்து பிராணன்களை பிராணன்களில் ஓமம்செய்கிறார்கள்.

முறையே பூரகம், ரேசகம், கும்பகம் என்னும் மூவகைநிஷ்டைகள் சொல்லப் பட்டன.

29½-30. ஸர்வேப்யேதே யஜஞவிதோ யஜ்ஞக்ஷபிதகல்மஷா:
31. யஜ்ஞஸிஷ்டாம்ருதபுஜோ யாந்தி ப்ரஹ்ம ஸநாதநம்.
நாயம்லோகோ ஸ்த்யயஜ்ஞஸ்ய குதோந்ய: குருஸத்தம !

இவர்கள் எல்லோரும் பஞ்சமஹாயஜ்யம்முதலிய நித்யகருமங்களை அறிந்தோர்களாய்; யஜ்ஞங்களால் பாவம் தீரப்பெற்றவர்களாய், யஜ்ஞத்தில் மிச்சப்படும் அம்ருதத்தை உண்பவர்களாய் அநாதியான பரிசுத்தஆத்மாவை அடைகின்றனர்.

32. ஏவம் பஹுவிதா யஜ்ஞா
விததா ப்ராஹ்மணேமுகே
கர்மஜாந் வித்திதாந் ஸர்வாந்
ஏவம் ஜ்ஞாத்வா விமோக்ஷ்யஸே.

இங்ஙனே பலதிறப்பட்ட யஜ்ஞங்கள், கர்மயோகங்கள், தூய்மையான ஆத்மஸ்வரூபத்துறையில் விரித்துரைக்கப்பட்டன; அவை அனைத்தும் நித்திய நைமித்திக கருமங்களாலானவை என்று அறிந்துகொள்; இவ்வாறு அறிந்து அதன்படி நடந்து மோக்ஷம் எய்துவாய்.

அவ [ஞானத்தைத் தன்னுட்கொண்டமையின் கருமயோகமும் ஞானரூபம்என்னப்பட்டது. அதில் ஞானப்பகுதியே முக்கியம்என்கிறார்].

33. ஶ்ரேயாந் த்ரவ்யமயா த்யஜ்ஞாத் ஜ்ஞாநயஜ்ஞ: பரந்தப!
ஸர்வம் கர்மாகிலம் பார்த்த! ஜ்ஞாநே பரிஸமாப்யதே.

பரந்தப! திரவியத்தைக்கொண்டு இயற்றத்தக்கதாகிய வேள்வியினும், ஞானரூபமான வேள்வி சாலச்சிறந்தது. கருமமனைத்தும் முற்றிலும் ஆத்மஸ்வரூபஞானத்தில் முடிக்கப்பெறுகின்றது.

எங்ஙனம் தானியமாகிய பயனைப்பெற பயிரிடுகை அப்பியாசமாகின்றதோ அங்ஙனமே ஞானமாகிய பயனைப்பெறுவதற்கு கருமம் அப்பியாசமாகும்; ஆதலின் ஞானம் சிறந்தது என்றபடி.

34. தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா
உபதேக்ஷ்யந்தி தேஜ்ஞாநம் ஜ்ஞாநிந ஸ்தத்வதர்ஶிந:

" அந்த அறிவை அறிநீ அடிவணங்கிக்
சிந்தையுடன் கேட்டுச் சேவித்தே—முந்தறிவை
ஒத்துபதேசிப்பர் உனக்கு உணர்ந்தோராய்த்
தத்துவத்தைக் கண்டிருப்பார் தாம்." (ப. கீ. வெ. 34).

அவ [ஆத்மாவின் உண்மையை உள்ளபடியே பார்க்கும்போது விளங்கும் ஞானத்தின்நிலையைக் கூறுகிறார்]:

35. யத்ஜ்ஞாத்வா ந புநர்மோஹம் ஏவம் யாஸ்யஸி பாண்டவ!
யேந பூதா ந்யஶேஷேண த்ரக்ஷ்யஸ்யாத்ம ந்யதோ மயி.

அர்ஜுன! எந்தஞானத்தை அறிந்து மீண்டும் இத்தகைய பொய்யுணர்வை அடையமாட்டாயோ, எந்தஞானத்தால் பிராணிகள் ஒன்றையும் ஒழியாமல் ஆத்மாவாகிய உன்னிடத்திலும் அதன் பிறகு என்னிடத்திலும் பார்க்கப்போகிறாயோ (அத்தகைய ஞானத்தை தத்துவதரிசிகள் உபதேசிப்பார்கள்).

இங்கு, பொய்யுணர்வு அடையாமை என்றது ஆவியும் ஆக்கையும் வேறென உணர்தல். எல்லாப்பிராணிகளையும் உன்பால் காண்டலாவது, பிரகிருதிசம்பந்தம் நீங்கியபின்பு உன்ஆத்மாவும் ஏனைய தேவ மானிட மாதி இதர பிராணிகளின் ஆத்மாவும் ஒருபடித்தாம் என்று அறிகை, ஞானம்ஒன்றையே ஸ்வரூபமாக உடைமையின் என்றபடி.

36. அபி சேதஸி பாபேப்ய: ஸர்வேப்ய: பாபக்ருத்தம:
ஸர்வம் ஜ்ஞாநப்லவேநைவ வ்ருஜிநம் ஸந்தரிஷ்யஸி.

"பாவிகள் எல்லாரினுநீ பாவத்தை மிக்கியன்று
மேவுதியாகிலும் இம்மெய்யுணர்வால்—தாவிவரும்
தெப்பத்தை மேற்கொண்டு தீவினையாம் வெங்கடலைத்
தப்பக்கடப்புதி நீதான்." (ப. கீ. வெ. 36).

37. யதைதாம்ஸி ஸமித்தோக்நிர் பஸ்மஸாத் குருதேர்ஜுந !
ஜ்ஞாநாக்நி ஸ்ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா.

அருச்சுன !

"அங்கிவிறகெல்லாம் எரிப்பதுபோல் அவ்வறிவு
பொங்கிவருகன்மம் பொடியாக்கும்." (ப. கீ. வெ. 37).

38. நஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ர மிஹ வித்யதே
தத்ஸ்வயம் யோகஸம்ஸித்த: காலேநாத்மநி விந்ததி.

" இங்கில்லை"
மெய்யறிவில் தூயதுதான் மிக்கவதும் யோகிதான்
பைய எய்தும் நெஞ்சிற்பயின்று." (ப. கீ. வெ. 37).

[மெய்யறிவில் - உண்மை ஞானத்தை யொத்த ; பைய - மெள்ள].

அவ [இதனையே நன்குவிளக்குகிறார்].

39. ஶ்ரத்தாவாந் லபதே ஜ்ஞாநம் தத்பர ஸ்ஸம்யதேந்திரிய:
ஜ்ஞாநம் லப்த்வா பராம் ஶாந்திம் அசிரேணாதிகச்சதி.

ஞானத்தைப் பெருக்கிக்கொள்வதில் ஊக்கமுள்ளோனும், அதனிடத்திலேயே நிலைத்த மனமுள்ளோனும், தன்வசப்பட்ட இந்திரியமுள்ளோனும் மெய்புணர்வைப் பெறுகின்றான்; அந்த மெய்புணர்வைப்பெற்று மேலானசாந்தியை விரைவில் அடைகிறான்.

40. அஜ்ஞஶ்சாஶ்ரத்ததாநஶ்ச ஸம்ஶயாத்மா விநஶ்யதி
நாயம் லோகோஸ்தி நபரோ ந ஸுகம் ஸம்ஶயாத்மந:

ஞானமில்லாதவனும், ஊக்கமில்லாதவனும், அந்த ஞானத்தில் ஐயமுள்ளவனும் அழிவடைவான்; ஐயப்பாடுற்றோனுக்கு இவ்வுலகுமில்லை; மேலுலகுமில்லை; ஸுகமும் இல்லை.

41. யோகஸந்யஸ்தகர்மாணம் ஜ்ஞாநஸஞ்சிந்நஸம்ஶயம்
ஆத்மவந்தம் ந கர்மாணி நிபத்நந்தி தநஞ்ஜய !

அர்ஜுன ! கருமயோகத்தினுல் ஞானகாரமான இருப்பை எய்திய கருமங்களையுடையோன், ஐயப்பாட்டை ஆத்மஞானத்தினுல் அறுத்தோன், உபதேசத்தில் ஊன்றிய உள்ளமுடையோனு யிருப்போனைக் கருமங்கள் பந்தம்செய்யாவாம்.

42. தஸ்மா தஜ்ஞாநஸம்பூதம் ஹ்ருத்ஸ்தம் ஜ்ஞாநாஸிநாத்மந:
சித்வைநம் ஸம்ஶயம் யோக ஆதிஷ்டோத்திஷ்ட பாரத !

ஆதலின், அஜ்ஞானத்தால் விளைந்ததும், மனதில் குடிகொண்டதும், ஆத்மாவைப்பற்றியதுமான இவ்வையத்தை ஆத்மஞானமென்னும் கத்தியினுல் அறுத்துவிட்டுக் கருமயோகத்தைப்பற்றி நட; பார்த்த ! எழுந்திரு.

நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ :

ஐந்தாவது அத்தியாயம்

கர்மஸந்யாஸயோகம்.

" அண்ணல் அருள்கீதை அஞ்சாமோத் துக்கருமத்
திண்ண முணர்வதனைச் சேர்ந்தமைந்த—வண்ணமது
சிந்தை தெளியத் தெளிவுற் றுரைக்குமதே
முந்தை மறைநெறியை மூண்டு." (ப. கீ. வெ.)

அர்ஜுந உவாச - அருச்சுனன் வினவுவான்.

1. ஸந்யாஸங் கர்மணாங் க்ருஷ்ண ! புநர்யோகஞ் ச ஶம்ஸஸி
யச்ரேய ஏதயோ ரேகம் தந்மே ப்ரூஹி ஸுநிஶ்சிதம்.

கிருஷ்ண ! ஞானயோகத்தையும் மீண்டும் கருமயோகத்தையும் அருளுகின்றீர்; இவ்விரண்டில் எந்தவொன்று சிறந்ததென்று நன்றாக உறுதிசெய்யப்பட்டதோ அதைஎனக்கு அருளுவீர்.

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ பகவான் உத்தரம் தருவான்.

2. ஸந்யாஸ: கர்மயோகஶ்ச நிஶ்ரேயஸகரா வுபௌ
தயோஸ்து கர்மஸந்யாஸா த்கர்மயோகோ விஶிஷ்யதே.

ஞானயோகம், கருமயோகம் இரண்டும் ஆத்மாவலோகனத்தைக் கொடுக்கக்கூடியவை ; அவற்றுள் ஞானயோகத்தைக்காட்டிலும் கருமயோகமே மேலானது.

3. ஜ்ஞேய ஸ்ஸ நித்யஸந்யாஸீ
யோந த்வேஷ்டி ந காங்க்ஷதி
நிர்த்வந்த்வோஹி மஹாபாஹோ
ஸுகம் பந்தாத்ப்ரமுச்யதே.

தடந்தோள ! எவன் வெறுப்பு, விருப்பு, இரட்டை இல்லாதானோ அவனே நித்யஸந்யாஸி என அறியத்தக்கவன் ; அவன் எளிதாகப் பிறவிப்பிணியினின்றும் விடுபடுகிறான்.

அவ [ஆத்மாவை பார்ப்பதில் ஒன்றையொன்று வேண்டாமல் தனித்தனியே பயன்தரத்தக்கவை ஞானயோக கர்மயோகங்கள் என்கிறார்].

4. ஸாங்க்யயோகௌ ப்ருதக்பாலா: ப்ரவதந்தி ந பண்டிதா:
ஏக மப்யாஸ்திதஸ் ஸம்யக் உபயோர்விந்ததே பலம்.

* "சாங்கியமும் யோகமதுந் தானறியார் வேறென்பார்
ஆங்கதனை நன்கறிவார் அஃதுரையார்—ஆங்கவற்றில்
ஒன்றுதனில் நின்றும் உடனியல்வான் அவ்விரண்டின்
நின்றபயன் எல்லாம் நிகழ்ந்து." (ப. கீ. வெ. 4).

அவ [இதனையே விரித்துரைக்கின்றார்].

5. யத்ஸாங்க்யை: ப்ராப்யதே ஸ்தாநம்
தத்யோகைரபி கம்யதே
ஏகம் ஸாங்க்யஞ் ச யோகஞ் ச
ய: பஶ்யதி ஸ பஶ்யதி.

ஞானயோகநிஷ்டர்களால் எந்த ஆத்மாவலோகனபலன் எய்தப் பெறுகிறதோ, அதேபலன் கருமயோகநிஷ்டர்களாலும் எய்தப் பெறும். ஞானயோகமும் கருமயோகமும் எவன் ஒன்றேஎன்று அறிகின்றானோ அவனே அறிந்தவன்.

அவ [எனினும் ஒருசிறிது வேற்றுமைஉண்டு என்கிறார்].

6. ஸந்யாஸஸ்து மஹாபாஹோ ! து:கமாப்து மயோகத:
யோகயுக்தோ முநிர் ப்ரஹ்ம ந சிரேணாதி கச்சதி.

தடந்தோள ! ஞானயோகமோ கருமயோகமின்றி அடைதற்கு அரியது; கருமயோகத்தோடு ஆத்மத்யானம் செய்பவன் பரிசுத்த மான ஆத்மாவை விரைவாகஅடைகிறான்.

7. யோகயுக்தோ விஶுத்தாத்மா விஜிதாத்மா ஜிதேந்த்ரிய:
ஸர்வபூதாத்ம பூதாத்மா குர்வந்நபி ந லிப்யதே.

கருமயோகத்தில் நிஷ்டையுண்டாகி, பரிசுத்தமான மனமுள்ளனாய், மன, இந்திரியங்களைவென்று, தனது ஆத்மாவும் மற்ற எல்லாப் பிராணிகளின் ஆத்மாக்களும் ஸமம்என்று உணர்ந்தவன் கருமங் களைச் செய்வனேயெனினும் இருவகைப்பற்றுகளும் அவனைச்சார்த லில்லை.

---

* "சாங்கியம் யோகமென்றிரண்டு தன்மைய
வீங்கியபொருளெலாம் வேறுகாண்பன
ஆங்கவையுணர்ந்தவர்க் கன்றியன்னவன்
ஓங்கியமேல்நிலை உணரற்பாலதோ." (கம்ப-ரா).

அவ ['கருமயோகம் இயற்றுதற்கெளிது; பலன் விரைவில்தரவல்லது ஆதலின் மேலானது; ஆதலின் அதற்குஆவன கேள்' என்கிருர்].

8. நைவ கிஞ்சித் கரோமீதி
யுக்தோ மந்யேத தத்வவித்
பஶ்யந் ஶ்ருண்வந் ஸ்ப்ருஶந் ஜிக்ரந்
அஶ்நந் கச்சந் ஸ்வபந் ஶ்வஸந்.

9. ப்ரலபந் விஸ்ருஜந் க்ருஹ்ணந்
உந்மிஷந் நிமிஷந்நபி
இந்த்ரியா ணீந்த்ரியார்த்தேஷு
வர்த்தந்த இதி தாரயந்.

கருமயோகநிஷ்டன், மெய்மையை மிகவுணர்ந்து, பார்க்கிறவன், கேட்கிறவன், தொடுகின்றவன், முகருகிறவன், உண்கிறவன், நடக்கிறவன், உறங்குகிறவன், மூச்சுவிடுகிறவன், பேசுகிறவன், கழிக்கிறவன், எடுக்கிறவன், கண்களைவிழிக்கிறவன், மூடுகிறவனுக இருந்தபோதிலும், இந்திரியங்கள் அந்தந்தவிஷயங்களில் செல்கின்றன என்று உள்ளத்தில் உறுதிசெய்து, தானெதையும் செய்யவில்லையென்று நினைக்கக்கடவன்.

10. ப்ரஹ்ம ண்யாதாய கர்மாணி ஸங்கம் த்யக்த்வா கரோதி ய:
லிப்யதே ந ஸ பாபேந பத்மபத்ர இவாம்பஸா.

கருமங்களை பிரமத்தில் (பிரகிருதியில்) வைத்து, பலனில் விருப்பின்றி, எவன் கருமங்களை இயற்றுகின்றனனே அவனைத் தாமரை இலையில் நீர்போலப் பாவங்கள் பற்றுவதில்லை.

11. காயேந மநஸா புத்யா கேவலை ரிந்த்ரியைரபி
யோகிந: கர்ம குர்வந்தி ஸங்கம் த்யக்த்வாத்மஶுத்தயே.

கருமயோகிகள் பலனில்பற்றின்றி உடம்பு, உள்ளம், அறிவு, கேவலங்களான புலன்கள் இவற்றால் ஆத்மசுத்திக்காகக் கருமங்களைச் செய்கின்றனர்.

12. யுக்த: கர்மபலம் த்யக்த்வா ஶாந்தி மாப்நோதி நைஷ்டிகீம்
அயுக்த: காமகாரேண பலே ஸக்த்தோ நிபத்யதே.

ஆத்மாவினிடத்தில் விருப்பமுள்ள யோகி கருமபலனைத் துறந்து என்றுமுள ஆத்மாநுபவ இன்பத்தை அடைகிறுன்; ஆத்மாவினிடத்தில் விருப்பமற்றவனே, கருமபலனை இச்சித்துக் காமம் தூண்டக் கருமங்களை இயற்றியவண்ணம் ஸம்ஸாரத்தில் கட்டுப்படுகிறுன்.

13. ஸர்வகர்மாணி மநஸா ஸந்ந்யஸ்யாஸ்தே ஸுகம் வஶீ
நவத்வாரே புரே தேஹீ நைவ குர்வந்நகாரயந்.

மனத்தினுல் கருமங்களனைத்தையும் ஒன்பது வாயில்களுடைய * பட்டினம்போன்ற உடம்பில் இருக்கவிட்டு, ஜீவன் தன்வசமுள்ளோனுய், தானொருமுயற்சியின்றி, உடம்பினுல் ஒன்றையும் செய்விக்காதவனுய் ஸுகமாயிருக்கிறுன்.

அவ [ஆத்மாவிற்கு இயற்கை யுருவம் இன்னதென்கிறுர்].

14. ந கர்த்ருத்வம் ந கர்மாணி லோகஸ்ய ஸ்ருஜதி ப்ரபு:
நகர்மபல ஸம்யோகம் ஸ்வபாவஸ்து ப்ரவர்த்ததே.

இவ்வுலகிற்குக் கர்த்ருத்வத்தையோ, கருமங்களையோ, கருமபலன்களின் சார்பையோ, பிரபுவான ஆத்மா உண்டாக்குகிறதில்லை; பிரகிருதியின்சேர்க்கையால் உண்டான வாசனையே காரணமாகின்றது.

15. நாதத்தே கஸ்யசித்பாபம் ந சைவ ஸுக்ருதம் விபு:
அஜ்ஞாநேநாவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவ:

விபு, தனதுநண்பன் என்று ஒருவன் பாவத்தையும், தனது பகைவன் என்று மற்றொருவன் புண்ணியத்தையும் போக்குகிறதில்லை; ஞானம் கருமத்தால் மூடப்பட்டிருக்கிறது; அதனுலே பிராணிகள் மோஹமடைகின்றன.

இங்கு தேவமானிடாதி எச்சரீரத்திலும் புகும் நிலையையுடைய ஜீவன் விபு எனப்பட்டது; இதனையே ஆசார்யர்கள் "திறந்துகிடக்கும் வாசல்தோறும் நுழைந்துதிரியும் வஸ்துபோலே இச்சீவன் கருமவசத்தால் பிரவேசிக்காத இடம் கிடையாது" என்பர்.

அவ [கீழ் அத். IV - 36, 37, 38 சுலோகங்களில் உரைத்தவற்றை இங்கு இயைபுபற்றக் கூட்டிக்கொள்கிறுர்].

16. ஜ்ஞாநேந து தத்ஜ்ஞாநம் ஏஷாம் நாஶித மாத்மந:
தேஷா மாதித்யவத் ஜ்ஞாநம் ப்ரகாஶயதி தத்பரம்.

* "நெய்க்குடத்தைப்பற்றி யேறுமெறும்புகள்போல் நிறைந்தெங்கும்,
கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள் காலம்பெறவுய்யப்போமின்,
மெய்க்கொண்டுவந்து புகுந்து வேதப்பிரானுர் கிடந்தார்,
பைக்கொண்ட பாம்பணையோடும் பண்டன்று பட்டினம் காப்பே."
(பெரியாழ். தி. 1).

எவர்களுக்கு ஆத்மாவைப்பற்றிய ஞானத்தினுல் அந்த அஜ்ஞானம் ஒழிக்கப்பட்டதோ, அவர்களுக்கு அம்மேலான ஞானம் கதிரவன்போல் (எல்லாவற்றையும்) விளங்கச்செய்யும்.

17. தத்புத்தய ஸ்தததாத்மாந: தந்நிஷ்டா: தத்பராயணு:
கச்சந்த்ய புநராவ்ருத்திம் ஜ்ஞாநநிர்தூதகல்மஷா:

அந்த ஆத்மாவை ஸாக்ஷாத்கரிப்பதிலேயே நிச்சயபுத்தியுடையராய், அதிலேயே உள்ளத்தை ஊன்றியவர்களாய், அதைப்பழக்கம் செய்வதிலேயே எப்போதும் விருப்பமுடையவர்களாய், அதையே இன்றியமையாத பயனுகக்கருதுவோர், ஆத்மஜ்ஞானத்தினுல் பாவங்கள் தீரப்பெற்று மீண்டுவருதலில்லாத பரிசுத்தஆத்மஸ்வரூபத்தை அடைகின்றுர்கள்.

18. வித்யாவிநயஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி
ஶுநி சைவ ஶ்வபாகேச பண்டிதா: ஸமதர்ஶிந:

கல்வியும் அடக்கமும் நிறைந்த அந்தணன், இவையில்லாத பிராமணன், பசு—யானை, நாய்—நாயைச் சமைத்துண்போன் இவ்விடங்களில் ஆத்மாவின்உண்மையை உணர்ந்த பண்டிதர்கள் ஆத்மாவை ஸமம் என்று பார்க்கின்றுர்கள்.

இங்கு அறிவிலும், உருவிலும், ஒழுக்கத்திலும் வேறுபாடு காணப்படினும் ஜீவராசிகளின் உள்ளேஇருக்கும் ஜீவாத்மா ஒரேபடித்தாயிருக்கும்; ஞானம் ஒன்றையே ஸ்வபாவமாயுடைமையின் எல்லாஇடத்திலும் ஆத்மாவின் உண்மைநிலையுணர்ந்த பண்டிதர் ஸமமாகவேகாண்பர் என்பது கருத்து.

19. இஹைவ தைர்ஜிதஸ் ஸர்க்கோ
யேஷாம் ஸாம்யே ஸ்திதம் மந:
நிர்தோஷம் ஹி ஸமம் ப்ரஹ்ம
தஸ்மாத்ப்ரஹ்மணி தேஸ்திதா:

எவர்கள் உள்ளம் எல்லாஆத்மாக்களின் ஸமத்வத்தில் நிற்கின்றதோ, அவர்களால் ஈண்டே ஸம்ஸாரமானது வெல்லப்பட்டதாகும்; குற்றமற்றதாய் ஒன்றையொன்று ஒத்திருக்கும் ஆத்மா பிரஹ்மமன்றே! ஆதலின் அவர்கள் பிரஹ்மத்தினிடத்தில் இருப்போர்.

இங்கு பிரஹ்மம் என்னும்சொல் ஜீவாத்மாவையே குறிக்கும்.

அவ [ஸமதர்சனமாகிய ஞானமுதிர்ச்சி உண்டாவதற்கு முன்புள்ள கர்மயோகியின் நிலையை உபதேசம்செய்கிறார்].

20. நப்ரஹ்ருஷ்யேத்ப்ரியம் ப்ராப்ய
நோத்விஜேத் ப்ராப்யசாப்ரியம்
ஸ்திரபுத்தி ரஸம்மூடோ
ப்ரஹ்மவித் ப்ரஹ்மணிஸ்தித:

பரிசுத்தமான ஆத்மஸ்வரூபத்தை யுணர்ந்தவனும், அந்த ஆத்ம ஞானத்திலேயே பயிற்சிசெய்துகொண்டிருப்பவனும், நித்யனான ஆத்மாவினிடத்திலேயே புத்தியை யுடையவனும், அஜ்ஞானமில்லாதனும் ஆகியவன் பிரியமானதை அடைந்து மகிழ்வெய்தான்; பிரியமில்லாதது வரின் துயர்எய்தான்.

21. பாஹ்ய ஸ்பர்சேஷ்வ ஸக்தாத்மா
விந்தத்யாத்மநி யஸ் ஸுகம்
ஸ ப்ரஹ்மயோக யுக்தாத்மா
ஸுக மக்ஷய மச்நுதே.

வெளிவிஷய அநுபவங்களில் விருப்பமற்ற மனமுடையனாய், தன் ஆத்மாவினிடத்திலேயே எவன் சுகம்அநுபவிக்கிறானோ, அவனே பிரஹ்மத்தைக் குறித்து யோகம்செய்யும் மனமுடையனாய் அழிவில்லாத ப்ரஹ்மாநுபவ சுகத்தை அடைவான்.

இங்கும் ப்ரஹ்மாநுபவமாவது ஜீவாத்மாவின் அநுபவமே.

அவ [சரீரத்தால்வரும் இன்பத்தை எளிதில் விடக்கூடும் என்கிறார்].

22. யே ஹி ஸம்பர்சஜா போகா து:கயோநய ஏவதே
ஆத்யந்தவந்த: கௌந்தேய! ந தேஷு ரமதே புத:

கௌந்தேய! விஷயேந்திரிய சம்பந்தத்தால் உண்டாகும் சுகங்கள் எவையோ அவை துக்கத்தை விளைவிப்பனவே; தோற்றக் கேடுள்ளவை; ஆத்மஜ்ஞானி அவற்றில் களிப்படையமாட்டான்.

23. சக்நோதீஹைவ ய ஸ்ஸோடும் ப்ராக்சரீரவிமோக்ஷணாத்
காமக்ரோதோத்பவம் வேகம் ஸயுக்தஸ் ஸஸுகீநர:

சரீரத்தை விடுவதன்முன் இந்த யோகாப்யாஸதசையிலேயே * அவா, வெகுளிகளால்உண்டாகும் வேகத்தைத் தடுத்துக்கொள்ளும் சக்திவாய்ந்தவன் எவனோ, அவனே ஆத்மாநுபவத்திற்குத் தகுதியுடையவன்; அவனுக்கே ஆத்மஸுகம் உண்டு.

24. யோந்தஸ்ஸுகோந்தராராம: ததாந்தர்ஜ்யோதி ரேவ ய:
ஸயோகீ ப்ரஹ்மநிர்வாணம் ப்ரஹ்மபூதோதி கச்சதி.

தனது ஆத்மாவினிடத்திலேயே ஸுகமுடையனாகவும், ஆத்மாவையே பூஞ்சோலையாக உடையனாகவும் எவன் இருக்கிறானோ அவ்வாறே ஆத்மாவினிடத்திலேயே சோதியாய் எவன் இருக்கிறானோ அந்தயோகி ப்ரஹ்மஸ்வரூபனாய் ஆத்மாநுபவசுகத்தை யடைகிறான்.

25. லபந்தே ப்ராஹ்மநிர்வாணம் ருஷய: க்ஷீணகல்மஷா:
சிந்நத்வைதா யதாத்மாந: ஸர்வபூதஹிதே ரதா:

குளிர் வெப்பம் போன்ற இரட்டைநிலைகளை வெட்டிவீழ்த்தி, ஆத்மாவினிடத்திலேயே மனத்தை நிலைநிறுத்தி, எல்லாப்பிராணிகளின் இதத்தில் எப்போதும் விருப்பமுள்ள ருஷிகள் பாவம் தேயப்பெற்றவர்களாய் ஆத்மாநுபவஸுகத்தை அடைகின்றனர்.

அவ [இதுகாறும்கூறிய குணங்களையுடையோர் ஆத்மஸ்வரூபத்தை மிக எளிதாய்க்காண்பார்கள் என்கிறார்].

26. காமக்ரோதவியுக்தாநாம் யதீநாம் யதசேதஸாம்
அபிதோ ப்ரஹ்மநிர்வாணம் வர்த்ததே விஜிதாத்மநாம்.

† காமவெகுளிகளை விட்டொழித்து, யோகப்பயிற்சிசெய்து கொண்டு, மனத்தைஅடக்கி வென்றவர்களுக்கு ஆத்மாநுபவஸுகம் அணித்தாயிருக்கிறது; அதாவது கையிலுள்ளது என்றபடி.

அவ [கர்மயோகம் செய்தபின்னர் ஆத்மஸாக்ஷாத்காரம்பெறலாம் என்று கூறி கர்மயோகஉபதேசத்தை முடித்தருளுகிறார்].

27. ஸ்பர்ஶாந் க்ருத்வா பஹிர்பாஹ்யாம்
சக்ஷுஶ்சைவாந்தரே ப்ருவோ:
ப்ராணபாநௌ ஸமௌ க்ருத்வா
நாஸாப்யந்தர சாரிணௌ.

---

* "அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும், இழுக்காவியன்ற தறம்." (திருக்குறள்).

† "காமம் வெகுளிமயக்க மிவைமூன்றின்
நாமம்கெடக்கெடும் நோய்." (திருக்குறள் 360).

28. யதேந்த்ரிய மநோபுத்தி: முநிர்மோக்ஷ பராயண:
விகதேச்சாபயக்ரோதோ ய ஸ்ஸதா முக்த ஏவ ஸ:

வெளி இந்திரிய வியாபாரங்களைமுற்றும் அடக்கி, கண்களைப் புருவங்களினிடையில் நிறுவி, பிராண அபானவாயுக்களை மூக்கின் உட்புகவும் வெளிவரவும் ஸமமாகும்படிசெய்து, இந்திரியங்கள், மனம், புத்தி இவற்றை அடக்கி, இச்சை, அச்சம், சீற்றம் இவற்றை அற ஒழித்து, மோக்ஷத்தையே பயனாய்க்கருதி ஆத்மஞானாப்யாஸம் செய்கின்றவன் எவனோ அவன் எப்பொழுதும் முக்தனே.

அவ [கீழ்க்கூறிய கருமயோகம் எளிதில் இயற்றுதல் கூடும்என்கிறார்].

29. போக்தாரம் யஜ்ஞதபஸாம் ஸர்வலோக மஹேஸ்வரம்
ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் ஜ்ஞாத்வாமாம் ஶாந்திம்ருச்சதி.

"வேள்விதவம் கொள்வோனாய் மிக்கனைத்து மென்வசமா
ஆள்வினையனாகி அனைத்துலகு—நீளுற்ற
எல்லா உயிர்க்கும் உறவாம் எனையறிந்து
நல்லான் பெறுஞ்சாந்திநன்கு.'' (ப. கீ. வெ. 27).

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஆருவது அத்தியாயம்

ஆத்மஸம்யம யோகம்.

" அத்த னருள்கீதை யாருமோத் தாற்கருமத்
தோத்த தெளிவைத் தெரிந்துரைக்கும்."

ஸ்ரீபகவாநுவாச - ஸ்ரீபகவான் பணித்தருள்வான்.

1. அநாஶ்ரித: கர்மபலம் கார்யம் கர்ம கரோதிய:
ஸ ஸந்யாஸீ ச யோகீச நநிரக்நிர் நசாக்ரிய:

கருமங்களின் பலத்தைவிரும்பாமல் அவசியம் செய்யவேண்டிய கருமத்தை எவன்செய்கிருனே, அவன் ஸந்யாஸியும் யோகியுமாவான்; அக்நிகார்யாதிகளைச் செய்யாதவனுமாகான்; ஞானத்தை மாத்திரம் செய்கிறவனுமாகான்.

இங்கு ஸந்யாஸி - ஞானயோகநிஷ்டனையும், யோகி - கர்மயோகநிஷ்டனையும் குறிக்கும்.

அவ [இந்த கர்மயோகத்தில் ஞானமும் அடங்கியுள்ளது என்கிருர்].

2. யம் ஸந்யாஸ மிதிப் ராஹு: யோகந்தம் வித்தி பாண்டவ!
நஹ்ய ஸந்யஸ்த ஸங்கல்போ யோகீ பவதி கஶ்சந.

பாண்டவ! எதைச் ஸந்யாஸம் என்று கூறினரோ அதை யோகம் என்றறி; ஏனெனில், எவனும்தேஹமே ஆத்மாஎன்னும் எண்ணத்தைவிடாமல் யோகியாகமாட்டானன்றே?

அவ [கருமயோகந்தான் இடையூறின்றி முற்றுப்பெறும் என்கிருர்].

3. ஆருருக்ஷோர் முநேர் யோகம் கர்ம காரண முச்யதே
யோகாரூடஸ்ய தஸ்யைவ ஶம: காரண முச்யதே.

ஆத்மாவலோகனத்தை விரும்பின முனிவனுக்குக் கருமம் காரணம்என்றும், யோகத்தை அடைந்த அவனுக்கே, கருமங்களை விடுதல் காரணம்என்றும் சொல்லப்படுகின்றது.

அவ [எப்பொழுது யோகத்தில் நிஷ்டையுடையோனுகிறுன் என்று விளக்குகிறுர்].

4. யதாஹி நேந்த்ரியார்த்தேஷு நகர்ம ஸ்வநுஷஜ்ஜதே
ஸர்வஸங்கல்ப ஸந்யாஸீ யோகாரூட ஸ்ததோச்யதே.

எப்பொழுது இந்திரியவிஷயங்களிலும் அதைச்சார்ந்த கருமங்களிலும் பற்று ஒழியப்பெறுகின்றதோ, அப்பொழுதன்றோ, அவா வனைத்தையும் அறுத்தவனென்றும், யோகநிஷ்டைபெற்றவனென்றும் சொல்லப்படுகிறுன்.

5. உத்தரே தாத்மநாத்மாநம் நாத்மாநம் அவஸாதயேத்
ஆத்மைவ ஹ்யாத்மநோ பந்து: ஆத்மைவ ரிபு ராத்மந:

* "தன்னைத் தன்நெஞ்சாலே தானெடுப்பான் தன்நெஞ்சால்
தன்னைத் தளர்விக்கத் தானியலான்—அன்னவனு
தன்னுடைய நெஞ்சுதனக்கு உறவுதன் நெஞ்சே
தன்னுடைய வான்பகையாம் தான்." (ப. கீ. வெ. 5).

6. பந்து ராத்மாத்மநஸ்தஸ்ய யேநாத்மை வாத்மநா ஜித:
அநாத்மநஸ்து ஶத்ருத்வே வர்த்தேதாத்மைவ ஶத்ருவத்.

"எவன்தன்னுல் தன்நெஞ்சம் ஏன்று வெலப்பட்ட
தவன்தனக்கு அந்நெஞ்சம் உறவாகும்—எவன்தன்னுல்
ஆன்ற நெஞ்சில்லாதவனுக்கு ஆங்கதுமாறே இயலும்
ஏன்ற பகைவன் போலிங்கு." (பா. கீ. வெ. 6).

7. ஜிதாத்மந: ப்ரஶாந்தஸ்ய பரமாத்மா ஸமாஹித:
ஶீதோஷ்ண ஸுகது:கேஷு ததா மாநாவமாநயோ:

தண்மை வெம்மை, களிப்பு கவர்வு, மான அவமானங்கள் இவற்றில் மாறுபடாமல் மனத்தைவென்று நிலைக்கவைத்த சாந்தமுள்ளவனுக்கு, மனதில் பரமாத்மா நன்ருய் நிலைபெற்றவனுகிறுன்.

இங்கு பரமாத்மா என்றது தன் ஸ்வரூபத்துடனிருக்கும் ஜீவாத்மாவை; முன்னே தேஹமே ஜீவன்என்று எண்ணியவன் தேஹத்தில் வேறுபட்டவனும் மேற்பட்டவனும் ஜிவன்என்று உணர்கின்ருனுதலின், அன்றியும், 'ஆத்மா - பரம் - ஸமாஹித:' என்றும் பிரித்துக்கூட்டிப் பொருள்காணலுமாகும்.

---

* "தானே தனக்குப்பகைவனும் நட்டானும்
தானே தனக்குமறுமையும்—இம்மையும்
தானே தான்செய்தவினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக்கரி." (அறநெறிச்சாரம் 172).

8. ஜ்ஞாநவிஜ்ஞாந த்ருப்த்தாத்மா கூடஸ்தோவிஜி தேந்த்ரிய:
யுக்த இத்யுச்யதே யோகீ ஸமலோஷ்டாஶ்ம காஞ்சந:

ஞான விஜ்ஞானங்களை உணர்ந்து திருப்தியையடைந்த மனத்தினனும், கூடஸ்தனும், இந்திரியங்களை நன்றுவென்றோனும் ஓட்டாஞ்சல்லி, கல், பொன் இவற்றை ஒன்றுபோல் காண்பானும் ஆகிய யோகி ஆத்மாவலோகநத்திற்குத் தகுதியுடையன் எனப்படுகிறான்.

இங்கு ஞானம் - ஆத்மாவைப்பற்றிய அறிவு; விஜ்ஞானம் - உடலினும் வேறுபட்டது உயிர் எனஅறிதல். கூடஸ்தன் - தேவர், மக்கள், விலங்கு, தாவரம் எனும் நால்வகைநிலைகளும் கருமவயத்தாற் பெறற்குரியன்.

9. ஸுஹ்ருந்மித்ரார்யுதாஸீந மத்யஸ்த த்வேஷ்யபந்துஷு
ஸாதுஷ்வபி ச பாபேஷு ஸமபுத்திர் விஶிஷ்யதே.

நன்மனத்தன், நண்பன், பகைவன், *நொதுமலன், நடுநிலையன், அழுக்காறுடையன், சுற்றத்தான், என்போரிடத்திலும், நல்வினையன், தீவினையன்பாலும் சமமான புத்தியுடையோன் மேலோனாவன்.

10. யோகீ யுஞ்ஜீத ஸததம் ஆத்மாநம் ரஹஸி ஸ்தித:
ஏகாகீ யதசித்தாத்மா நிராஶீ ரபரிக்ரஹ:

யோகி யோகப்பயிற்சி செய்யும்பொழுதெல்லாம் ஒருவரும் நடையாடாத இடத்தில் இருந்து, தன்னந்தனியனாய், உள்ளத்தை ஒருநிலைப்படுத்தி, வேறு பொருள்களில் விருப்பின்றி மமதையை ஒழித்து, தன் ஆத்மாவைக்குறிக்கொண்டு யோகம்செய்யவேண்டும்.

11. ஶுசௌ தேஶே ப்ரதிஷ்டாப்ய ஸ்திர மாஸந மாத்மந:
நாத்யுச்ரிதம் நாதிநீசம் சேலாஜிநகுஶோத்தரம்.

12. தத்ரைகாக்ரம் மந: க்ருத்வா யதசித்தேந்த்ரியக்ரிய:
உபவிஶ்யாஸநே யுஞ்ஜ்யா த்யோக மாத்மவிஶுத்தயே.

தூயதானஇடத்தில் அதிக உயரத்தாழ்வில்லாமல் வஸ்திரம், மான்தோல், தருப்பை இவற்றை ஒன்றின்மேல் ஒன்றாக விரிக்கப்பெற்றுத் தனக்கெனச்சமைக்கப்பட்ட ஆஸனத்தில் உறுதியாய் உட்கார்ந்து மனத்தை ஒருமுகமாக்கி மன இந்திரிய வியாபாரங்களை அடக்கி ஆத்மா சுத்திபெறுவதற்கு யோகம் செய்யக்கடவன்.

* பகை நண்பில்லாத உதாஸீனன்.

13. ஸமம் காயஶிரோக்ரீவம் தாரயந் நசலம் ஸ்திர:
ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்ரம் ஸ்வம் திஶஶ்சாநவலோகயந்.

14. ப்ரஶாந்தாத்மா விகதபீர் ப்ரஹ்மசாரிவ்ரதே ஸ்தித:
மநஸ்ஸம்யம்ய மச்சித்தோ யுக்த ஆஸீத மத்பர:

சரீரம், சிரம், கண்டம் இவற்றை ஒருநேராகவும் அசையாமலும் உறுதியுடனும் தாங்கிக்கொண்டு தன் மூக்குநுனியையே பார்த்தவனாய், திக்குகளைப்பாராமல், மனச்சாந்தியுடன், அச்சத்தை அகற்றி பிரமசரியவிரதத்தில் நிலைத்துநின்று, மனதைவசம்செய்து, சித்தத்தை என்பால்வைத்து, ஊற்றத்துடன், என்னொருவனையே, தியானம் செய்துகொண்டிருக்கக்கடவன்.

15. யுஞ்ஜந்நேவம் ஸதாத்மாநம் யோகீ நியதமாநஸ:
ஶாந்திம் நிர்வாணபரமாம் மத்ஸம்ஸ்தாம் அதிகச்சதி.

இங்ஙனம் எப்பொழுதும் என்னிடமே மனதைச்செலுத்தித் தன்மனத்தை தூயதாக்கிக்கொண்ட யோகி ஸுகத்தின் முதிர்ந்த நிலையாகிய சாந்தியை எய்துகிறான்.

அவ [இங்ஙனம் யோகத்தைத் துவக்கும்போது மனம் மாசுதீர்ந்து தெளிவெய்த, அதை பகவானது திருமேனியில்வைத்து தியானம்செய்தல் வேண்டுமென்று கூறி, இன்னும் சில யோகஉபகரணங்களைக் கூறுகிறார்].

16. நாத்யஶ்நதஸ்து யோகோஸ்தி நசைகாந்த மநஶ்நத:
நசாதிஸ்வப்நஶீலஸ்ய ஜாக்ரதோ நைவ சார்ஜுன !

அர்ஜுன ! * அளவுமிகுத்து உண்பவனுக்கும், சிறிதும் உண்ணாதவனுக்கும், பெருந்துயில்புரிவோனுக்கும், விழித்தேகிடப்பவனுக்கும் யோகம் இல்லை.

17. யுக்தாஹார விஹாரஸ்ய யுக்தசேஷ்டஸ்ய கர்மஸு
யுக்தஸ்வப்நாவ போதஸ்ய யோகோ பவதி து:கஹா.

உணவு, போக்குவரவு, பரிசிரமம், உறக்கம், விழிப்பு இவைகளை மிதமாய் உடையவனுக்கு எல்லாத்துக்கத்தையும்போக்கும் யோகம் கைபுகும்.

18. யதா விநியதம் சித்தம் ஆத்மந்யேவாவ திஷ்டதே
நிஸ்ப்ருஹ: ஸர்வகாமேப்யோ யுக்த இத்யுச்யதே ததா.

---

*" இழிவறிந்துண்பான்க ணின்பம்போல்நிற்கும்
கழிபேரிரையான்கண் நோய்." (திருக்குறள் 946).

எப்பொழுது சித்தம் சிறிதும் அசைவின்றி ஆத்மாவினிடத்திலேயே நிற்கின்றதோ அப்பொழுதுதான் எல்லாப்பொருள்களிலும் உள்ள அவாஅற்று யோகம்செய்யத் தக்கோனாகிறான்.

19. யதா தீபோ நிவாதஸ்தோ நேங்கதே ஸோபமாஸ்ம்ருதா
யோகிநோ யதசித்தஸ்ய யுஞ்ஜதோ யோகமாத்மந:

"வாயு விலாதிடத்து மன்னும் விளக்கதுதான்
ஏயு சலனம்அறும் எவ்வாறு—தூயமனம்
நன்மையினில் சேர்ந்தியலும் நல்யோகி யோகிதன
தன்மையினுக் கொப்பதுவேதான்." (ப. கீ. வெ. 17).

20. யத்ரோபரமதே சித்தம் நிருத்தம் யோகஸேவயா
யத்ரசை வாத்மநாத்மாநம் பஶ்யந்நாத்மநி துஷ்யதி.

21. ஸுகமாத்யந்திகம் யத்த த்புத்திக்ராஹ்ய மதீந்த்ரியம்
வேத்தி யத்ர நசைவாயம் ஸ்திதஶ்சலதி தத்வத:

22. யம் லப்த்வா சாபரம் லாபம் மந்யதே நாதிகம் தத:
யஸ்மிந் ஸ்திதோந து:கேந குருணாபி விசால்யதே.

23. தம் வித்யாத் து:கஸம்யோகவியோகம் யோகஸம்ஜ்ஞிதம்
ஸ நிஶ்சயேந யோக்தவ்யோ யோகோ நிர்விண்ணசேதஸா.

யோகப்பயிற்சியால் மற்றைய பொருள்களினின்று மீட்கப்பட்ட மனம் எந்தயோகத்தில் இன்பமெய்துகின்றதோ, எந்த யோகத்தில் மனத்தினால் ஜீவாத்மாவை கண்டவண்ணம் அதனிடத்திலேயே உவப்பெய்துகின்றனனோ, எந்தயோகத்தில் இந்திரியங்கட்குப் புலப்படாததும், தன் அறிவினால் அறியக்கூடியதுமான, அளவிறந்த அந்தமில் இன்பத்தை நிலைத்துநின்று காண்கின்றனனோ, எந்த யோகத்தை அடைந்தபிறகு அதனினும் மேம்பட்ட வேறு லாபம் ஒன்று உண்டென்று நினைத்தலுமில்லையோ, எந்த யோகத்திலிருப்போன் நீண்ட துக்கத்தாலும் துளங்காதிருப்பனோ, அந்நிலையே துன்பத்தின் தொடர்பினை விடுவிக்கும் யோகம்என்னும் பெயருடையதென்று உணரவேண்டும்; உறுதிப்பாட்டுடன் துக்கம் தீர்ந்த உள்ளமுடையோனால் அத்தகையயோகம் அடையத்தக்கது.

24. ஸங்கல்பப்ரபவாந் காமாந் ஸ்த்யக்த்வா ஸர்வாந் அஶேஷத:
மநஸை வேந்த்ரியக்ராமம் விநியம்ய ஸமந்தத:

ஸங்கல்பஜம், ஸ்பர்ஶஜம் எனக்காமம் இருவகைப்படும். முன்னது எண்ணங்களால் உண்டாகும் பின்னை, பூமிபோன்றது. இது

விடக்கூடியது பின்னது தொடுவதால்உளதாகும் தன்மை, வெப்பம் போல்வது. இது சரீரத்தைப்பற்றியதாதலின் இவற்றின் விளைவாகிய இன்பதுன்பங்களை விடக்கூடுமேயன்றி இவற்றையேவிடுதல் இயலாது.

25. ஶநை ஶ்ஶநை ருபரமேத் புத்யா த்ருதிக்ருஹீதயா
ஆத்மஸம்ஸ்தம் மந:க்ருத்வா நகிஞ்சிதபி சிந்தயேத்.

தன் எண்ணத்தினின்று எழும் எல்லாவிருப்பங்களையும் மிச்சமற மனத்தாலேயே துறந்து, எல்லாவற்றினின்றும் இந்திரிய ஸமூஹத்தை மனத்தினாலேயே அடக்கி, மனத்துணிவுடன் * மெள்ள மெள்ள ஓய்வு பெறல்வேண்டும்; மனத்தை ஆத்மாவினிடத்திலேயே நிலைக்கச்செய்து வேறெதையும் சிந்திக்காமலிருக்கவேண்டும்.

26. யதோ யதோ நிஶ்ஶரதி மநஶ்சஞ்சல மஸ்திரம்
ததஸ்ததோ நியம்யைதத் ஆத்மந்யேவ வஶம் நயேத்.

சஞ்சலத்தன்மையுள்ளதாதலின் ஆத்மாவில் நிலைத்துநிற்றற்கு இயலாதமனம் எந்த எந்த மார்க்கமாய் புறம்பே திரியுமோ அந்த அந்த இடத்தினின்றும் அதைமீட்டு ஆத்மாவினிடத்திலேயே வசமாக்கவேண்டும்.

27. ப்ரஶாந்தமநஸம் ஹ்யேநம் யோகிநம் ஸுக முத்தமம்
உபைதி ஶாந்த ரஜஸம் ப்ரஹ்மபூத மகல்மஷம்.

துளக்கமில்மனத்தனாய் பாவமற்றவனாய் யோகம்புரிவோனாய் ரஜோகுணம் அடங்கி பரிசுத்த ஆத்மஸ்வரூபத்தையுடைய இந்த யோகியை ஆத்மாநுபவமாகிய மேலானசுகம் வந்தெய்தும்.

மனம் சலிக்காதிருக்கப் பாவம் தீரும்; பாவம் தீர ரஜோகுணம் அடங்கும்; ரஜோகுணம் அடங்க ஆத்மஸ்வரூபம் விளங்கும்; ஆத்மஸ்வரூபம் விளங்க ஆத்மாநுபவம் உண்டாம். இதுவே ஒப்புயர்வற்ற சுகம் என்று காரண காரியத்தொடர்பு காண்க.

28. யுஞ்ஜந்நேவம் ஸதாத்மாநம் யோகீ விகதகல்மஷ:
ஸுகேந ப்ரஹ்மஸம்ஸ்பர்ஶம் அத்யந்தம் ஸுக மஶ்நுதே.

இவ்வாறு ஆத்மாவை தியானித்துக்கொண்டு பழவினைகள் நீங்கப்பெற்ற யோகி ஆத்மாவை அநுபவித்தலாகிய அளவிறந்த ஸுகத்தை வருத்தமின்றி எப்பொழுதும் அடைகிறான்.

இங்கு ப்ரஹ்மஸம்ஸ்பர்ஸம் என்றது ஜீவாத்மாவின் அநுபவத்தையே.

---

* யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். (திருக்குறள் 341).

அவ [இனி நான்குவகைத்தான யோகத்தின் பக்குவநிலை கூறப்படுகின்றது].

29. ஸர்வபூதஸ்தமாத்மாநம் ஸர்வபூதாநி சாத்மநி
ஈக்ஷதே யோகயுக்தாத்மா ஸர்வத்ர ஸமதர்ஶந:

யோகத்துடன்கூடிய மனமுடையவன் எல்லா ஆத்மாக்களிடத்தும் ஸமபுத்தியுள்ளவனாய்த் தன்னை எல்லாப்பிராணிகளிடத்திலும் இருப்பதாகவும், தன்னிடத்தில் எல்லாப்பிராணிகள் இருப்பதாகவும் பார்க்கிறான்.

30. யோமாம் பஶ்யதி ஸர்வத்ர ஸர்வஞ்ச மயிபஶ்யதி
தஸ்யாஹம் நப்ரணஶ்யாமி ஸசமே நப்ரணஶ்யதி.

எவன் எல்லாவற்றிலும் என்னையும், என்னிடத்தில் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறானோ அவனுக்கு நான் கட்புலனாகாதிருப்பதில்லை; அவனும் எனக்குக் கட்புலனாகாதிருப்பதில்லை.

அவ [மூன்றாவது பக்குவநிலையைக் கூறுகிறார்].

31. ஸர்வபூதஸ்திதம் யோமாம் பஜத்யேகத்வ மாஸ்தித:
ஸர்வதா வர்த்தமாநோபி ஸ யோகீ மயி வர்த்ததே.

ஒரே தன்மையுடையனாயிருக்கையைப் பெற்றோனாய் எல்லாப் பிராணிகளிடத்தும் இருக்கும் என்னை, எவன் தியானம் செய்கின்றானோ அந்தயோகி, யோகம்செய்யாததசையில் எவ்விதமாயிருந்த போதிலும், என்னிடத்திலேயே வர்த்திக்கிறான்.

அவ [நான்காவது பக்குவநிலையைப் பேசுகிறார்].

32. ஆத்மௌபம்யேந ஸர்வத்ர ஸமம் பஶ்யதி யோர்ஜுந!
ஸுகம்வா யதிவா து:கம் ஸ யோகீ பரமோமத:

அர்ஜுன! ஆத்மாக்கள் ஒன்றையொன்று ஒத்திருத்தலின், எல்லாஆத்மாக்களிலும் எவன் இன்பதுன்பங்களைச் சமமாகப்பார்க்கிறானோ, அவன் மேலான ஆத்மயோகியென்று கருதப்படுகிறான்.

அர்ஜுந உபாச - அருச்சுனன் ஐயவினா.

33. யோயம் யோகஸ்த்வயாப்ரோக்த:
ஸாம்யேந மதுஸூதந!
ஏதஸ்யாஹம் நபஶ்யாமி
சஞ்சலத்வாத் ஸ்திதிம் ஸ்திராம்.

மதுஸூதனை! இங்ஙனே ஸமத்வத்தால் ஏற்படும் என்று நீ உபதேசித்த இந்தயோகம், உள்ளத்தின் சஞ்சலத்தன்மையால், உறுதிநிலை யுடையதாகும் என்று எனக்குத் தோன்றவில்லை.

43. சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண! ப்ரமாதீ பலவத்ருடம்
தஸ்யாஹம நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்.

கிருஷ்ணு! * மனம் சஞ்சலமுள்ளது; கலங்கச்செய்வதில் வலியது; புறப்பொருள்களில் செல்வதில் உறுதிமிக்குடையது; அதனைக்கட்டுப்படுத்தல் காற்றைக் கட்டுப்படுத்தல்போல் இயாலாத தென்றே நான் கருதுகின்றேன்.

புறப்பொருள்களில் தத்தித்திரியும் இயல்புடைய மனம் அவைகளில் வேறுபட்ட நிலையுடைய ஆத்மாவில் நிலைத்திருப்பது கடினம்; பெருங்காற்றைச் சிறிய விசிறிகொண்டு தகையக்கூடுமோ? ஆதலின் மனதை அடக்கத்தக்க உபாயம் நீயே அருளல்வேண்டும் என்று கருத்து.

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீபகவான் தெளிவித்தருள்கிருர்.

35. அஸம்ஶயம் மஹாபாஹோ! மநோ துர்நிக்ரஹஞ் சலம்
அப்யாஸேந து கௌந்தேய! வைராக்யேண ச க்ருஹ்யதே.

தடந்தோளாய்! மனம் அடக்குதற்கரியதே; திரியும் இயல்புடையது; இதில் ஐயமில்லை. எனினும், குந்திமகனே! பயிற்சியினுலும், வைராக்யத்தாலும் மனத்தைக் கட்டுப்படுத்தலாம்.

36. அஸம்யதாத்மநா யோகோ துஷ்ப்ராப இதி மே மதி:
வஶ்யாத்மநா து யததா ஶக்யோவாப்து முபாயத:

மனதைக் கட்டுப்படுத்ாதவன் யோகமெய்த முடியாதுஎன்று நான் கருதுகிறேன்; மனதை அடக்கி அதில்முயற்சி செய்பவனல் பயிற்சிமுதலிய வழிகளால் யோகம் எய்துதற்குரியது.

மனத்தைகட்டல் முடியாததே; ஐயமில்லை. எனினும், ஆத்மா - நித்யன், ஒளியுருவன், ஆனந்தன், பாசங்களில் நீங்கியவன்,

---

* "உள்ளமோ ஒன்றி நில்லாது" (திருக்குறுந்தாண். 9).
"சித்தமும் செவ்வை நில்லாது" (,, 10).

(வியாக்) "நீஞ்சப்புக்கு வாய்கரையிலே தெப்பமிழப்பாரைப்போலே அநுஸந்திக்கப்புக்கால் தரித்து நிற்கமாட்டுகிறதில்லை நெஞ்சு"—இந்த நிலை கலியனுக்கு பக்தி மேலீட்டால் விளைவது; நமக்கு கர்மத்தால் உண்டாவது.

அமலன் என்றென்று பயிலப்பயில அதனிடம் ஆசைவளரும்; ஆத்மாவை ஒழிந்த மற்றவை குற்றமேகுடிகொண்டவை என்று அறிவதால், அவற்றினிடம் வைராக்யம்உண்டாகும். இத்தகைய பயிற்சிகளால் வருந்திக்கட்டலாமேயன்றி மனத்தை உன் புயவலியால் கட்ட இயலாது எனக்குறிப்பிட 'மஹாபாஹோ!' என்று விளிக்கிறார்.

கீழே விளக்கியபடியே எனக்கு ஆராதனமாயும், ஞானத்தைத் தன்னுள் அடக்கிய கருமத்தினால் மனத்தைவெல்ல விடாமுயற்சி செய்வோனால் இந்த ஸமதர்சனமாகிய யோகம் அடையத்தகும் என்று எம்பிரான் கருத்து.

அவ ["நேஹாபிக்ரமநாஸோஸ்தி" என்று முன்னே யோகத்தின்பெருமை சொல்லப்பட்டது; அதை நன்றாய்அறிய அருச்சுனன் உசாவுகிறான்].

அர்ஜுந உவாச - அருச்சுனன் வினவுவான்.

37. அயதி ஶ்ஶ்ரத்தயோபேதோ யோகாச்சலிதமாநஸ:
அப்ராப்ய யோகஸம்ஸித்திம் காங்கதிம் க்ருஷ்ண! கச்சதி.

கிருஷ்ணா! முழுநம்பிக்கையுடையோனாயினும், தக்கமுயற்சியின்றி, யோகஸித்திபெறாமல், யோகத்தில் அலுத்துப்போன மனமுடையோன், என்னகதியடைகிறான்?

38. கச்சிந்நோ பயவிப்ரஷ்ட:சிந்நாப்ர மிவ நஶ்யதி
அப்ரதிஷ்டோ மஹாபாஹோ! விமூடோ ப்ரஹ்மண:பதி.

தடந்தோளாய்! கருமபலனும் கைபுகுராமல் பிரமநெறியிலும் தவறிய மூடன் இரண்டுங்கெட்டவனாய், சிதறிய மேகம்போல் அழிந்துவிடாதிருப்பனோ?

இங்கு "ப்ரஹ்மண:பதி" என்றது பிரமநெறி. ஆத்மாவைப்பற்றிய ஞானயோகம் கருமயோகத்தில் உறுதியில்லாதவன் அதன்பயனையும் ஞானயோகப்பயனையும் ஒருங்கே இழக்கநேர்ந்தால் அவன் அழிந்தேபோவானோ? அல்லது தப்பவழியுண்டோ? பெரியமேகத்தினின்று காற்றினால் சிதறிய சிறியமேகத்துண்டு மறுபடி அதையாவது மற்றையதொரு பெரிய மேகத்தையாவது கூடப்பெறாவிடில் எப்படி உருவழியுமோ அப்படியே இவன்கதி என்று கருத்து.

39. ஏதம் மே ஸம்ஶயம் க்ருஷ்ண! சேத்து மர்ஹஸ்ய ஶேஷத:
த்வதந்ய: ஸம்ஶயஸ்யாஸ்ய சேத்தா நஹ்யுபபத்யதே.

கிருஷ்ண ! எனக்குள்ள இந்தஐயத்தை முற்றும்போக்கவல்லீர் நீரே; இந்த ஐயம் அறுப்பவர் நும்மையன்றிப் பிறிதொருவரு மில்லையன்றோ. !

இங்கு எல்லாவற்றையும் ஒரேகாலத்தில் கண்கூடாக எப்போதும் தானகவே பார்த்துக்கொண்டிருக்கும் இயற்றை ஆற்றலுடைய பகவானுகிய கிருஷ்ணனைத்தவிர வேறு ஒருவராலும் ஐயத்தை அகற்றஇயலாது என்று அருக்சுனன் கருத்து.

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீபகவான் விடைபணித்தருள்வான்.

40. பார்த்த ! நைவேஹ நாமுத்ர விநாஸஸ்தஸ்ய வித்யதே
நஹி கல்யாண க்ருத்கஸ்சித் தூர்கதிம் தாத கச்சதி.

பார்த்த ! அவனுக்கு அழிவு இவ்வுலகிலும் இல்லை; மேலுல கிலுமில்லை; அப்பா! சுபகார்யத்தைச்செய்வோன் எவனும் தூர்க் கதியை அடையமாட்டானல்லவா?

இங்கு இவ்வுலகு, மேலுலகுஎன்பன ஐஸ்வர்யத்தையும், ஆத்மாநுபவத்தையும் குறிக்கும். ஐஸ்வர்யம் இவ்வுலகமுதல் சுவர்க்கம் ஈறுகஉடையது; சுவர்க்கமும் ஆத்மாநுபவத்திற்கு இவ்வருகாதலின், என்க.

அவ [இவன் எவ்வாறு நலம்எய்துகிருன் என விளக்குகிருர்].

41. ப்ராப்ய புண்யக்ருதாங் லோகாங்
உஷித்வா ஶாஶ்வதீஸ் ஸமா:
ஶுசீநாம் ஸ்ரீமதாம் கேஹே
யோகப்ரஷ்டோபி ஜாயதே.

யோகத்தில் நழுவியவன் புண்ணியம் புரிவோரின் உலகங்களை எய்தி அங்கு எண்ணில்காலம்வாழ்ந்து, அதன்பின், தூய்மையும் செல்வமும் மிக்குடையோர் வீட்டிலே பிறக்கிருன்.

இங்கு, யோகத்தின்மஹிமையே புண்ணியஉலகு எய்துவிக்கின்றது யோகத் தில் நழுவியவனுக்கும் என்றபடி. புண்யஉலகில் வாழ்வதில் நசைதீரும்வரையில் அங்கிருந்து பின்பு வைராக்யம்உண்டாய் யோகமஹிமையாலேயே மறுமுறையும் யோகம் துவக்குவதற்குப் பாங்கானகுலத்தில் பிறக்கிருன்என்று கருத்து.

42. அதவா யோகிநாமேவ குலே பவதி தீமதாம்
ஏதத்தி துர்லபதரம் லோகே ஜந்ம ய தீத்ருஶம்.

அன்றியும், அறிவிற்சிறந்த யோகிகளின் மஹாவம்சததில் உதிக்கிருன்; இவ்வுலகில் இத்தகையபிறவி எய்துதல் மிகஅரிது.

43. தத்ர தம் புத்திஸம்யோகம் லபதே பௌர்வதைஹிகம்
யததே ச ததோ பூய: ஸம்ஸித்தௌ குருநந்தந!.

குருநந்தன! * அப்பிறவியில் அவன் அந்த பூர்வசரீரத்தில்உண்டான புத்தியைப்பெறுகிறுன்; அதனுல் மறுபடியும் யோகஸித்தியை முயற்சிசெய்கிறுன்.

இங்கு, முற்பிறவியின் யோக ஆரம்பத்தளவான அறிவும், தூங்கி விழித்தவனுக்கு முன்னேயநிகழ்ச்சிகள் தோன்றுவதுபோல், விளங்கும் என்றுகருத்து.

44. பூர்வாப்யாஸேந தேநைவ ஹ்ரியதே ஹ்யவஶோபி ஸ:
ஜிஜ்ஞாஸுரபி யோகஸ்ய ஶப்தப்ரம்ஹாதிவர்த்ததே.

பண்டுசெய்த பயிற்சியினுலேயே அவன் தன்வசமின்றியும் இழுக்கப்படுகிறுன்; யோகத்தைத் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவனும் சப்தபிரஹ்மத்தைத் தாண்டிவிடுகிறுன்.

இங்கு சப்தபிரஹ்மம் என்றது தேவ, மனித, பூமி, ஆகாச, ஸ்வர்க்கம் முதலிய சொற்களால் உரைக்கத்தகுந்த பிரகிருதியே. ஆகவே பிரகிருதியின் கட்டினின்றும் விடுபட்டவனுய், தேவ மனுஷ்யாதி சொற்களால் உரைத்தற்கியலாத ஞான ஆனந்தங்களையே ஸ்வரூபமாகவுடைய ஆத்மாவைஅடைகிறுன் என்றுகருத்து. ஆத்மா அப்ராக்ருதமானது.

45. ப்ரயத்நாத்யதமாநஸ்து யோகீ ஸம்ஶுத்தகில்பிஷ:
அநேகஜந்மஸம்ஸித்த: ஸ்ததோ யாதி பராங்கதிம்.

பற்பல பிறவிகளில் கைபுகுந்த புண்யங்களால் பாவங்கள் சுத்தம்செய்யப்பெற்று, ஸித்தியடைந்தவனுய், முயற்சியுடன் பயிற்சி செய்யும் யோகி, அதனுல் மேலானகதியை அடைகிறுன்.

அவ [யோகம்புரிவோன் தவம்புரிவோனிலும் மிக்கவன்
என்று கூறிமுடிக்கிறுர்].

46. தபஸ்விப்யோதிகோ யோகீ ஜ்ஞாநிப்யோ பிமதோதிக:
கர்மிப்யஶ்சாதிகோ யோகீ தஸ்மாத்யோகீ பவார்ஜுந.

தவஞ்செய்வோரினும் யோகி மேம்பட்டவன்; ஞானிகளிலும் அவன் சீரியோனுகக் கருதப்படுகிறுன்; கர்மம்புரிவோரினும் சிறந்தோனே; ஆதலின், அருச்சுன! நீ யோகியாகிவிடு.

இங்கு ஞானிகள் என்றது ஆத்மஜ்ஞானியைத்தவிர மற்றையோரை. கர்மி, அசுவமேதம் முதலியனபுரிவோன்.

---

* " ஒருமைக்கண் தான் கற்றகல்வி
ஒருவற்கெழுமையுமே மாப்புடைத்து." (திருக்குறள் 398).

அவ [இவ்வாறு பரவித்தைக்கு உறுப்பாக உபநிஷத்துக்களில் பேசப்பட்ட ஜீவாத்மஸாக்ஷாத்காரம் விளக்கப்பட்டது; இனி பரவித்தையையே விரித்துரைக்கத் தலைப்படுகிறார்].

47· யோகிநா மபி ஸர்வேஷாம் மத்கதே நாந்தராத்மநா
ஶ்ரத்தாவாந் பஜதேயோமாம் ஸமேயுக்ததமோ மத:

என்னிடத்திலேயே உறையும் உள்ளத்தினால் சிரத்தையுடன் எவன் என்னை உபாஸனம் செய்கின்றானோ அவன் யோகிகட்கும், மற்றெல்லார்க்கும் மேலானயோகி என்பது என்கொள்கை.

(முதல் ஷட்கம்)—(ப. கீ. வெ.)

[சோக முயிருணர்வு தொல்கருமச் செய்தியதில்
ஆகு மறிவுயர்த்தி யார்வகைகள்—யோகமுயிர்
காட்சி யிவற்றின் கருத்துமுத லாறேத்தின்
மாட்சிமை சொல்லும் வகை.]

ஆறாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ :

ஏழாவது அத்தியாயம்

விஜ்ஞான யோகம்.

1. "முன்னுறு நல்லுணர்வின் முற்றுங் கருமத்தால்
தன்னு ருயிருணர்வு தானுரைத்து—பின்னார்வத்
தேறு மனத்தால் இறைவன்பால் அன்புசெயல்
கூறு நடுவாறுங் கூர்ந்து."

2. "ஆங்குமுத லேழாமோத் தன்புக் கிலக்காகும்
ஓங்குமிறை மாயத் தொழிக்குமப்—பாங்கில்
சரண நெறியடைந்தார் தம்போத ஞானி
அர ணுயர்வு சொல்லும் அமைந்து."

ஸ்ரீபகவாநுவாச - ஸ்ரீபகவான் பணித்தருளுகிறார்.

1. மய்யாஸக்தமநா: பார்த்த! யோகம் யுஞ்ஜந் மதாஸ்ரய:
அஸம்ஶயம் ஸமக்ரம் மாம் யதாஜ்ஞாஸ்யஸி தச்ருணு.

பார்தத! என்னிடம் திடமாய்ப்பற்றியிருக்கும் மனமுள்ளவனும், என்னையே ஆதாரமாக உள்ளவனும், என்னைப்பற்றிய யோகத்தை ஆசரிப்பவனுமானநீ, என்னை ஐயமின்றி முழுமுற்றும் எப்படி தெரிந்துகொள்ளவல்லையோ அதைக்கேள்.

2. ஜ்ஞாநம் தேஹம் ஸவிஜ்ஞாநம்
இதம் வக்ஷ்யாம்ய ஶேஷத:
யஜ்ஞாத்வா நேஹ பூய:
அந்யத் ஜ்ஞாதவ்ய மவஶிஷ்யதே.

எதையறிந்து என்பால் மீண்டும் வேறொன்று தெரிந்துகொள்ள வேண்டியதாய் மிச்சப்பட்டிராதோ அந்த பகுத்தறிவோடுகூடிய ஸ்வரூபஜ்ஞானத்தை குறைவின்றி உனக்கு சொல்லப்போகிறேன்.

அவ [மேலே உரைக்கப்படும் ஞானம் கிடைப்பது மிக அருமைஎன்கிறார்].

3. மநுஷ்யாணும் ஸஹஸ்ரேஷு கஶ்சி த்யததி ஸித்தயே
யததா மபி ஸித்தாநாம் கஶ்சிந்மாம் வேத்தி தத்வத:

ஆயிரக்கணக்கான மனிதர்களில் ஒருவனே ஞானஸித்திபெற முயல்கின்றான்; முயற்சிசெய்வோரில் ஆயிரத்தில் ஒருவனே என்னை

அறிந்து என்னிடமிருந்து ஸித்தியடைய முயல்கிறான்; என்னை அறிந்தோர் ஆயிரவரில் ஒருவனாவது என்னை உள்ளபடி அறிந் தானோ? ஒருவருமில்லை என்றபடி.

இங்கு மனுஷ்யர் என்றது சாஸ்த்திரத்தை அறியவும் அறிந்தற்கேற்ப ஒழுகவும் தகைமையுடையோர். சாரீரகஸூத்திரத்தில் கூறியுள்ளவாறு தேவர்களுக்கும் பக்தி செய்ய அதிகாரமுண்டு; ஆதலின் ஸித்திபெறுமளவும் முயற்சிசெய்தற்குரியோர் என்று கருத்து.

4. பூமிராபோ நலோ வாயு: கம் மனோ புத்தி ரேவச
அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதி ரஷ்டதா.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம், மனம், புத்தி, அஹங்காரம் என எட்டுவகையாய்ப் பிரிந்திருக்கிற பிரகிருதி என்னுடையதே.

இங்கு பிரகிருதி என்றது உலகிற்குக் காரணமாகிய பொருளை பார்த்தற்கு ஒன்றையொன்றொவ்வாத விசித்திரங்களாய்உள்ள அளவற்ற போக்யபதார்த்தங்கள், போக்ய உபகரணங்கள் போகஸ்தானங்களாகநிற்கும் இவ்வுலகிற்குக் காரணமாகிய ஐம்பெரும்பூதங்களும் மனம், புத்தி, அஹங்காரங்களும் எட்டுவகைப்பட்டு எனது உடைமைப்பொருள்கள் என்று அறி என்றுகருத்து.

5. அபரேயமிதஸ் த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம்
ஜீவபூயம் மஹாபாஹோ! யயேதம் தார்யதே ஜகத்.

தடந்தோள! இது எனது தாழ்ந்தபிரகிருதி, இதனில் வேறாயதும் ஜீவாத்மஸ்வரூபமானதும் உயர்ந்ததுமாகிய எனது பிரகிருதி ஒன்றைத்தெரிந்துகொள். இந்த பிரகிருதியினாலேதான் இவ்வுலகம் தரிக்கப்படுகிறது.

6. ஏதத்யோநீநி பூதாநீ ஸர்வாணீத்யுபதாரய
அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ்ததா.

* "இந்த இரண்டு முதலாக எப்பொருளும்
வந்த பரிசுணர்நீ மன்னவனே—அந்தவகை
தானதனால் எல்லாச்சகத்தின் பிறப்பிறப்பு
நானெனவே காண்நீ நயந்து." (ப. கீ. வெ. 6).

* 1. "தன்னுளே திரைத்தெழுந்தாங்க வெண்
தடங்கடல், தன்னுளே திரைத்தெழுந்தடங்குகின்ற
தன்மைபோல், நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும்,
நின்னுளே யடங்குகின்ற நீர்மை நின்கணின்றதே."

(திருச்சந்த விருத்தம் 10).

2. "உலகம் யாவையும் தாவுளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கே சரணங்களே."

(கம்ப. ரா. கடவுள் வாழ்த்து).

3. "நிற்குநெடுநீத்த நீரின்முளைத்தெழுந்த
மொக்குளேபோல முரணிற்ற வண்டங்கள்
ஒக்கவுயர்ந்து னுளேதோன்றி யொளிக்கின்ற
பக்கமறிதற்கெளிதோ பரம்பரனே."

(கம்ப. ரா. ஆரண். கவந். வ. 48).

7. மத்த: பரதரம் நாந்ய த்கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய!
மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ.

"என்னில் வேறாகிமிக்கு இங்குளோர் பொருள்உளதென்(று)
உன்னில் ஆங்கில்லை உயர்விசயா—மன்னியநூல்
மாமணிபோல் கோப்புண்டு வந்தேளன்பால் இதெல்லாம்
சேம முறநிற்கும் செறிந்து." (ப. கீ. வெ. 7).

8. ரஸோஹம் அப்ஸுகௌந்தேய!
ப்ரபாஸ்மி ஶஶி ஸூர்யயோ:
ப்ரணவஸ் ஸர்வவேதேஷு
ஶப்த: கே பௌருஷம் ந்ருஷு.

*"எல்லாம்நான் ஆதலினால் அப்பில் இனிமையும்நான்
சொல்லார்மதி இரவிச்சோதியும் நான்—நல்லார்கள்
ஓங்காரம் வேதத்து உயர்விண்மிசைச் சத்தம்
பாங்கு நரரில் பௌருடம்." (ப. கீ. வெ. 8).

[அப்பில்-நீரில்; ஓங்காரம்-பிரணவம்; பௌருடம்-பௌருஷம், ஆண்தன்மை].

* (1) "பூநிலாய வைந்துமாய்ப் புனற்கணின்ற நான்குமாய்த்
தீநிலாய மூன்றுமாச் சிறந்தகாலிரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்
நீநிலாய வண்ண! நின்னையார் நினைக்கவல்லரே." (திருச்சந்த விருத்தம் 1).

(2) "ஓங்காரப் பொருள்தேருவோர் தாமுன்னையுணர்வோர்
ஓங்காரப் பொருளென்றுணர்ந் திருவினையுகுப்போர்
ஓங்காரப் பொருளாமென்றென் றாழிசென்றாலும்
ஓங்காரப் பொருளேபொரு ளென்கிலாவுரவோர்." (கம்பர்.)

9. புண்யோ கந்த: ப்ருதிவ்யாஞ்சதேஜஸ்சாஸ்மி விபாவஸௌ
ஜீவநம் ஸர்வபூதேஷு தபஸ்சாஸ்மி தபஸ்விஷு.

"இப்புவிநல்கந்தம் எரியில்ஒளி எப்பொருட்கும்
கைப்படு உயிர்சத்தைக் கருதுங்கால்—ஒப்பிலா
நற்றவத்தோர்மாட்டு நலஞ்சிறந்த நற்றவநான்
பற்றலர்கள் கோளரியே பார்." (ப. கீ. வெ. 9).

[புவி - பூமி; கந்தம் - மணம்; பற்றலர் - பகைவர்; கோளரி - சிங்கம்].

10. பீஜம் மாம் ஸர்வபூதாநாம் வித்தி பார்த்த! ஸநாதநம்
புத்திர்புத்திமதா மஸ்மி தேஜ ஸ்தேஜஸ்விநா மஹம்.

"எப்பொருட்கும் வித்தா நிலைநின்ற என்னைநினை
அப்புருடர் புத்தியும் நான்ஆகின்றேன்—ஒப்பில்
பிறரொளியை மாய்க்கும் அப்பேரொளி நானவன்
செறிதிணிதோள் பார்த்தா தெளி." (ப. கீ. வெ. 10).

11. பலம் பலவதாஞ்சாஹம் காமராக விவர்ஜிதம்
தர்மாவிருத்தோ பூதேஷு காமோஸ்மி பரதர்ஷப!

"திண்மையினோர் திண்மையும்நான் தீதிலாத்தேசுபெறும்
ஒண்மையறு காமராகம் ஒழிந்த—வண்மை
அறம்செறியும் காமம்நான் ஆடவர்கள் ஏறே
சிறந்ததெல்லாம் நானுத்தெளி. (ப. கீ. வெ. 11).

[திண்மை - வலி, பராக்கிரமம்; காமராகம் - ஆசாபாசம்; அறம்செறியும் காமம் - தருமத்தோடு மாறுபடாத காமம்; ஆடவர்கள் - புருஷர்கள்; ஏறு - சிங்கம்].

12. யேசைவ ஸாத்விகா பாவா ராஜஸா ஸ்தாமஸாஸ்ச யே
மத்த ஏவேதி தாந்வித்தி நத்வஹம் தேஷுதே தே மயி.

* "இன்ன குணமூன்றில் ஏய்ந்தபொருள் அனைத்தும்
மன்னே என்தன்மையினல் வாய்ந்ததென—உன்னுகநீ
ஆங்கவை என்பாலே அமைந்திடினும் யானவற்றில்
நீங்கலுறநிற்பன் நிகழ்ந்து." (ப. கீ. வெ. 12).

"உலகுதன்னை நீ படைத்தி யுள்ளொடுக்கிவைத்து மீண்
டுலகுதன்னுளே பிறத்தி யோரிடத்தையல்லையால்
உலகுநின்னொடொன்றி நிற்க வேறுநிற்றியாதலால்
உலகுநின்னையுள்ள சூழல் யாவருள்ளவல்லரே." (திருச்சந்த விருத்தம் 12).

13. த்ரிபிர்குணமயைர்பாவை: ஏபி: ஸர்வமிதஞ் ஜகத்
மோஹிதம் நாபிஜாநாதி மா மேப்ய: பரமவ்யயம்.

*" முக்குணஞ்சேர் இப்பொருளால் மோகித்த இவ்வுலகம்
அக்குணங்கள் தம்மில் அதிமேலாய்—மெய்க்குணங்கள்
ஒன்றதனிலோர் குறையாது ஓங்கிறையா மென்னைத்தான்
நின்றறியமாட்டாது நின்று."* (ப. கீ. வெ. 13).

அவ [தேவரீரோ இயற்கையாகவே அளவற்ற மேலான ஆனந்தத்தை அளிப்பவராகிறீர்; அழிவற்றவர்; எப்பொழுது ஒரேநிலைமையுடையீர்; இன்பமயமாவீர்; இத்தகைய நீர் இருக்க, மிக அற்பங்களாயும், முக்குண வசப்பட்டனவாயும், நிலையற்றனவாயும் இருக்கும்பொருள்களில் எல்லாஆத்மாக்கட்கும் அநுபவபுத்தி எவ்வாறு ஏற்படுகிறது என்பதற்குக்காரணமும் அதைக்கடக்கும் உபாயத்தையும் விளக்குகிறார்].

14. தைவீ ஹ்யேஷா குணமயீ மமமாயா துரத்யயா
மா மேவ யே ப்ரபத்யந்தே மாயா மேதாந்தரந்திதே.

தேவனாகிய என்னால் உண்டாக்கப்பட்டதும், முக்குணங்கள் நிறைந்ததுமான இந்த எனது பிரகிருதியானது கடக்கக்கூடாத தன்றோ? ஆனால், எவர்கள் என்னையேசரணமாக அடைகின்றார் களோ அவர்கள், இந்தமாயையைக் கடக்கின்றார்கள்.

அவ [ஆயின், பகவத்தியானத்தை யுண்டாக்கவல்ல பிரபத்தியை அவனிடம் எல்லோரும் ஏன்செய்வதில்லை என்பதற்கு விடைதருகிறார்].

15. நமாம் துஷ்க்ருதிநோ மூடா:ப்ரபத்யந்தே நராதமா:
மாயயாபஹ்ருதஜ்ஞாநா: ஆஸுரம் பாவ மாஶ்ரிதா:

*" மூடர் நராதமர்கள் முன்மாயையால் அறிவின்
பாடழிந்தார் ஆசுரமாம் பாவம்சேர—கேடார்ந்த
தீவினையார் நால்வர் எனைச்சேரும் கதியதனில்
மேவியுறுவார் அல்லர் மிக்கு."* (ப. கீ. வெ. 15).

16. சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோர்ஜுந!
ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு: அர்த்தார்த்தீ ஜ்ஞாநீச பரதர்ஷப!

" மாடிழந்தான் மன்னுயிரை வேண்டுணர்வோன் வான்பொருளைத்
தேடியிருப்பான் ஞானம்சேர்வுற்றான்—பீடமரும்
நல்வினையார் நால்வர்இவர் என்பால் நலம்புனையும்
தொல்வினையால் சேர்வர் துணிந்து." (ப. கீ. வெ. 16).

[மாடு - செல்வம்; பீடு - பெருமை.]

17. தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்தி ர்விஶிஷ்யதே
ப்ரியோஹி ஜ்ஞாநிநோத்யர்த்தம் அஹம் ஸ ச மமப்ரிய:

“ ஆங்கதனின் ஞானிஅதிகன் அவன்என்றும்
பாங்கிலெனைச் சேர்ந்தேகபத்தியனாய்—நீங்கலுறு(து)
என்னையவன் செப்பாத ஏய்ந்துகக்கும் யானுமவன்
தன்னையுகந்தே யிருப்பன் சார்ந்து.” (ப. கீ. வெ. 17).

18. உதாரா ஸ்ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்
ஆஸ்திதஸ்ஸ ஹி யுக்தாத்மா மா மேவாநுத்தமாங் கதிம்.

* “ உற்றிவர்கள் எல்லாரும் உதாரரே ஞானியெனும்
மற்றிவன் என்தன் உயிராவாய்ந்தறிவன்—அற்றமற
என்றும் அவன்என்னை ஏலும் பரகதியா
நின்றுணர்வுசெய்யும் நிகழ்ந்து.” (ப. கீ. வெ. 18).

[உதாரர் - வள்ளலார், கொடையாளிகள்].

என்னையன்றி ஞானிக்கும் பிராணதாரணை இல்லையாதலால் எனக்கு அவனை யன்றி ஆத்மதாரணையில்லை யென்றுகருத்து.

* 1. “ இன்றாக நானேயேயாக வினிச்சிறிதும்
நின்றாக நின்னருளின் பாலதே—நன்றாக
நானுன்னையன்றியிலேன் கண்டாய் நாரணனே
நீ யென்னையன்றி யிலை.” (நான்முகன் திருவந்தாதி 7).

2. “ பயின்மதி நீயே பயின்மதி தருதலின்.
வெளியு நீயே வெளியுற நிற்றலின்,
தாயு நீயே சாயைதந்துகத்தலின்,
தந்தையு நீயே முந்திநின் றளித்தலின்,
உறவு நீயே துறவாதொழிதலின்,
உறறது நீயே சிற்றின்பமின்மையின்,
ஆறு நீயே ஆற்றுக்கருள்தலின்,
அறமு நீயே மறநிலைமாய்தலின்,
துணைவனு நீயே யிணையில்லையாதலின்,
துய்யனு நீயே செய்யாளுறைதலின்,
காரண நீயே நாரணனாதலின்,
கற்பக நீயே நற்பதந்தருதலின்,
இறைவனு நீயே குறையொன்றிலாமையின்,
இன்பமு நீயே துன்பம் துடைத்தலின்,
யானு நீயே யென்னுளுறைதலின்,
எனது நீயே யுனதன்றியின்மையின்,
நல்லாய் நீயே பொல்லாங்கிலாமையின்,
வல்லாய் நீயே வையமுண்டுமிழ்தலின்,
எங்கணுமாகு மெய்யநின்வியப்பே,
அங்கனேயொக்க வறிவதாரணமே.”

(தேசிகப்பிரபந்த - மும்மணிக்கோவை 7).

19. பஹூநாம் ஜந்மநா மந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே
வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:

"புண்ணியமார் பல்பிறவி பூண்டியன்றோன் அந்தத்து
நண்ணியுணர் வென்னை நயந்தடையும்—எண்ணியுயிர்
எல்லாமும் வாசுதேவ னேதா னெனவுணர்ந்த
நல்லான் மிகஅரியன் நாட்டு." (ப. கீ. வெ. 19).

அவ [ஞானி]கிடைத்தற்கரியவன் என்பதையே நிரூபிக்கிறார்].

20. காமை ஸ்தைஸ்தைர் ஹ்ருதஜ்ஞாநா:
ப்ரபத்யந்தே அந்யதேவதா:
தம்தம் நியம மாஸ்த்தாய
ப்ரக்ருத்யா நியதாஸ்ஸ்வயா.

"காமங்கள் ஆன அவற்றால் கருத்தழிந்தார்
சேமமுறவே மற்றைத் தேவதைகள்—நாமங்கள்
பற்றிநிய தங்களுடன் பண்டைத்தம் * வாசனையால்
உற்றியல்வார் அன்பால் உகந்து." (ப. கீ. வெ. 20).

21. யோயோயாம் யாம் தநும் பக்த: ஶ்ரத்தயார்ச்சிது மிச்சதி
தஸ்யதஸ்யாசலாம் ஶ்ரத்தாம் தாமேவ விததா ம்யஹம்.

" இங்குஎன் உருவாம் இமையோரை யாரையார்
அங்கருத்தில் அர்ச்சிப்பான் இச்சிப்பார் - சங்கையற
நான்அவருக்கு ஆங்கவர்பால் நன்றிருப்பன் தான்சலியாது
ஆனவகை செய்வன் அமர்ந்து." (ப. கீ. வெ. 21).

22. ஸ தயா ஶ்ரத்தயா யுக்த தஸ்யாராதந மீஹதே
லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹிதாந்.

அம்மனிதன் அத்தகைய சிரத்தையுடன் அத்தேவதையின் ஆராதனத்தைச் செய்யவிரும்புகிறான்; அதனால் தன்இஷ்டங்களைப்பெறுகிறான்; எனினும் அவற்றைசெய்விப்போன் யானே.

23. அந்தவத்து பலம் தேஷாம் தத்பவ த்யல்பமேதஸாம்
தேவாந் தேவயஜோ யாந்தி மத்பக்தா யாந்தி மாமபி.

* "அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவரி றையவரென வடியடைவர்கள்
அவரவரி றையவர்குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழியடைய நின்றனரே." (திருவாய்மொழி, I-1-5).

மற்றைதெய்வங்களை வழிபடுவோர் அத்தெய்வங்களையே யடைகின்றனர்; அற்பமதியுடையோர்கட்குப் பயன் இறுதியுடைத்து; என்னிடம் பக்தியுள்ளோர் என்னையே எய்துகின்றனர்.

இந்திராதியரை வழிபடுவோர் நிலையற்ற அவர்களது அளவான இன்பத்தை நுகர்ந்து புண்ணியப்பயன் தீர்ந்தவாறே அத்தேவதைகளுடன்நழுவி விழுகின்றனர்; என்னை ஆராதனம்செய்பவர்கள் மீளாவுலகம்புகுவர் என்று கருத்து.

அவ [எல்லோரும் என்னிடம் சேரவேண்டுமென்றே நான் மானிடப்பிறவியாதி எடுத்துவருகிறேன். என்னசெய்து சிலர்க்கு அது பயன்படவில்லைஎன்கிறார்].

24. அவ்யக்தம் வயக்தி மாபந்நம் மந்யந்தே மா மபுத்தய:
பரம் பாவ மஜாநந்தோ மமாவ்யய மநுத்தமம்.

நித்யமாய், இதனிலும் உத்தமமானது வேறுஇல்லாததாகிய பரஸ்வரூபத்தை அறியாத அவிவேகிகள், இதன்முன் புலப்படாத என்னை, இப்பொழுது பிறப்பினால் காணப்படுகிறவனாக நினைக்கின்றார்கள்.

அவ [தேவருடைய இந்த ஸ்வபாவத்தை ஒருவருக்கும் காட்டுவதில்லையே அதுஏன்? என்ன விடைதருகிறார்].

25. நாஹம் ப்ரகாஶஸ் ஸர்வஸ்ய யோகமாயாஸமாவ்ருத:
மூடோயம் நாபிஜாநாதி லோகோ மா மஜமவ்யயம்.

யோகமாயையால் மறைக்கப்பட்டிருக்கிற யான் எல்லார்க்கும் கண்ணிலக்காவதில்லை; ஆதலில் இந்தமூடஉலகம் என்னைப் பிறப்பும் கேடும் அற்றவனாக அறியமாட்டாது.

26. வேதாஹம் ஸமதீதாநி வர்த்தமாநாநி சார்ஜுந!
பவிஷ்யாணி ச பூதாநி மாந்து வேத ந கஶ்சந.

அர்ஜுந! சென்றன, நிகழ்வன, வருவன ஆகிய * பிராணிகளையெல்லாம் நான்அறிவேன்; என்னைமாத்திரம் ஒருவரும் அறிவதில்லை.

முக்காலங்களிலுமுள்ள பிராணிகளும் என்னைவழிபடுதற்காகவே வசுதேவன் மகனாய்ப்பிறந்துளேன் என்று அறிந்து என்னையேசரண்புகுமவன் ஒருவனும் அகப்படுவதில்லை; ஆதலின் ஞானி கிடைத்தற்கரியவன் என்பதே விளங்குகிறது என்கிறார்.

---

* "தாய் தன்னையறியாத கன்றில்லை தன்கன்றை
ஆயுமறியும் உலகின் தாயாகினைய!
நீயறிதி எப்பொருளும் அவையுன்னை நிலையறியா
மாயமிது என்கொலோ வாராதேவரவல்லாய்." (கம்பர்).

27. இச்சாத்வேஷஸமுத்தேந த்வந்தமோஹேந பாரத!
ஸர்வபூதாநி ஸம்மோஹம் ஸர்க்கே யாந்தி பரந்தப!

பாரத! பரந்தப! விருப்பு வெறுப்புகளால் விளையும் இன்ப துன்ப மயக்கத்தால் எல்லாப்பிராணிகளும் படைப்புக்காலந் தொட்டே மோஹம் எய்துகின்றன.

28. யேஷாம் த்வந்த்தகதம் பாபம் ஜநாநாம் புண்யகர்மணாம்
தே த்வந்த்வ மோஹநிர்முக்தா பஜந்தே மாம் த்ருடவ்ரதா:

அறம்புரிந்து பாவம்தேயப்பெற்ற சனங்கள் * இரட்டைகளின் மோஹம்தீர்ந்து திடவிரதமுடையோராகி என்னைத் துதிக்கின்றனர்.

அவ [பகவத்தியானம்புரியும் மூவகையினரும் சிந்தித்து, அறிந்து, செய்ய வேண்டுவன இவை என்கிறார்].

29. ஜராமரணமோக்ஷாய மா மாஶ்ரித்ய யதந்தி யே
தே ப்ரஹ்ம தத்விது: க்ருத்ஸ்நம் அத்யாத்மம் கர்மசாகிலம்.

மூப்பும் சாக்காடும் தப்பவேண்டுமென்று என்னை வழிபட முயல்வோர் அந்த பிரஹ்மத்தைத் தெரிந்துகொள்வர்; எல்லாஅத்யாத்மத்தையும் உணர்வர்; எல்லாக்கருமங்களையும் அறிந்துகொள்வர்.

மேல் அத்தியாயத்தில் இவற்றின் விவரம் விளங்கும்.

30. ஸாதிபூதாதிதைவம் மாம் ஸாதியஜ்ஞஞ்ச யே விது:
ப்ரயாணகாலேபிச மாம் தே விதுர்யுக்தசேதஸ:

அதிபூத, அதிதெய்வ, அதியஜ்ஞத்தோடுகூடியவனாக எவர்கள் என்னை அறிகின்றார்களோ அவர்கள் என்னிடத்திலேயே பதிய வைத்த மனமுடையவர்களாய் மரணகாலத்திலும் என்னை மறவாமல் அறிகிறார்கள்.

இவற்றின் விரிவை மேல்அத்தியாயத்தில் பரக்க உரைக்கிறார்.

"பிறப்பென்னும் பேதமைநீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு" என்னும் குறளும், "உயிர் உடம்பின் நீங்குங்காலத்து அதனால் யாதொன்று பாவிக்கப்பட்டது, அஃது அதுவாய்த்தோன்றுமென்பது எல்லாவாகமங்கட்குந்துணிபாகவின் வீடெய்துவார்க்கு அக்காலத்துப்பிறப்பிற்கேதுவாயபாவனை கெடுதற்பொருட்டுக்

---

* இரட்டை - துவந்துவம்; இன்ப - துன்ப, குளிர் - வெப்பம்போன்ற ஒன்றோடொன்று எதிர்த்தட்டானவை.

கேவலப்பொருளையே பாவித்தல் வேண்டுதலான் அதனை முன்னே பயிறலாய இதனின் மிக்கவுபாயமில்லை யென்பதறிக" என்றபரிமேலழகருரையும் ஈண்டு அறியத்தக்கன.

முன்னரே பரமனிடம் தியானமிக்கோர்க்கும் மரணகாலத்தில் மனதைப் பரமனிடம் பதியவைத்தல் மிகஅரிது; மஹாத்மாவான ஜடபரதரே பிராணன்போகும் தறுவாயில் ஒரு மானிடம்மனம்வைத்து மறுபிறப்பில் மான்சன்மம்பெற்றது உலகறிந்தது. அங்ஙனம் மனம்வழுவாது இறைவனிடமே இறக்கும் காலத்தும் நிலைத்துநிற்க அவ்விறைவனையேவேண்டுவர் விழுமியோர். இதற்குச்சான்று ;—

" துப்புடையாரை யடைவதெல்லாம் சோர்விடத்துத் துணையாவரென்றே
ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தேன் ஆனைக்கு நீயருள் செய்தமையால்
எய்ப்பென்னைவந்து நலியும்போது அங்கேது நானுன்னை நினைக்கமாட்டேன்
அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப்பள்ளி
(பெரியாழ்வார் திருமொழி). [யானே."

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ:

எட்டாவது அத்தியாயம்

அக்ஷரபரப்பிரஹ்ம யோகம்.

" போக முயிருண்மை பூமகள்கோனைப் பெறுதற்
காக முயல்வார்க் கறிவமர—மேகநிறத்
தெம்மா னருள்கீதை யெட்டாமோத்திற் பொருள்கள்
செம்மா வகையுரைக்கும் சேர்ந்து."

அர்ஜுந உவாச - அருச்சுனன் வேண்டுவான்.

1. கிந்தத் ப்ரஹ்ம கிமத்யாத்மம் கிம்கர்ம புருஷோத்தம!
அதிபூதஞ்ச கிம்ப்ரோக்தம் அதிதைவம் கி முச்யதே.

புருஷோத்தம! அப்பிரஹ்மமாவதென்? அத்யாத்மமாவதென்? கருமமாவதென்? அதிபூதஎனப்பேசப்படுவதெது? அதிதெய்வமெனக்கூறப்படுவது எதனை?

2. அதியஜ்ஞ: கதம் கோத்ர தேஹேஸ்மிந் மதுஸூதந!
ப்ரயாணகாலே ச கதம் ஜ்ஞேயோஸி நியதாத்மபி:

மதுஸூதன! இச்சரீரத்திலே அதியஜ்ஞம் எது? அது எப்படி? மனத்தைத்தன்வசம்செய்தோரால் மரணகாலத்தில் எப்படி உணரத்தக்கவராகிறீர்?

'இச்சரீரத்திலே' என்றது இறைவன்சரீரமாகிய இந்திராதி தேவதைகளிடத்தில் என்றபடி. 'அது எப்படி' என்றது. அதியஜ்ஞம்என்னும் சொற்பொருளாயிருக்கை எப்படிநேரும் என்றபடி.

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீபகவான் பணித்தருள்வார்.

3. அக்ஷரம் ப்ரஹ்ம பரமம் ஸ்வபாவோத்யாத்மமுச்யதே
பூதபாவோத்பவகரோ விஸர்கக்: கர்மஸ்ம்ஜ்ஞித:

பிரஹ்மமென்பது பரமமான அக்ஷரம்; அத்யாத்மம் என்பது பிரக்ருதி; கர்மம் என்பது எல்லாப்பிராணிகட்கும் உத்பத்திக்குக் காரணமான விஸர்க்கம்.

இங்கு 'பரமமான அக்ஷரம்' என்றது பரமம் - மேன்மை; எனவே பிரகிருதியின் சேர்க்கையற்ற, அக்ஷரம் - அழிவில்லாதது; எனவே - ஜீவாத்மஸ்வரூபம் என்றபடி. 'விஸர்க்கம்' என்றது தேஜஸ்ஸை க்ஷேத்திரத்தில் விடுகை என்றபடி. ஜீவனே பிரஹ்மமென்றது பரமாத்மாவின்தன்மையை யுடைமையின் உபசாரவழக்கு. இவற்றில் ஒன்றைக் கொள்ளவேண்டியதென்றும் ஒன்றைத் தள்ளவேண்டியதென்றும் முமுக்ஷு அறிதல் வேண்டும்.

4. அதிபூதம் க்ஷரோ பாவ: புருஷஸ்சாதிதைவதம்
அதியஜ்ஞோஹ மேவாத்ர தேஹே தேஹப்ருதாம்வர !

தேவ ப்ருதாம்வா! அதிபூதம்என்பது பரிணமிக்கின்ற பொருள். அதிதைவம்என்பது புருஷன்; அதியஜ்ஞன்என்பவன் இந்தசரீரத்தில் இருக்கிறயானே.

பரிணமிக்கின்ற - மாறுதல் அடைந்துகொண்டிருக்கிற; புருஷன் - ஐஸ்வர்யாதிகளை அநுபவிக்கக்கூடிய ஜீவன்; இந்தசரீரத்தில் - தனக்குச்சரீரமாயிருக்கிற இந்திராதிகளிடத்தில்;

5. அந்தகாலேச மா மேவ ஸ்மரந்முக்த்வா களேபரம்
ய: ப்ரயாதி ஸ மத்பாவம் யாதி நா ஸ்த்யத்ர ஸம்ஶய :

மரணகாலத்திலும் என்னையே தியானித்துக்கொண்டு உடம்பைத் துறந்துபோவான் எவனோ அவன் எனதியல்பை எய்துகிறான்; இதில் ஐயம் இல்லை.

எனது இயல்பை - என்னை அநுஸந்தானம் செய்யும்போது எவ்விதமாக நினைக்கிறார்களோ அந்தஸ்வபாவத்தை; இதனால் சுருதிப்பொருட்கு முரணாகும் ஐக்யம் விலக்கப்பட்டது. ஆதிபரதன் தன்னால் மரணகாலத்தில் நினைக்கப்பட்ட மான் போன்ற பிறவி அடைந்தானேஅன்றி அந்த மானேயாகஆயினன் என்பதில்லை.

6. யம் யம் வாபி ஸ்மரந் பாவம் த்யஜத்யந்தே களேபரம்
தந் தமேவேதி கௌந்தேய ! ஸதா தத்பாவபாவித:

" தானெந்த எந்தப் பொருள்உன்னித் தன்முடிவில்
ஊன்வந்த ஆக்கை ஒழித்தேகும்—தானந்த
அந்தஅது தன்னையே ஆங்குஅணையும் எக்காலும்
சிந்தையது செய்தலினால் சேர்ந்து." (ப. கீ. வெ. 6).

7. தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு மா மநுஸ்மர யுத்ய ச
மய்யர்ப்பிதமநோபுத்தி: மாமேவைஷ்யஸ்ய ஸம்ஶய :

" ஆதலால் எக்காலும் அங்ஙன்எனை நின்றுநினை
தீதுஅறுசீர் வெஞ்சமத்தைச் செய்குதிநீ—காதலால்
என்பால் மனம்புத்தி ஏய்ந்தான் எனை அடையும்
தன்பால் ஓர்சங்கையறச் சார்ந்து." (ப. கீ. வெ. 7).

(வெம்சமம் - கொடியயுத்தம்; சங்கையற - சந்தேகம்தீர). இங்கு யுத்தம்செய் என்றது உபலக்ஷணம்; தத்தம் வருணங்கட்கும் நிலைகட்கும் உரிய ஒழுக்கங்களை வழுவாது ஒழுகல்வேண்டும் என்றபடி.

அவ [முன்னேசொன்ன மூவரும் அந்திமஸ்மிருதியினால் தங்களுக்கு வேண்டியவற்றை அடைகிறார்கள் என்று பொதுப்படச்சொல்லி அவர்கள்செய்யும் தியானத்தில்உள்ள வேறுபாட்டைசொல்லத் தொடங்குகிறார். ஐஸ்வர்யத்தைவேண்டுவோன் சிந்திக்க வேண்டியமுறையும், அவ்வாறே, அந்திமகாலத்திலும் சிந்திக்கவேண்டிய முறையும் கூறுகிறார்].

8. அப்யாஸயோகயுக்தேந சேதஸா நாந்யகாமிநா
பரமம் புருஷம் திவ்யம் யாதி பார்த்தாநுசிந்தயந்.

பார்த்த! அப்யாஸமும் யோகமும் சேர்ந்துஇயலும் நெஞ்சால் வெறொன்றைநினையாது, திவ்யனான பரமபுருஷனையே சிந்தித்திருப்பவன் அப்பரமபுருஷனையே அடைகிறான்.

அப்யாஸம் - பயிற்சி, அதாவது நித்ய நைமித்திகங்கட்குக் குறைவுவாராமல் மற்றெல்லாக்காலங்களிலும் உபாஸனம்செய்யப்படும் பொருளை நெஞ்சால்நினைத்திருத்தல் : யோகமாவது - யோகம் செய்வதற்கென வகுத்தகாலத்தில் தியானம் செய்யவேண்டியமுறைப்படி என்னை அனவரதமும் சிந்தித்தல். திவ்யனாயும் பரம புருஷனாயுமிருக்கும் தன்னையேஅடைகிறான் என்றது. ஐஸ்வர்யத்தை உடையோனாயிருக்கையில் தனக்குஸமமான வடிவுடையனாகிறான் என்றே பொருள்.

9. கவிம் புராணம் அநுஶாஸிதாரம்
அணோ ரணீயாம்ஸ மநுஸ்மரேத்ய:
ஸர்வஸ்ய தாதாரம் அசிந்த்யரூபம்
ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்.

முற்றுமுணர்ந்தவன், பழமையான், எல்லாம்நியமிப்பான், நுண்மைப்பொருளுக்கும் நுண்ணியான், எல்லாவற்றையும் படைப்பான், எண்ணுதற்கரிய உருவுடையான், இரவிவண்ணன், பிரகிருதி மண்டலத்திற்கு அப்பாலான் ;

10. ப்ரயாணகாலே மநஸாசலேந
பக்த்யாயுக்தோ யோகபலேநசைவ
ப்ருவோர்மத்யே ப்ராணமாவேஶ்யஸம்யக்
ஸதம்பரம் புருஷமுபைதிதிவ்யம்.

திவ்யன் ஆன பரமபுருஷனை பக்திதிகழ் யோகபலத்துடன் சலியாதசிந்தையால், இந்தஉடல் விட்டேகுங்கால், பிராணவாயுவைத் தன்புருவமத்தியத்தில்வைத்து, எவன் நன்குநினைப்பனோ அவன் அப்பரமபுருஷனையே அடைகிறான்,

அவ [இனி, கைவல்யத்தை விரும்புவோர் நினைக்கவேண்டும் முறையைப் பேசுகிறார்].

11. யதக்ஷரம் வேதவிதோ வதந்தி
விஶந்தி யத்யதயோ வீதராகா:
யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி
தத்தேபதம் ஸங்க்ரஹேண ப்ரவக்ஷ்யே.

எந்த நித்தியப்பொருளை வேதம்வல்லார் விளம்புகின்றனரோ, எதனிடம் ஆசையற்றயதிகள் புகுகின்றனரோ, எதனை இச்சித்து பிரமசரியத்தைப்பற்றி ஒழுகுகின்றனரோ, அந்த அடையத்தக்கதை உனக்குச் சுருங்கஉரைப்பன்.

12. ஸர்வத்வாராணி ஸம்யம்ய
மனோ ஹ்ருதி நிருத்யச
மூர்த்ந்யாதாயாத்மந: ப்ராணம்
ஆஸ்திதோ யோகதாரணம்.

பொறி வாயில்எல்லாம் அடைத்து, மனத்தை இதயக்கமலத்திருக்கும் இறைவன்பால் நிலையாய்நிறுத்தி, சிரத்தில் தன் பிராண வாயுவைவைத்து, யோகதாரணையில் உறுதிபெற்று ;

13. ஓ மித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரந்மா மநுஸ்மரந்
ய: ப்ரயாதி த்யஜந் தேஹம் ஸ யாதி பரமாங்கதிம்.

பிரஹ்மத்தைச்சொல்லும் * 'ஓம்' என்கிற ஒற்றைஎழுத்தை உச்சரித்துக்கொண்டு, என்னை ஸ்மரிப்பவனாய், உடலொழித்துப் போங்கால், பரமகதியை எய்துவான்.

அவ [இனி ஞானி பகவத்தியானம் செய்யுமுறையும் பயனெய்துமாறும் உரைத்தருள்கிறார்].

14. அநந்யசேதாஸ் ஸததம் யோமாம் ஸ்மரதி நித்யஶ:
தஸ்யாஹம் ஸுலப: பார்த்த! நித்யயுக்தஸ்ய யோகிந:

" செல்வம் உயிர்இன்பத்துச் செல்லாத நெஞ்சனாய்
நல்விரகால் என்நினைந்து நாடோறும்—தொல்வகையால்
என்றுமெனைக் கூடுமி யோகிக்குப் பார்த்தனே
நன்றுபெற எளியன் நான்." (ப. கீ. வெ. 13).

---

* "ஓம் எனுமோ ரெழுத்ததனினுள்ளுயிர்
ஆமவனறிவினுக் கறிவுமாயினன்
தாமமூவுலகமும் தழுவிச்சார்தலால்
தூமமுங்கனலும் போல்தொடர்ந்த தோற்றத்தான்." (கம்ப-ரா.)

அவ [இதன்பின் இந்த அத்தியாயத்தில் ஜ்ஞானியும் கேவலனும் திரும்பிவருவதில்லை என்றும் ஐஸ்வர்யத்தைப்பெறுபவன் மறுபடிபிறக்கிறான் என்றும் சொல்லுகிறார்].

15. மா முபேத்ய புநர்ஜந்ம து:காலய மஶாஶ்வதம்
நாப்நுவந்தி மஹாத்மாந: ஸம்ஸித்திம் பரமங்கதா:

“ என்னை அடைந்ததற்பின் எஞ்சாத்துயர் விளைக்கும்
மின்னைநிகர் பிறப்பு மேவலுறார்—அன்ன
பெரு மனத்தராய்ப் பிறங்கும் பேரின்பமன்னும்
திரு மனத்தரானார் சிறந்து.” (ப. கீ. வெ. 14).

16. ஆப்ரஹ்மபவநா ல்லோகா: புநராவர்த்தி நோர்ஜுந !
மா முபேத்யது கௌந்தேய ! புநர்ஜந்ம ந வித்யதே.

“ வேதா உலகளவு மீண்டுவரு முலகென்(று)
ஓதா நின்றார்கள் உணர்வுடையோர்—போதார்ந்த
தாராருங் கௌந்தேயா என்னடைந்தார் தாமீண்டு
வாரார் மறுபிறப்பின் வாய்.” (ப. கீ. வெ. 17).

[வேதா - பிரமன் ; போதார்ந்த - போது + ஆர்ந்த - மலர்நிறைந்த].

17. ஸஹஸ்ரயுகபர்யந்தம் அஹர்யத்ப்ரஹ்மணோ விது:
ராத்ரிம் யுகஸஹஸ்ராந்தாம் தேஹோராத்ரவிதோ ஜநா:

“ ஆயிரமேலுகங்கள் ஆங்கு அயனுக்கு ஓர்பகலாம்
ஆயிர மாமிரவு மற்றதுவென்—றோயும்
பகலிரவு தானறியும் பண்புடையார் இன்னே
நிகரறிவு தாஞ்செய்வர் நின்று.” (ப. கீ. வெ. 16).

18. அவ்யக்தாத் வ்யக்தயஸ் ஸர்வா: ப்ரபவ ந்த்யஹராகமே
ராத்ர்யாகமே ப்ரலீயந்தே தத்ரைவாவ்யக்த ஸம்ஜ்ஞிகே.

“ தோன்றா வயனுடம்பில் தோன்றும் பொருள்எல்லாம்
என்னும் பகலின் இடையுதிக்கும்—ஆன்றோர்தேங்(கு)
ஆகுமவை எல்லாம் அவ்வுருவுள்ளே யடங்கிப்
போகும் இரவாகும் போது.” (ப. கீ. வெ. 17).

19. பூதக்ராமஸ் ஸ ஏவாயம் பூத்வா பூத்வா ப்ரலீயதே
ராத்ர்யாகமேவஶ: பார்த்த ! ப்ரபவ த்யஹராகமே.

பார்த்த ! அதேபிராணிவர்க்கம் கர்மவசமாய் பிறந்து பிறந்து லயம்அடைகிறது ; இரவுவரும்பொழுது லயம்அடைகிறது ; பகல் ஆரம்பத்தில் பிறக்கின்றது.

அவ [பின்பு கைவல்யத்தை அடைந்தோரும் திரும்புவதில்லை என்கிறார்].

20. பரஸ்தஸ்மாத்து பாவோந்யோ வ்யக்தோவ்யக்தாத் ஸநாதந:
ய ஸ்ஸஸர்வேஷு பூதேஷு நஶ்யத்ஸு ந விநஶ்யதி.

அந்த பிரகிருதியினும் மேற்பட்டதாய், வேறுபட்டதும், இந்திரியங்கட்குப் புலப்படாததும், நித்தியமானதுமாகிய எப்பொருள் உளதோ அப்பொருள், மற்றுஎல்லாப்பொருளும் இறுதியுற்று நில்லாக்காலத்தும் நிற்குமதாம்.

21. அவ்யக்தோக்ஷர இத்யுக்த: தமாஹு: பரமாங்கதிம்
யம் ப்ராப்ய ந நிவர்த்தந்தே தத்தாம பரமம் மம.

இந்திரியங்கட்குப் புலப்படாதது அழிவற்றது என்றும் சொல்லப்பட்ட அந்தஆத்மாவே மேலானகதிஎன்று சொல்லுவர்; எந்த ஜீவாத்மாவை அடைந்து திரும்புவதில்லையோ அந்த ஜீவாத்மஸ்வரூபமானது எனக்குமேலான நியமிக்கும் இடம்.

அவ [ஞானி அடையும் பலன் முன்சொன்ன ஜீவனைக்காட்டிலும்
மிகஉயர்ந்தது என்கிறார்].

22. புருஷஸ் ஸபர: பார்த்த! பக்த்யா லப்ய ஸ்த்வநந்யயா
யஸ்யாந்தஸ்த்தாநி பூதாநி யேந ஸர்வமிதந் ததம்.

“ தன்னகத்துப் பூதங்கள் எல்லாம் தகஇருத்தி
அன்னவற்றில் தான்பரந்தே ஆங்கமைந்து—மன்னியசீர்
அந்தப் பரம்புருடன் அன்பால் அனன்னியமாம்
சிந்தைக்கு உறஎளியன் சேர்ந்து.” (ப. கீ. வெ. 21).

[அன்னியமாம் சிந்தை - வேறுபற்றில்லாத பக்தி].

அவ [பிறகு ஆத்மாவின்உண்மையை உணர்ந்தவனும் பகவத்தியானம் செய்யும் ஞானியும் செல்லும் அந்த அர்ச்சிராதிகதியைச் செல்லுகிறார்].

23. யத்ரகாலே த்வநாவ்ருத்திம் ஆவ்ருத்திஞ்சைவ யோகிந:
ப்ரயாதா யாந்தி தம் காலம் வக்ஷ்யாமி பரதர்ஷப!

24. அக்நிர் ஜ்யோதி ரஹஸ் ஶுக்ல: ஷண்மாஸா உத்தராயணம்
தத்ர ப்யாதா கச்சந்தி ப்ரஹ்ம ப்ரஹ்மவிதோ ஜநா:

பரதர்ஷப! எந்தமார்க்கத்தில்சென்ற யோகிகள் திரும்பிவருதலும் வராததும் உண்டோ அந்தமார்க்கத்தை உரைப்பேன்; * தீ என்னும்சோதியும், பகலும், சுக்கிலபக்ஷமும், ஆறுமாதங்கள் கொண்ட உத்திராயணமும் ஆகிய அந்தமார்க்கத்தில், சென்ற பிரஹ்மஉபாஸனம்செய்த ஜனங்கள் பிரஹ்மத்தை அடைகிறார்கள்.

25. தூமோ ராத்ரிஸ் ததா க்ருஷ்ண:
 ஷண்மாஸா தக்ஷிணாயநம்
 தத்ர சாந்த்ரமஸம் ஜ்யோதி:
 யோகீ ப்ராப்ய நிவர்த்ததே.

யோகி, புகை, இரவு, கிருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயனத்தின் ஆறுமாதங்கள், இவற்றில்இறப்போர் சந்திரனுடைய சோதியை யடைந்து திரும்பிவிடுகிறான்.

இது தூமாதிமார்க்கம் எனப்படும். இங்கு யோகி - புண்ணியம் புரிந்தோன்.

26. ஶுக்லக்ருஷ்ணே கதீ ஹ்யேதே ஜகதஸ் ஶாஸ்வதே மதே
 ஏகயா யா த்யநாவ்ருத்திம் அந்யயா வர்த்ததே புந:

இந்த சுக்ல, கிருஷ்ண மார்க்கங்கள் இரண்டும் உலகிலுள்ள ஜனங்கட்கு நித்தியமானவை என்று எண்ணப்பட்டவை; இவற்றுள் ஒருவழியால் சென்றவன் மீளாப்பதம்பெறுவன்; மற்றொருவழியிற் சென்றவன் மீண்டுவருவான்.

27. நைதே ஸ்ருதீ பார்த்த ஜாநந்
 யோகீ முஹ்யதி கஶ்சந
 தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு
 யோகயுக்தோ பவார்ஜுந!

"இவ்வழிகள் தானறிந்த யோகியவன் பார்த்தனே!
எவ்வழியும் மோகத்திடை யணையான்—அவ்வழியால்
கால மனைத்திலும்நீ காதலால் யோகத்தை
ஏல முயல்கண்டாய் இங்கு." (ப. கீ. வெ. 26).

---

* "சண்ட மண்டலத்தினூடு சென்று வீடுபெற்றுமேல்
கண்டு வீடிலாதகாத லின்ப நாளு மெய்தவீர்
புண்டரீக பாதபுண்ய கீர்த்திநுஞ்செவிமடுத்
துண்டுநும் முறுவினைத்துயருள் நீங்கியுய்மினோ."
(திருச்சந்தவிருத்தம் 67).

அவ [இந்த இரண்டுஅத்தியாயப்பொருளை அறிந்தோர் பெறும்பேற்றைப் பேசுகிறார்].

28. வேதேஷு யஜ்ஞேஷு தப்ஸ்ஸுசைவ
தாநேஷு யத்புண்யபலம் ப்ரதிஷ்டம்
அத்யேதி த தஸர்வமிதம் விதித்வா
யோகீ பரம்ஸ்தாந முபைதி சாத்யம்.

"வேதத்தில் வேள்வியினின் மெய்த்தவத்தில் தானத்தில்
ஓதப் பயனதனை யுற்றொழிந்து—மீதுபோய்
இந்த அறிவுஅமரும் யோகிதான் மேல்முதலாம்
அந்த நிலம்அடையும் அங்கு." (ப. கீ. வெ. 27).

எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ :

ஒன்பதாவது அத்தியாயம்

ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம்.

"உன்னப் படும்பரம ஞெண்சீர் மருவுயர்த்தி
மன்னப் பயில்ஞான வாசிதான்—தன்னமர்ந்து
நின்றியலும் பத்தி நிகழ்ந்துரைத்த நற்கீதை
ஒன்றிய சீரொன்பதா மோத்து."

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீகிருஷ்ணபகவான் விளம்புவான்.

1. இதந்து தே குஹ்யதமம்
ப்ரவக்ஷ்யா மநஸூயவே
ஜ்ஞாநவிஜ்ஞாநஸஹிதம்
யத்ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸேஶுபாத்.

* எதைஉணர்ந்தால் அசுபங்களான கர்மங்களினின்று விடுபட்டு வீடுபெறுவாயோ, அத்தகைய பரம ரஹஸ்யமான ஞானத்தை விஜ்ஞானத்துடன் அசூயையில்லாத உனக்குச்சொல்லுகிறேன்.

அசூயை இல்லாமை - இறைவன் தன்பெருமைகளை அடுத்தடுத்துக்கூறவும் அவனிடம் பொறாமைகொள்ளாதிருத்தல்.

2. ராஜவித்யா ராஜகுஹ்யம்
பவித்ர மித முத்தமம்
ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம்
ஸுஸுகம் கர்த்து மவ்யயம்.

இது ராஜவித்தை; ராஜரகஸ்யம்; மிகச்சிறந்த தூய்மைதரவல்லது; கண்ணிலக்காய் காட்டக்கூடியது; தருமநெறியினின்று விலகாதது; இயற்றுதற்கு மிகஎளியது; அழிவில்லாதது.

மக்களுட்சிறந்த அரசன்போல் இது வித்தைகளுட்சிறந்தது; அன்றி அரசரது வித்தை என்னவுமாம்—அரசர் அகன்று ஆழ்ந்த உள்ளமுடையோராதலின்; எனவே இத்தகையஉள்ளமுடைய மற்றவர்க்கும் உரியதுஎன்க. 'ப்ரத்யக்ஷாவகமம்' என்றது தியா

---

* "தானேயாகி நிறைந்தெல்லா வுலகுமுயிருந் தானேயாய்த்
தானே யானென்பானாகித் தன்னைத்தானே துதித்தெனக்குத்
தேனே பாலே கன்னலே அமுதே திருமாலிருஞ்சோலைக்
கோனேயாகி நின்றொழிந்தான் என்னைமுற்றும் உயிருண்டே."

(திருவாய்மொழி X-7-2).

னம்செய்பவனுக்கு கண்ணால் காணப்படுவதுபோல் இறைவன் தோன்றுகை.

தர்மம்என்பது நன்மைக்குக்காரணமாவது; எனவே மேலான நன்மையாகும் இறைவனையே அடைவதற்குக் காரணமாவது என்றபடி. செய்தபிறகு விளையும் இன்பமன்றி செய்யும்போதே இனிமையாயிருப்பதால் 'ஸு ஸுகம்' எனப்பட்டது. அழிவில்லாதது என்றது பகவானைஅடைவதாகிய பயனைத்தந்தபிறகும் தான் நசிக்காதிருப்பது;

3. அஶ்ரத்ததாநா: புருஷா தர்மஸ்யாஸ்ய பரந்தப!
அப்ராப்ய மாம் நிவர்த்தந்தே ம்ருத்யுஸம்ஸாரவர்த்மநி.

பரந்தப! இத்தருமத்தை நம்பாதபுருஷர்கள் என்னைஅடையாமலே கொடுமையில் கூற்றுவன்போன்ற ஸம்ஸாரமார்க்கத்தில் எப்போதும் இருக்கின்றனர்.

அவ [அடையவேண்டியனுகிய எனது எண்ணுதற்கு
அரியபெருமையைக்கேள் என்கிறார்].

4. மயா தத மிதம் ஸர்வம் ஜக தவ்யக்தமூர்த்திநா
மத்ஸ்தாநி ஸர்வபூதாநி நசாஹம் தேஷ்வவஸ்த்தித:

* இவ்வுலகமுழுவதையும் அவ்யக்தவடிவாய் நான் சூழ்ந்துக்கொண்டிருக்கிறேன். என்னிடத்தே எல்லாப்பிராணிகளும் நிலைத்திருக்கின்றன; நான் அந்தப்பிராணிகளில் இருக்கவில்லை.

ஜகத்காரணனுகிய நான் அவைகளுடைய அதீனமான இருப்பை உடையவன் அல்லன்; எனது இருப்புக்கு அவை ஆதாரமல்ல என்றபடி.

5. ந ச மத்ஸ்தாநி பூதாநி பஶ்யமே யோக மைஶ்வரம்
பூதப்ருந்ந ச பூதஸ்த்தோ மமாத்மா பூதபாவந:

எல்லாப்பிராணிகளும் என்னிடம் இருப்பனவல்ல; வேறெங்குமில்லாத எனது ஈசுவரநிலையைப்பார்; எனது சங்கல்பமானது பூதங்களைத் தாங்குகிறது; நியமிக்கிறது. என்றாலும், அவற்றின் ஆதாரத்தின்மீது நான் இருக்கவில்லை.

---

* "பரந்த தண்பரவையுள் நீர்தொறும் பந்துளன்
பரந்த வண்டமிதென நிலவிசும் பொழிவள
கரந்த சிலிடந்தொறும் இடந்திகழ் பொருள்தொறும்
கரந்தெங்கும் பரந்துளன் இவையுண்டகரனே." (திருவாய்மொழி I-1-10).

அவ [இவையாவும் தனக்குவசப்படட இருப்பு, இயக்கங்களை யுடையனஎன்பதற்கு ஓர் எடுத்துக்காட்டைக் காட்டுகிருர்].

6. யதாகாபஸ்த்திதோ நித்யம் வாயுஸ் ஸர்வத்ரகோ மஹாந்
தகா ஸர்வாணி பூதாநி மத்ஸ்தாநீத்யுபதாரய.

* மஹத்தான காற்று எப்படி ஆகாசத்தில் ஸ்தாபிதமாயிருந்துகொண்டு எங்கும் ஸஞ்சரிக்கின்றதோ, அப்படியே எல்லா பிராணிகளும் என்னிடத்திலிருக்கின்றன என்று நீ தெரிந்துகொள்.

அவ [எல்லாப்பொருள்களின் இருப்பும் இயக்கமுமேயன்றி தோற்றமும் ஒடுக்கமும் பகவத்ஸங்கல்பத்தினலேயே என்று கூறுகிருர்].

7. ஸர்வபூதாநி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம்
கல்பக்ஷயே புநஸ்தாநி கல்பாதௌ விஸ்ருஜா ம்யஹம்.

கௌந்தேய! எல்லாப்பிராணிகளும் கல்பமுடிவில் எனது மூலப்பிரகிருதியை அடைகின்றன; கல்பத்தின் ஆரம்பந்தோறும் அவைகளை மீண்டும் மீண்டும் நானே பல்வேறுவகைகளாயப் படைக்கிறேன்.

8. ப்ரக்ருதிம் ஸ்வா மவஷ்டப்ய விஸ்ருஜாமி புந: புந:
பூதக்ராம மிதம் க்ருத்ஸ்நம் அவபம் ப்ரக்ருதேர்வபாத்.

எனது பிரகிருதியை ஆதாரமாக்கி, அப்பிரகிருதி வசப்பட்டுத் தன்செயல்அற்றிருக்கும் இந்தப்பிராணி சமூஹம் அனைத்தையும் நான்மீண்டும் மீண்டும் படைக்கிறேன்.

"பூமி ராபோ" என்று கிழே எட்டுவகையாகத் தனதுபிரகிருதியைப் பேசியிருக்கிருர். பிரகிருதியின் இயற்கையே கணம்தோறும் விசித்ரமான மாறுதல்களை அடைவது. பிராணிகள் தன்வசமிழந்து பிரகிருதிஇட்டவழக்காயிருப்பவை. பெயர், வடிவம், இடம், காலம், அநுபவம் ஆகியவற்றைஉடைய வியஷ்டி ஸமஷ்டிஎன்னும் படைப்புமுறை இரண்டில் தேவ மணித நால்வகைப்பிறப்பை விசித்திரமாக மீண்டும் மீண்டும் உண்டாக்குகிறேன் என்றபடி.

9. ந ச மாந் தாநி கர்மாணி நிபத்நந்தி தநஞ்ஜய!
உதாஸீநவத் ஆஸீநம் அஸக்தம் தேஷு கர்மஸு.

தனஞ்சய! ஒன்ருேடும்சேராமல் உதாஸீனன்போல் இருப்பவனும் அந்தகருமங்களில் பற்றில்லாதவனுமான என்னை அந்தகருமங்கள் தோஷங்களுக்கு உள்ளாக்கமாட்டா.

பிராணிகளை ஏற்றத்தாழ்வாகப்படைத்தல் முதலியகருமங்கள் எனக்கு தயையின்மை ஒருதலைச்சார்பு முதலியகுற்றங்களை உண்டாக்கமாட்டா; ஏனெனில் வேறுபாடு பிராணிகள் இயற்றிய பண்டைப் பழவினையின்பயனேயாதலின்.

---

* மனுஸ்ம்ருதி, I-8 காண்க.

10. மயாத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம்
ஹேதுநாநேந கௌந்தேய! ஜகத் விபரிவர்த்ததே.

எனது மேற்பார்வையில் பிரகிருதி இயங்குதிணை நிலைத்திணைப் பொருள்களுடன்கூடிய இவ்வுலகை யுண்டாக்குகின்றது. இக்காரணத்தாலேதான் உலகம் மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றது.

ஆக, தான் யஜமானன், ஸத்யசங்கல்பன், தயைஇல்லாமை முதலிய குற்றமற்றவன், வஸுதேவருக்கு மகனுய் அவதரித்தவன் என்னும் வேறொருவர்க்குமின்றித் தனக்கே உரித்தாயிருக்கும் தன்தன்மைகளைப்பார் என்கிறார்.

11. அவஜாநந்தி மாம் மூடா: மாநுஷீம் தநு மாஶ்ரிதம்
பரம் பாவ மஜாநந்தோ மம பூதமஹேஶ்வரம்.

“ எந்தவுல குக்கும் இறையாகும் என்பெருமை
சந்தமதில் நின்றுணர்வு சாரா தார்—மந்தராய்
மானிடமாம் இவ்வுடலில் வந்துதித்த என்னையது
தானிடமா நின்றிகழ்வர் தாம்.” (ப. கீ. வெ. 11).

[எந்தவுலகுக்கும் இறை - பூத மஹேஸ்வரம்;] யாவரும் தன்னைப்பற்றிக் கடைத்தேறும்வண்ணம் கருணையும் அன்பும்மேலிட்டு இம்மனிதப்பிறவியைத் தான் தன்இச்சையால் ஏற்றருள்கிறார்; இதனைக்கருமவசத்தால் அறிவிழந்து தெளியமாட்டாத ஜீவர்கள் தங்களைப்போன்ற பிறவியுடையன்என்று எண்ணி இகழ்கின்றனர். இங்கு மனுஷ்யத்வே பரத்வம் விவேகிகட்குப்புலனும்.

12. மோகாஶா மோககர்மாணோ மோகஜ்ஞாநா விசேதஸ:
ராக்ஷஸீ மாஸுரீஞ் சைவ ப்ரக்ருதிம் மோஹிநீம் ஶ்ரிதா:

“ பழுதான ஆசை பழுதான கன்மம்
பழுதான ஞானம் படைத்தார்—பழுதான
நெஞ்சின ராய்மோகமுறு நேரசுரராக் கதமாம்
வஞ்சத் தகப்படுவர் வந்து.” (ப. கீ. வெ. 12).

கல், முள், புழுதி முதலியன வுள்ளவிடங்களென்று பாராமலே தண்டாகாரமாய் என்னை நமஸ்காரம்செய்கின்றவர்களாய் என்னையே யடையவேண்டுமென்கிற எண்ணத்தோடு எப்பொழுதும்கூடித் தம்மையும் தம்மைச்சார்ந்த சகலவஸ்துக்களையும் பரமாத்மாவிற்கு அர்ப்பிதம் செய்கின்றோம் என்னும் நிச்சயமுமுடையராய் என்னையே உபாசிக்கின்றார்கள்.

13. மஹாத்மாநஸ்து மாம் பார்த்த! தைவீம் ப்ரக்ருதி மாஶ்ரிதா:
பஜந்த்யநந்யமனஸோ ஜ்ஞாத்வா பூதாதி மவ்யயம்.

பார்த்த! தேவரியல்பாகும் ஸத்வகுணம் ஸம்பந்நமான மஹாத்மாக்களோ எல்லாப்பிராணிகட்கும் காரணனும் அழிவற்றவனுமான

என்னை அறிந்து வேறொன்றிலும் மனத்தைச்செலுத்தாமல் பக்தி செய்கின்றனர்.

இந்த மஹாத்மாக்கள் எம்பிரானைப் பக்திசெய்யாவிடில் ஒருகணப்பொழுதேனும் தரிக்கமாட்டாதவர்கள். 'ஜநாஸ்ஸுக்ருதிந:', 'மாமேவ யேப்ரபத்யந்தே' என்று முன்னேகூறியுள்ளவற்றை நினைவூட்டுகிறார்.

14. ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தஶ்ச த்ருடவ்ரதா:
நமஸ்யந்த்யஶ்ச மாம்பக்த்யா நித்யயுக்தா உபாஸதே.

"எந்நாளும் என்னைத் துதித்தே இயற்றியுடன்
மெய்ந்நா மனத்தால் மிகப்பணிந்து—தன்னார்ந்த
பத்தியுடன் என்னைப்பயிலுறுவார் தாமென்றும்
சித்தியினைச் சேர்ந்தார் செறிந்து." (ப. கீ. வெ. 14).

எப்பொழுதும் என் குணவிசேஷங்களை விளக்கும் எனது நாமங்களை நினைத்த மாத்திரத்திலே புளகாங்கிதமும் தழுதழுத்தவாக்குமுடையோராய் நாராயண, வாஸுதேவ, கிருஷ்ணநாமங்களை உச்சரிக்கின்றவர்களாய், எனது ஆராதனங்களிலும், ஆராதனத்திற்குபயோகமாகக் கோயிலெடுத்தல், நந்தவனம்வைத்தல் முதலிய கைங்கர்யங்களில் திடமுயற்சியுடையோர்களாய், பக்திமேலீட்டால் சாந்தமடைந்த மனம், புத்தி, அகங்காரம், கால்கள், கைகள், சிரசு ஆகிய எட்டு அங்கங்களால் புழுதி, சேறு, பரல்கற்கள் என்றுபாராமல் புவியில் தண்டம்போல்விழுந்து வணங்குகின்றராய் நித்யகைங்கர்யத்தைக்கருதியே உபாஸனம் செய்பவர்.

15. ஜ்ஞாநயஜ்ஞேந சாப்யந்யே யஜந்தோ மா முபாஸதே
ஏகத்வேந ப்ருதக்த்வேந பஹுதா விஶ்வதோமுகம்.

"வேறுசிலர் ஞானமெனும் வேள்வியால் மெய்த்தன்மை
தேறியெனை யேமருவிச் சேவிப்பர்—கூறுபடும்
பல்வகை யாலெங்கும் பரந்தவெனை யேகமா
நல்வகையால் என்னை நயந்து." (ப. கீ. வெ. 15).

ஒன்றாகவும் பலவாகவும் இறைவனை அறிதல் எவ்வாறெனின், பகவானாகிய வாசுதேவன், நாமரூபங்கள் அற்றிருந்த ஸூக்ஷ்ம சித்து, அசித்துக்களைச் சரீரமாக வுடையனாயிருந்து ஒருவனாகவும், அவ்வாசுதேவனே, ஸ்தூல சித்து, அசித்துக்களின் தேகியாகத் தானாகவேண்டுமென்று சங்கற்பித்தமாத்திரத்தில் தேவமானிடாதி வெவ்வேறு விசித்திரமான வஸ்துக்களைச் சரீரமாகவுடையனாய்ப் பலவாயுமிருக்கிறான் அப்பரமனொருவனேஎன்று அநுஸந்தானம்செய்து உபாசிக்கின்றனர் என்றபடி.

அவ [அவ்வாறே நான் இந்தஜகத்தையே சரீரமாகஉடையவன் என்கிறார்].

16. அஹங் க்ரது ரஹம் யஜ்ஞ: ஸ்வதாஹ மஹ மௌஷதம்
மந்த்ரோஹ மஹ வேவாஜ்யம் அஹம் அக்நி ரஹம் ஹுதம்,

யாகம் நான்; மஹாயஜ்யம் நான்; ஸ்வதாஎன்னும் மந்திரம் நான்; செடிகொடிகளினின்று உண்டாகும் ஹவிஸ்ஸூம் நானே; மந்திரம் நான்; நெய்யும் நான்; அக்கினி நான்; ஹோமமும் நானே.

இங்கு யாகம் - ஜ்யோதிஷ்டோமாதிகள்; மஹாயஜ்யங்கள் - பிரஹ்ம, தேவ, பித்ரு, மனுஷ்ய, பூதயஜ்ஞங்கள் ஐந்தும். பித்ருக்களின்வர்க்கத்திற்குத் திருப்தி யுண்டாக்கும் மந்திரம் ஸ்வதாஎன்பது.

நெய் என்றது உபலக்ஷணத்தால் மற்றபொருள்களையுங்குறிக்கும். அக்கினி என்றது ஆஹவநீயம் முதலியவற்றை.

17. பிதாஹ மஸ்ய ஜகதோ மாதா தாதா பிதாமஹ:
வேத்யம் பவித்ரம் ஓங்கார: ருக்ஸாம யஜு ரேவச.

இவ்வுலகற்கு அப்பனும், அன்னையும், உற்பத்திக்குத் துணைக் காரணமும், பாட்டனும், பரிசுத்தியை யளிக்கவல்ல அறியும்பொருளும், பிரணவமும், ருக், ஸாம, யஜுர் வேதங்களும் யானே.

இங்கு பகவானே நேரில் பிதா என்பதில்லை; உலகில்காணப்படும் பிதா தன்னை அந்தரியாமியாக உடையவன் என்றே பொருள்.

பிரணவம் என்றது வேதத்திற்கு காரணமானது.

18. கதிர் பர்த்தா ப்ரபுஸ் ஸாக்ஷீ நிவாஸ ஶரணம் ஸுஹ்ருத்
ப்ரபவ: ப்ரளயஸ்தாநம் நிதாநம் பீஜ மவ்யயம்.

ஆசிரயிக்கவேண்டும் இடம், தரிப்பவன், நியமனம்செய்பவன், அனைத்தையும் நேராகப்பார்ப்பவன், வாசத்தலம், ரக்ஷகன், நன்மையை விரும்புகிறவன், தோற்ற ஒடுக்கமுள்ள இடம், தோற்ற ஒடுக்கம்பெறும்பொருள்கள், அழிவில்லா வித்தும் எல்லாம்நானே.

19. தபாம்யஹ மஹம்வர்ஷம் நிக்ருஹ்ணாம்யுத் ஸ்ருஜாம்யஹம்
அம்ருதஞ்சைவ ம்ருத்யுஶ்ச ஸதஸச்சாஹ மர்ஜுந.

அருச்சுன! நானே அக்கினி, சூர்யாதிதேஜஸ்ரூபமாய் வெப்பம் உண்டாகும்படிச்செய்கிறேன்; மழையை நிறுத்தவும் பெய்யவும் செய்பவன் நானே; உயிருடன் வாழ்வதற்கும், இறப்பதற்கும் காரணம் நானே; * இருக்கும்பொருளும் இல்லாப்பொருளும் நானே.

1. * "உளனெனில் உளன் அவன்உருவம் இவ்வுருவுகள்
உளனலனெனில் அவனருவமிவ் வருவுகள்
உளனென இலனென இவைகுண முடைமையின்
உளளிரு தகைமையோடு ஒழிவிலன் பரந்தே." (திருவாய்மொழி, I-1-9).

2. "அன்றே என்னின் அன்றேயாம்
ஆமென் றுரைக்கில் ஆமேயாம்
இன்றே என்னின் இன்றேயாம்
இலதென் றுரைக்கில் இலதேயாம்."

அவ [மஹாத்மாக்களின் பெருமை இங்ஙனேயிருக்க, அவர்கட்கு
எதிர்த்தட்டாய் காம்யபலன்களை விரும்பும் அறிவிலிகளின்
செயல்களை விளக்குகிறார்].

20. த்ரைவித்யாமாம் ஸோமபா: பூதபாபா
யஜ்ஞைரிஷ்ட்வா ஸ்வர்கதிம் ப்ரார்த்தயந்தே
தே புண்யமாஸாத்ய ஸுரேந்த்ரலோகம்
அஶ்நந்தி திவ்யாந் திவிதேவபோகாந்.

“இந்தவினை வேதத்தி யல்கின்றார் எச்சத்தால்
வந்திறைஞ்சித் தம்வினைபோய் வானிரப்பர் அந்தவவர்
சென்றமரர் நாடணைந்து தேவர்தம் போகத்தை
நின்றமர்ந்து துய்ப்பார் நிகழ்ந்து.” (ப. கீ. வெ. 20).

[வேதத்தியல்கின்றார் - மஹாத்மாக்களைப்போல் வேதாந்தநிஷ்டை இல்லாது மூன்று வேதங்களில் மாத்திரம் பயிற்சியுடைய திரைவித்யர்கள்; எச்சத்தால் - யஜ்ஞத்தால்; இறைஞ்சி - வணங்கி; வான் இரப்பர் - ஸ்வர்க்கபோகத்தை யாசிப்பர்].

21. தேதம் புக்த்வா ஸ்வர்க்கலோகம் விஶாலம்
க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விஶந்தி
ஏவம் த்ரயீதர்ம மநுப்ரபந்நா:
கதாகதம் காமகாமா லபந்தே.

“பொன்னகரில் வாழ்வெய்திப் புண்ணியத்தின் தன்குறையைப்
பன்னினவர் இவ்வுலகில் பாடழிந்தே—பின்னடைவர்
காக்குமறைத் தன்மைக்கதி யடைந்தார் காமத்தால்
போக்கு வரத்தேபெறுவர் பூண்டு.” (ப. கீ. வெ. 21).

[பாடு - பெருமை; மறைத்தன்மைக் கதியடைந்தார் - வைதிக தருமவழியில் ஒழுகுபவர்.]

அவ [மஹாத்மாக்களோ எல்லையற்றஅன்புடன் எல்லைகடந்த
மேன்மையையுடைய என்னை தியானித்து ஆனந்தமயனை
என்னையடைந்து திரும்பிவருவதில்லை என்கிறார்].

22. அநந்யாஶ்சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே
தேஷாம் நித்யாபியுக்தாநாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்.

“வேறின்றி என்னையெவர் மெய்ந்நினைந்து சேவிப்பார்
பேறென்றி யென்றும் பிரியாதே—தேறுமவர்
தம்பேறு யோகம்இது பிரியாச்சேம நான்
வன்பேறச் செய்வன் மகிழ்ந்து.” (ப. கீ. வெ. 22).

[வேறின்றி - என்னையடைவதையன்றி வேறுபயனை விரும்பாமல்; யோகம் - என்னையடைவது; சேமம் - க்ஷேமம், மீண்டும் திரும்பிவராதிருத்தல்.]

23. யேப்யந்ய தேவதா பக்த்தா: யஜந்த்தே ஶ்ரத்தயாந்விதா:
தேபிமாமேவ கௌந்தேய! யஜந்த்யவிதி பூர்வகம்.

கௌந்தேய! * இதர தேவதைகளிடத்திலே பக்தியுள்ளாராய் சிரத்தையுடன் பூசிப்பவர்கள் எவர்களோ, அவர்களும் என்னையே பூசித்தோராவர்; ஆயினும் அது விதியையொட்டியதன்று; அவர்கள் வேதாந்தத்தின் தேர்ந்தபொருளை யறிந்திலர்.

24. அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தாச ப்ரபுரேவச
நதுமா மபிஜாநந்தி தத்வேநா தஶ்ச்யவந்திதே.

யஜ்ஞங்கள் அனைத்திலும் ஆராதிக்கப்படுகின்றவனும், பலத்தைக்கொடுக்கும் பிரபுவும் நானேயன்றோ! காம்யநிஷ்டர்களே என்னை இவ்விதமாக உண்மையாய் அறியாமல் தங்களிடங்களிலிருந்து நழுவுகின்றனர்.

25. யாந்தி தேவ வ்ரதா தேவாந் பித்ருந் யாந்தி பித்ரு வ்ரதா:
பூதாநி யாந்தி பூதேஜ்யா: யாந்தி மத்யாஜிநோபி மாம்.

தேவர்களை ஆராதனம்செய்கிறோம் என்னும் ஸங்கல்பமுடையோர் தேவர்களையே யடைகின்றனர்; பித்ருதேவதைகளை ஆராதனம்செய்கிறோம் என்னும் ஸங்கல்பமுடையோர் பித்ருதேவதைகளையே யடைகின்றனர்; யக்ஷர் ராக்ஷஸர், பிசாசங்களைக்குறித்து யாகம்செய்கிறோம் என்னும் ஸங்கல்பமுடையோர் அவைகளையே அடைகின்றனர்; அந்த யஞ்யங்களினாலேயே தேவ, பித்ரு, பூதங்களைச் சரீரமாகவுடையவனும், பரமாத்மனும், பகவானுமாகிய வாஸுதேவனை ஆராதனம்செய்கிறோம் என்றுஎண்ணி என்னையே ஆராதனம் செய்கிறார்களோ என்னையே அடைகின்றனர்.

அவ [என்னை ஆராதிப்பவர்களுக்கு ஒரு விசேஷமிருக்கிறது என்கிறார்].

26. பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோமே பக்த்யா ப்ரயச்சதி
த்தஹம் பக்த்யுபஹ்ருதம் அஶ்நாமி ப்ரயதாத்மந:

---

* "நம் இன்கவிகொண்டு நம்இட்டா
தெய்வ மேத்தினால், செம்மின்சுடர்
முடி என்திருமாலுக்குச் சேருமே." (திருவாய்மொழி, II-9-6).

* "பத்திரமும் பூவும் பழமும் புனலுமெனக்(கு)
ஒத்தியலும் பத்தி யுடனுதவி—சுத்திய
தூமனத்தான் தந்ததனைத் துய்ப்பனவன் அப்பத்தி
ஆமனத்ததென்று நான் ஆர்ந்து." (ப. கீ. வெ. 26).

[பத்திரம் - இலை, எளிதில்கிடைக்கும் திருத்துழாய்முதலியன; தூமனத்தான் - மாசற்ற மனமுடையான்; ஆர்ந்து - விருப்பங்கொண்டு] அலுத்துத்தா பொரித்துத்தா என்னும் இதரதேவதைகள் போலல்லாமல் இறைவனை ஆராதனம்செய்தல் மிகஎளிது என்றபடி. திரௌபதியின் அன்னபூர்ணபாத்திரத்தில் ஒட்டிக்கிடந்த கீரையைப்புசித்துத் திருப்தியடைந்தான் ஸ்ரீகிருஷ்ணன். பூவிட்டுத்தொழுது பயன் பெற்றவர் கஜேந்திரன்; பழம்தந்து வீடுபெற்றவள் சபரி, நீர்தந்து பேறுபெற்றவர் ரந்திதேவர்.

27. யத்கரோஷி யதஶ்னாஸி யஜ்ஜுஹோஷி ததாஸியத்
யத்தபஸ்யஸி கௌந்தேய! தத்குருஷ்வ மதர்ப்பணம்.

கௌந்தேய! நீ செய்வது, உண்பது, ஹோமம்செய்வது, தானம்பண்ணுவது, தவம்புரிவது, ஆகிய இவற்றையெல்லாம் எனக்கு அர்ப்பணமாகச்செய்.

28. ஶுபா ஶுப பலைரேவம்
மோக்ஷ்யஸே கர்ம பந்தனை:
ஸந்ந்யாஸயோக யுக்தாத்மா
விமுக்தோமாம் உபைஷ்யஸி.

671

இங்ஙனம் ஸந்யாஸயோகத்தில் உறுதியாக நிலைத்தமனமுடையவனாய் சுபம் அசுபம் என்னும் பலன்களையுடைய பழவினைகளாகிய கட்டுகளினின்றும் விடப்பட்டவனாவாய்; அங்ஙனம் விடப்பட்ட பின்பு என்னை ஆசிரயிப்பாய்.

அவ [இவ்வுலகில் காணப்படாத மிகவும்மேலான எனது இயல்பைப்பார் என்கிறார்].

29. ஸமோஹம் ஸர்வபூதேஷு நமே த்வேஷ்யோஸ்தி நப்ரிய:
யே பஜந்தி து மாம் பக்த்யா மயி தே தேஷு சாப்யஹம்.

---

1. * "பரிவதி லீசனைப் பாடி
விரிவது மேவலுறு வீர்
பிரிவகை யின்றி நன்னீர் தூய்
புரிவதுவும் புகை பூவே." (திருவாய்மொழி, I-6-1).

2. "ஆராலும் அளவிடுதற் கரியவனை ஒருகரத்து
நீராலும் மலராலும் நெஞ்சுருகப் பணலாமே.

R66,6
N43

நான் மிக்க ஏற்றத்தாழ்வுடன் காணப்படும் எல்லாப்பிராணிக ளிடத்தும் வேறுபாடு பாராட்டாதவன் ; எனக்குப் பகைவனுமில்லை ; நண்பனுமில்லை ; உண்மையாக என்னை பக்தியுடன் யார் உபாஸனம் செய்கிறார்களோ அவர்கள் என்னிடத்திலே இருக்கின்றனர் ; நானும் அவர்களிடத்திலுள்ளேன். அதாவது என்னைவிடஉயர்ந்தவர் இருந் தால் அவர்களிடம் எப்படி இருப்பேனோ அப்படியிருக்கிறேன்.

அவ [அன்றியும்,]

30. அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மா மநந்யபாக்
ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்ய க்வ்யவ ஸிதோஹி ஸ:

வேறொருபயனையும் கருதாமல் என்னைபஜிக்கிறவன் மிகவும் கெட்ட ஒழுக்கமுடையனாயினும், அவனை ஸாதுஎன்றே எண்ணல் வேண்டும் ; ஏனெனில் அவன் சிறந்த மன்உறுதிப்பாடுடைய னன்றோ ?

31. க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா ஶஶ்வச்சாந்திம் நிகச்சதி
கௌந்தேய ப்ரதிஜாநீஹி நமே பக்த: ப்ரணஶ்யதி.

கௌந்தேய! அத்தகையோன் வெகுவிரைவில் பக்தியோகத்தி லேயே மனமுடையனாகிறான் ; எப்போதும் சாந்தியைஎய்துகிறான் ; என்னுடைய பக்தன் நாசமடைவதில்லை என்று நீயே பிரதிக்ஞை செய்யலாமே.

32. மாம் ஹி பார்த்த வ்யபாஶ்ரித்ய
யேபிஸ்யு: பாப யோநய:
ஸ்த்ரீயோவைஶ்யா: ததாஸூத்ரா:
தேபியாந்தி பராங்கதிம்.

“ பார்த்தனைப் பற்றினால் பாவம்பயில் பிறவிச்
சோர்த்தபெண் வைச்சியரும் சூத்திரரும்—பேர்த்து
வினையடையார் வீடெய்தி மேற்கதியாம் இன்பம்
தனையடைவர் சென்று தழைத்து.” (ப. கீ. வெ. 32).

33. கிம் புநர் ப்ராஹ்மணா: புண்யா: பக்தா ராஜர்ஷய ஸ்ததா
அநித்ய மஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்.

“ ஆனதபுண்ணியத்தர் அன்பராம் அந்தணர்கள்
ஞானதிக அரசர் நண்ணெளிது—தானமால்
மாயும் இத்துன்புலகை மன்னியநீ என்னையடைந்(து)
ஆயுமித் தன்மையறி யாங்கு.” (ப. கீ. வெ. 33).

அவ [பக்தியின் ஸ்வரூபத்தை விளக்குகிறுர்].

34. மந்மநா பவ மத்பக்த:
மத்யாஜீ மாம் நமஸ்குரு
மாமே வைஷ்யஸி யுக்த்வைவம்
ஆத்மாநம் மத்பராயணம்.

"என் நலம்செய்து என்மனனுய் என்னை இறைஞ்சு என்னை [வணங்(கு)
என் நலம்சேர்ந்துன்னை எழில்யோகத்தின்—மன்னவமைத்(து)
என்பற்றே நீபயனு எய்ந்தநீ என்னையே
வன்பற்ருய் வந்தடைதி வாய்ந்து." (ப. கீ. வெ. 34).

ஒன்பதாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ:

பத்தாவது அத்தியாயம்

விபூதியோகம்.

அவதாரிகை.

கீழே அங்கங்களுடன் பக்தியோகம் விளக்கப்பட்டது. மேல் பக்தி உண்டாகவும், அதுவளரவும் பகவானுடைய அறச்சிறந்த மகிமை உரைக்கப்படுகின்றது. அதில், பகவான் எல்லாஉலகங்களையும் எவ்விதத்தடங்களும் இன்றி அடக்கிஆளும் திறமையுடையன் என்றும், கணக்கற்ற கல்யாணகுணங்களையுடையவன் என்றும், எல்லாஉலகங்களும் அவனுக்குச்சரீரமாதலின் அவை அவனையே ஆத்மாவாக உடையனஎன்றும், ஆதலின் பகவான் எல்லாவற்றை தன்இச்சைப்படி ஏவும்சக்தியுடையவன் என்றும் வெகுவிரிவாய்க் கூறப்படுகின்றது.

" அண்ணல் உலகின் அனைத்துந் தானாய்நின்ற
வண்ணம் விரித்துரைத்த வண்மையினைத்—திண்ணமாங்(கு)
அன்புறவே யோங்க அருள்கீதை பத்தாமோத்(து)
இன்புறவே ஓதும் எடுத்து." (ப. கீ. வெ).

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ கிருஷ்ணபகவான் பணிப்பான்.

1. பூய ஏவ மஹாபாஹோ ! ஶ்ருணு மே பரமம் வச:
யத்தேஹம் ப்ரீயமாணாய வக்ஷ்யாமி ஹிதகாம்யயா.

மஹாபாஹோ ! என் மஹிமையைக்கேட்டு அன்புபூண்டிருக்கும் உனது நன்மையைநாடி இன்னும் ஓர்முறை நான்சொல்லும் சீரிய சொற்களைக் கேட்பாயாக.

2. ந மே விதுஸ் ஸுரகணா: ப்ரபவம் ந மஹர்ஷய:
அஹமாதிர்ஹி தேவாநாம் மஹர்ஷீணாஞ் ச ஸர்வஶ:

என்பிரபாவத்தை தேவர்கூட்டமும், மஹரிஷிகளும் அறியார் ; தேவர்கட்கும், மஹரிஷிகட்கும் எல்லாவற்றாலும் நானே காரணன் அன்றோ ?

அவ [இங்ஙனே தேவாதியரும் உணர்தற்கரிய எனது மஹிமையைப்பற்றிய அறிவு, பக்தியின்விளைவைத் தடைசெய்யும் பாபங்களைப் போக்கவல்லது என்கிறார்].

3. யோ மா மஜ மநாதிஞ்ச வேத்தி லோகமஹேஶ்வரம்
அஸம்மூடஸ் ஸமர்த்யேஷு ஸர்வபாபை: ப்ரமுச்யதே.

மயக்கம்தீர்ந்தமானிடன் எவன் என்னைப்பிறப்பிலி, அநாதி என்றும் பலஉலகங்கட்கும் இறைபானூர்க்கும் இறைவன்என்றும் என்னை அறிகின்றானோ, அவன் பாவமனைத்தினின்றும் விடுபட்டவன்.

4. புத்திர்ஜ்ஞாந மஸம்மோஹ: க்ஷமா ஸத்யம் தமஸ்ஸம:
ஸுகம் து:கம் பவோ பாவோ பயஞ்சாபய மேவச.

புத்தி, ஞானம், மோஹமின்மை, பொறை, வாய்மை, அடக்கம், அமைதி, இன்பம், துன்பம், களிப்பு, கவற்சி, அஞ்சுதல், அஞ்சாமை ;

5. அஹிம்ஸா ஸமதா துஷ்டி: தபோ தாநம் யஶோயஶ:
பவந்தி பாவா பூதாநாம் மத்தஏவ ப்ருதக்விதா:

அஹிம்சை, நடுவுநிலை, மகிழ்ச்சி, தவம், கொடை, புகழ்ச்சி, இகழ்ச்சி, என்று பல்வேறுதிறப்பட்ட இயல்புகள் உயிர்கட்கு என்னாலேயே உண்டாகின்றன.

6. மஹர்ஷயஸ் ஸப்த பூர்வே சத்வாரோ மாநவஸ்ததா
மத்பாவா மாநஸா ஜாதா யேஷாம் லோக இமா: ப்ரஜா:

கடந்த மந்வந்தரத்திலே பிரஹ்மாவின் மானஸபுத்திரர்களான பிருகுமுதலான ஏழுமஹரிஷிகளும் அவ்வாறே ஸாவர்ணிமுதலிய நால்வர்மனுக்களும் எனது அபிப்பிராயத்தைத் தழுவியே இந்தவுலகிலுள்ள பிரஜைகளைப் படைத்துள்ளார்.

7. ஏதாம் விபூதிம் யோகஞ்ச மம யோ வேத்தி தத்வத:
ஸோவிகம்பேந யோகேந யுஜ்யதே நாத்ர ஸம்ஶய:

எனது இந்த நியமனத்தையும், கல்யாணகுணஸம்பந்தத்தையும் எவன் உள்ளவாறுஉணர்கிறானோ, அவன் துளக்கமற்றபக்தியோகம் கைகூடியவனாகிறான் ; இதை நீயேகாண்பாய் ; இதில் ஐயப்பாடில்லை.

அவ [விபூதியைப்பற்றிய ஞானமே பக்தியாகமாறி முதிர்ச்சியடைகிறதென்கிறார்].

8. அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்தஸ்ஸர்வம் ப்ரவர்த்ததே
இதி மத்வா பஜந்தே மாம் புதா பாவஸமந்விதாঃ

விசித்திரங்களாய் சேதன அசேதனரூபமான ஸகலபிரபஞ்சங்கட்கும் உற்பத்திக்குக்காரணம் நானே; யாவும் என்னாலேயே இயங்குகின்றனஎன்று அறிந்து ஞானிகள் என்னிடம் அன்புபூண்டவர்களாய் என்னைக்குறித்து பக்திசெய்கின்றனர்.

அவ [எப்படி எனில்;]

9. மச்சித்தா: மத்கதப்ராணா: போதயந்த: பரஸ்பரம்
கதயம் தஸ்சமாம் நித்யம் துஷ்யந்திச ரமந்திச.

"என்நிலைய சிந்தையார் என்பால் உயிரினர்
தன்நிலையில் தம்மில்தம் சார்வுணர்த்தி—பின்னியலால்
சொல்லியெனை என்றும் சுகிப்பர் மிகஉகப்பர்
எல்லிபகல் ஒன்றின்றி ஏய்ந்து." (ப. கீ. வெ. 9).

[எல்லி - இரவு].

10. தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம்
ததாமி புத்தியோகந் தம் யேந மா முபயாந்திதே.

"என்றும் எனைக்கூடும் இயல்வினராய் என்னுகந்து
நின்றுமிகச் சேவித்து நேர்படுவார்க்(கு)—ஒன்றியசீர்ப்
பத்தி யோகத்தில் பயின்றே எனையடையும்
புத்தி யோகம்கொடுப்பன் பூண்டு." (ப. கீ. வெ. 10).

அவ [மேலும், புத்தியோகம் கைகூடுவதற்குத் தடையைப்போக்கும் விதத்தைக் கூறுகிறார்].

11. தேஷா மேவாநுகம்பார்த்தம் அஹ மஜ்ஞாநஜந்தம:
நாஶயாம் யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா.

அவர்களுக்கு அநுக்கிரஹம்புரியும்பொருட்டு, நான் அவரவர்கள் நெஞ்சுள்ளேநின்றுகொண்டு * சுடரொளிவீசும் ஞானமாகிய தீபத்தினால் என்னைவிடவேறுபொருள்களில் முற்பழக்கத்தால் எழுந்த பிராவண்யமாகிய இருளை ஒழிக்கிறேன்.

---

* "அன்பேதகளியா ஆர்வமேநெய்யாக
இன்புருகுசிந்தை இடுதிரியா—நன்குருகி
ஞானச்சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்தநான்." (II-திருவந்தாதி, 1).

அவ [பகவானுடைய அனந்த கல்யாணகுணங்களையும் அவனது ஐஸ்வர்யத்தின் சிறப்புகளையும் விரிவாகக்கேட்க ஆவல்பூண்டு அருச்சுனன் வினவுவான்].

அர்ஜுந உவாச - அருச்சுனன் வினவுவான்.

12. பரம்ப்ரஹ்ம பரந்தாம பவித்ரம் பரமம் பவாந்
புருஷம் ஶாஶ்வதம் திவ்யம் ஆதிதேவம் அஜம் விபும்.

13. ஆஹுஸ்த்வாம் ருஷயஸ் ஸர்வே தேவர்ஷிர் நாரதஸ் ததா
அஸிதோ தேவலோ வ்யாஸ: ஸ்வயஞ்சைவ ப்ரவீஷி மே.

நீயே பரப்பிரஹ்மம், நீயே பரஞ்ஜோதி, நீயே அறச்சிறந்த தூய்மைப்பொருள் என்றும் சுருதிகள்முறையிடுகின்றன; உன்னை நித்யனுப் பிறப்பின்றி எங்கணும் நிறைந்துறையும் புருஷனுக ஸர்வ ரிஷகளும் அங்ஙனமே தேவரிஷிநாரதரும், அஸிதன்என்கிற தேவல மஹரிஷியும், வியாஸபகவானும் கூறுகின்றனர்; நீயும் நேரேஎனக்கு அதை உரைக்கின்றனே.

14. ஸர்வமேதத் ருதம் மந்யே யந்மாம் வதஸி கேசவ
நஹிதே பகவந் வ்யக்திம் விதுர்தேவா ந தாநவா:

கேசவ! நீ எனக்குச் சொல்லுமவற்றையெல்லாம் உண்மை என்றே நம்புகின்றேன்; பகவானே! உனதுவைபவத்தைப் பிரகாசப்படுத்தும்விதத்தை அற்பஅறிவுள்ள தேவர்களும் தானவர்களும் அறியமாட்டார்களன்றோ!

இங்கு நீகூறியதைத் துதிமொழியாகக்கொள்ளாமல் அனைத்தும் உண்மை என்றே நம்புகிறேன் என்கிறன். பகவான் என்றது ஞான, சக்தி, பல, ஐஸ்வர்ய, வீர்ய, தேஜஸ் என்னும் ஆறுகுணங்களும் பூர்ணமாகவுடைய ஸ்ரீகிருஷ்ணனே.

15. ஸ்வயமே வாத்மநாத்மாநம் வேத்த த்வம் புருஷோத்தம!
பூதபாவந! பூதேஶ! தேவதேவ! ஜகத்பதே!

புருஷோத்தமா! எல்லா பூதங்களையும் படைப்பவனே! எல்லா பூதங்களையும் நியமனம்செய்பவனே! தேவதேவா! ஜகத்பதீ! உனதுஸ்வரூபத்தை உனது அஸாதாரணமான ஞானத்தால் நீயே அறிகிறாய்.

16. வக்து மர்ஹஸ்யஶேஷேண
திவ்யா ஹ்யாத்ம விபூதய:
யாபிர் விபூதிபிர் லோகாந்
இமாம் ஸ்த்வம் வ்யாப்யதிஷ்டஸி.

எந்த மஹிமையால் இவ்வுலகங்களையெல்லாம் நீயே வியாபித்து இருக்கிறாயோ, அந்த உன்மஹிமைகள் திவ்யங்களன்றோ! அவைகளைக் குறைவறக்கூறுதற்குத் தகுந்தவன் நீயே.

17. கதம் வித்யா மஹம் யோகீ த்வாம் ஸதா பரிசிந்தயந்
கேஷு கேஷு ச பாவேஷு சிந்த்யோஸி பகவந்மயா.

பகவானே! நான் பக்தியோகத்தை ஆசிரயித்து இடைவிடாமல் உன்னையே தியானஞ்செய்துகொண்டு உன்னை அறிந்துகொள்வது எப்படி? இன்னும் எந்த எந்த பொருள்களில் நான் உன்னை தியானித்தல்வேண்டும்?

18. விஸ்தரேணாத்மனோ யோகம் விபூதிஞ்ச ஜநார்த்தந!
பூய: கதய த்ருப்திர்ஹி ஸ்ருண்வதோ நாஸ்தி மேம்ருதம்.

ஜநார்த்தன! உன்னுடைய திருக்கல்யாணகுணங்களையும், நியமனவைபவத்தையும் மீண்டும் ஒருமுறை விரித்துரைப்பாய். உனது மாஹாத்ம்யமாகிய அமுதத்தைக் கேட்பதில் போதும்என்னும் எண்ணம் எனக்கு உண்டாகவில்லையன்றோ!

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ கிருஷ்ணபகவான் விரித்துரைப்பான்.

19. ஹந்த தே கதயிஷ்யாமி திவ்யாஹ்யாத்ம விபூதய:
ப்ராதாந்யத: குருஸ்ரேஷ்ட! நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்யமே.

குருசிரேஷ்ட! எனதுவிபூதியின் பரப்புக்கு முடிவுகாணமுடியாது; ஆதலின் எனது தயைக்குப்பாத்திரமான உனக்கு எனது மங்களங்களான விபூதிகளுள் முக்கியாம்சங்கள் சிலவற்றையே கூறுவேன்.

20. அஹ மாத்மா குடாகேஸ! ஸர்வபூதாஸய ஸ்தித:
அஹ மாதிஸ்ச மத்யஞ்ச பூதாநா மந்த ஏவச.

குடாகேச! நான்எல்லாப்பிராணிகளின் இதயத்திலிருக்கும் ஆத்மாவாயிருக்கிறேன்; அவைகளின் மூலமும் நடுவும் இறுதியும் யானே.

இதில் இறைவனுக்கும் ஜகத்திற்கும் உள்ள சரீரஆத்மபாவம் தெளிவாய்க் கண்ணபிரானாலேயே கூறப்பட்டுள்ளது.

அவ [இங்ஙனே அவ்வச்சொற்களுடன் புணர்த்துச்சொல்வதற்குக் காரணமாகிய பகவான் தனக்குவிபூதிகளாகும் எல்லாப்பொருள்களிலும்ஆத்மாவாகஉளன் என்பதைவிளக்கி, விபூதியில் சிறப்புடையபொருளை பகவானைச்சொல்லும் பதங்களுடன் கூட்டிச்சொல்லுகிறார்].

21. ஆதித்யாநா மஹம் விஷ்ணு: ஜோதிஷாம் ரவி ரம்ஶுமாந்
மரீசிர் மருதா மஸ்மி நக்ஷத்ராணா மஹம் ஶஶீ.

“ ஆதித்தர் தம்மில் அதிகனும் விட்டுநான்
சோதிப் பகலிரவிச் சோதிநான்—மீது
மருத்துவரின் மன்னு மரீசிநான் நானே
திருத்துமதி தாரகையில் சேர்ந்து.” (ப. கீ. வெ. 22).

[விட்டு - விஷ்ணு ; மதி - சந்திரன் ; தாரகை - நக்ஷத்திரம்].

ஈண்டு தனித்துச்சொல்லப்படும் பொருள்களில் சிலவற்றின் சிறப்புடைமை காட்சியாலும், சிலவற்றின் சிறப்புடைமை சாஸ்திரத்தினாலும் ஏற்படும்; சிலஇடங்களில் நேராகவும், மற்றும்சிலஇடங்களில் ஜீவாத்மாவின்மூலமாய் அந்தர்யாமியாய்ச் சேர்த்தும் சொல்லப்பட்டுள்ளது. கீழே ‘மத்தஸ்ஸர்வம் ப்ரவர்த்ததே’ என்று எல்லாப்பொருள்களும் தன்னைவிட்டுப்பிரியாதிருத்தலும், எல்லாம் தன்னால் நியமிக்கப்படுவதும் கூறப்பட்டது; மேலேயும் ‘நததஸ்தி விநாயத்ஸ்யாத் மயாபூதம் சராசரம்’ என்று எல்லாப்பொருள்களும் தானின்றி இருத்தலில்லை என்பர்.

22. வேதாநாம் ஸாமவேதோ஽ஸ்மி தேவாநா மஸ்மி வாஸவ:
இந்த்ரியாணாம் மநஶ்சாஸ்மி பூதாநா மஸ்மி சேதநா.

“ வேதங்களில் சாமவேதநான் விண்ணவரில்
நாதன் சதக்கிருது நானவன்—போதஞ்சேர்
நெஞ்சாவன் எப்பொறிக்கும் நின்றியலும் பூதங்கட்(கு)
எஞ்சா அறிவாவன் யான்.” (ப. கீ. வெ. 23).

[சதக்கிருது - இந்திரன்].

23. ருத்ராணாம் ஶங்கரஶ்சாஸ்மி வித்தேஶோ யக்ஷரக்ஷஸாம்
வஸூநாம் பாவகஶ்சாஸ்மி மேரு ஶ்ஶிகரிணா மஹம்.

உருத்திரர் பதினொருவரில் சங்கரன்யான்; இயக்கர் அரக்கருள் குபேரன்நான்; வஸுக்கள் எண்மருள் பாவகன்என்னும் அக்கினி நான்; சிகரங்களால்விளங்கும் மலைகளுள் நான்மேருஎன்னும் பொன்மலையாகிறேன்.

24. புரோதஸாஞ்ச முக்யம் மாம் வித்தி பார்த்த! ப்ருஹஸ்பதிம்
ஸேநாநீநா மஹம் ஸ்கந்த: ஸரஸா மஸ்மி ஸாகர:

பார்த்த! புரோஹிதர்களுள் தலைவராகிய பிரஹஸ்பதி யான் என்று தெரிந்துகொள்; தேவஸேனாபதிகளில் நான் சுப்ரஹ்மண்யன்; நீர்நிலைகளில் நான் ஸாகரம்.

25. மஹர்ஷீணாம் ப்ருஹு ரஹம் கிரா மஸ்ம்யேக மக்ஷரம்
யஜ்யாநாம் ஜபயஜ்ஞோஸ்மி ஸ்தாவராணாம் ஹிமாலய:

மரீசிமுதலிய மஹரிஷிகளில் நான் பிருகுமுனிவன்; பொருளைத் தருஞ்சொற்களில் ஓரெழுத்தொருமொழியாகிய '**ஓம்**' என்னும் பிரணவம் நான் யஞ்யங்களில் நான்ஜபயஞ்யம்; மலைகளுக்குள் சைலராஜனாகிய இமயம் நான்.

26. அஸ்வத்தஸ் ஸர்வவ்ருக்ஷாணாம்
தேவர்ஷீணாஞ் ச நாரத:
கந்தர்வாணாம் சித்ரரத:
ஸித்தாநாம் கபிலோ முநி:

மரங்களனைத்தினும் பூஜிக்கத்தக்க அரசமரம்நான்; தேவரிஷி களில் நாரதர்யான்; கந்தருவருள் சித்ரரதன்நான்; ஸித்தர்களில் நான்கபிலமுனி.

27. உச்சைஸ்ரவஸ மஸ்வாநாம் வித்தி மா மம்ருதோத்பவம்
ஐராவதம் கஜேந்த்ராணாம் நராணாஞ்ச நராதிபம்.

குதிரைகளுள் அமுதிற்பிறந்த உச்சைசிரவம் என்றுணர்; திசைக்களிறுகளில் ஐராவதமும் மனிதர்களில் அரசனும் யான் என்று அறி.

28. ஆயுதாநா மஹம் வஜ்ரம் தேநூநா மஸ்மி காமதுக்
ப்ரஜநஸ்சாஸ்மி கந்தர்ப்ப: ஸர்ப்பாணா மஸ்மி வாஸுகி:

ஸாதாரண ஆயுதங்களில் நான் வஜ்ரம்; பசுமாடுகளில் சுவர்க்கத் திலுள்ள காமதேனு நான்; மக்கள் தோற்றத்திற்குக்காரணனான மன்மதன் யான்; ஒருதலையுடைய பாம்புகளில் வாஸுகி நான்.

29. அநந்தஸ்சாஸ்மி நாகாநாம் வருணோ யாதஸா மஹம்
பித்ருணா மர்யமாசாஸ்மி யம ஸ்ஸம்யமதாமஹம்.

பலதலைகளையுடைய பாம்புகளுள் நான் ஆதிசேஷன்; ஜலதேவ தைகளில் நான் வருணன்; தென்புலத்தாரில் யான் அர்யமா; தண் டிப்பவருள் யமனும் நான்.

30. ப்ரஹ்லாதஸ்சாஸ்மி தைத்யாநாம்
காலः கலயதா மஹம்
ம்ருகாணாஞ் ச ம்ருகேந்த்ரோஹம்
வைநதேயஸ்ச பக்ஷிணாம்.

அஸுரர்களில் பிரஹ்லாதன்யான்; தீங்குபுரிய எண்ணுமவரில் மிருத்யு நான்; மிருகங்களில் சிங்கம் நான்; பறவைகளில் வைன தேயனும் யான்.

31. பவநः பவதா மஸ்மி ராமஸ்ஸ ஸ்த்ரப்ருதா மஹம்
ஜஷாணாம் மகரஸ்சாஸ்மி ஸ்ரோதஸா மஸ்மி ஜாந்ஹவீ.

இயங்குவதே இயல்பானவற்றுள் நான் வாயுவாயுள்ளேன்; ஆயு தம்தாங்குவோரில் இராமன் நான்; மீன்களில் மகரமீன் யான்; பிர வாஹங்களில் கங்கை நான்.

32. ஸர்க்காணா மாதி ரந்தஸ்ச மத்யஞ்சைவாஹ மர்ஜுந!
அத்யாத்மவித்யா வித்யாநாம் வாதः ப்ரவததா மஹம்.

அருச்சுன! படைக்கப்படும் பொருள்களுடைய காரணமும் முடிவும் இடைநிலையும் நான்; வித்தைகளில் வேதாந்தவித்தையும் தருக்கம்செய்வோரில் உண்மையான வாதரூபமும் நான்.

33. அக்ஷராணா மகாரோஸ்மி த்வந்த்வஸ் ஸாமாஸிகஸ்யச
அஹமேவா க்ஷயः காலः தாதாஹம் விஸ்வதோ முகः

எழுத்துக்களில் அகர உயிர்யான்; ஸமாஸங்களில் துவந்துவ ஸமாஸமும் நான்; கலை, முகூர்த்தம்முதலிய அழிவற்றகாலமும் நான்; எல்லாவற்றையும் படைக்கும் நான்முகனான பிரமனும் நானே.

34. ம்ருத்யுஸ் ஸர்வஹரஸ்சாஹம்
உத்பவஸ்சபவிஷ்யதாம்
கீர்த்திः ஸ்ரீர்வாக்ச நாரீணாம்
ஸ்ம்ருதிர் மேதா த்ருதிः க்ஷமா.

எல்லாப்பிராணிகளின் உயிரை உடலினின்றி பிரித்துச்செல்லும் கூற்றுவன் யான்; உண்டாகும்பொருள்களின் உற்பத்தி என்னும் செயலும் நான்; பெண்மணிகளில் கீர்த்தி; இலக்குமி; வாக்கு; ஸ்மிருதி; மேதை; திருதி; க்ஷமை நானே.

35. ப்ருஹத்ஸாம ததா ஸாம்நாம் காயத்ரீ சந்தஸா மஹம்
மாஸாநாம் மார்கஶீர்ஷோஹம் ருதூநாம் குஸுமாகர:

அங்ஙனமே ஸாமங்களுள் ப்ருஹத்ஸாமமும், சந்தங்களுள் காயத்திரியும் நானே; மாஸங்களில் மார்கழித்திங்கள்யான்; பருவ காலங்களில் வஸந்தருது நான்.

36. த்யூதஞ் சலயதா மஸ்மி தேஜ ஸ்தேஜஸ்விநா மஹம்
ஜயோஸ்மி வ்யவஸாயோஸ்மி ஸத்வம் ஸத்வவதாமஹம்.

வஞ்சகரின் வஞ்சகங்களுள் சொக்கட்டானகவும், தேசுடையோரில் தேசும் யான்; ஜயம் நான்; உறுதிப்பாடும் நான்; மனோ தைரியம்உடையோரின் தைரியமும் நான்.

37. வ்ருஷ்ணீநாம் வாஸுதேவோஸ்மி
பாண்டவாநாம் தநஞ்ஜய:
முநீநா மப்யஹம் வ்யாஸ:
கவீநாம் உசநா கவி:

வ்ருஷ்ணிஎன்னும் இடைக்குலத்தோரில் வாஸுதேவனாகவும், பாண்டவர்களில் தனஞ்சயனாகியநீயும், மனனசீலர்களுள் வியாசபகவானும், புத்திமான்களுள் சுக்கிராசார்யராகவும் நான் ஆகிறேன்.

38. தண்டோ தமயதா மஸ்மி
நீதி ரஸ்மி ஜிகீஷதாம்
மௌநஞ் சைவாஸ்மி குஹ்யாநாம்
ஜ்ஞாநம் ஜ்ஞாநவதா மஹம்.

நியமனத்தை மீறுபவர்க்கு புரியும்தண்டனையும் நான்; வெற்றியை விரும்புவோரின் வெற்றிக்குக்காரணமாகிய நீதிநெறியும் நானே; மறைக்கத்தக்கபேச்சுக்களை மறைப்பதில் நான் மௌனமாகிறேன்; ஞானிகளின் ஞானமும் யான்.

39. யச்சாபி ஸர்வபூதாநாம் பீஜம் ததஹ மர்ஜுந!
ந ததஸ்தி விநா யத்ஸ்யாந் மயா பூதஞ் சராசரம்.

அருச்சுன! எல்லா நிலைவேறுபாடுகளையுடைய பிராணிகள் அனைத்துக்கும் அவ்வவநிலை வேறுபாடுகட்குக்காரணமாய் நமக்குப் புலப்பட்டும் புலப்படாமலும் உள்ளபொருள் எதுவோ அது நான்; சராசரங்களில் என்னைவிட்டுப்பிரிந்து இருப்புடையது ஒன்றும்இல்லை.

இதில் தன்னையொழிந்த எல்லாப்பொருள்களுடன் சேர்த்தே தன்னைச்சொல்லியிருப்பதெல்லாம் அவைகட்குத் தான் ஆத்மாவாக இருப்பதே காரணம் என்று ஸாமாநாதி கரண்ய நிர்த்தேச முகத்தால் விளக்குகிறார்.

40. நாந்தோஸ்மி மம திவ்யாநாம் விபூதீநாம் பரந்தப!
ஏஷ தூத்தேஶத: ப்ரோக்த: விபூதேர் விஸ்தரோ மயா.

பரந்தப! எனது மங்களங்களான விபூதிகட்கு முடிவில்லை; விரிந்து பரந்த இந்தவிபூதியின் விளக்கம் என்னால் காரணம்கருதியே சுருங்க உரைக்கப்பட்டது.

41. யத்யத் விபூதிமத்ஸத்வம் ஸ்ரீமதூர்ஜித மேவவா
தத்ததேவாவகச்சத்வம் மம தேஜோம்ஶஸம்பவம்.

எந்த எந்த பிராணிகளின் ஸமூஹம் நியமிக்கப்படும் பொருள்களையுடையதோ, காந்தியுடையதோ, அல்லது தனமும் தானியமும் மிக்கதோ, நற்கருமங்களைத் தொடங்குவதில் முயற்சிகொண்டுள்ளதோ, அந்த அந்த பொருளை எனது தேஜஸின் ஓரம்சமாத்திரத்தினின்று வெளிப்போந்ததென்று உணர்.

தேஜஸ்என்பது சக்திவிசேஷம்; ஒருவராலும் எண்ணிப்பார்த்தற்கும் அரியது, எல்லாவற்றையும்பற்றியது, ஒருவராலும் தடுக்கக்கூடாதது, வேறு ஒருவராலும் செய்தற்கரியதைச் செய்யக்கூடியது.

42. அதவா பஹுநைதேந
கிம் ஜ்ஞாதேந தவார்ஜுந!
விஷ்டப்யாஹ மிதம் க்ருத்ஸநம்
ஏகாம்ஶேந ஸ்திதோ ஜகத்.

“ இந்தப்பலவா இயம்பிய மெய்ஞ்ஞானத்தால்
எந்தப்பயனும் இகல்விசயா—முந்தையெனும்
சத்திலே சத்தாய்ச் சகமனைத்தும் பற்றிநான்
அத்திலே நிற்பன் அமர்ந்து.” (ப. கீ. வெ. 43).

“ முத்தி யருள்மாயன் முழுதருளுஞ் சீர்க்கீதை
பத்தி வளர்த்துயர் பத்தாமோத்—தொத்திசையில்
எப்பொருளுந்தானய் இசைந்தபடி விரித்த(து)
இப்பொருளாய்ந்தே முடிந்த திங்கு.”

பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினோராவது அத்தியாயம்.

விசுவரூபஸந்தரிசன யோகம்.

"பார்த்தனுக்கு மாயனருள் கீதைப்பதினோன்று
மோத்திவ் வுலகெல்லா முடம்பதனில்—கோத்தபடி
காட்டுமது தன்னறிவு கண்டடைதல் தன்பத்தி
கூட்டுமதுஞ் சொல்லுங் குறித்து."

அர்ஜுந உவாச - விசயன் விளம்புவான்.

1. மதநுக்ரஹாய பரமம் குஹ்யம் அத்யாத்மஸம்ஜ்ஞிதம்
யத்வயோக்தம் வசஸ்தேந மோஹோயம் விகதோ மம.

*"என்பால் இரக்கத்தால் ஈறு மறைப்பொருளா
நின்பால் அறிவமர நீயுரைத்த—இன்பாரும்
சொல்லாலென் மோகந் துவக்கி யுடனில்லாதே
எல்லாம் கழிந்த தெனக்கு."* (ப. கீ. வெ. 2).

2. பவாப்யயௌ ஹி பூதாநாம் ஶ்ருதௌ விஸ்தரஶோ மயா
த்வத்த: கமலபத்ராக்ஷ ! மஹாத்ம்ய மபி சாவ்யயம்.

*"பூத மவைபிறந்து போகும் வகையுன்பால்
ஏத மறிவிரிப்ப யான்கேட்டேன்—மீதறிந்தேன்
இங்களவில் உன்பெருமை ஏதும் ஒழியாமல்நான்
செங்கமலக் கண்ணு தெளிந்து."* (ப. கீ. வெ. 3).

3. ஏவ மேத த்யதாத்தத்வம் ஆத்மாநம் பரமேஶ்வர!
த்ரஷ்டு மிச்சாமி தேரூபம் ஐஸ்வரம் புருஷோத்தம !

*"நீசொன்ன வண்ண நிகரில் பரமீசா
மாசொன்று வண்ண மருவியதே—தேசொன்(று)
மேலாம் இறையுருவை மெய்க்காண இச்சிப்பன்
மாலே புருடோத்தமா."* (ப. கீ. வெ. 4).

4. மந்யஸே யதி தச்சக்யம் மயா த்ரஷ்டு மிதி ப்ரபோ!
யோகேஶ்வர! ததோ மேத்வம் தர்ஶயாத்மாந மவ்யயம்.

*"என்னாலே காணலாம் என்றிறைவா எண்ணுதியேல்
மன்னு குணயோக மாயவனே—நன்றாக
ஓங்கியசீர் உன்வடிவை ஒன்றொழியாமே எனக்குப்
பாங்கிசையக் காட்டு பயின்று."* (ப. கீ. வெ. 5).

அவ [இங்ஙனம் மனமகிழ்ந்து அன்புமேலீட்டால் தழுதழுத்தசொற்களால் அருச்சுனன் வேண்ட ;]

ஸ்ரீபகவாநுவாச - ஸ்ரீ கிருஷ்ணபகவான் விடையருள்புரிகின்றார்.

5. பஶ்யமே பார்த்த! ரூபாணி ஶதஶோத ஸஹஸ்ரஶ:
நாநாவிதாநி திவ்யாநி நாநாவர்ணாக்ருதீநி ச.

"என்றிசைக்கப் பார்த்தன் எழில்மாயன் ஈதுரைத்தான்
வென்றிவிசையா எந்தன் மேனிகளை—ஒன்றியநீ
பார் ஆயிரம்பலவாய்த் திவ்யமாம் பல்வகையா
ஏரார் நிறத்துருவம் இங்கு." (ப. கீ. வெ. 6).

6. பஶ்யாதித்யாந் வஸூந் ருத்ராந்
அஶ்விநௌ மருதஸ் ததா
பஹூந்யத்ருஷ்டபூர்வாணி
பஶ்யாஶ்சர்யாணி பாரத !

"ஆதித்தியர் வசுக்கள் அங்கரர்கள் அச்வினிகள்
சாதித்திரள் மருத்துத் தங்களைப்பார்—மீதுற்றுப்
பல்வகையாய் முன்காணுப் பாராய்நீ பார்த்தனே
நல்வகையார் ஆச்சரிய நன்கு." (ப. கீ. வெ. 7).

7. இஹைகஸ்தம் ஜகத்க்ருத்ஸ்நம் பஶ்யாத்ய ஸசராசரம்
மம தேஹே குடாகேஶ! யச்சாந்யத் த்ரஷ்டுமிச்சஸி,

"இங்கே குடாகேசா என்னுடம்பில் ஓரிடத்தில்
அங்கோர் சராசரங்கள் ஆகத்துத்—தங்குநெறி
தேறியே யெல்லாம் தெரியக்காண் என்காண்பான்
வேறுதான் இச்சித்தாய் மிக்கு." (ப. கீ. வெ. 8).

8. நது மாம் ஶக்ஷ்யஸே த்ரஷ்டும் அநேநைவ ஸ்வசக்ஷுஷா
திவ்யம் ததாமி தே சக்ஷு: பஶ்யமே யோக மைஶ்வரம்.

"உன்னுடைய இக்கண்ணால் ஒன்றுமெனைக் காண்பரிதாம்
என்னுமது தன்னாலே யானுனக்கு—மன்னியசீர்த்
திவ்வியமாம் கண்தருகேன் சீர்பிறங்கும் என்பெருமை
செவ்வியுறக் காணதனால் சேர்ந்து." (ப. கீ. வெ. 9).

ஸஞ்ஜய உவாச - ஸஞ்சயன் திருதராட்டிரனுக்கு உணர்த்துவான்.

9. ஏவமுக்த்வா ததோராஜந் மஹாயோகேஶ்வரோ ஹரி:
தர்ஶயாமாஸ பார்த்தாய பரமம் ரூப மைஶ்வரம்.

“ இவ்வகை சொல்லி இறையான யோகேசன்
அவ்வகையால் பார்த்தனவன் காண—மெய்வகையால்
ஐசமெனும் அவ்வடிவை ஆங்கனைத்துங் காட்டினுன்
தேசமரு மேன்மை சிறந்து.” (பா. கீ. வெ. 10).

[ஐசம் - ஈசனுயிருக்கும்தன்மை ; தேசு அமரும் - ஒளி பொருந்திய].

அவ [அந்த உருவம் இவ்வாறிருந்தது].

10. அநேகவக்த்ரநயநம் அநேகாத்புததர்ஶநம்
அநேகதிவ்யாபரணம் திவ்யாநேகோத்யதாயுதம்.

* “ பலபலவாம் கண்முகங்கள் பண்பார் வியப்புப்
பலபலவாம் பார்க்கும் பரிசு—பலபலவாம்
பூண்சிறந்த வான்கலன்கள் போற்றிப் பலபலவாம்
மாண்சிறந்த ஆயுதங்கள் மற்று.” (ப. கீ. வெ. 11).

11. திவ்யமால்யாம்பரதரம் திவ்யகந்தாநுலேபநம்
ஸர்வாஶ்சர்ய மயம் தேவம் அநந்தம் விஶ்வதோ முகம்.

“ மாலை பரியட்டம் மன்னுமவை திவ்வியமாய்க்
கோலநறும் பூச்சதின் கோளுடைத்தாய்—மேலான
ஆச்சரியமெல்லாம் அமர்ந்தே அனந்தமாய்
ஓச்சமிகும் எம்முகமும் உற்று.” (ப. கீ. வெ. 12).

12. திவி ஸூர்யஸஹஸ்ரஸ்ய பவே த்யுகபதுத்திதா
யதி பா: ஸத்ருஶீஸா ஸ்யாத் பாஸ ஸ்தஸ்ய மஹாத்மன:

“ வானில் வளர்இரவி ஆயிரமா வந்தொருமித்
தானஒளி எழுவதாமாகில்—தான
பெரியோன் வடிவில் பிறங்கும் ஒளிக்கொக்கும்
பரிசாம் எனலாம் பயின்று.” (ப. கீ. வெ. 13).

13. தத்ரைகஸ்தம் ஜகத்க்ருத்ஸ்நம் ப்ரவிபக்த மநேகதா
அபஶ்யத் தேவதேவஸ்ய ஶரீரே பாண்டவ ஸ்ததா.

---

* “ பலபலவே ஆபரணம் பேரும் பலபலவே
பலபலவே சோதி வடிவு பண்பெண்ணில்
பலபல கண்டுண்டு கேட்டுற்று மோந்தின்பம்
பலபல வேஞானமும் பாம்பணைமே லாற்கேயோ ! ”
(திருவாய்மொழி-5-6).

"அவ்விடத்தில் அப்பொழுது பார்த்தன் அனைத்துலகும்
எவ்வுறுப்பும் வேறாய் இருக்கின்ற—இவ்வகையே
தேவதேவன்தன் திருவுருவில் ஓரிடத்தே
ஆவதன கண்டான் அவன்." (ப. கி. வெ. 14).

கீழே பத்தாவது அத்தியாயத்தில் 8, 19, 20, 21, 39 சுலோகங்களில் இறைவன் என்ன என்ன கூறினனோ அவைகளனைத்தையும் அவன்கூறியவண்ணமே திவ்ய நேத்ரங்களால் கண்டனன் அருச்சுனன் என்க.

14. தத: ஸ விஸ்மயாவிஷ்ட: ஹ்ருஷ்டரோமா தநஞ்ஜய:
ப்ரணம்ய ஶிரஸா தேவம் க்ருதாஞ்ஜலி ரபாஷத.

"தாராரும் அந்தத் தனஞ்சயன்தான் சாலவியந்(து)
ஏராருடல் மயிர்க்கோள் எய்தியே—சீரார்
முடியால் பணிந்திறையை முன்தொழுது நின்றிப்
படியால் உரைசெய்தான் பார்த்து." (ப. கீ. வெ. 15).

[மயிர்க்கோள் எய்தி - மயிர்சிலிர்ப்படைந்து.]

அர்ஜுந உவாச - அருச்சுனன் துதித்துரைப்பான்.

15. பஶ்யாமி தேவாம் ஸ்தவ தேவதேஹே
ஸர்வாம் ஸ்ததா பூதவிஶேஷஸங்காந்
ப்ரஹ்மாண மீஶம் கமலாஸநஸ்தம்
ருஷீம்ஶ்ச ஸர்வா நுரகாம்ஶ்ச திவ்யாந்.

"தேவா உன்மேனியில் தேவரையும் சங்கமாய்
மேவாரும் பூதங்கள் வேற்றுமையும்—பூவார்
பிரமன் அவன்பால் ஈசன் பேர்முனிவர் தேசார்
உரகரையெல்லாங் காண்பன் உற்று." (ப. கீ. வெ. 16).

16. அநேக பாஹூதரவக்த்ரநேத்ரம்
பஶ்யாமி த்வாம் ஸர்வதோநந்தரூபம்
நாந்தம் நமத்யம் நபுநஸ்தவாதிம்
பஶ்யாமி விஶ்வேஶ்வர விஶ்வரூப.

"ஆன அனந்த உருவாம் உனைத்தோள்கள்
நான முகம் உதரம் நான்காண்பன்—தானார்ந்துன்
அந்தம் நடுஆதியும் காணேன்நான் ஆங்கனைத்தின்
முந்தையிறை எவ்வுருவா முற்று." (ப. கீ. வெ. 17).

17. கிரீடினம் கதினம் சக்ரிணம்ச
தேஜோராஶிம் ஸர்வதோதீப்திமந்தம்
பஶ்யாமி த்வாம் துர்நிரீக்ஷ்யம் ஸமந்தாத்
தீப்தாநலார்க்கத்யுதி மப்ரமேயம்.

* தேஜோராசியாய் எங்கும்பிரகாசமாய், எங்கும்காணவொண்ணுதவனுய், நாற்புறங்களிலும் சுடர்விட்டோங்கும் அக்னியும், கதிரவனும்போன்ற ஒளிமிக்குடையனுய், அளவிடற்கரியனுன உன்னை மகுடம், தண்டு, சக்கரம் என்பவற்றைத் தரித்திருக்கக் காண்கின்றேன்.

18. த்வ மக்ஷரம் பரமம் வேதிதவ்யம்
த்வ மஸ்ய விஶ்வஸ்ய பரம் நிதாநம்
த்வ மவ்யய ஶாஶ்வததர்மகோப்தா
ஸநாதநஸ்த்வம் புருஷோ மதோ மே.

† அறியப்படவேண்டியதாய் உத்தமமான அக்ஷரம்என்று கூறப்படும்பொருளும் நீரே; இவ்வுலகிற்கு முக்கியஆதாரமும் நீரே; அழிவில்லாதவரும் நீரே; என்றுமுள நல்லறத்தை காப்பவரும் நீரே; "ஸனாதன புருஷன்" என்று உம்மை மனங்கொண்டேன்.

19. அநாதிமத்யாந்த மநந்தவீர்யம்
அநந்தபாஹும் ஶஶிஸூர்யநேத்ரம்
பஶ்யாமி த்வாம் தீப்தஹுதாஶவக்த்ரம்
ஸ்வதேஜஸா விஶ்வமிதம் தபந்தம்.

மூலமும் நடுவும் ஈறும் இல்லாது அளவுகடந்த வீரியமும் கணக்கிறந்ததோள்களும், திங்களும் ஆதித்தியனும்போன்ற நயனங்களும், மிகவும் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் பிரளயகாலாக்னியை நிகர்த்த முகமும்உடைய தேவரீருடைய தேஜஸ்ஸினுல் இந்த உலகத்தை தபிக்கச்செய்கிற தேவரீரையே பார்க்கிறேன்.

---

* "மிக்க ஒளிராசியாய் மீதெங்கும் தேசமர்ந்து
பக்க முறக்காண்பதொய்ப் பார்ப்பன்நான்—தொக்கஅனல்
அற்கன் ஒளிமிக்கு அளவற்று ஆங்குமுடி நேமிகதை
ஒற்க மறமேவு முனையுற்று." (ப. கி. வெ. 18).
[அற்கன் - சூரியன்; நேமி - சக்கரம்].

† "ஆய்வறிவு சேர்பரமா மக்காநீ ஆங்கனைத்தும்
சாய்வறவே மேலாய்த் தரிப்பவன்நீ—வீய்வறவே
நிற்பவைநீ நிற்கும் அறங்காப்பவன்நீ நித்தனு
நற்புருடன் நீயறிவன் நான்." (ப. கீ. வெ. 19).

அவ ['இத்தகையராய தேவரீரைக்கண்டு தேவாதியரும் அடியேனும் அஞ்சுகிறோம்' என்கிறான்].

20. த்யாவா ப்ருதிவ்யோ ரிதமந்தரம்ஹி
வ்யாப்தம் த்வயைகேந திஶஶ்ச ஸர்வா:
த்ருஷ்ட்வாத்புதம் ரூபமுக்ரம் தவேதம்
லோகத்ரயம் ப்ரவ்யதிதம் மஹாத்மந்.

அளவுகடந்த மனோவியாபாரமுடையோய்! தேவரீர் ஒருவராலேயே விண் மண் இடையிட்ட இடம் முழுவதும் நிறப்பப்பட்டுளது; அவ்வாறேபுளது திசைகளெல்லாம்; வியக்கத்தக்க தேவரீருடைய இவ்வுக்கிரஉருவம் கண்டு மூவகைப்பட்ட ஜீவராசிகளும் மிகவும் அச்சம்கொண்டன.

இங்கு மூவகைஜிவராசிகள் என்றது விரோதிகள், பக்தர்கள், உதாஸீனர் என்போர்.

21. அமீ ஹி த்வாம் ஸுரஸங்கா விஶந்தி
கேசித்பீதா: ப்ராஞ்ஜலயோக்ருணந்தி
ஸ்வஸ்தீத்யுக்த்வா மஹர்ஷிஸித்தஸங்கா:
ஸ்துவந்தி த்வாம் ஸ்துதிபி: புஷ்கலாபி:

இத்தேவர்குழாங்கள் தேவரீர்அருகில் நெருங்கிவருகின்றனர்; அவர்களுள் சிலர் அஞ்சிக் கைகூப்பித்துதிக்கின்றனர்; மஹரிஷிகளும் ஸித்தர்கணங்களும் மங்களங்கள் உண்டாகவேண்டும் என்று கூறி ஸம்பூரணமான துதிமொழிகளால் தோத்திரம்புரிகின்றனர்.

22. ருத்ராதித்யா வஸவோ யேச ஸாத்யா
விஶ்வேஶ்விநௌ மருதஶ்சோஷ்மபாஶ்ச
கந்தர்வயக்ஷாஸுரஸித்தஸங்கா
வீக்ஷந்தே த்வாம் விஸ்மிதாஶ்சைவ ஸர்வே.

உருத்திரர்கள், ஆதித்தியர்கள், வஸுக்கள், ஸாத்யர், விசுவேதேவர், அசுவினிதேவர், மருத்துக்கள், பித்ருக்கள், கந்தர்வர், யக்ஷர், அஸுரர், ஸித்தர், இவர்களனைவரும் ஆச்சரியத்துடன் தேவரீரைக் காண்கின்றனர்.

23. ரூபம் மஹத்தே பஹுவக்த்ரநேத்ரம்
மஹாபாஹோ பஹுபாஹூருபாதம்
பஹூதரம் பஹுதம்ஷ்ட்ராகராளம்
த்ருஷ்ட்வா லோகா: ப்ரவ்யதிதா ஸ்ததாஹம்.

மஹாபாஹோ! பற்பலமுகங்கள், கண்கள், அநேககரங்கள், துடைகள், பாதங்கள், பற்பலவயிறுகள், பற்பலகோரைப்பற்கள் இவைகளால் பயங்கரமாயிருக்கிற தேவரீருடைய மஹத்தான உருவத்தைப்பார்த்து உலகத்தார் அனைவரும் அடியேனும் அஞ்சி நடுக்கமெய்துகிறோம்.

24. நப: ஸ்ப்ருஶம் தீப்த மநேகவர்ணம்
வ்யாத்தாநநம் தீப்தவிஶாலநேத்ரம்
த்ருஷ்ட்வாஹித்வாம் ப்ரவ்யதிதாந்தராத்மா
த்ருதிம் நவிந்தாமி ஸமம்சவிஷ்ணே.

விஷ்ணுவே!—(எங்கணும் நிறைந்துறையும் எம்பிரானே!) பரமபதத்தை அளாவி, ஒளிவீசி, பல்வேறுநிறம்பூண்டு வாய்திறந்து, விசாலநேத்திரங்கள் விளங்கநிற்கின்ற தேவரீரைக்கண்டு அஞ்சிய நெஞ்சினனாகிய யான் உடல்தரிப்பும் சாந்தியும் அடையப்பெற்றிலேன்.

25. தம்ஷ்ட்ராகராளாநிச தே முகாநி
த்ருஷ்ட்வைவ காலாநலஸந்நிபாநி
திஶோ நஜாநேநலபேச ஶர்ம
ப்ரஸீத தேவேஶ ஜகந்நிவாஸ.

கோரைப்பற்களால் பயங்கரமாய், ஊழித்தீயைப்போன்ற தேவரீர் திருமுகங்களைக்காண்டலுமே திசையறியாது தடுமாறுகிறேன்; ஸுகமும்பெறவில்லை; உலகங்கட்கு இருப்பிடமாகும் பிரமனாதிய தேவர்கட்கு ஈசுவரனாகிய கிருஷ்ண! தேவரீர் அடியேனை அநுக்கிரஹிக்கவேண்டும்.

26. அமீ ஸர்வே த்ருதராஷ்ட்ரஸ்ய புத்ரா:
ஸர்வைஸ்ஸ ஹைவாவனிபாலஸங்கை:
பீஷ்மோத்ரோண: ஸூதபுத்ர ஸ்ததாஸௌ
ஸஹாஸ்மதீயைரபி யோதமுக்யை:
27. வக்த்ராணி தே த்வரமாண விஶந்தி
தம்ஷ்ட்ராகராளாநி பயாநகாநி
கேசி த்விலக்நா தஶநாந்தரேஷு
ஸம்த்ருஶ்யதே சூர்ணிதை ருத்தமாங்கை:

இந்தத் திருதராஷ்டிரன்மக்கள் எல்லோரும் அவர்களைச்சார்ந்த மற்ற எல்லாஅரசக்கூட்டத்தாரும், பீஷ்மரும், துரோணரும்,

அங்ஙனே ஸூதன்மகனுகிய இந்தக்கர்ணனும், நம்மவரான முக்கிய வீரரும், உக்கிரரூபமான கோரைப்பற்களால் பயங்கரமான நுமது வாய்களில் விரைவுடன் நுழைகின்றனர்; அவர்களுட்சிலர் நினது பற்களிடையே அகப்பட்டுத் தலைபொடிபடக் காணப்படுகின்றனர்.

28. யதா நதீநாம் பஹவோம்புவேகா:
ஸமுத்ரமேவாபிமுகா த்ரவந்தி
ததா தவாமீ நரலோகவீரா
விஶந்தி வக்த்ரா ண்யபிவிஜ்வலந்தி.

" ஆற்றின் புனல்வேகம் ஆழியிடை நோக்கிப்போய்
ஊற்றத் தடையுமா றொக்குமே—சீற்றத்துத்
தீயமரு நின்முகங்கள் சென்றுலக வீரரெல்லாம்
போயடையுமாறு புகுந்து." (ப. கீ. வெ. 29).

இங்கு உவமையின் அமைதி உற்றுநோக்கற்பாலது; ஆறு ஆழியிடைப்புகுந்து நாசமடைவதாவது ஆற்றின்ஓட்டம் அழிவது; தனித்து நீர்ப்பெருக்காகஇருக்கும் நிலை விட்டுப்போதல். மேலும் பெருக்கு தன்இச்சைப்படி சென்றவழியேதிரும்ப முடியாது. எவ்வளவு ஆறுகள் புகுந்தும் ஸமுத்திரத்திற்கு பூர்த்திஏற்படாதது போல இத்துணைபேர் வாய்வழியேபுகுந்தும் பகவானுக்கும் பூர்த்திஉண்டாகாது என்றபடி.

29. யதா ப்ரதீப்தம் ஜ்வலனம் பதங்கா
விஶந்தி நாஶாய ஸம்ருத்த வேகா:
ததைவ நாஶாய விஶந்தி லோகா:
தவாபி வக்த்ராணி ஸம்ருத்தவேகா:

" ஓங்கி எரிமுகத்தில் ஓடியே விட்டிலெல்லாம்
ஆங்கு விழுமாறதுபோல—வீங்குலகம்
உன் முகங்கள் தன்னிடையில் உற்றே விழுங்கண்டாய்
தன் முகஞ்செய் நாசத்தைச் சார்ந்து." (ப. கீ. வெ. 30).

இங்கு வேறொருவமை நயம்படஉரைக்கிருர். விட்டில் எரியில்வீழ்ந்து மாய்வதென்பது வேறுபொருளானசாம்பலாகுதல்; முந்தியஉவமத்தில் ஆற்றுநீர் கடல் நீருடன் கூடி ஓட்டம்என்னும் நிலை அழியப்பெறுமேயன்றி நீர்நீராகவேஇருக்கும் என வேறுபாடு அறியத்தக்கது; தன் இச்சையாலுண்டானசெயலைக் காரணமாகவுடையது விட்டில் தீயில்விழுவதென்பது. இறைவனை எரியினுக்கு உவமித்தது எதிரிகளை நாசஞ்செய்தலைக்கருதி.

30. லேலிஹ்யஸே க்ரஸமான: ஸமந்தால்
லோகாந் ஸமக்ராந் வதனைர்ஜ்வலத்பி:
தேஜோபி ராபூர்ய ஜகத் ஸமக்ரம்
பாஸஸ்தவோக்ரா: ப்ரதபந்தி விஷ்ணோ.

" ஓங்கும் எரிமுகங்களாலே யுலகனைத்தும்
வாங்கி விழுங்கிப்பின் வாய்நக்கும்—ஆங்குனது
பேரொளிதந் தேசாற் பெருகத் தபிப்பிக்கும்
பாருகம் எங்கும் பரந்து." (ப. கீ. வெ. 31).

31. ஆக்யாஹி மே கோ பவா நுக்ரரூபோ
நமோஸ்து தே தேவவர ப்ரஸீத
விஜ்ஞாது மிச்சாமி பவந்த மாத்யம்
நஹிப்ரஜாநாமி தவ ப்ரவ்ருத்திம்.

இத்தகைய உக்கிரரூபனான நீர்யார்? (உனது நிரங்குச ஐசுவர்யத்தை காணவிரும்பிய எனக்கு இந்த கோரரூபத்தைக் காட்டுவது என்பொருட்டோ) எனக்கு விளங்கஉரைத்தருள்வாய்; உமக்கு நமஸ்காரம்; தேவவர! அநுக்கிரஹம்புரிவீராக. ஆதி புருஷனான தேவரீரைத் தெரிந்துகொள்ள இச்சைமிக்குளேன்; நீர் செய்யப்புகும்கார்யம் எனக்குத்தெரியவில்லை.

இதனால் 'ஸம்ஹாரம்செய்வதற்கு எடுத்த இந்தரூபத்தின் காரணத்தை விளக்கிய பின்பு தேவரீர் பிரஸன்னமான ரூபமுடையவராய் ஆகிவிடவேண்டும்' என்று அருச்சுனன் வேண்டுகின்றான்.

அவ [பார்த்தஸாரதியாகிய பகவான் தன்அபிப்பிராயத்தை வெளியிடுகிறார். அருச்சுனனைத்தூண்டி போர்புரியச்செய்வதற்கு, துர்யோதனாதியர் யாவரையும் அருச்சுனன் உதவியின்றியே நாசம்செய்யத் தானே தொடங்கியுள்ளசெயலைத் தெரிவிக்கிறார்].

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ பகவான் விளம்புவார்.

32. காலோஸ்மி லோகக்ஷயக்ருத் ப்ரவ்ருத்தோ
லோகாந் ஸமாஹர்த்துமிஹ ப்ரவ்ருத்த:
ருதேபி த்வாம் நபவிஷ்யந்தி ஸர்வே
யேவஸ்திதா: ப்ரத்யநீகேஷு யோதா:

துரியோதனனாதியர் ஆயுளின்முடிவை எண்ணிக்கொண்டுள்ள நான் அவர்களுக்கு நாசத்தைச்செய்பவனாய் இந்த பயங்கரரூபத்

துடன் பருத்துத்தோற்றி ஸம்ஹாரம் செய்யமுயன்றுளேன்; எதிரிப்படைகளிலுள்ளோர், நீஇங்கு இல்லாவிட்டாலும் நீ போர்புரியாவிடினும் எல்லோரும் இனி பிழைத்திருக்கப்போவதில்லை.

33. தஸ்மாத் த்வமுத்திஷ்ட யஶோலபஸ்வ
ஜித்வா ஶத்ரூந் புங்க்ஷ்வராஜ்யம் ஸம்ருத்தம்
மயைவைதே நிஹதா: பூர்வமேவ
நிமித்தமாத்ரம் பவஸவ்யஸாசிந்.

* ஸவ்யஸாசி! ஆதலால் நீயுத்தம்செய்யஎழுந்திரு; நினது பகைவரைவென்று புகழும் ஸம்பூர்ணமான ராஜ்யமும்பெற்று அனுபவிப்பாய்; என்னாலே இவர்கள் முன்பேகொலையுண்டார்; நீ எனது ஆயுதம் முதலியவைகளைப்போல் துணைக்காரணமாகமட்டும் இரு.

34. த்ரோணம்ச பீஷ்மம்ச ஜயத்ரதம்ச
கர்ணம் ததாந்யாநபி யோதவீராந்
மயாஹதாம் ஸ்த்வம்ஜஹி மாவ்யதிஷ்டா:
யுத்யஸ்வ ஜேதாஸிரணேஸபத்நாந்.

துரோணன், பீஷ்மன், ஜயத்ரதன், கர்ணன், மற்றுமங்குள்ள யுத்தவீரரனைவரும் என்னால் கொல்லப்பட்டனர்; அவர்களை நீ கொல்லக்கடவாய்; துக்கப்படாதே; போர்புரிவாயாக; போரில் பகைவரை வென்றேதீருவாய்.

ஸஞ்ஜய உவாச - ஸஞ்ஜயர் கூறுவார்.

35. ஏதச் ச்ருத்வா வசநம் கேஶவஸ்ய
க்ருதாஞ்ஜலி ர்வேபமாந: கிரீடீ
நமஸ்க்ருத்வா பூய ஏவாஹ க்ருஷ்ணம்
ஸகத்கதம் பீதபீத: ப்ரணம்ய.

"கேசவன்தன் இவ்வசனம் கேட்ட கிரீடிதான்
நேசமுடன் கைதொழுது நின்றிறைஞ்சி—மாசறுசீர்க்
கண்ணனைப் பின்னும் பகர்ந்தான் கத்கதமாங் கண்டத்தால்
உண்ணடுக்க மெய்தி வணக்குற்று." (ப. கீ. வெ. 36).

[கிரீடி - அருச்சுனன்; கற்கதமாங்கண்டத்தால் - தழதழத்தகுரலுடன்; உண்ணடுக்கம் - உள் + நடுக்கம்.]

---

*இடதுகையினாலும் அம்புகளை பலபலவாகவிடக்கூடியவன் - எனவே இருகரங்களாலும் வில்லெய்யும் ஆற்றலுடையோன் அருச்சுனன் என்றபடி.

36. ஸ்தாநே ஹ்ருஷீகேஶ தவ ப்ரகீர்த்யா
ஜகத் ப்ரஹ்ருஷ்ய த்யநுரஜ்யதே ச
ரக்ஷாம்ஸி பீதாநி திஶோ த்ரவந்தி
ஸர்வே நமஸ்யந்தி ச ஸித்தஸங்கா:

ஹ்ருஷீகேச! நுமது பெரும்புகழால் உலகம் மகிழ்வெய்தி நும்மிடம் அன்புகாட்டுகின்றது; அரக்கர் அச்சம்மிகுந்து எல்லாத் திசைகளேயும் நோக்கியோடுகின்றனர்; ஸித்தர் வித்யாதரர்முதலிய பக்தர்களின்கூட்டங்கள் நமஸ்கரிக்கின்றன; இவைஎல்லாம் நுமக்குத்தகும்.

இங்கு உலகம் என்றது பாரதப்போரைக்காண விரும்புற்றுவந்திருக்கும் எல்லா தேவர்கள், கந்தர்வர், ஸித்தர், யக்ஷர், வித்யாதரர், கிந்நரர், கிம்புருஷர்முதலியோர் உலகங்களே. பகவத்விஷயம் ஒரொருவகுப்பினரை ஒரொருவகையாக்கியது என்றபடி.

37. கஸ்மாச்ச தே நநமேரந் மஹாத்மன்
கரீயஸே ப்ரஹ்மணோப்யாதிகர்த்ரே

மஹாத்ம! நான்முகனுக்கும் ஆதியும் கர்த்தருமாய் உயர்ந்தோராகிய நும்மைக்குறித்து அந்நான்முகன்முதலியோர் ஏன்தான் நமஸ்காரம் செய்யமாட்டார்கள்? செய்தேதீருவர் என்றபடி.

இங்கு உபலக்ஷணத்தால் அரக்கர் ஏன் பயந்து ஓடமாட்டார்கள் என்றும் இம்முறையே மேலும் கொள்க.

37½ அனந்த தேவேஶ ஜகந்நிவாஸ
த்வமக்ஷரம் ஸதஸத் தத்பரம் யத்.

38. த்வமாதி தேவ: புருஷ: புராண:
த்வமஸ்ய விஶ்வஸ்ய பரம் நிதாநம்

அனந்த! தேவேச! ஜகந்நிவாஸ! அழிவற்ற ஜீவாத்மாவும் நீரே; ஸத்தும் அஸத்தும் நீரே; அவைஇரண்டிற்கும் மேலான பரிசுத்தஆத்மா என்று சொல்லப்படுவது எதுவோ அதுவும் நீரே; ஆதலின் நீரே ஆதியாகியதேவன், அனாதியாகியபுருஷன்; நீரே இவ்வுலகட்குமுக்கியமான உறைவிடம்.

ஜீவனுக்கு பிறப்பு இறப்புஇல்லை என்று கடவல்லி—I-2-18-ல் கூறியுள்ளபடி இங்கு அது நாசமற்றது என்னும்பொருளில் 'அக்ஷரம்' என்னப்படுகின்றது. ஸத்துஎன்றது பெயர், வடிவுகளால் வெவ்வேருனகாரியதசையையுடை பிரகிருதி; அஸத்து—அவையில்லாததால் காரணதசையிலுள்ள மூலப்பிரகிருதி. பெயர்வடிவுடன் காணப்படும் உப்புக்கட்டி நீரில் கரைந்து பெயர்வடிவிழந்து நீருடன்ஒன்ருய்க் கலந்துநிற்பதுபோல் பிரஹ்மத்தில் லயம்அடைந்துள்ளநிலை. இவ்வுலகங்கட்குஉறைவிடம் என்றது சர்வேசுவரன் தன்சரீரமாகிய இவ்வுலகட்கு ஆத்மாவாக இருந்து அவற்றைதரிக்கிருன் என்று பொருள்.

38½. வேத்தாஸி வேத்யம்ச பரம்சதாம
த்வயாததம் விஶ்வம் அநந்தரூப.

அநந்தரூப! இவ்வுலகில் அறிபவர்கள், அறியப்படும்பொருள்கள் யாவும் நீரே; இங்ஙனம் எல்லாவற்றிற்கு ஆத்மாவாகவுள்ளநீரே, அடையவேண்டிய உயர்ந்தஇடம். நீரே ஆத்மாவாக வுள்ளுறைந்த வண்ணம் இவ்வுலகனைத்தினும் பரந்துள்ளீர்.

அவ [ஆதலால் வாயுமுதலிய சொற்களால் சொல்லப்படுபவரும் நீரே என்கிறுன்].

39. வாயு ர்யமோக்நி ர்வருண: ஶஶாங்க:
ப்ரஜாபதி ஸ்த்வம் ப்ரபிதாமஹஶ்ச

வாயு, யமன், அக்னி, வருணன், சந்திரன், சதுர்முகன், பிரமனுக்கும்தகப்பன் என்னும்சொற்கள் உம்மையேசொல்லும்.

தைத்திரீய ப்ராம்மணம் 6-7லும் தைத்திரீய நாராயணம் 1-7லும் கூறியுள்ளபடி எல்லார்க்கும் ஆத்மாவாதலின் இங்ஙனம் கூறப்பட்டுள்ளது. நான்முகன் நமதிடம் பிறந்த புத்திரன்; ஆதலின் நான்முகனிடம் பிறந்த மக்கட்கு நீரே பெரிய பாட்டனும் ஆகின்றீர் என்றவாறு.

39½. நமோ நமஸ்தேஸ்து ஸஹஸ்ரக்ருத்வ:
புநஸ்ச பூயோபி நமோ நமஸ்தே.

40. நம: புரஸ்தா தத ப்ருஷ்டதஸ்தே
நமோஸ்துதே ஸர்வத ஏவ ஸர்வ

யாவையும் எவையுமாவர்ய்! நுமக்கு ஓராயிரம் நமஸ்காரங்கள் புரிகின்றேன்; மீண்டும் மீண்டும் நும்மையேவணங்குகின்றேன்; அன்றியும் நுமது முன்புறத்திலும் பின்புறத்திலும் கும்பிடுகின்றேன்; நும்மைச்சுற்றிச்சுற்றி எல்லாப்புறங்களிலும் நான்செய்யும் நமஸ்காரங்கள் பலவாகஇருக்கட்டும்.

40½. அநந்தவீர்ய அமிதவிக்ரமஸ்த்வம்
ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:

எல்லையற்ற வீர்யமுடையீர்! அளவற்றவலிமையுடைய தேவரீர் எல்லாவற்றிலும் நிறைந்துநிற்கின்றீர்; ஆதலின் நீர்எல்லாமாயும் ஆகின்றீர்.

இங்கு இறைவன் எல்லாமாய்ச் சொல்லப்படுவது சேதனுசேதனங்களனைத்தும் அவனுக்குச்சரீரமும் அவன் ஆத்மாவும் ஆதலால் என்னும்பொருள் இங்கு விளக்கமாகவே உறைக்கப்பட்டுள்ளமை கருதத்தக்கது.

41. ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம்
ஹே க்ருஷ்ண! ஹே யாதவ! ஹே ஸகேதி!
அஜாநதா மஹிமாநம் தவேதம்
மயா ப்ரமாதாத் ப்ரணயேந வாபி.

42. யச்சாபஹாஸார்த்த மஸத்க்ருதோஸி
விஹாரஶய்யாஸந போஜநேஷு
ஏகோதவாப்யச்யுத தத்ஸமக்ஷம்
தத் க்ஷாமயேத்வாமஹமப்ரமேயம்.

"உன்பெருமை தன்னை உணராதே தோழனேன்
முன்பயிலு நெஞ்சால் முயன்றுநான்—அன்பதனுல்
ஏகண்ணு ஏதோழா ஏயாதவா வென்பன்
மோகந் தன்னுலே முனிந்து."

"மேவுவிளை யாட்டில் விஹாரம் கிடையிருப்பு ஊண்
ஓவுதலுற் றுன்னே டுடன்கூடித்—தேவனே
உன்னைத் தனியில் திரளில் உயர்வழித்த
தன்னைப் பொறுப்பிப்பன் தாழ்ந்து." (ப. கீ. வெ. 42, 43).

[விஹாரம் - விளையாட்டு; கிடை - படுக்கை.]

43. பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய
த்வமஸ்ய பூஜ்யஶ்ச குருர்கரீயாந்
நத்வத்ஸமோஸ்த்யப்யதிக: குதோந்ய:
லோகத்ரயேப்ய ப்ரதிமப்ரபாவ.

"நீயுலவி நிற்கின்ற நீடுலகிற் கேய்ந்தபிதா
வாயும் ஆராத்தியனும் வண்குருவும்—ஆயுமுனக்(கு)
ஒப்பதுமீ தொன்றில்லை உன்பெருமை மூவுலகில்
செப்பஎதி ரில்லாய் சிறந்து." (ப. கீ. வெ. 44).

44. தஸ்மாத் ப்ரணம்ய ப்ரணிதாய காயம்
ப்ரஸாதயே த்வாமஹமீஶமீட்யம்
பிதேவ புத்ரஸ்ய ஸகேவ ஸக்யு:
ப்ரிய: ப்ரியார்ஹஸி தேவ ஸோடும்.

"ஆதலால் நின்வணங்கி ஆங்குடலம் தாழ்நெடுக்கி
மீது கப்பிப்பான் இரப்பன் மேல்இறையா—ஓதுமுனைத்
தாதை மகற்குச் சகிசகிக்கு அன்பற்கன்பன்
போது நலம்போல் பொறு." (ப. கீ. வெ. 45).

இதுவும் முன்சுலோகமும், ஸ்ரீபாஷ்யகாரர் என்னும் இராமாநுஜமுனிவரால் தாம்இயற்றிய சரணாகதிகத்தியத்தில் இயைபுபற்றி எடுத்தாளப்பட்டுள்ளதால், அனைவர்க்கும் இவை நித்தியம் அநுஸந்தேயம்.

45. அத்ருஷ்டபூர்வம் ஹ்ருஷிதோஸ்மித்ருஷ்ட்வா
பயேநச ப்ரவ்யதிதம் மநோமே
ததேவ மே தர்ஸய தேவ ரூபம்
ப்ரஸீத தேவேஸ ஜகந்நிவாஸ.

தேவேச! ஜகந்நிவாஸ! முன்காணாத அவ்வடிவை முற்றுங் கண்டுற்று உகந்தேன்; என் மனமோபயத்தினால் நடுங்கியும்விட்டது; ஆதலினால், அந்த பிரஸன்னமான வடிவத்தையே எனக்குக் காட்டி என்பால் அனுக்கிரஹம் புரிந்தருள்வீர்.

46. கிரீடிநம் கதிநம் சக்ரஹஸ்தம்
இச்சாமித்வாம் த்ரஷ்டு மஹம் ததைவ
தேநைவ ரூபேண சதுர்ப்புஜேந
ஸஹஸ்ரபாஹோ பவ விஸ்வமூர்த்தே.

“ நீண்முடியும் தண்டுடனே நேமியுஞ்சேர் உன்னைநான்
காணலுற்றிங் கப்படியே காதலிப்பன்—பூண்மருவும்
அந்நான்கு தோளுருவோ டாயிரந்தோள் அவ்வுருவா
மன்னுநீ மன்னு மகிழ்ந்து.” (ப. கீ. வெ. 47).

இதில் விஸ்வமூர்த்தியாய்க் காட்சிதந்த பகவானைப் பண்டைவண்ணமே நீஎனக்குக் காட்சியளிப்பாய் என்று வேண்டுகின்றனன் அருச்சுனன் என்க.

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ பகவான் பணித்தருள்வான்.

47. மயா ப்ரஸந்நேந தவார்ஜுநேதம்
ரூபம் பரம்தர்ஸிதமாத்ம யோகாத்
தேஜோமயம் விஸ்வமநந்தமாத்யம்
யந்மே த்வதந்யேந நத்ருஷ்டபூர்வம்.

அருச்சுன! இச்சிறந்த என்வடிவை நின்பால் அருள்பூண்டு ஆத்மயோகத்தால் நின்கண்ணுக்கு இலக்காக்கினேன்; தேஜோமயமாய், எல்லாவற்றிற்கும் அந்தரியாமியாய், எல்லையற்றதாய் அனைத்திற்கும் காரணமாயும்உள்ள இவ்வடிவத்தை உன்னைத்தவிர வேறு ஒருவரும் இதற்குமுன்பு பார்த்ததேகிடையாது.

இங்கு, ஆத்மயோகம் என்றது ஸத்யஸங்கல்பனாயுள்ள பகவானது கல்யாண குணங்கள்; ஸத்யஸங்கல்பன் - நினைத்தபடியே நிறைவேற்றவல்லவன்.

அவ [என்னையன்றி வேறொன்றையும் பயனாகக்கருதாதவர்களே எனது இம் மாதிரியுள்ள யதாவஸ்திதநிலையைப் பார்க்கக்கூடும்; இங்ஙனில்லாது வேறு எவ்வழியாலும் என்னைப்பார்க்க முடியாதென்கிறார்].

48. நவேத யஜ்ஞாத்யயனைர் நதானை:
நசக்ரியாபிர்ந தபோபிருக்ரை:
ஏவம்ரூப: ஶக்ய அஹம் ந்ருலோகே
த்ரஷ்டும் த்வதந்யேந குருப்ரவீர.

குருவம்ஶத்தில்சிறந்த வீர! இத்தகைய ஸ்வபாவத்தையுடைய யான் மனிதஉலகில் உன்னைத்தவிர வேறுஒருவனாலும், வேதத்தைப் பொருளுடன்கற்றல், வேள்விபுரிதல், வேதமூலபாடம்ஓதுதல், தானதருமம்செய்தல், கருமங்களியற்றுதல், கடுந்தவம்புரிதல் இவைகள் மாத்திரத்தினால் காண இயலாதவன்.

49. மா தே வ்யதா மாச விமூடபாவோ
த்ருஷ்ட்வா ரூபம் கோரமீத்ருங்மமேதம்
வ்யபேதபீ: ப்ரீதமனா: புனஸ்த்வம்
ததேவ மே ரூபமிதம் ப்ரபஶ்ய.

"என் கொடியஉருபம் இதுகண்டு உளங்கலங்கா(து)
உன் கொடியதுன்பம் ஒழிந்திடுநீ—நன்குடைய
நெஞ்சால் பயம்துறந்து நீஅந்த இன்வடிவை
எஞ்சாது காணாய் இனி." (ப. கீ. வெ. 50).

(எஞ்சாது - குறைவின்றி, பூர்ணமாக.)

ஸஞ்ஜய உவாச - ஸஞ்ஜயன் உரைப்பான்.

50. இத்யர்ஜுனம் வாஸுதேவ ஸ்ததோக்த்வா
ஸ்வகம்ரூபம் தர்ஶயாமாஸபூய:
ஆஶ்வாஸயாமாஸ ச பீதமேனம்
பூத்வா புன: ஸௌம்யவபுர்மஹாத்மா.

இங்ஙனம் வாஸுதேவன் அருச்சுனனுக்குச்சொல்லி மீண்டும் தன் பண்டைவண்ணத்தைக் காட்டினன்; ஸத்யஸங்கல்பனாகிய ஸ்ரீகிருஷ்ணனும் மறுபடியும் தன் இனிவடிவம்கொண்டு அச்சமுற்றிருந்த அருச்சுனனைத் தேற்றியருளினான்.

இங்கு அருச்சுனனுக்கு மீட்டும்காட்டிய கண்ணனுருவில் நான்குகைகள் இருந்தன என்று கூறப்படுகின்றது. கம்ஸனிடம்பயந்த வஸுதேவர் வேண்டுதலுக்கு இணங்கி இருகரங்களை மறைத்தருளிய கண்ணன் கம்ஸனைக் கொன்றொழித்தபின்பு நான்குபுஜங்களுடனேயே விளங்கினன்என்ப. "தேனைவரூபேண சதுர்ப்புஜேந" என்று ஈண்டு அருச்சுனன் வேண்டுவதும் இதனைவலியுறுத்தும்.

அர்ஜுந உவாச - அருச்சுனன் கூறுதல்.

51. த்ருஷ்ட்வேதம் மாநுஷம் ரூபம் தவ ஸௌம்யம் ஜநார்த்தந
இதாநீ மஸ்மி ஸம்வ்ருத்த: ஸசேதா: ப்ரக்ருதிம் கத:

"தானிறையைப் பார்த்தன் தகவுரைத்தான் மாயனே
மானிடமா நின் அழகார் மாமேனி—யான்எனது
கண்ணாரக்கண்டு கருத்தமர்ந்தேன் தன்மையினில்
திண்ணாரச் சேர்ந்தேன் சிறந்து." (ப. கீ. வெ. 52).

இங்கு உலகில், காணப்படும் மனிதரூபம்போலல்லாது எல்லையற்றமேன்மை, அழகு, இளமை, லாவண்யம் முதலியவற்றுடன்கூடி விளங்கும் அப்பிராகிருத திவ்ய மங்களவிக்ரஹமே கண்ணன் வடிவம் என்றபடி.

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ கிருஷ்ணபகவான் விளம்புவான்.

52. ஸுதுர்தர்ஶ மிதம் ரூபம் த்ருஷ்ட்வா நஸி யந்மம
தேவா அப்யஸ்ய ரூபஸ்ய நித்யம் தர்ஶநகாங்க்ஷிண:

உனக்கு யான்காட்டிய எனதுவடிவம் ஒருவராலும் காண்டற்கரியது; தேவர்களும் இந்தவடிவத்தைக்காண எப்பொழுதும் ஆவல் மிக்குடையர் - எனினும் அவர்களும் கண்டதில்லை.

இங்கு தேவர்கள் என்பதற்கு நித்யஸூரிகள் என்றும் பொருள்தரப்பட்டுள்ளது. தனக்குந் தன்தன்மை அறிவரியபிரானை அவனையொழிந்தார் காண்பதெங்ஙனம் என்க.

அவ [ஏனெனில்,]

53. நாஹம் வேதைர் நதபஸா ந தாநேந ந சேஜ்யயா
ஶக்ய ஏவம்விதோ த்ரஷ்டும் த்ருஷ்ட்வா நஸி மாம் யதா.

வேதங்கள், தவம், தானம், வேள்வி, ஆதியவற்றால் எனது உண்மைநிலையானது நீ இப்போது கண்டதுபோல் காண இயலாது.

54. பக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம் விதோர்ஜுந
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப.

பரந்தப! என்னையன்றி வேறொன்றையும்விரும்பாத பக்தியினாலேயே என்னுடைய இவ்வடிவம் உள்ளவாறேஅறியவும், தரிசிக்கவும், முழுதும் அநுபவிக்கவும் சாத்தியமாகும்.

'ஞாதும்,' 'த்ரஷ்டும்,' 'ப்ரவேஷ்டும்' என்றதால் பரமாத்மாவை அறிதல், தரிசித்தல், அடைந்து அநுபவித்தல் என்னும் மூவகை அடைவுகள் கூறப்பட்டுள்ளன; இவைமுறையே மஹாவிஸ்வாஸம், தியானம், அபிநிவேசரூபமானபக்தி இம்மூன்றாலும் கைகூடும்என்பர். கடோபநிஷத் (I-2-23) இங்கு ஓதி உணர்தற்குரியது.

55\. மத்கர்மக்ரு ந்மத்பரமோ மத்பக்த: ஸங்கவர்ஜித:
நிர்வைர: ஸர்வபூதேஷு ய: ஸமாமேதி பாண்டவ.

பாண்டவ! எவன், எல்லாக்கருமங்களையும் எனக்கு ஆராதன ரூபங்கள்என்று கருதிச்செய்கின்றனனோ, என்னையே தானடையும் பயனாக உடையனோ, என்னையே பக்திசெய்கின்றனனோ, என்னையொழிந்த எல்லாவற்றிலும் பற்றற்றவனோ, ஸமஸ்தபிராணிகளிடத்தும் பகைமையற்றவனோ அவனே என்னை அடைவான்.

"அத்தன் அருள்கீதை ஆன்றபதி னொன்றுமோத்
தொத்த உலகனைத்தும் ஒருடம்பாம்—இத்தகவு
பன்னவே தான்காட்டிப் பத்திப் பயன்வகையும்
அன்னவே முற்றியதே ஆய்ந்து."

பதினோராவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ:

பன்னிரண்டாவது அத்தியாயம்

பக்தீ யோகம்.

"பத்தி அறிவால் கடக்கும் பலவகையும்
அத்தின் உகப்பின் அதிசயமும்—முத்திதரும்
பண்பி னருள்கீதை பன்னிரண்டா மோத்துரைக்கும்
திண்பயிலுஞ் சொல்லால் செறிந்து." (ப. கீ. வெ.)

அர்ஜுந உவாச - அருச்சுனன் வினவுவான்.

1. ஏவம் ஸததயுக்தா யே பக்தா: த்வாம் பர்யுபாஸதே
யே சாப்யக்ஷர மவ்யக்தம் தேஷாம் கே யோகவித்தமா:

எவர்கள் பக்தியுடன் எப்பொழுதும் நம்முடனே கூடியிருக்க வேண்டும் என்னும் அவாவுடையராய் இங்ஙனே நம்மை உபாஸனமாகும் வழிபாடுசெய்கின்றனரோ, எவர்கள் புலன்களால் அறியக் கூடாத அழிவற்ற ஜீவாத்மாவை உபாஸனம்செய்கின்றனரோ, இவ்விருவகையோருள் யாவர்தான் யோகத்தை நன்குஅறிந்தவர்?

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ கிருஷ்ணன் விடைதருவான்.

2. மய்யாவேஸ்ய மநோ யேமாம் நித்யயுக்தா உபாஸதே
ஸ்ரத்தயா பரயோபேதா: தே மே யுக்ததமா மதா:

எவர்கள் என்பால் மனம்வைத்து எப்பொழுதும் என்னைச் சேர்ந்திருக்கவிரும்பிச் சிரத்தைமிகுந்து என்னை உபாஸனம்புரிகின்றனரோ, அவர்களே யோகம்புரிவோருள் சாலச்சிறந்தவர் என்று நான்கருதுகிறேன்.

இதனால் இவ்வகையினர் இடையூறின்றி என்னை விரைவின்எய்துவர் என்கிறார் பகவான்.

3. யே த்வக்ஷர மநிர்தேஸ்ய மவ்யக்தம் பர்யுபாஸதே
ஸர்வத்ரக மசிந்த்யம்ச கூடஸ்த மசலம் த்ருவம்.

4. ஸம்நியம்யேந்த்ரியக்ராமம் ஸர்வத்ர ஸமபுத்தய:
தே ப்ராப்நுவந்தி மாமேவ ஸர்வபூதஹிதே ரதா:

தேவமானிட வாசகங்களால் உரைக்கவொண்ணாததும், கண்முதலிய புலன்கட்கு எட்டாததும், தேவர்முதலிய எல்லாச்சரீரங்களிலும் உள்ளதும் சிந்தித்தற்குமரியதும், எல்லாவற்றிலும் ஒத்தபடித்

தாயுள்ளதும், அசைக்கலாகாததும், என்றுமுள்ளதும் ஆகிய ஜீவாத்மாவை எவர்கள் புலன்களின் கூட்டத்தை அவ்வவற்றின் கருமங்களைப்புரியவொட்டாமல் அடக்கி, தேவ மானிட சரீரங்களனைத்தினும் ஜீவாத்மாக்கள் ஞானநிலையால் ஒன்றேடொன்று ஒத்தவை என்னும் அறிவுடன், பிராணிகளனைத்தின் நன்மையையேவிரும்பி, உபாஸனம் புரிகின்றனரோ அவர்கள், என்னைஒத்திருக்கும் பரிசுத்தமானஜீவாத்மாவை அடைகின்றனர்.

இங்கு என்னையடைகின்றனர் என்றது என்னைப்போன்ற ஞானகாரமான ஜீவனை அடைகிறார்கள் என்றே பொருள்கொள்ளல்வேண்டும்; "மமஸாதர்ம்யமாகதா:" என்றும் மேலே பகவானேகூறப்போகிறான். மேல் சுலோகத்தாலும் இப்பொருளுண்மைவிளங்கும்.

5. க்லேஸோऽதிகதர ஸ்தேஷாம் அவ்யக்தாஸக்த சேதஸாம்
அவ்யக்தாஹி கதிர் துக்கம் தேஹவத்பி ரவாப்யதே.

இந்திரியங்கட்கும் புலப்படாத ஆத்மஸ்வரூபத்தினிடத்தில் ஆர்வம்மிக்க மனமுடையோர்கட்கு கிலேசங்கள் மிகஅதிகம்; புலப்படாத ஆத்மாவைப்பற்றிய மனோவியாபாரம் சரீரம்படைத்தவர்களால் வெகுசிரமத்துடன் அடையவேண்டியிருக்கிறதன்றோ?

வாஸனையின் பலத்தால் சரீரமே ஆத்மா என்று உடலெடுத்தோர் எண்ணுகின்றனர்; ஆதலின் உடலின் வேறுபட்டது உயிர் என்று அறிந்து அதனை அடைதல் அருமைத்தே என்றபடி. "ஒற்றுமைநயத்தின் ஒன்றெனத்தோன்றினும், வேற்றுமைநயத்தின் வேறேஉடலுயிர்" என்னும் நன்னூல் சூத்திரமும் காண்க.

அவ [பகவதுபாஸனம் செய்வோரே சிறப்புடையோர் என்று வெளிப்படையாய்க் கூறுகிறார்].

6. யேது ஸர்வாணி கர்மாணி மயி ஸந்ந்யஸ்ய மத்பர:
அநந்யேநைவ யோகேந மாம் த்யாயந்த உபாஸதே.

"ஏவர் தொழிலனைத்தும் என்னிடைவைத்து எற்பரராய்
மேவி அனன்னியமாம் மெய்யோகச்—சேவையினால்
என்றும் தியானித் தியன்றோர் எனைமருவி
நின்றிங்கு உபாசிப்பார் நேர்ந்து." (ப. கீ. வெ. 6).

[ஏவர் - எவர்கள்; எற்பரராய் - என்னையே முக்கியமான பயனாய்க்கருதி; அனன்னியம் - வேறொருபயனை யுடையதல்லாத].

உடலைக்காக்கவேண்டி உண்டை, உடையாதியவற்றைச்சேகரிக்கும் சிலலௌகீக கர்மங்களும், யஜ்ஞம், தானம், தவம், ஹோமம்முதலிய வைதிககர்மங்களையும் அவற்றின்காரணத்துடனும் எதிர்பார்க்கும்பலத்துடனும் பகவானிடம் சமர்ப்பணம் செய்தல் கூறப்படுகின்றது.

7. தேஷா மஹம் ஸமுத்தர்த்தா ம்ருத்யு ஸம்ஸாரஸாகராத்
பவாமி நசிராத் பார்த்த! மய்யாவேஶித சேதஸாம்.

பார்த்த! என்னொருவனிடமே அன்புடன் அமர்ந்தமனத்தினரை யமனே வடிவெடுத்துவந்ததோ என்றுகூறும்படியான மிகக் கொடிய ஸம்ஸாரஸாகரத்தினின்று வெகுவிரைவில் கரையில் எடுக்கிறேன்.

பகவானை அடைந்தபிறகே இவன் அம்ருதனாகிறான்; ஆதலின் ஸம்ஸாரத்தை ம்ருத்யு - யமன் என்று உபசரிக்கப்பட்டது.

8. மய்யேவ மந ஆதத்ஸ்வ மயி புத்திம் நிவேஶய
நிவஸிஷ்யஸி மய்யேவ அத ஊர்த்வம் நஸம்ஶய:

" என்னிடையே நெஞ்சையமர்ந்து என்பால் துணிவினைவை
பின்னிதன்மேல் சங்கையில்லை பீடுடனே—மன்னியமர்ந்(து)
என்பாலே என்றும் இனிதா யிருப்புதிநீ
அன்பாலே சொன்னேன் அமர்ந்து." (ப. கீ. வெ. 8).

9. அத சித்தம் ஸமாதாதும் ந ஶக்னோஷி மயிஸ்திரம்
அப்யாஸயோகேந ததோ மா மிச்சாப்தும் தனஞ்சய.

" உன்நெஞ்சை என்பால்நீ உற்றிருக்க மாட்டாயேல்
பின்னன்பி னிற்பயிலும் பெற்றிமைசேர்—நல்நெஞ்சுற்(று)
என்னை யடைந்தமர்வான் இச்சியாய் நிச்சயித்து
மன்னு தனஞ்சயனே மற்று." (ப. கீ. வெ. 9).

இதில், தியான அப்பியாசம் - பயிற்சிபுரிவதால் உறுதியான மனஸ்ஸமாதானத்தையடைந்து நாளடைவில் என்னை அடைய இச்சைப்படு என்கிறார்.

10. அப்யாஸேப்யஸமர்த்தோஸி மத்கர்மபரமோ பவ
மதர்த்த மபி கர்மாணி குர்வன் ஸித்தி மவாப்ஸ்யஸி.

" வாய்ந்து பயிலவுநீ மாட்டாயேல் என்னுடைய
எய்ந்த தொழிலின் இயல்வுறுதி—வாய்ந்தெனது
செய்யதொழில் மேவிச் சிறந்தியலும் சிந்தையடைந்(து)
உய்யுநலம் தான்செறிதி உற்று." (ப. கீ. வெ. 10).

இத்தகைய தியான அப்பியாசத்திலும் சக்தியில்லாவிடில் எனது தொழில்களான கோயில்கட்டுதல், பூந்தோட்டங்கள்வைத்தல், திருவிளக்குஏற்றுதல், திருவலகுசேர்த்தல், தண்ணீர்தெளித்தல், மெழுகுதல், நான்மலர்கொணர்தல், பகவதாராதனம்செய்தல், திருநாமங்களைக்கீர்த்திமைபாடல், வலம்வருதல், துதித்தல், வணங்குதல் முதலியவற்றை உள்ளன்புடன்செய்துவந்தால் அது அப்பியாஸத்திலே மூட்டிவிடும்; பின்பு தன்னையடையலாம் என்கிறார் பகவான் என்று கருத்து.

11. அதைதப்யஶக்தோஸி கர்த்தும் மத்யோக மாஶ்ரித:
ஸர்வகர்மபலத்யாகம் தத: குரு யதாத்மவான்.

" என்பக்தி யோகத் திணிந்தித் தொழில்செய்ய
உன்பக்கல் சக்தி யுளதன்றேல்—முன்புற்ற
எல்லாக் கருமத் தியல்பயன் இங்கொழிந்து
செல்லாய் மனமடக்கித் தீர்ந்து." (ப. கீ. வெ. 11).

பக்தியோகத்தின் ஆரம்பதசையான கிழேகூறியுள்ள கைங்கர்யத்தையும் செய்ய இயலாவிடில் பரபக்தியை யுண்டாக்கவல்லதாய் ஜீவாத்மஸ்வரூபத்தை அநுசந்தானம் செய்வதாகிய - முதல்ஆறு அத்யாயங்களில் விரித்துரைக்கப்பட்ட - அக்ஷரயோகத்தை அடைந்து அதற்கு உபாயமாக சர்வகர்மபலத்யாகம் செய்வாயாக என்கிறார்.

12. ஶ்ரேயோ ஹி ஜ்ஞாந மப்யாஸாத்
ஜ்ஞாநாத் த்யாநம் விஶிஷ்யதே
த்யாநாத் கர்மபலத்யாக:
த்யாகாத்ஶாந்தி ரநந்தரம்.

" ஞான மனப்பயில்வின் நன்றுமிக ஞானத்தில்
ஆன தியானம் அதிசயிதம்—தியானத்தில்
கன்மபயன் விட்டியல்வு கட்டழ்கு விட்டியல்வில்
தன்னமருஞ் சாந்தி தலை." (ப. கீ. வெ. 12).

அதிகாரிகளின் வேறுபாட்டால் இங்கு முறையை மாற்றியுரைக்கின்றார்.

13. அத்வேஷ்டா ஸர்வபூதாநாம் மைத்ர: கருண ஏவ ச
நிர்மமோ நிரஹங்கார: ஸமதுக்கஸுக க்ஷமீ.

14. ஸந்துஷ்ட: ஸததம் யோகீ யதாத்மா த்ருடநிஶ்சய:
மய்யர்ப்பிதமநோபுத்தி: யோ மத்பக்த: ஸமேப்ரிய:

" மற்றோ ரிடத்து மறமற்று மித்திரனாய்
உற்றான் கருணை யுறுமமதை—செற்றான்
அகங்காரமற்றான் அமர்பொறையன் துக்கம்
சுகங்காணில் ஒப்பான் துணிந்து."

" பெற்றதமைந் தென்றும் பிறங்குயிர்க்கண் யோகியால்
உற்றமனம் உள்ளொடுக்கி ஓர்ந்துதெளிந்—தற்றமற
என்னமர்ந்த நெஞ்சு துணி வெய்தியான்தான் என்பத்தன்
தன்னமர்ந்து நானுகப்பன் தான்." (ப. கீ. வெ. 13, 14).

[மறமற்று - பகையின்றி; மமதை - எனதுஎன்னும் செருக்கு; செற்றான் - நீக்கியவன்; பொறையன் - தண்மை வெம்மையைப் பொறுத்தவன்; பிறங்கு - பிரகாசமான; ஓர்ந்து - அறிந்து].

15. யஸ்மாந் நோத்விஜதே லோகோ
லோகாந் நோத்விஜதே சய:
ஹர்ஷாமர்ஷ பயோத்வேகை:
முக்தோ ய: ஸசமேப்ரிய:

எவனால் உலகம் அஞ்சுவதில்லையோ, உலகத்திற்கு எவன் அஞ்சாதிருப்பனோ, எவன் களிப்பு, சீற்றம், அச்சம், உத்வேகம்என்னும் மிகுநடுக்கம் இவற்றினின்று விடுபட்டுளனோ அவனும் எனக்கு இனியவன்.

இங்கும் கர்மயோகநிஷ்டன் உலகத்தார் அஞ்சும்செயலைச்செய்யாமல் களிப்பு முதலியவற்றை விட்டுஇருந்தால், உலகமும் இவன் ஒருவர்க்கும் பகைவனல்லன் என்று இவனுக்குப் பயம்தரும்செயலைச்செய்யாதன்றே; நேசம், கருணைமுதலிய குணங்கள் ஒருசேர எய்தப்பெறுவிடினும் உலகம்நடுங்கும்செயலைச் செய்யாமையே ஒருவனிடம் எனக்கு பிரீதியைஉண்டுபண்ணும் என்கிறார். உத்வேகம் - வெறுப்பு என்றும் பொருள்படும்.

16. அநபேக்ஷ: ஶுசிர்தக்ஷ: உதாஸீநோ கதவ்யத:
ஸர்வாரம்பபரித்யாகீ யோ மத்பக்த: ஸமேப்ரிய:

தனது ஆத்மாவையொழிந்த மற்றபொருள்களில் விருப்பமின்றி, அறநூல்களில் கூறியுள்ளமுறைப்படி தூய்மையான உணவுடையனாய், விதித்தனசெய்தலில் திறமையுடையனாய், விலக்கியன ஒழிந்தோனாய், கருமங்கள்புரியுங்கால் உளதாகும் வெம்மை, தண்மையாதியவற்றால் வருந்தாதவனாய், புறம்பானசெயல்களில் தொடக்கமும் அற்றவனாய் என்பால் பக்தியுள்ளவன் எனக்கு இனியவன்.

17. யோ ந ஹ்ருஷ்யதி நத்வேஷ்டி நஶோசதி நகாங்க்ஷதி
ஶுபாஶுபபரித்யாகீ பக்திமாந் ய: ஸமேப்ரிய:

"உகப்பு வெறுப்பு ஒன்றிலுமற் றுட்சோகமற்று
மிகப்பயிலும் ஆசை விடுத்துச்—சகத்தமரும்
நன்மையுடன் தீமை நசித்தியலும் பத்திமான்
என்மனத்தில் இன்பத்தான் இங்கு." (ப. கீ. வெ. 17).

இதில் துக்கத்திற்குக்காரணம் இருந்தும் துக்கியாதிருத்தலே விசேஷம் என்கிறார்; காரணங்களாவன – மனைவி, புத்திரன், செல்வம் இவற்றைஇழத்தல். 'இருள் சேர் இருவினை' என்றபடி புண்யமும் பிறவிக்குவித்தாதலின் இருவினையும்விட்டவன் நன்மையுடன் தீமை நசித்தியலும் பத்திமான் எனப்பட்டான்.

18. ஸம: ஶத்ரௌச மித்ரேச ததா மாநாவமாநயோ:
ஶீதோஷ்ண ஸுகது:க்கேஷு ஸம: ஸங்கவிவர்ஜித:

19. துல்யநிந்தா ஸ்துதிர் மௌநீ ஸந்துஷ்டோ யேந கேநசித்
அநிகேத: ஸ்திரமதி: பக்திமாந் மே ப்ரியோ நர:

பகைவன், நண்பன்; மானம், அவமானம்; தண்மை, வெம்மை; இன்பம், துன்பம்; இவற்றை ஒருபடித்தாய்எண்ணி, எப்பொருளிடத்தும் பற்று அற்று, இசையும் வசையும் ஒன்றெனக்கொண்டு, எதுகிடைப்பினும் அதுபற்றி மகிழ்பவனுய், மனைபுழக்கடைகளில் விருப்பற்றவனுய், நிலைநின்ற மனமுடையனுய், பக்தியையும் உடைய மானிடமௌனி எனக்கு இனியன்.

அவ [இத்தகைய ஆத்மயோகநிஷ்டனிலும் பக்தியோகநிஷ்டனே மிக்கவன் என்று காரணங்காட்டி உபக்கிரமத்தையொட்டி உபஸம்ஹரிக்கிருர்].

20. யேது தர்ம்யாம்ருத மிதம் யதோக்தம் பர்யுபாஸதே
ஶ்ரத்ததாநா மத்பரமா: பக்தாஸ்தேதீவ மே ப்ரியா:

“ஏவர் இத்தன்மியாம் இன்னமுத யோகத்தை
மேவி யுரைத்தவகை மேவுவார்—ஆவலுடன்
எற்பரம ராகும் எழிற்பத்தர் யானுகப்ப
நிற்பரவர் மேலாய் நிகழ்ந்து.” (ப. கீ. வெ. 19).

[ஏவர் - எவர்கள்; தன்மியாம் - தர்மத்தைவிட்டு விலகாதிருக்கின்ற; இன்னமுத யோகத்தை - இனிய அமுதம்போன்று போக்கியமான பக்தியோகத்தை].

“வாய்ந்த வான்கீதை வளர்பன்னிரண் டாமோத்து
ஏய்ந்த நெறிபத்தி யியல்காட்டும்—வாய்ந்ததனில்
சக்தி யில்லார் தாமுயலச்சாருநற் பத்திவரும்
சித்த முயற்றியலுஞ் சேர்ந்து.”

பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

MADRAS 23 DEC 1943

ஸ்ரீ:

பதின்மூன்ருவது அத்தியாயம்

க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞவிபாக யோகம்.

அவதாரிகை.

"கன்மம் உயிர்உணர்வால் கட்டவரு மூன்றுறு
நன்மை இறைபத்தி நடுவாறு—தன்மையுடன்
காயம் உயிர்ஈசன் கருமம்அறிவு அன்புவகை
ஏய அமைந்தேலும் ஈருறு."

"ஈங்குமகலாசி ஏய்ந்த பதின் மூன்ருமோத்(து)
ஆங்குடலம் ஆருயிர் ஆப்புறுதல் — நீங்குநெறி
தன்மையுடன் மற்றுந் தகைமைபெறச் சோதித்து
நன்மையுடன் சொல்லும் நயந்து."

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ பகவான் பணித்தருள்வான்.

*1. இதம் ஶரீரம் கௌந்தேய! க்ஷேத்ர மித்யபிதீயதே
ஏதத்யோ வேத்திதம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி தத்வித:

கௌந்தேய! இவ்வுடம்பு க்ஷேத்ரம் என்று சொல்லப்படுகின்றது; இதனை எவன் அறிகின்றனனோ அவனை க்ஷேத்ரஜ்ஞன் என்று ஆத்மஸ்வரூபத்தை உணர்ந்தோர் உரைப்பர்.

*அர்ஜுந உவாச - அருச்சுனன் வினவுவான்.

1. ப்ரக்ருதிம் புருஷம்சைவ க்ஷேத்ரம் க்ஷேத்ரஜ்ஞ மேவச
ஏத த்வேதிது மிச்சாமி ஜ்ஞாநம் ஜ்ஞேயம் ச கேசவ.

கேசவ! பிரகிருதி, புருஷன், க்ஷேத்ரன், க்ஷேத்ரஜ்ஞன், ஞானம், ஞேயம், என்பவற்றைப்பற்றி அறிய விரும்புகின்றேன்.

[இது அதிக சுலோகமாக சிலநூல்களில் காணப்படுகின்றது.]

2. க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி
ஸர்வக்ஷேத்ரேஷு பாரத!
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோர் ஜ்ஞாநம்
யத்தத் ஜ்ஞாநம் மதம் மம.

பாரத! எல்லாசரீரங்களிலும் உள்ள ஜீவாத்மாக்களை யானாக (என்னை அந்தராத்மாவாகவுடையனவாக) அறிந்துகொள்; க்ஷேத்ரம்

க்ஷேத்ரஜ்ஞன் என்பவைகளைப்பற்றிய எந்த அறிவு கூறப்பட்டுள்ளதோ அது அறிந்தேதீரவேண்டிய ஞானம் என்பது எனது கொள்கை.

3. தத் க்ஷேத்ரம் யச்ச யாத்ருக்ச யத்விகாரி யதஶ்சயத்
ஸ ச யோ யத்ப்ரபாவஶ்ச தத் ஸமாஸேந மே ஶ்ருணு.

அந்தக்ஷேத்திரம் எப்பொருள்? எவ்வகைத்து? எத்தகைய மாறுபாடுகளுடையது? எங்ஙனம் உண்டானது? எந்தநிலையுடையது? அந்தஜீவனும் எத்தகைத்து? என்னமேன்மைகள் உடையது? இவை யாவற்றையும் சுருங்க என்னிடம் கேள்.

4. ருஷிபிர் பஹுதா கீதம் சந்தோபிர்விவிதை: ப்ருதக்
ப்ரஹ்மஸூத்ரபதைஶ்சைவ ஹேதுமத்பிர் விநிஶ்சிதை:

இது (சரீர ஆத்ம விஷயம்) பராசரர்முதலிய முனிவர்களால் பலவகைப்படக்கூறப்பட்டுளது; பலதிறப்பட்டுத் தனித்தனியாய்ப் பிரிந்துள்ள நான்குவேதங்களாலும் தனித்தனியாய்ச் சொல்லப்பட்டுள்ளது; காரணங்களுடன் சேர்ந்தனவாய், நன்கு உறுதிசெய்யப்பட்டனவாய் பிரஹ்மத்தைவிளக்கும் ஸூத்திரங்கள் என்று பெயரையுடைபதங்களாலும் வெகுவிதங்களாக வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, இவைகளைஒட்டி நான் சுருக்கமாகவும் விளக்கமாகவும் உரைப்பனவற்றைக்கேள்.

5. மஹாபூதாந் யஹங்காரோ புத்தி ரவ்யக்த மேவச
இந்த்ரியாணி தஶைகம்ச பஞ்சசேந்த்ரியகோசரா:

6. இச்சா த்வேஷ ஸ்ஸுகம் து:க்கம்
ஸங்காதஶ் சேததா த்ருதி:
ஏதத் க்ஷேத்ரம் ஸமாஸேந
ஸவிகார முதாஹ்ருதம்.

ஐம்பெரும்பூதங்கள், அஹங்காரம், மஹான், அவ்யக்தம் என்னும் மூலப்ரக்ருதி, பதினொரு இந்திரியங்கள் (ஞானேந்திரியம் ஐந்து, கருமேந்திரியம் ஐந்து, மனம் ஒன்று), இந்திரியங்களால் உணரத்தக்க ஐந்துகுணங்கள்; (இவைகள் சரீரத்தை அடைந்திருப்பன); இச்சை, பகைமை, இன்பம், துன்பம் (இவை சரீரத்தினின்றுண்டாகும் விகாரங்கள்—வேறுபாடுகள்); ஜீவனுக்கு ஆதாரமாய் மஹதாதிபூதங்களின் சேர்க்கையாய் இச்சரீரமானது பரிணாமங்களுடன் சுருங்க உரைக்கப்பட்டது,

அவ [இனி, சரீரத்தின் விகாரங்களுள் கொள்ளத்தக்ககுணங்கள் ஆத்மஞாநத்திற்கு உறுப்புக்களாதலின் கூறப்படுகின்றன].

7. அமாநித்வ மதம்பித்வ மஹிம்ஸா க்ஷாந்தி ரார்ஜவம்
ஆசார்யோபாஸநம் ஶௌசம் ஸ்தைர்ய மாத்மவிநிக்ரஹ:

கர்வம்இன்மை, டம்பம்இன்மை, இமிசைசெய்யாமை, பொறுமை, கபடமின்மை, ஆசாரியனை வழிபடுதல், பரிசுத்தி, உறுதியுடைமை, மனஅடக்கம்;

8. இந்த்ரியார்த்தேஷு வைராக்யம் அநஹங்கார ஏவச
ஜந்மம்ருத்யு ஜராவ்யாதி து:க்க தோஷாநு தர்ஶநம்.

இந்திரியங்களின் விஷயங்களில் வைராக்கியம் (வெறுப்பு) சரீரமே ஆத்மாவென்னும் அபிமானமின்மை, பிறப்பு, இறப்பு, நரை, நோய், இவற்ருல்உண்டாகும் துக்கமாகும்தோஷங்கள் சரீரத்துடன் இருக்குந்தனையும் ஒழிக்கமுடியாதன என்று அநுஸந்தித்தல்.

9. அஸக்தி ரநபிஷ்வங்க: புத்ரதாரக்ருஹாதிஷு
நித்யம் ச ஸமசித்தத்வம் இஷ்டாநிஷ்டோபபத்திஷு.

ஆத்மாவையொழிந்த வேறுபொருள்களில் பற்றின்மை, தனயன், தாரம், வீடு இவைகளில் அதிவிருப்பில்லாமை, இஷ்டம்பெறுவதால் மகிழ்ச்சியும், இஷ்டம்பெறுததால் அச்சமும் அடையாது இரண்டையும் ஒன்ருகப்பாவித்தல்;

புத்திரன், மனைவி, வீடுமுதலியன அறநூல்கள்கூறும் வாழ்க்கைத்துணை நலத்தளவு கொள்ளலாமேயன்றி ஆசாபாசங்கள் அளவுகடந்துவைத்தல் தகாது; "வாயும் நன்மக்களைப்பெற்று மகிழ்வரே" என்றும், "மனைவாழ்வர் கொண்டபெண்டிர் மக்களே" என்றும் மயர்வற மதிநலம் பெற்ருேர் உரைத்துள்ளமைகாண்க. "நன்ருங்கால் நல்லவாக்காண்பவர் அஃது அன்ருங்கால் அல்லல்படுவதெவன்" என்னும் பொய்யாமொழியும் காண்க.

10. மயி சாநந்ய யோகேந பக்தி ரவ்யபிசாரிணீ
விவிக்த தேஶஸேவித்வம் அரதிர் ஜநஸம்ஸதி.

எல்லாவற்றிற்கும் ஈச்வரனுன என்பால் ஒரே உறுதிகொண்டுள்ளமையின் திடமான பக்தியுடைமை, ஜனங்கள் நடமாட்டமில்லாத இடங்களில் வஸித்தல், ஜனக்கூட்டங்களை விரும்பாமை;

இங்கு வேறிடத்தில்செல்லாத சிறந்த பக்தியுடைமை கூறப்படுகின்றது; "திருவடிதன்நாமம் மறந்தும் புறந்தொழாமாந்தர்" என்றிருப்போர் நிலை. தனியிடத்திருத்தல் மனம் அலையாதிருத்தற்பொருட்டு. ஸத்வகுணம் மேவிட்டோர் கூட்டம்ஒழிந்த

மற்றையோர்கூட்டமே இங்கு விலக்கப்பட்டது; ஸத்வகுணமுடையோர் நற்குணக் கடல் ஆடுதல் நன்றாதலின்.

11. அத்யாத்ம ஜ்ஞாநநித்யத்வம் தத்வஜ்ஞாநார்த்த சிந்தநம்
ஏதஜ்ஜ்ஞாந மிதி ப்ரோக்தம் அஜ்ஞாநம் யத தோந்யதா.

அத்யாத்மம் எனப்படும் ஆத்மஞானத்தில் நிஷ்டையையுடையனாயிருக்கை; மெய்யுணர்வை விளைவிக்கவல்ல நினைவுடைமை; இதுவே ஆத்மஜ்ஞானமென்று சொல்லப்படுகின்றது. இதற்கு எது மாறாகவுள்ளதோ அது அஜ்ஞானம் என்னப்படுகின்றது.

ஞானம், அஜ்ஞானம் என்பன அவ்வவற்றிற்குச் சாதனங்களைக் குறித்தபடி. ஆக அமானித்வம் என்னும் கர்வமின்மை முதல் தத்வஞானார்த்த சிந்தனம் அளவாகவுள்ள குணங்கள் சரீரத்துடன்கூடிய ஜீவனுக்கு மெய்யுணர்வை விளைவிக்க உபயோகமானவை என்றும் இவைகளை யொழிந்த குணங்கள் பொய்யறிவையே மிகுவிக்கும் என்றும் கூறியவாறு.

அவ [இனி "ஏதத்யோவேத்தி" என்று அறிகிறவனாய்ப் பேசப்பட்ட க்ஷேத்ரஜ்ஞன் ஸ்வரூபம் விளக்கப்படுகிறது].

12. ஜ்ஞேயம் யத் தத் ப்ரவக்ஷ்யாமி
யஜ்ஞாத்வாம்ருத மஶ்நுதே
அநாதி மத்பரம் ப்ரஹ்ம
ந ஸத் தந்நாஸதுச்யதே.

அமானித்வம் என்னும் கர்வமின்மைமுதலிய சாதனங்களால் எய்தலாகும் ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை விளக்கப்போகிறேன்; எதைத் தெரிந்துகொண்டபின்பு பிறப்பு, மூப்பு, சாக்காடு என்னும் பிரகிருதி தர்மங்கள் அற்ற அம்ருதரூபமான ஜீவாத்மாவை அடைகின்றானோ; எதற்கு ஆதியின்மையின் அநாதி எனப்படுகின்றதோ; என்னையே மேலோனாகவுடையதோ; எது தர்மபூதஜ்ஞானத்தால் எங்கும் பரவக்கூடியதோ அது 'ஸத்து' என்றாவது 'அஸத்து' என்றாவது கூறப்படுவதில்லை.

இங்கு அநாதி மத் + பரம் ப்ரஹ்ம என்பது சிறவாது; அநாதி + மத்பரம் + ப்ரஹ்ம என்பதே இந்த இடத்திற்கு ஏற்றபொருள்தரவல்லது; இங்கு 'ப்ரஹ்ம' என்னும் சொல் இந்நூல் 14-26, 27; 18-54 இடங்களில் ஓதப்பட்டுளதுபோல ஜீவாத்மாவையே குறிக்கும். பெயர் வடிவம் இவைகளால் வேறுபாடற்ற நுட்பமான நிலையையுடைய சேதன அசேதன வஸ்துக்களைத் தனக்குச்சரீரமாயுடைய பரப்ரஹ்மமே காரணஅவஸ்தை உடையதாதலின் சேதனம், அசேதனம் இவைகளின் ஸ்வரூபங்களும் காரணதசையில் 'அஸத்து' என்னும் சொல்லால் விவகரிக்கப்படுகின்றன; ஆயினும் ஜீவாத்மாவிற்கு இந்நிலையும் கருமத்தினால் உண்டானதாதலின் பரிசுத்தநிலையுடைய ஜீவாத்மா 'ஸத்து,' 'அஸத்து' என்னும் சப்தங்களால் சொல்லப்படாது என்றபடி.

13. ஸர்வத: பாணிபாதம் தத் ஸர்வதோக்ஷி ஶிரோமுகம்
ஸர்வதஶ் ஶ்ருதிமல்லோகே ஸர்வ மாவ்ருத்ய திஷ்டதி.

"எங்கும் கரம்பாதம் எங்கும்கண் சென்னிமுகம்
எங்கும் செவியாம் இயல்புடைத்தாய்—இங்குலகில்
எப்பொருளும் தன்தகவால் ஏய்ந்து பரந்துநிற்கும்
அப்பொருளின் தன்மை அது." (ப. கீ. வெ. 13).

சுவேதாச்பதரம் 3-19-ல் பரமாத்மாவிற்கு கை கால்களின்றியே எங்கும் கை கால்களின் தொழிலைச்செய்கிறுன், கண்களில்லாமலே பார்க்கிறுன் என்று கூறுகின்றது; பரிசுத்தநிலையில் ஜீவனும் பரமாத்மாவுடன் "பரமஸாம்யம்" பெறுகிறபடியால் இவனும் இத்தகைய நிலைகட்கு உரியவனே என்றபடி. இந்நூல் மேலே 14-2-ம் காண்க. பரிசுத்தமான ஆத்மஸ்வரூபம், இடம் முதலானவைகளால் உண்டாகும் அளவுஅற்றதாதலின் எவ்விடத்தும் உள்ளதென்றபடி; ப்ரஹ்மஸூத்ரம் 4-4-15-ல் ஜீவன் எங்கும் உளதாவது தர்மபூதஜ்ஞானத்தினுல் என்று விளக்கப்பட்டுள்ளமை காண்க.

14. ஸர்வேந்த்ரிய குணுபாஸம் ஸர்வேந்த்ரிய விவர்ஜிதம்
அஸக்தம் ஸர்வ ப்ருச்சைவ நிர்க்குணம் குணபோக்த்ருச.

"எல்லாப் புலன்இயல்வும் ஏய்ந்தே விளங்குமதாய்
எல்லாப் புலனியல்வு மில்லையாய்—எல்லாம்
தரிக்கும் ஒருதத்தற் றுச்சார் குணமுமின்றி
விரித்ததனைத் துய்க்கும் மிக." (ப. கீ. வெ. 14).

[தத்து அற்று - ஒட்டுதலின்றி; துய்க்கும் - புசிக்கும்.]

இந்திரியங்களின் இயக்கத்தால் விஷயங்களை அறியச்சக்தி ஜீவனுக்கு உண்டு என்றும் இயற்கைநிலையில் இந்திரியங்கள் செயலின்றியே தானே அனைத்தையும் அறியக்கூடியது என்றும் பொருள். இபற்கையில் தேவ மானிட சரீரங்கள் இல்லாதது; கருமவசத்தால் உண்டாம்சரீரங்களைத் தரிக்கும்சக்திஉடையது. மேலும் கருமங்களைக் காரணமாகவுடைய பிரகிருதிகுணங்களைப்பற்றிய அநுபவம் இல்லைஎன்பதன்றி நிர்விசேஷம் என்னும் சொல்லுக்கும் இங்கு இடமில்லை என்றபடி.

15. பஹி ரந்தஶ்ச பூதாநாம் அசரம் சரமேவ ச
ஸூக்ஷ்மத்வாத் ததவிஜ்ஞேயம் தூரஸ்தம் சாந்திகேசதத்.

"பூதங்களுக்குள் புறம்புமாய்த் தான்நின்று
மீதங்கியல்வது மாய்மேவியே—போதத்து
நுண்ணிமையி னுல்மிகவும் நோக்கரிதாய்த் தூரத்தும்
அண்ணிமையி னுலருகு மாம்." (ப. கீ. வெ. 15).

பரிசுத்தநிலையில் ஜீவன் பஞ்சபூதங்களையும் விட்டுவிட்டுச் சரீரமின்றிப் புறம்பேயுள்ளது; அந்த நிலையிலும் சாந்தோக்யம் 8-12-3-ல் கூறியுள்ளபடி தனது இச்சைப்

படி நடக்கும் தொழில்களை இயற்றுகின்றது என்று ஏற்படுவதால் அதற்கென்று பிரகிருதி ஸம்பந்தத்துடனும் ஸம்பந்தமில்லாத அப்பிராகிருத திவ்யசரீரத்துடனும் தொழில்புரியுங்கால் அந்த அந்த சரீரங்கட்குள்ளும் இருக்குமன்றோ? பரிசுத்தநிலையில் இயக்கமில்லாதது; தேகத்துடன்கூடியபோது சலித்தலுடையது. நுண்ணிதாதலின் ஆத்மா ஸம்ஸாரிகளால் அறியக்கூடாதது. அமாநித்வம் முதலிய குணங்களுள்ளோர்க்கு அருகாமையிலுள்ளது; அவை இல்லாதார்க்கும் அவற்றிற்கு எதிர்த்தட்டான குணங்களுள்ளார்க்கும் அறியமுடியாமல் தூரத்தேயுள்ளது என்றபடி.

16. அவிபக்தஞ் ச பூதேஷு விபக்த மிவச ஸ்திதம்
பூதபர்த்ரு ச தஜ்ஜ்ஞேயம் க்ரஸிஷ்ணு ப்ரபவிஷ்ணு ச.

"வேறு பாடற்றவது வேற்றுமை சேர்பூதத்து
வேறு பாடுற்றதுபோல் மிக்கிருக்கும்—கூறுபா(டு)
உற்றபொருள் தான்பரிக்கும் உண்ணும் உண்டாக்குமென
மற்றறியத் தக்கதது வாய்ந்து." (ப. கீ. வெ. 16).

தேவன், மனிதன், விலங்கு, என்பனவடிவத்தால் வேறுபட்டன எனினும் உள்ளுறையும் ஜீவன் ஒவ்வொரு பிராணியிலும் அறியுந் தன்மை என்னும் இயல்பால் எங்கும் வேறுபாடின்றி ஒருபடித்தாயேயிருக்கின்றது.

கீழே V-18-ல் "பண்டிதாஸ்ஸமதர்ஸிந:" என்றும் கூறியுள்ளதும் இது பற்றியே. பரிக்கும் - தரிக்கும், தாங்கும் என்றபடி. உணவுப்பொருளை உட்கொள்வதும் உண்டபொருள்களை சாரம் அசாரம் எனப்பிரித்துச் சாரத்தை உடலுள் நரம்புநாடிகளில் நிறுத்தி அசாரத்தை வெளிப்படுத்துவதென்பது உயிருடன்கூடிய உடலிலேதான் காணப்படும்.

17. ஜ்யோதிஷா மபி தத்ஜ்யோதி:
தமஸ: பர முச்யதே
ஜ்ஞாநம் ஜ்ஞேயம் ஜ்ஞாநகம்யம்
ஹ்ருதி ஸர்வஸ்ய விஷ்டிதம்.

அந்த ஆத்மாவானது ஒளியுடையபொருள்களுக்கும் தனது தர்மபூதஞானத்தாலேயே ஒளியைத்தருகின்றது; நுண்ணிய நிலையையுடைய பிரகிருதியைக்காட்டிலும் மேம்பட்டதெனச் சொல்லப்படுவது; ஞானஸ்வரூபம்எனத் தெரிந்துகொள்ளத்தக்கது; அமாநித்வம் முதலிய ஞானத்தின் காரணங்களால் அறியத்தக்கது; எல்லாப்பிராணிகளின் ஹ்ருதயத்தில் விசேஷித்து இருப்பது.

18. இதி க்ஷேத்ரம் ததா ஜ்ஞாநம்
ஜ்ஞேயம் சோக்தம் ஸமாஸத:
மத்பக்த ஏத த்விஜ்ஞாய
மத்பாவாயோபபத்யதே.

இவ்வண்ணமாக, சரீரமும், அவ்வாறே ஞானஸாதனமும், ஸாதனங்கொண்டு அறியத்தகும் ஜீவனும் சுருங்கஉரைக்கப்பட்டன; இதை நன்குணர்ந்து எனது ஸ்வபாவத்தை எய்தத்தக்கவனுகிறுன்.

எனது ஸ்வபாவத்தை எய்தத்தக்கவனுதல் - என்னைப்போல் ஆதல் - ஸம்ஸாரம்என்னும் பிரகிருதிஸம்பந்தம் நீங்கியிருத்தல்.

கிழ் 5, 6 சுலோகங்களில் க்ஷேத்ரம்என்னும் உடலின்தன்மையும், 7-11 வரை அறியத்தகுந்த ஜீவாத்மாவின் உண்மையை அறிவதற்குசாதனமும், 12-17 வரை ஜீவாத்மாவின்தன்மையும் முறையே சுருங்க உரைக்கப்பட்டனகாண்க.

அவ [இனி மிக்க வேறுபட்டதன்மைகளையுடைய சரீரம், ஜீவன் இவைகளின் சேர்க்கை அநாதிஎன்பதும், சேர்ந்துள்ள இவற்றின்காரியங்களில் வேறு பாடும், இங்ஙனம் சேர்ந்துள்ளதற்குக் காரணமும் கூறப்படும்].

19. ப்ரக்ருதிம் புருஷம் சைவ வித்யநாதீ உபாவபி
விகாராம்ஸ்ச குணும்ஸ்சைவ வித்தி ப்ரக்ருதிஸம்பவாந்.

ஒன்றோடொன்று சேர்ந்துள்ள பிரகிருதி புருஷன் (ஆத்மா) ஆகியஇரண்டும் அநாதி என்றுணர். இச்சைமுதலிய ஸம்ஸார ஏதுக்களான விகாரங்களும், கர்வமற்றிருத்தல்முதலிய மோக்ஷஏதுக்களான குணங்களும் இந்தப்புருஷனுக்குச் சரீரவடிவாய் பரிணும மடைந்துள்ள பிரகிருதியினுல் உண்டானவைகள் என்று தெரிந்து கொள்.

பிரகிருதிசம்பந்தம் நன்மை தீமை இரண்டும் விளைவிக்கும். விவேகிகள் தீமைக் குக்காரணத்தை அறிந்து அதை அகற்றி நன்மையைநாடி நலம்எய்துவர். தத்வ ஞானம் உண்டாவதற்குமுன்பு ஞானிகள் தங்களைப்பிறந்தவர்களாக எண்ணுவதில்லை; தத்வஞானம் உண்டானபின்பு மற்றென்றால் காலக்ஷேபம் பண்ணியறியார்கள். "அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" எனத் திருமழிசைப்பிரான் அருளிச்செய்தமை காண்க.

20. கார்யகாரண கர்த்ருத்வே
ஹேது: ப்ரக்ருதி ருச்யதே
புருஷஸ்ஸுக து:க்காநாம்
போக்த்ருத்வே ஹேது ருச்யதே.

"காரிய காரணங்கள் கர்த்தா இயற்றுமிடத்(து)
ஏய பிரகிருதி ஏதுவாம்—ஏயசுகம்
துக்கம் புசிக்கும் தொடர்பதனில் ஏதுவாய்
ஒக்கவரும் புருடன் உற்று." (ப. கீ. வெ. 20).

காரியம் - சரீரம்; காரணங்கள் - மனதுடன்கூடிய ஞானேந் திரிய கர்மேந்திரியங்கள்; இவை தொழில்புரிவதில் ஜீவாத்மாவினுல்

அதிஷ்டானம் செய்யப்பட்ட பிரகிருதியே எதுவாம்; இன்பதுன்பங்களை நுகர்வதற்கு பிரகிருதியுடன்கூடியுள்ள ஜீவாத்மாவேகாரணம்; ஜீவன் இன்பதுன்பங்களின் நுகர்ச்சிக்கு இருப்பிடம் என்றபடி.

21. புருஷ: ப்ரக்ருதிஸ்தோ ஹி புங்க்தே ப்ரக்ருதிஜாந் குணாந்
காரணம் குணஸங்கோஸ்ய ஸதஸத்யோநிஜந்மஸு.

ஜீவாத்மா பிரகிருதியில் (சரீரத்தில்) இருந்துகொண்டு சரீரத்திலுல்உண்டாகும் ஸத்வம்முதலிய குணங்களின் கார்யங்களான இன்பதுன்பங்களைத் துய்க்கின்றான்; இந்த ஜீவாத்மாவிற்கு ஸத்வம்முதலிய முக்குணங்களின் பற்று நல்லதும் கெட்டதுமான பிறப்புக்களுக்குக் காரணமாவது.

புருஷன் பிரகிருதியின் சேர்க்கையால் குணங்கள்இட்டவழக்காய் புண்யபாவங்களை இயற்றி நல்லதும் கெட்டதுமான பிறவிகளையடைகிறான்; மீண்டும் கருமம்புரியவும் மீண்டும் பிறக்கவும் இங்ஙனே பிறிவிச்சுழலில் அகப்பட்டுள்ளான்; கர்வமின்மைமுதலிய தூயகுணங்களை அடையும்வரை ஸம்ஸாரத்தில் சுழல்கிறான் என்றபடி.

22. உபத்ரஷ்டாநுமந்தா ச பர்த்தா போக்தா மஹேஸ்வர:
பரமாத்மேதி சாப்யுக்த: தேஹேஸ்மிந் புருஷ: பர:

இச்சரீரத்திலிருக்கும் மேன்மையுடைய ஜீவாத்மா சரீரத்தைப் பார்த்திருப்பவன், அநுமதிசெய்பவன், தாங்குவோன், இன்பதுன்பங்களை நுகர்பவன், மஹேஸ்வரன், பரமாத்மா என்றும் கூறப்படுபவன்.

இங்ஙனம் அநுமதிசெய்தல் முதலியசெயல்களால் ஜீவாத்மாவானது சரீரம், இந்திரியம், மனம் இவைகளுக்குப்பெரிய ஈஸ்வரன் - மஹேஸ்வரன் என்றும், சரீரம், இந்திரியம், மனம் இவைகளில் வேறுபட்டு மேம்பாடுள்ளமையின் பரமாத்மா என்றும் சொல்லப்படுகிறான். (13-24; 15-8) சுலோகங்களிலும் காண்க).

23. ய ஏவம் வேத்தி புருஷம் ப்ரக்ருதிம் ச குணைஸ்ஸஹ
ஸர்வதா வர்த்தமாநோபி ந ஸ பூயோபிஜாயதே.

"இந்தப் புருடனையும் இந்த அசித்தினையும்
அந்தக் குணங்களுடன் ஆய்ந்தறிவான்—எந்தவவன்
எவ்வாறு மேவும் இயல்பால் திரிந்திடினும்
இவ்வாறவன் பிறவான் இங்கு." (ப. கீ. வெ. 23).

பரிபூரண ஞானத்தையே லக்ஷணமாய்உடைய கர்மஸம்பந்தமில்லாத ஜீவாத்மாவை இச்சரீர அவஸானத்தில் (முடிவில்) எய்துவான் பிரகிருதி புருஷ தத்குணவிவேகி என்றபடி.

24. த்யாநேநாத்மநி பஶ்யந்தி கேசி தாத்மாந மாத்மநா
அந்யே ஸாங்க்யேந யோகேந கர்மயோகேந சாபரே.

"மிக்கார் சிலர்நெஞ்சால் மெய்ப்பர தியானத்தால்
தக்கார் உயிர்காண்பர் தாம்சிலர்கள்—எக்கால
சாங்கிய யோகந்தன்னால் தம்கரும யோகத்தால்
ஆங்கறிவர் வேறுசிலர் ஆய்ந்து." (ப. கீ. வெ. 24).

இங்கு கீழே III-3-ல் கூறியதும் காண்க. இந்த சுலோகத்தில் 'ஆத்மனி,' 'ஆத்மானம்,' 'ஆத்மனா' என்று ஆத்மபதம் மும்முறைவந்திருக்கிறது; மூன்றிடத்திலும் மூன்று வேற்றுப்பொருளில் பயின்றுள்ளது - ஆதாரமாகவும், விஷயமாகவும், காரணமாகவும் கூறியிருத்தலால் என்று உணர்க. ஆகவே, ஆத்மனி - சரீரத்தில் இருக்கிற; ஆத்மானம் - ஜீவாத்மாவை; ஆத்மனா — மனஸ்ஸினால்; கேசித் த்யானேநபஸ்யதி - சிலர்யோகத்தால் பார்க்கின்றனர் என்று பொருள்படும்.

25. அந்யே த்வேவ மஜாநந்த: ஶ்ருத்வாந்யேப்ய உபாஸதே
தேபி சாதிதரம்த்யேவ ம்ருத்யும் ஶ்ருதிபராயணா:

கர்மயோக அதிகாரமில்லாத வேறுசிலர் இவ்வாறு அறியாதிருப்பவராய், ஞானமுள்ள மற்றவர்பால் கேட்டு ஆத்மஉபாஸனம் செய்கின்றனர்; கேள்வியேகதியென விரும்பியஇவர்களும் ஸம்ஸாரத்தைக் கடந்தேவிடுகின்றனர்.

அவ [பிரகிருதியுடன்கூடியுள்ள ஆத்மாவின் வேறுபாட்டையுணரும்முறையைக் கூறுகிறார்].

26. யாவத் ஸஞ்ஜாயதே கிஞ்சித் ஸத்வம் ஸ்தாவரஜங்கமம்
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞஸம்யோகாத் தத்வித்தி பரதர்ஷப.

"எவ்வளவு நின்றியலும் இந்தப் பொருளுண்டாம்
அவ்வளவு தன்னை அடல்விசயா—இவ்வகையே
சித்தும் அசித்தும் சிறந்த புணர்ப்பதனால்
ஒத்தியல்வ தென்றே உணர்." (ப. கீ. வெ. 26).

எவ்வளவு தாவரமும் சங்கமமுமாயுள்ள பிராணிகள் உண்டாகின்றனவோ அவ்வளவும், சரீரமும் ஜீவாத்மாவும் ஒன்றுடன்ஒன்று சேர்தலாலேயே உண்டாகின்றனவேயன்றி இவை பிரிந்தநிலையில் உண்டாவதில்லை என்றபடி.

27. ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேஶ்வரம்
விநஶ்யத்ஸ்வ விநஶ்யந்தம் ய: பஶ்யதி ஸ பஶ்யதி,

எல்லாப்பிராணிகளிடத்தும் தேவன், மனிதன் என்னும் வடிவ வேறுபாடு இல்லாமல் ஒத்தபடித்தாயிருக்கும் தேஹ இந்திரிய மனங் கட்கு மேலான ஈசுவரனுயிருக்கிற ஜீவாத்மாக்களை மாயும்பொருள் களுள் மாயாதவை என்று எவன் காண்கின்றானோ அவனே உண்மை யைக் காண்பவன்.

இங்ஙனல்லாது சரீரவேறுபாடுபோல் ஜீவனும் வடிவால்வேறுபட்டது, சரீரம் மாய்வதுபோல் ஜீவனும்மாய்வது என்னும் திரிபுணர்வுஉடையோர் என்றும் ஸம்ஸாரத் திலேயே உழல்வர் என்றும் கருத்தாகக்கொள்க.

28. ஸமம் பஶ்யந் ஹி ஸர்வத்ர ஸமவஸ்தித மீஶ்வரம்
ந ஹிநஸ்த்யாத்மநாத்மாநம் ததோ யாதி பராம் கதிம்.

சரீரங்கள் அனைத்தினும் இருக்கிறஆத்மாவை ஞானத்தால் ஒரு படித்தானவன் என்று காண்பவன் மனத்தினாலும் தன்னைத்துன்பப் படுத்திக்கொள்ளாமல் காப்பாற்றிக்கொள்வான்; ஸம்ஸாரத்தி லிருந்து விடுவித்துக்கொள்கிறான்; ஆதலினால் உயர்கதியை எய்து கின்றான்.

வடிவவேறுபாடுள்ள சரீரத்திலுள்ள ஆத்மாக்களும் வடிவவேறுபாடுடையன என்று கருதுபவன் தன் ஆத்மாவைத் துன்புறுத்தி ஸம்ஸாரமாகிற கடலிடையில் வீழ்த்துகின்றான் என்று கருத்தாகக்கொள்க.

29. ப்ரக்ருத்யைவ ச கர்மாணி க்ரியமாணாநி ஸர்வஶ:
ய: பஶ்யதி ததாத்மாநம் அகர்த்தாரம் ஸ பஶ்யதி.

கருமங்கள்யாவும் பிரகிருதியினாலேயே இயல்கின்றன என்றும் அம்முறையே ஜீவாத்மாவை கருத்தாவல்லனாகவும் எவன் காண் பானோ அவனே ஆத்மாவை உள்ளபடியேகாண்பவன்.

30. யதா பூதப்ருதக்பாவம் ஏகஸ்த மநு பஶ்யதி
தத ஏவ ச விஸ்தாரம் ப்ரஹ்ம ஸம்பத்யதே ததா.

எப்பொழுது பிராணிகளின்வேறுபாடுகளை ஒருபொருளான பிரகிருதியில் இருப்பதாகப் பார்க்கின்றானோ, அந்தப்பிரகிருதியினா லேயே விரிந்த நிலையுடைமையையும் பார்க்கின்றானோ அப்பொழுது ப்ரஹ்மம் என்று பேசப்படும் பரிசுத்தமான ஜீவாத்மாவை எய்துகின் றான்.

ப்ரஹ்மம் என்பது இங்கு ஞானம்ஒன்றையே ஸ்வபாவமாகஉடைய ஜீவாத்மா என்று பொருள்படும்.

31. அநாதித்வாந் நிர்குணத்வாத் பரமாத்மாய மவ்யய:
ஶரீரஸ்தோபி கௌந்தேய ! ந கரோதி நலிப்யதே.

கௌந்தேய! இந்த பரிசுத்தஜீவாத்மா சரீரத்திலிருப்பினும் ஆதியில்லாதவனாதலின் அழிவில்லாதவனாய், ஸத்வம்முதலிய குணங்களில்லாமையினால் ஒருசெயலும்புரியாதவனாய், சரீரஸ்வபாவங்களால் தோய்வற்றவனாகிறான்.

அவ [மேலேகூறியது எவ்வாறுபொருந்தும் என்பதற்கு ஓர் உபமானத்தால் விளக்குகிறார்].

32. யதா ஸர்வகதம் ஸௌக்ஷ்ம்யாத்
ஆகாஶம் நோபலிப்யதே
ஸர்வத்ராவஸ்திதோ தேஹே
ததாத்மா நோபலிப்யதே.

"ஓங்குவிசும்பு எங்கும் உளதாயும் நுட்பத்தால்
ஆங்கதனில் தோயாதது போலத்—தாங்குடலம்
ஏதிலும் நின்றாலும் இலகும்உயிர் அவ்வண்ணம்
ஆதியல்வால் தோயானும் ஆங்கு." (ப. கீ. வெ. 32),

மேலும் தாமரையிலையில் நீர்போன்றும், புளியம்பழத்தில் ஓட்டில் ஒட்டாதபுளி போலும் அந்தந்த சரீரஇயல்புகள் ஜீவனில் தட்டுவதில்லை என்க.

33. யதா ப்ரகாஶய த்யேக: க்ருத்ஸ்நம் லோக மிமம் ரவி:
க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா க்ருத்ஸ்நம் ப்ரகாஶயதி பாரத.

"எவ்வாறு இரவிதான் இந்த உலகனைத்தும்
இவ்வாறு எழில்விளக்கம் எய்துவிக்கும்—அவ்வாறு
பாரதனே இவ்வுடலம் எல்லாம்பரந்து உயிர்தான்
சீரதனால் தாள்விளங்கும் சேர்ந்து." (ப. கீ. வெ. 33).

விளக்கம்எய்தும் இவ்வுலகத்தின் வேறுபட்டது இதனைவிளக்கும் கதிரவன்; அவ்வாறே அகத்தும் புறத்தும் உச்சந்தலைமுதல் உள்ளங்கால்வரைக்கும் தனது ஞானத்தினால் விளக்கும் ஆத்மா விளக்கப்படும்சரீரத்தில் மிகவும் வேறுபட்டது என்று கருத்து.

34. க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோ ரேவம் அந்தரம் ஜ்ஞாநசக்ஷுஷா
பூதப்ரக்ருதிமோக்ஷஞ் ச யே விதுர்யாந்தி தே பரம்.

இவ்வாறு சரீரம்வேறு ஆத்மாவேறு என்று அறியக்கூடிய ஞானக்கண்ணால் சரீர ஆத்மாக்களின் வேறுபாட்டையும், பஞ்சபூதங்

களாக மாறிநிற்கும் பிரகிருதியினின்றும் விடுபடுவதற்குக் காரணங்களான கர்வமின்மைமுதலான குணங்களையும், எவர்கள் அறிந்தனரோ அவர்கள் பரிசுத்தமான ஜீவாத்மாவை எய்துகின்றனர்.

(கீதார்த்தஸங்கிரஹப் பாசுரம், 14).

"ஊனின்படியும் உயிரின்பிரிவும் உயிர்பெறுவார்
ஞானம்பெறுவகையும் ஞானம்ஈன்ற உயிர்ப்பயனும்
ஊனின்றதற்கு அடியும் உயிர்வேறிடும் உள்விரகும்
தேனின்றபாதன் தெளிவித்தனன் சிலைப்பார்த்தனுக்கே."

பதின்மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ:

பதினான்காவது அத்தியாயம்.

குணத்ரய விபாகயோகம்

“ முக்குணங்கள் பந்தத்து மூட்டுகின்ற நேர்பலவும்
அக்குணங்கள் நீக்குவிக்கும் அவ்விரகும்—மிக்குயர்ந்த
கீதைபதினாலா மோத்துக் கிளர்ந்துரைக்கும்
போதத்தியல்பால் புரிந்து.”

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ கிருஷ்ணன் அருளிச்செய்கிறான்.

1. பரம் பூய: ப்ரவக்ஷ்யாமி ஜ்ஞாநாநாம் ஜ்ஞாந முத்தமம்
யஜ்ஜ்ஞாத்வா முநயஸ் ஸர்வே பராம் ஸந்தி மிதோ கதா:

முன்பு கூறியுள்ளதைவிட வேறானதும் ஞானங்களுக்குள் சிறந்ததுமான ஞானம்ஒன்றை மீண்டும் விளங்கஉரைப்பேன்; இந்த ஞானத்தை உணர்ந்துதான் முனிவர்கள் பலரும் இந்த சம்ஸாரத்தினின்று மேலானஸித்தியை யடைந்துளார்கள்.

சிறந்தஞானம் என்றது பிரகிருதி, ஜீவன் இவைகட்குள்ளடங்கியதாகிய ஸத்வம்முதலிய முக்குணஞானம். ஸம்ஸாரத்தினின்று மேலானஸித்தி அடைவதுஎன்றது பரிசுத்தமான ஆத்மஸ்வரூபத்தை அடைதல் என்றபடி.

கீழ் அத்தியாயத்தில் தொகுத்துச் சுட்டியதை இதில் வகுத்துக்காட்டுகிறார்.

அவ [மீண்டும் அந்தஞானத்தைப் பயனைக்காட்டி விளக்குகிறார்].

2. இதம் ஜ்ஞாந முபாஸ்ரித்ய மம ஸாதர்ம்ய மாகதா:
ஸர்கேபி நோபஜாயந்தே ப்ரளயே ந வ்யதஸ்திச.

“ இந்த அறிவை இனிதார்ந்து இங்குஎன்ஒப்பாம்
அந்த உயர்வை அடைந்தவர்கள்—பந்தமுடன்
சற்கத்திலும் பிறவார் தாம்துயரம் சாரார்கள்
ஒற்கப் பிரளயத்தினுள்.” (ப. கீ. வெ. 2).

[சற்கத்திலும் - படைப்பிலும்; ஒற்க - ஒடுங்கும்.]

இதில் பகவானே உண்மையறிவை உபதேசிக்கும்இடத்தில் தனக்கு ஒப்பான உயர்நிலையை ஜீவன்அடைவதாகக் கூறுகின்றனனே யன்றி ஜீவன் தானாகவே ஆய்விடுவதாய்க் கூறவில்லை என்பதை உய்த்துணர்க.

அவ [உயிரோடு உடம்பிடை நட்பு தன்னாலேயே உண்டாக்கப்படுகின்றதென்கிறார்].

3. மம யோநிர் மஹத்ப்ரஹ்ம தஸ்மிந் கர்பம் ததாம்யஹம்
ஸம்பவ: ஸர்வபூதாநாம் ததோ பவதி பாரத.

பாரத !

“ மிக்க பிரமம் விறல்யோனி என்றுரைக்கத்
தக்க தெனச்சித்திற் சார்வுபெறத்—தொக்கவுயிர்
கெற்பத்தை யான்சேர்ப்பன் கேழ்கிளரும் பூதங்கள்
உற்பத்தி சேரும்இதில் உற்று.” (ப. கீ. வெ. 3).

இங்கு மிக்கபிரமம் என்றது அசேதனமாகிய பிரகிருதியை; மஹான், அஹங்காரம் முதலிய வேறுபாடுகட்குக் காரணமாதலின்.

அவரவர் புண்யபாபங்கட்குத்தக்கவாறு அசேதனமாகிய பிரகிருதியின் கூட்டங்களில் சேதனங்களான ஆத்மாக்களைச் சேர்த்து ப்ரஹ்மா என்னும் நான்முகன்முதல் புழுவரையுமுள்ள ஜீவவர்க்கங்கள் உற்பத்தி என்னாலேயே செய்யப்படுகிறது என்கிறார்.

அவ [நித்யசிருஷ்டியாகிய கார்யதசையுடைய சேதனம் அசேதனமுமாகும் பிரகிருதியின் சேர்க்கையும் என்னாலேயே ஆக்கப்படுகிறது என்கிறார்].

4. ஸர்வயோநிஷு கௌந்தேய ! மூர்த்தய: ஸம்பவந்தியா:
தாஸாம் ப்ரஹ்ம மஹத்யோநி: அஹம் பீஜப்ரத: பிதா.

கௌந்தேய ! தேவமானிட சாதிகளெல்லாவற்றிலும் எந்த எந்த சரீரங்கள் உண்டாகின்றனவோ அவ்வவற்றிற்கெல்லாம் மஹத்தான பிரகிருதி உற்பத்திஸ்தானமான காரணமாகும்; நான் விதையைச் சேர்ப்பவனாகிய தகப்பனாகிறேன்.

இங்கும் ப்ரஹ்மம் என்னும்சொல் பிரகிருதியையே குறித்தல்காண்க.

அவ [சிருஷ்டியின் துவக்கத்தில் பல்வேறுவகைப்பட்ட பிறப்புகள் ஏற்படக் காரணம்கூறுகிறார்].

5. ஸத்வம் ரஜஸ்தம இதி குணா: ப்ரக்ருதி ஸம்பவா:
நிபத்நந்தி மஹாபாஹோ தேஹே தேஹிந மவ்யயம்.

“ சத்துவ ரசோ தமமாய்ச் சாருங்குண மூன்றும்
உய்த்த பிரகிருதி உள்ளவையாம்—இத்தகைய
ஆருயிரைத் தேகத்து அமரப்பிணிக்குமே
சீருயருந் தோளாய் செறுத்து.” (ப. கீ. வெ. 5.)

அவ [முக்குணங்களின் இயல்புகளை விளக்குகிறார்].

6. தத்ர ஸத்வம் நிர்மலத்வாத் ப்ரகாஶக மநாமயம்
ஸுகஸங்கேந பத்நாதி ஜ்ஞாந ஸங்கேந சாநக.

அனக! அம்முக்குணங்களுள் ஸத்வகுணம் அழுக்கின்றியிருத்தலினால் ஒளியை உண்டாக்குகின்றது; நோயின்மைக்குக் காரணமாகின்றது; இன்பம், மெய்யுணர்வு இவற்றிலுள்ள விருப்பத்தால் ஜீவாத்மாவைக் கட்டுப்படுத்துகின்றது.

ஒளிஎன்பது உண்மையறிவு. ஞானத்தையும், இன்பத்தையும் உண்டாக்கி அவற்றில் விருப்பத்தை விளைவிப்பதும் ஸத்வகுணம் என்றபடி.

7. ரஜோ ராகாத்மகம் வித்தி த்ருஷ்ணாஸங்க ஸமுத்பவம்
தந்நி பத்நாதி கௌந்தேய! கர்மஸங்கேந தேஹிநம்.

கௌந்தேய! காதலுக்குக் காரணமாய் வேட்கை, சங்கம் இவற்றிற்கு உற்பத்தித்தலமாய் இருப்பது ரஜோகுணம்என்று தெரிந்துக்கொள்; அது கர்மங்களில் விருப்பத்தையுண்டாக்கிச் சீவனைப் பிணிக்கின்றது.

வேட்கை என்பது கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு உழலுகை. சங்கம் என்பது தாயே தந்தைஎன்றும் கிளைமக்கள்என்றும் நோயேபட்டொழிதல்.

8. தம ஸ்த்வஜ்ஞாநஜம் வித்தி மோஹநம் ஸர்வ தேஹிநாம்
ப்ரமாதாலஸ்ய நித்ராபி: தந்நி பத்நாதி பாரத.

"தமம் அறிவு கேடுதரும் தானறிநீமோகம்
அமருயிர்கட்கெல்லாம் அளிக்கும்—தமரென்று(து)
ஓராமை சோம்பல் உறக்கத்தால் பார்த்தனே
சோராமல் கட்டும் துணிந்து." (ப. கீ. வெ. 8).

பொய்நின்றஞானமும் பொல்லாஒழுக்கும் அழுக்குடம்பும் தருவது தாமஸ குணம். இந்திரியங்கள் களைப்பால் ஒய்ந்து ஒடுங்கிவிடுவது தூக்கம் என்றும், வெளி இந்திரியங்கள் தத்தம்செயலைச்செய்யாது ஓய்ந்துவிடுவது கனவு என்றும் மனதும் செயலின்றி ஒய்ந்துவிடுவது ஸுஷுப்தி என்றும் வேறுபாடு அறிக.

9. ஸத்வம் ஸுகே ஸஞ்ஜயதி ரஜ: கர்மணி பாரத!
ஜ்ஞாந மாவ்ருத்ய து தம: ப்ரமாதே ஸஞ்ஜயத் யுத.

பாரத! ஸத்வகுணம் இன்பத்தில் இச்சையை விளைவிக்கின்றது; ரஜோகுணம் கருமம்புரிவதில் நசையை உண்டாக்கும்; தமோ

குணம் மெய்யுணர்வை மறைத்துவிட்டுத் திரிபுஉணர்ச்சியில் அவாவை விளைவிக்கின்றது.

ஒரோகுணங்கள் ஒரொரு தலைப்பட்டசெயலில் மூட்டி பந்தத்தை யுண்டுபண்ணும் என்றபடி.

அவ [இத்தகைய வேறுபாடுடைய முக்குணங்கள் பிரகிருதியைப்பற்றி எப்பொழுதும் கிடப்பனவாயின் அவை தம்முள் முரண்பட்டசெயல்களை ஏன் உண்டாக்குவதில்லைஎன்பதற்கு விடைதருகிறார்].

10. ரஜ ஸ்தமஶ்ஶாபிபூய ஸத்வம் பவதி பாரத!
ரஜ ஸ்ஸத்வம் தமஶ்சைவ தம ஸ்ஸத்வம் ரஜஸ்ததா.

பாரத! சிலவேளை ரஜஸ் தமஸ் குணங்களை அடக்கி ஸத்வகுணமும் சிலவேளை ஸத்வ தமோ குணங்களைஅடக்கி ராஜஸமும், சில காலங்களில் ஸத்வத்தையும் ரஜோகுணத்தையும் அடக்கித் தாமஸ குணமும் தலையெடுக்கும். ஆதலின் முக்குணங்களும் மாறிமாறி அதிகரித்து இயலுகின்றன என்றபடி.

அவ [முக்குண இயல்புகளை அவ்வவற்றின் செயலைக்கொண்டே அறிதல்வேண்டுமென்கிறார்].

11. ஸர்வத்வாரேஷு தேஹேஸ்மிந் ப்ரகாஶ உபஜாயதே
ஜ்ஞாநம் யதா ததா வித்யாத் விவ்ருத்தம் ஸத்வ மித்யுத.

"பொறிவாயி லெங்கும் புணரும் ஒளியாம்
அறிவான தெப்பொழு துண்டாகும்—குறியாலே
மன்னுடம்பில் அப்பொழுது வாய்ந்துயரும் சத்துவமாம்
என்னுமது தானறிவான் இங்கு." (ப. கீ. வெ. 11.)

[பொறிவாயிலெங்கும் - மெய், வாய், கண், மூக்குச் செவியாகிய எல்லா ஞானேந்த்ரிய மார்க்கங்களிலும்; குறி - அடையாளம்; உயரும் - மேலோங்கும்.]

12. லோப: ப்ரவ்ருத்தி ராரம்ப: கர்மணு மஶம: ஸ்ப்ருஹா
ரஜஸ்யேதாநி ஜாயந்தே விவ்ருத்தே பரதர்ஷப!

பரதர்ஷப! ஈயாமை, பயனில்கருத்தின்றி வினைசெய்முயற்சி, கருமத்துவக்கம், புலனமைதியின்மை, தன்னுசை இவை ரஜோ குணம் ஓங்கியிருக்கும்போது உண்டாகின்றன.

13. அப்ரகாஶோ ப்ரவ்ருத்திஶ்ச ப்ரமாதோ மோஹ ஏவ ச
தம ஸ்யேதாநி ஜாயந்தே விவ்ருத்தே குருநந்தந.

"மன்னுமுணர் வில்லாமை ஒன்றின் முயல்வறுதல்
மன்னுமுயிர் ஓர்ப்பின்மை மாமோகம்—என்னுமிவை
மீதிலுயர் தமத்தின் மேவுமவையாகநீ
கோதில் குருமுதல்வா கொள்." (ப. கீ. வெ. 13).

14. யதா ஸத்வே ப்ரவ்ருத்தேது ப்ரளயம் யாதி தேஹப்ருத்
ததோத்தம விதாம் லோகாந் அமலாந் ப்ரதிபத்யதே.

"சத்துவமிக்கு ஓக்கம் தரும்பொழுதில் தான்மரணத்
தொத்துடம்பு விட்டவுயி ருடையோன்—தத்துவத்தின்
மேலறிவு சேர்ந்தார் மிகவமல மாங்குலத்துச்
சாலஅவன் தான்பிறக்கும் சார்ந்து." (ப. கீ. வெ. 14).

புண்ணியகருமங்களைச் செய்யத்தூண்டும் தன்மையுடைய நல் குடியில் பிறப்பர் என்றபடி.

15. ரஜஸி ப்ரளயம் கத்வா கர்மஸங்கிஷு ஜாயதே
ததா ப்ரலீநஸ்தமஸி மூடயோநிஷு ஜாயதே.

ரஜோகுணம் தலையெடுத்துள்ளபோது இறப்பவன் காம்யகருமங்களை இயற்றவிரும்புவோர் குலங்களில் பிறக்கிறான்; அவ்வாறே தமோகுணம் ஓங்கியிருக்குங்கால் மரணம்எய்தியவன் அறிவற்ற மூடப்பிறவிகளில் தோன்றுகிறான்.

காம்யகர்மம்புரிவோர் குலத்தில்பிறப்பவன் அக்கருமங்களைச் சுவர்க்கம்முதலிய பயனைக்கருதி இயற்றத்தொடங்குகின்றான் என்றும் மூடர்கள்குலத்தில் பிறப்பவன் எவ்வகைப்பயனும் பெறாதவனாகிறான் என்றும் கருத்து.

மூடர்கள் என்றது நாய், பன்றிபோன்ற இழிந்தஜந்துக்களாகவும் அவைகளைப் போன்ற அறிவிழந்தமக்கள் குடும்பத்திலும் பிறக்கிறான் என்றபடி.

16. கர்மண: ஸுக்ருத ஸ்யாஹு: ஸாத்விகம் நிர்மலம் பலம்
ரஜஸஸ்து பலம் து:க்க மஜ்ஞாநம் தமஸ: பலம்.

புண்ணியகருமத்திற்கு மாசற்ற ஸத்வகுணவளர்ச்சியும், ரஜோகுணத்திற்கோ துக்கமிகுதியும், தமோகுணத்திற்கு அஜ்ஞானத் தொடர்பும் பயனாகுமென முக்குணபரிபாகங்களை யுணர்ந்த மேலோர் கூறியுள்ளனர்.

இங்கு புண்ணியம் - ஸுக்ருதம் என்பது ஸித்தம், ஸாத்யம் என்று இரண்டு வகைப்படும்; "புண்யாநாமபிபுண்யோஸௌ", "ஆய்க்குலத்தில் உன்தன்னைப் பிறவி பிறந்தனை புண்ணியம் யாமுடையோம்" என்னும் பகவானைச்சிய புண்யம் ஒன்று;

இவன்முயற்சியால் எய்தக்கூடியது மற்றொன்று. ரஜோகுண மிகுதியால் காம்யகருமங் களைப்புரிந்து ஸ்வர்க்காதி போகந்துய்ப்பவர் "க்ஷீணேபுண்யே மர்த்யலோகம் விசந்தி" என்றபடி புண்ணியப்பயன்தீர்ந்ததும் மறுபடியும் இவ்வுலகில் பிறப்பதும் பின்புமாள்வதும்ஆகி துக்கத்திலேயே உழல்பவராவர்.

17. ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம் ரஜஸோ லோப எவச
ப்ரமாதமோஹௌ தமஸோ பவத: அஜ்ஞாநமேவச.

"முற்குணத்தி லாகும் முழுதுணர்வு தான்இடையில்
அற்குணத்து லோபம் அதுவுண்டாம்—பிற்குணத்தில்
ஓராமை மோகம் உணராமை யுண்டாகும்
சீரார்புகழ் விசயா சேர்ந்து." (ப. கீ. வெ. 17).

முற்குணமாகிய ஸத்வகுணம் ஆத்மதரிசனயோக்யமான ஞானத்தை யுண்டாக்கும்.

18. ஊர்த்வம் கச்சந்தி ஸத்வஸ்தா மத்யே திஷ்டந்தி ராஜஸா:
ஜகந்ய குணவ்ருத்திஸ்தா அதோ கச்சந்தி தாமஸா:

"மேலடைவர் முற்குணத்தோர் மேவுநடுக் குணத்தோர்
சாலநடுவாம் உலகில் தான்நிற்பர்—ஞாலத்துப்
பின்னுங் குணத்தியல்வோர் பீடழிவர் கீழ்மையினை
எந்நாளும் சேர இழிந்து." (ப. கீ. வெ. 18).

ஸத்வம் மேலிட்டோர் முறைமுறையே ஸம்ஸாரபந்தம்நீங்கி முத்தியடைகின்றனர்; ரஜோகுணத்தோர் "பிறப்பதற்கே தொழிலாக இறக்கின்றாரே" என்றபடி பிறவிச்சுழலில் அகப்பட்டுப் போவது வருவதாயிருத்தலின் துக்கம்மிகுந்து இவ்வுலகை விடாதவர்களாகின்றனர். தமோகுணத்தோர் கீழ்கீழாகச் சண்டாளர், பசு, பூச்சி, புழு, தாவரம், புல், பூண்டு, கல், உலர்ந்தகட்டை, ஓடு இவ்வாறு இழிகின்றனர்.

அவ [உணவில் நெறியாலும் நிஷ்காம்யமாய்ப் புண்யகருமம் புரிவதால் முறையே ஸத்வகுணம் மேன்மேல் வரைக்குணங்கடந்து உயர்நிலைஅடையும் முறையை விளக்குகின்றார்].

19. நாந்யம் குணேப்ய: கர்த்தாரம் யதா த்ரஷ்டாநுபஶ்யதி
குணேப்யஶ்ச பரம் வேத்தி மத்பாவம் ஸோதி கச்சதி.

"மிக்க குணமவற்றில் வேறுபட்ட கத்தாவைத்
தக்க உணர்வுடையோன் தானுணரான்—தொக்ககுணம்
தன்னில் பரம்எனவும் தன்னறிவான் சேருமே
என்னில் பரத்தன்மை ஏய்ந்து." (ப. கீ. வெ. 19).

இதன்கருத்து ஆழ்ந்து அறியத்தக்கது. ஸத்வகுணஸம்பன்னன் குணங்களே அவற்றிற்கேற்றசெயல்களில் கர்த்தாஎன்னும் இயற்றுபவனுக உணருதல்வேண்டும்; பரிசுத்தநிலையுடைய ஜீவாத்மாவிற்கு பலதிறப்பட்ட கருமங்களில் கருத்தாவாயிருத்தல் பண்டைப்பழவினைகளாலாகும் குணங்களின் கூட்டுறவால் விளைந்ததே; ஆத்மா தன் இயற்கையில் கருத்தாவல்லன்; அளவுகடந்த ஞானம் ஒன்றையே ஸ்வரூபமாக உடையவன் என இவ்வாறுஉணர்பவன் என்னோடு ஒத்தநிலையை யடைகிருன் என்றுகருத்து.

"மத்பாவம்" என்பதற்கு துக்கமின்மையாலும், ஞானுகாரத்தாலும் என்னை ஒத்தவனுகின்ருன் என்றே பொருள்கொள்ளவேண்டும். கீழ் இரண்டாம் சுலோகத்தில் "மம ஸாதர்ம்யமா கதா:" என்றுள்ளதும் முண்டகோபநிஷத் 3-1-3-ம், கடோபநிஷத் 2-4-15-ம் இப்பொருளை வலியுறுத்தும்.

அவ [தன்னைஒத்த நிலையையடைதல் எத்தகைத்து என்று விளங்குகிருர்].

20. குணு நேதா நதீத்ய த்ரீன் தேஹீ தேஹ ஸமுத்பவான்
ஜந்மம்ருத்யு ஜராது:க்கை: விமுக்தோம்ருத மஶ்நுதே.

"இங்கு உடலம் மேவியமர் இக்குணங்கள் மூன்றினையும்
மங்கும் வகைகடந்து மன்னினவன்—தங்கு
பிறப்பு இறப்பு மூப்புப் பிணிவிடுத்துத் தன்னும்
சிறப்பமுதம் சேரும் சிறந்து." (ப. கீ. வெ. 20).

இங்கு பிரகிருதியின்வேறுபாடே உடல்என்றும் அதில் முக்குணங்கள் தோன்றுகின்றனஎன்றும் கொள்க. அமுதம் என்பது துன்பந்தீர்ந்த பரிசுத்தமான ஆத்மாவின்நிலை; இதுவே தனது ஸ்வபாவம் என்கிருர் என்பதைக் கருத்தாகக்கொள்க.

அவ [இங்கே தனதுநிலையைக் தெளிவுபடுத்திக்கொள்ளச் சிலவினுக்களை எழுப்புகிருன் அருச்சுனன்].

அர்ஜுந உவாச - அர்ச்சுனன் வினவுதல்.

21. கைர்லிங்கைஸ்த்ரீன் குணு நேதாந் அதீதோ பவதி ப்ரபோ
கிமாசார: கதம் சைதாந் த்ரீந் குணு நதிவர்த்ததே.

"இவ்வளவில் பார்த்தன் இயம்பினுன் இங்கிறைவா
அவ்வகைசேர் முக்குணத்தை ஆங்கன்னேன்—எவ்வகையில்
சேரும் அடையாளத்தன் செய்தொழில்வது எங்ஙனே
சீருடன் இத்தைக்கடப்பான் செப்பு." (ப. கீ. வெ. 21).

இங்கு வெளிப்படத்தோன்றும் ஒழுக்கங்களும் ஆத்மாவைப்பற்றி உள்ளே நிகழ்வதாய் மனநுட்பத்தால் அறியக்கூடிய அடையாளங்களும் கேட்கப்படுகின்றன என்க.

[ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ கிருஷ்ணபகவான் விடைதந்தருள்வார்].

22. ப்ரகாஶஞ் ச ப்ரவ்ருத்திஞ் ச மோஹ மேவ சபாண்டவ
ந த்வேஷ்டி ஸம்ப்ரவ்ருத்தாநி ந நிவ்ருத்தாநி காங்க்ஷதி.

பாண்டவ! ஆத்மாவையொழிந்த மற்றை வேண்டாப்பொருள்களில் உண்டாகும் ஸத்வகார்யமான பிரகாசத்தையும், ரஜோகார்யமாகிய தன்முயற்சியையும், தமோகார்யமாகிய மோகத்தையும் வெறுக்கமாட்டான்; அவ்வாறே ஆத்மாவையொழிந்த மற்றை வேண்டும்பொருள்களில் பிரகாசம், முயற்சி, மோகம் இவை உண்டாகாமல்போயினும் அவற்றை விரும்பமாட்டான்.

23. உதாஸீந வதாஸீநோ குணைர்யோ நவிசால்யதே
குணா வர்த்தந்த இத்யேவ யோவதிஷ்டதி நேங்கதே.

எவன் ஆத்மாவைப்பார்த்தலிலேயே திருப்தியடைந்திருத்தலால் மற்றைப்பொருள்களில் விருப்பு வெறுப்பின்றி யிருந்துகொண்டு முக்குணங்களால் அசைக்கப்படமாட்டானோ எவன் குணங்கள் அவ்வவற்றின் கார்யங்களில் இருக்கின்றனவென உணர்ந்து தான்வாளாயிருக்கிறானோ, எவன் எதுவும் செய்வதில்லையோ;

24. ஸமது:க்கஸுக: ஸ்வஸ்த: ஸமலோஷ்டாஶ்ம காஞ்சந:
துல்யப்ரியாப்ரியோ தீர: துல்யநிந்தாத்ம ஸம்ஸ்துதி:

"தன் சுகத்தும் துக்கத்தும்தான் சமனாய்த் தன்னமர்ந்து
பொன் கல்உடன்ஓடு இதனில் புந்தி ஒத்தோன்—அன்பர்
வெறுப்பர் இடையொப்போன் மிகுபழி நன்கீர்த்தி
நிறுத்த சமம்நிற்கும் நிகழ்ந்து." (ப. கீ. வெ. 24).

25. மாநாவமாநயோஸ்துல்ய: துல்யோ மித்ராரிபக்ஷயோ:
ஸர்வாரம்பபரித்யாகீ குணாதீத: ஸ உச்யதே.

"தன்னமருமானம் அவமானஞ் சாரான் நண்பன்
ஒன்னலர்தம் பக்கத்தும் ஒத்தியல்வான்—மன்னவரும்
செய்ம்முயற்றிஎல்லாம் செய்யான் அவன் குணங்கள்
மெய்ம்முயற்றியால் கடந்தான் மிக்கு." (ப. கீ. வெ. 25).

அவ [முக்குணங்களைக்கடக்கும் உயரிய உபாயத்தை உரைக்கிறார்].

26. மாம் ச யோவ்யபிசாரேண பக்தியோகேந ஸேவதே
ஸ குணாந் ஸமதீத்யைதாந் ப்ரஹ்மபூயாய கல்பதே.

"என்னைப் புறம்போகா யோகமாம் பத்தியினால்
மன்னப் பயின்று மருவுமவன்—தன்னமரப்
பேசு குணஞ்செற்றுப் பிரமமாம் தன்மையினை
மாசில் குணம் சேர்ந்திடுமே மற்று." (ப. கீ. வெ. 26).

'மோக்ஷம் இச்சேத் ஜநார்த்தனாத்' என்றபடி ப்ரஹ்மத்தின் தன்மையை அடைவதற்கு ஸ்ரீய:பதியான பகவானே உபாயம்; பிரகிருதி ஜீவர்களின்வேறுபாட்டை அநுஸந்தித்தமாத்திரத்தால் குணங்களைக்கடப்பது கூடாததாகும். உறுதியான பக்தியோகத்தினால், எண்ணியவண்ணம்செய்து தலைக்கட்டக்கூடியவனும், அருள்நிறைந்து தன்னடியார்திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியார் அது செய்யார் என்று பரிவுகூறும் வாத்ஸல்யம் மிக்குள்ள என்னைப்பற்றியே கடத்தல் சாத்தியமாகும் என்று கூறுகிறார்.

27. ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டாஹம் அம்ருத ஸ்யாவ்யயஸ்ய ச
ஶாஶ்வதஸ்ய ச தர்மஸ்ய ஸுக ஸ்யைகாந்திகஸ்ய ச.

இறத்தலும் மாறுபடுதலும் இல்லாத பரிசுத்தமான ஜீவாத்மாவிற்கும் சாசுவதமான தர்மங்களால் உண்டாகும் ஐசுவர்யத்திற்கும் ஏகாந்திகளால் எய்தக்கூடிய வீட்டின்பத்திற்கும் நானே இருப்பிடம்; மூவகைப்பயனையும் கொடுப்பதற்குக் காரணம் நானே என்றபடி.

'ப்ரஹ்ம' என்பது இங்கு பலகாரணங்களால் பரிசுத்தமான ஜீவாத்மாவைக் குறிக்கும். ப்ரஹ்மஸூத்ரம் (III-2-37)-ன் கருத்தைத்தழுவியது இச்சுலோகம்.

(கீதார்த்த ஸங்கிரஹப்பாசுரம்).

" முக்குணமே உயிர்முற்றவும் கட்டிட மூண்டமையும்
முக்குணமே அனைத்தும் வினைகொள்ள முயன்றமையும்
முக்குணமாயை கடத்தலும் முக்கதி தன்னளிப்பும்
முக்குணமற்றபிரான் மொழிந்தான் முடியோன் தனக்கே."

பதினான்காவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ:

பதினைந்தாம் அத்தியாயம்.

புருஷோத்தம ப்ராப்தியோகம்

"மன்னும் அசித்தின் மருவியமர் சித்தெனுமா
வுன்னும் உயிர்வகையில் உத்தமனு—மன்னியனுய்
மீதுள் பரந்து பரிந்திறையாய் மேவினனை
ஓதும் பதினைந்தா மோத்து."

அவ [பற்றின்மைஎன்னும் கத்தியால் வெட்டி வீழ்த்தவேண்டிய ஸம்ஸார பந்தமாய்ப் பரவியிருக்கும் அசேதனப்பொருளின் வேறுபாட்டை ஆச்சரிய அரசமரமாக உருவகம் செய்தருள்கிறுர்].

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ கிருஷ்ணபகவான் உபதேசித்தருள்கிறுர்.

1. ஊர்த்வமூல மதஃஸாகம் அஸ்வத்தம் ப்ராஹு ரவ்யயம்
சந்தாம்ஸி யஸ்ய பர்ணுநி யஸ்தம் வேத ஸ வேதவித்.

எந்த அசுவத்தம் என்னும் ஒரு அரசமரத்தை மேல்நோக்கிய வேர்களும் கீழ்நோக்கிய கிளைகளும் அழிவின்மையும் உடையதாக சுருதிகள் முறையிட்டுள்ளவோ, எதற்கு வேதங்கள் இலைகளோ அந்த அசுவத்தமரத்தை எவன் தெரிந்துகொள்கின்ருனே அவன் வேதத்தை அறிந்தவன்.

இங்குள்ள உருவகம்விளங்க அறிதற்குரியது. மேல்நோக்கிய வேரையுடைய தென்றது, ஏழுலகங்கட்கும் மேலாகவீற்றிருக்கும் நான்முகக்கடவுளைக் காரணமாக வுடைத்தாதலின் என்றும், கீழ்நோக்கிய கிளைகளையுடையதென்றது, இப்பூதலத்தும் கீழுலகங்களிலும் வாசம்செய்யும் மானிடன், விலங்கு, புழு, பறவை, தாவரம் இவற்றை இறுதியிலுடைமையின் என்றும், அழிவற்றதென்றது, பற்றின்மைக்குக்காரணமாகிய மெய்யுணர்வு பிறக்குந்தனையும் மாறிமாறிவருதலின் வெட்டியொழிக்கக்கூடாததாதலின் என்றும் இலைகள் வேதங்கள் என்றது, இலைகளே மரம்செழித்து வளர்தற்குக் காரண மாவதுபோல வேதவிதிகளில் ஒதியுள்ள காம்யகருமங்களைப்புரிந்து செல்வமும் செல்வப் புதல்வரும் பெற்று ஸம்ஸாரம் வளர்ச்சியடைவதாதலின் என்றும் விரித்தமைத்துணர்க. இந்த அரசமரத்தை யறிந்தவன் வேதத்தை அறிந்தவனுதலாவது, வேதம் ஸம்ஸாரத்தை ஒழிப்பதற்கும் நிஷ்காம்யகர்மங்களை உபாயமாக உரைத்தலின் என்க. இதனுல் வெட்டியொழிக்கவேண்டிய மரத்தை அறிதல் வெட்டுவதற்கு உபாயத்தையும் அறித லாகுமாதலின் மரத்தை அறிந்தவன் அதை வெட்டிவீழ்க்கும் உபாயம்கூறும் வேதம் உணர்ந்தவனுகிறுன்.

2. அதஸ்சோர்த்வம்ச ப்ரஸ்ருதா ஸ்தஸ்ய மாகா
குணப்ரவ்ருத்தா விஷயப்ரவாலா:
அதஸ்ச மூலாந் யநு ஸந்ததாநி
கர்மாநுபந்தீநி மநுஷ்யலோகே.

அந்த விருக்ஷத்தின்கிளைகள் கீழ்நோக்கி மானிடமாதிஉருவங்கள் கொண்டும் மேல்நோக்கி தேவாதிவடிவங்கொண்டும் பரவியிருக்கின் றன; அவை ஸத்வம்முதலிய முக்குணங்களால் வளர்ச்சியடைகின் றன; சப்தம்முதலிய விஷயங்களே அக்கிளைகளில்உள்ள தளிர்கள்; அதன் கீழ்ப்புறங்களில், மானிடஉலகில் நல்வினை தீவினை என்றும் கருமங்களால் ஜீவாத்மாக்களைக் கட்டுப்படுத்தும் வேர்கள் பரவியிருக் கின்றன.

ஜீவாத்மாக்களே மனிதனுயிருக்கும்தசையிலேதான் புண்யபாவங்களைச்செய்து கீழுலகில் மனிதன், பசு முதலிவையாகவும் மேலுலகங்களில் தேவர்கள், யக்ஷர், கந்தர் வர் முதலியவாகவும் ஆகின்றன என்று கருத்து.

3. நரூப மஸ்யேஹ ததோபலப்யதே
நாந்தோ நசாதிர் நச ஸம்ப்ரதிஷ்டா:

இந்த விருக்ஷத்தின் வடிவம் கீழ்க்கூறியுள்ளவாறு இருப்ப தென்று இவ்வுலகில் தேரிந்துகொள்ளப்படுகிறதில்லை; குணமயங் களான இன்பங்களில் பற்று அற்றபோதே இது அழிவுஎய்தும் என்றும் தெரிவதில்லை; குணங்களாலுண்டான இன்பப்பற்றே இதற்குக்காரணம் என்றும் தெரிவதில்லை; அவ்வாறே, ஆத்மாஅல் லாத சரீரத்தில் 'இது ஆத்மா' என்னும் அபிமானமாகிய பொய் யுணர்வாகிய அஜ்ஞானமே இதற்கு ஆதாரம் என்றும் தெரிவதில்லை.

அஸ்வத்த மேநம் ஸுவிரூடமூலம்
அஸங்க ஸஸ்த்ரேண த்ருடேந சித்வா
4. தத: பதம் தத் பரிமார்க்கிதவ்யம்
யஸ்மின் கதா நநிவர்த்தந்தி பூய:

கீழே கூறியுள்ளவாறு உறுதியுடனும் பலதிறப்பட்டும் ஊன்றி யிருக்கும் வாஸனைகளாகிற வேர்களுடைய இந்த அரசமரத்தை மெய்புணர்வால் உண்டாகும் 'இன்பங்களில் பற்று இல்லாமை' என்னும் கூரியவாளால் வெட்டிவீழ்த்தி அந்த 'இன்பங்களில் பற் றின்மை' என்னும் காரணத்தாலேயே எந்தபதம்பெற்றவர்கள் மறு படியும் திரும்பி வருவதில்லையோ அந்தபதத்தைப் பெறமுயல வேண்டும்.

அவ [தொன்றுதொட்டுவரும் முக்குணங்களாலுண்டான இன்பங்களில் விருப்பமும் அதனடியாய்வினையும் திரிபுணர்ச்சியும் ஒழியுமாறு எப்படி என்று விளக்குகிறார்.]

தமேவ சாத்யம் புருஷம் * பரபத்யேத்
யதः ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ.

எல்லாவற்றையும் படைத்தவனாகிய எவனிடமிருந்து இந்த முக்குணங்களாலுண்டாகிய இன்பங்கள் விருப்பமாகியமுயற்சி எழுந்ததோ, அந்த முதல்காரணமாகிய பரமபுருஷனையே சரணமாக அடையவேண்டும்.

இங்ஙனம் பகவானைச்சரணமாக அடைந்தே அஜ்ஞானம் முதலிய தடைகளை நீக்கிக்கொள்ளவேண்டும்; இக்கருத்தை இந்நூலுள் IX-10, X-8, VII-7, (14) இந்த சுலோகங்களில் தெளியவுரைத்துள்ளமை காண்க. இங்கு பகவான் உபதேசித்திருப்பது 'அங்கப்ரபத்தி' என உய்த்துணர்க; இது இறைவனிடம் பக்தி உண்டாவதற்குச் சாதனமாகச்செய்யப்படுவது.

5. நிர்மாநமோஹா ஜிதஸங்கதோஷா
அத்யாத்மநித்யா விநிவ்ருத்தகாமா:
த்வந்த்வைர்விமுக்தா: ஸுகது:க்கஸம்ஜ்ஞை:
கச்சந்த்யமூடாः பதமவ்யயம்தத்.

"மான மோகங்களின்றி மற்றுநசைக் குற்றமற்(று)
ஆன உயிர்த்தன்மை அமர்ந்து ஆசையது—தானகன்றே
இன்பமிகுதுன்ப இருமை விட்டிங்கு உணர்வோர்
மன்பதமேதாம் அடைவர் வாய்ந்து." (ப. கீ. வெ. 5).

மன்பதம் - அழிவில்லாத ஸ்தானம்; அதாவது அளவுகடந்த ஞானத்தையே தன் இயல்பாயுடைய ஜீவாத்மாவை உண்மைநிலையில் எய்துகிறார்கள் என்றபடி. எல்லாப்பேறுகளும் எய்துவதற்கு என்னைச்சரணம்பற்றியர்வர்பால் யான்செய்யும் அநுக்ரஹமே காரணம் என்றவாறு.

6. ந தத்பாஸயதே ஸூர்யோ ந ஶஶாங்கோ ந பாவக:
யத்கத்வா ந நிவர்த்தந்தே தத்தாம பரமம் மம.

"அந்தஉயிர்ச் சோதியினை ஆதித்தன் சந்திரனும்
செந்தழலும் தாம்விளக்கம் செய்யார்கள்—எந்தஉயிர்
தானடைந்தார் மீளார்கள் தாமம்அஃது எனக்கே
ஆனவகை நீதான் அறி." (ப. கீ. வெ. 6).

---

* "ப்ரபத்யே யத: ப்ரவ்ருத்தி:" என்றும் பாடபேதமுண்டு; அந்தபரமபுருஷனை 'சரணம்பற்றி இந்த எல்லாவற்றிற்கும் காரணமானமுயற்சி அநாதியாய் உண்டானது' என்று பொருள்படும், 'புராணீ' - மோக்ஷத்தில் விருப்பமுள்ள முற்பட்டோருடைய முயற்சி,

இங்கு தாமம் என்றது உயர்ந்தசோதியை; அவ்வுயர்ந்தசோதி பகவான் தன்னுடையதுஎன்கிறான்; தனது விபூதியாகிய தனதுஅம்சம் 'என்று பொருள். சூரியன் முதலிய சுடர்களையும் பிரகாசம்செய்யவல்லதாதலின் உயர்ந்தசோதி எனப்படுகின்றது. சூரியன்முதலிய சுடரொளிகளும் இந்திரியங்கள் விஷயங்களில் சேரவொட்டாமல் தடைசெய்யும் இருளைப்போக்குமேயன்றி ஆத்மாவைப் பிரகாசம் செய்விக்கக்கூடியவைகள் அல்ல ஞானமே யாவற்றையும் புலப்படுத்தவல்லது.

7. மமைவாம்ஸோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதந:
மநஷ்ஷஷ்டா நீந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்தாநி கர்ஷதி.

எனது அம்சமே ஜீவர்களதுகூட்டத்தில் அநாதியாயிருந்துகொண்டு பத்தஜீவர்களாகி பிரகிருதியுருவங்களான சரீரங்களிலிருக்கும் மனதுடன்சேர்ந்து ஆறுகும் இந்திரியங்களை அங்குமிங்கும் இழுக்கின்றது.

8. ஶரீரம் யதவாப்நோதி யச்சா ப்யுத்க்ராமதீஸ்வர:
க்ருஹீ த்வைதாநி ஸம்யாதி வாயுர்கந்தா நிவாஶயாத்.

எங்ஙனம் நறுமலர், சாந்து, கஸ்தூரிமுதலிய நன்மணம்உள்ள பொருள்களில் தங்கிவரும்காற்று அப்பொருள்களிலுள்ள நுண்ணிய அம்சங்களுடன் நன்மணத்தையும் கவர்ந்து வேற்றிடம்செல்கின்றதோ அங்ஙனமே, எவ்வுடலையடைகின்றனனோ எவ்வுடலைவிட்டு வெளிப்போகின்றனனோ அவ்வுடல்களில் இந்திரியஙகட்கு ஈஸ்வரனாகிய இந்தஜீவன் ஐம்பூதங்களின் நுட்பமான பகுதிகளுடன் இந்திரியங்களை எடுத்துச்செல்கின்றான்.

அவ [அவ்விந்திரியங்களாவன].

9. ஶ்ரோத்ரம் சக்ஷு: ஸ்பர்ஶநஞ்ச ரஸநம் க்ராண மேவச
அதிஷ்டாய மநஶ்சாயம் விஷயா நுபஸேவதே.

செவியையும், கண்ணையும், மெய்யையும், நாவையும், மூக்கையும், மனஸையும் தந்தங்கள் விஷயங்களை நுகரத்தக்கவைகளாய்ச்செய்துகொண்டு, இந்தஜீவன் அவைகளை அநுபவிக்கிறான்.

10. உத்க்ராமந்தம் ஸ்திதம் வாபி புஞ்ஜாநம் வா குணாந்விதம்
விமூடா நாநுபஶ்யந்தி பஶ்யந்தி ஜ்ஞாநசக்ஷுஷ:

முக்குணமயமான பிரகிருதியின் பரிணாமமாகிய உடலுடன் கூடிய ஆத்மாவை, உடலைவிட்டுநீங்கும்போதும், உடலில்உறையும்போதும் விஷயங்களை நுகர்ந்துகொண்டிருக்கும்போதும் தத்வவுணர்ச்சியில்லாதவர்கள் உடலில்வேறுபட்டவன் என்று உணரமாட்டார்கள்; ஞானக்கண்ணுள்ளவர்களே வேறுபாட்டைக் காண்கின்றனர்.

11. யதந்தோ யோகிந ஶ்சைநம் பஶ்யந்த்யாத்ம ந்யவஸ்திதம்
யதந்தோப்யக்ருதாத்மாநோ நைநம் பஶ்யந்த்யசேதஸ:

சரணாகதியைத் துணைக்கொண்டு கருமயோகம்முதலிய நல்லறங்களில் முயற்சியுடையோராய் அம்முயற்சியால் தூய்மையடைந்த மனமுடையயோகியர், யோகமாகிறகண்ணினால் உடலில் உறைந்திருந்தும் அதனில்வேறுபட்ட இவ்வாத்மாவைப் பார்க்கின்றனர்; அங்ஙனம் என்பால் சரணாகதிசெய்யாமையின் தூய்மையடையாத மனமுடையவர்கள் ஆத்மாவைக்காண்பதற்கு ஏற்ற மனோசக்தியின்மையின் ஆத்மாவைத் தரிசிக்கிறதில்லை.

அவ [முக்திநிலையிலும் பத்தநிலையிலும் உள்ள ஜீவவர்க்கங்கள் தன்னுடைய விபூதிஎன்றுகூறி, இனி, சூரியன்முதலிய தேஜோபதார்த்தங்களின் பிரகாசமும் அத்தகைத்தே என்கிறார்].

12. ய தாதித்யகதம் தேஜ: ஜக த்பாஸயதேகிலம்
யச்சந்த்ரமஸி யச்சாக்நௌ தத்தேஜோ வித்தி மாமகம்.

எல்லாஉலகங்களையும் பிரகாசம்செய்விக்கும் சூரியன், சந்திரன், அக்னி முதலியோரின்தேஜஸ் எதுவோ அது எனது ஒளி; அவரவர்கள் என்னை ஆராதனம் செய்ததற்குஏற்ப என்னால் அவரவர்களுக்கு அருளப்பட்டாதாய்த் தெரிந்துகொள்.

13. கா மாவிஶ்ய ச பூதாநி தாரயா ம்யஹ மோஜஸா
புஷ்ணாமி சௌஷதீ: ஸர்வா: ஸோமோ பூத்வா ரஸாத்மக:

பூமியில் புகுந்துகொண்டு ஒருவராலும் தடுக்கக்கூடாத எனது வல்லமையால் எல்லாபூதங்களையும் நான் தாங்குகிறேன்; அவ்வாறே யான் அமுதமயமான ரஸம்நிறைந்த ஸோமனாக ஆகி எல்லாஔஷதிகளையும் நன்றாய் வளரச்செய்கிறேன்.

14. அஹம் வைஶ்வாநரோ பூத்வா ப்ராணிநாம் தேஹ மாஶ்ரித:
ப்ராணாபாநஸமாயுக்த: பசாம்யந்நம் சதுர்விதம்.

நான், வைசுவானரன் என்று சொல்லப்படும் ஜாடராக்னியாகி, அனைத்துப்பிராணிகளின் சரீரத்தை ஆசிரயித்து, பிராணன், அபானன்என்னும் வாயுக்களுடன்கூடி, நால்வகைத்தான அன்னத்தைப் பக்குவம் செய்கிறேன்.

ஜாடராக்னி - வயிற்றுள் உள்ள நெருப்பு. நால்வகைத்தான அன்னம் - கடித்தல், உறிஞ்சுதல், நக்குதல், குடித்தல் என்னும் நான்குவகையாய் உட்கொள்ளும் உணவு.

அவ [எல்லாப் பிராணிவர்க்கங்களையும் பரமாத்மாவுடன் ஒன்றெனக் கூறுவதற்குக் காரணங்கூறுகிறார்].

15. ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ
மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநஞ்ச
வேதைஸ்ச ஸர்வை ரஹமேவ வேத்ய:
வேதாந்த க்ருத்வேதவிதேவ சாஹம்.

ஸர்வப்பிராணிகளின் இதயத்தில் நிலைத்திருப்பவன் நான்; எண்ணுதலும், உணர்தலும், மறத்தலும் என்னாலேயே உண்டாகின்றன; வேதங்களனைத்தாலும் அறியத்தகுந்தவன் யானே; வேதங்களில் ஓதியுள்ள கருமங்களுக்குப் பயன் அளிப்பவனும்யானே; வேதத்தை அறிந்தவனும் யானே.

"எல்லார் இதயத்திருப்பேனான் என்னாலே
நல்லார் நினைவறிவு நாட்டமாம்—சொல்லார்ந்த
வேதங்கள் யாவைக்கும் வேத்தியனான் மேவுபயன்
மீதந்தது வறிவேன் மிக்கு" (ப. கீ. வெ. 15).

இதயம் என்பது ஞானம்உதிக்கும் இடம்; எல்லாவற்றையும் எனதுஸங்கல்பத்தினால் நியமனம்செய்துகொண்டு ஆதாரமான ஆத்மாவாக நான் அதில்இருக்கிறேன் என்றபடி (யஜுர்வேதம் - ஆரண்யகம் 3-11-2; ப்ரஹதாரண்யகம் 5-7-3, 5-7-22; தைத்ரீயம் - நாராயணம் 11; சாந்தோக்யம் 8-1-1-ல் காண்க). இவ்வண்ணமாக வேதம் என்னைக்கூறுகின்றதென்று தெரிந்தவன் யானே; ஆதலின் இதற்குமாறுபாடாய் வேதத்திற்குப் பொருள்கூறுபவன் வேதம் அறிந்தவன் அல்லன் என்றபடி.

அவ [ஆதலின் ஸகலவேதஸாரார்த்தத்தை என்னிடமே கேட்பாயாக என்கிறார்].

16. த்வா விமௌ புருஷௌ லோகே க்ஷரஸ்சாக்ஷர ஏவ ச
க்ஷர: ஸர்வாணி பூதாநி கூடஸ்தோ க்ஷர உச்யதே.

இந்த உலகத்தில் க்ஷரன், அக்ஷரன் என இருவகைப்பட்ட புருஷர்கள் பேர்படைத்திருக்கின்றனர்; ப்ரஹ்மாமுதல் புழுவரையுமுள்ள பத்தஜீவர்கள் க்ஷரன் என்றும், பரிசுத்தஜீவனாகிய கூடஸ்தன் அக்ஷரன் என்றும் சொல்லப்படுகிறான்.

"இந்த பிரகிருதியினிடம் பற்றுதல்வைத்துப் பிறப்பில்லாத ஒருவன் சேர்ந்திருக்கின்றான்; தன்னால்துய்க்கப்படும் இன்பங்களையுடைய இந்தபிரகிருதியை மற்றொரு பிறப்பற்றவன் விட்டுவிடுகிறான்" (தைத்ரீயம்) என்னும் கருத்துக்காண்க.

17. உத்தம: புருஷ ஸ்த்வந்ய: பரமாத்மேத் யுதாஹ்ருத:
யோ லோகத்ரய மாவிஶ்ய பிபர்த்ய வ்யய ஈஶ்வர:

"ஆங்கிவரில் உத்தமனே யாம்புருடன் அன்னியனாய்ப்
பாங்கில் பரமான்மா என்றுரைத்தான்—ஓங்கியே
தாம்புகுந்து நின்றே தரித்து உலகமூன்று இறையாய்
ஓம்புமவன் குன்றாது மேல்." (ப. கீ. வெ. 17).

[அன்னியன் - வேறுபட்டவன்; பரமான்மா என்றுரைத்தான் - சுருதிகளில் பரமாத்மாஎன்று சொல்லப்படுவான்; மூன்றுலகம்தரித்து - (அசேதனம், அதனுடன்கூடிய ஜீவன், அதனின்று விடுபட்ட முக்தன் எனப்பிரமாணங்களால் தெளியப்படும்) மூன்று லோகத்தையும் ஆத்மாவாய் உள்ளே நுழைந்து தரித்து, ஓம்புமவன் - காப்பவன்.]

18. யஸ்மாத் க்ஷரமதீதோஹம் அக்ஷரா தபிசோத்தம:
அதோஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம:

எக்காரணத்தினால் யான் பத்தஜீவர்களினும் மேம்பட்டவனோ, முக்தஜீவர்களையும்காட்டில் உத்தமனோ அதனாலேயே ஸ்மிருதிகளிலும் வேதத்திலும் புருஷோத்தமன் என்று பிரஸித்தியடைந்தவனாயிருக்கின்றேன்.

17-வது சுலோகத்தில் புருஷோத்தமன் என்று படர்க்கையாய்ப்பேசியதை இதில் அஹம் - நான் என்று தன்மையில் பேசிவிளக்குகிறார். சாந்தோக்யம் 8-12-2; ஸ்ரீ விஷ்ணுபுராணம் 5-17-33-லும் புருஷோத்தமன் பகவானே என்றுள்ளமைகாண்க. "நசதேந வினா நித்ராம் லபதே புருஷோத்தம:" ஸ்ரீராமாயணம் பாலகாண்டம் 18-29-65) "க: புண்டரீகநயந: புருஷோத்தம க:" (ஸ்தோத்ர ரத்னம் 12-6) காண்க. இம்மூவகைப்பொருள்களையும் நியமனம்செய்பவன் தன்னால்நியமிக்கப்படும் இந்த மூவகைப்பொருள்களைவிட வேறுபட்டவன் என்று கருத்து.

19. யோ மாமேவ மஸம்மூட: ஜாநாதி புருஷோத்தமம்
ஸ ஸர்வவித் பஜதி மாம் ஸர்வபாவேந பாரத!

பாரத! இவ்வண்ணமாய் புருஷோத்தமனாகிய என்னை மோஹமில்லாமல் எவன் அறிகின்றானோ அவன் எல்லாவற்றையும் அறிந்தவன்; எல்லாவிதங்களாலும் என்னிடம் பக்திசெய்கிறான்.

'ஸர்வபாவ' - எல்லாவிதங்களாலும் என்றது - பக்தியின்உட்பிரிவாய் முன்பே விவரிக்கப்பட்ட திருநாமஸங்கீர்த்தனம், திருவிளக்கெரித்தல், திருநந்தவனம்வைத்தல் முதலிய எல்லாவித கைங்கர்யங்களையும்.

20. **இதி குஹ்யதமம் ஶாஸ்த்ரம் இதமுக்தம் மயாநக !**
ஏதத்புத்வா புத்திமாந் ஸ்யாத் க்ருதக்ருத்யஶ்ச பாரத !

குற்றமற்றவனே ! பாரத ! இவ்வாறு என்னால் மிகவும் இரஹஸ்மாகிய இந்த சாஸ்திரம் உபதேசிக்கப்பட்டது; இதைஅறிந்தவன் என்னை அடைவதற்குவேண்டிய ஞானம்முழுவதும் உள்ளவனுவான் செய்யவேண்டியதைச் செய்தவனுகவும் ஆவான்.

நீ எவ்விதகுற்றமு மில்லாதவனுதலின் தகுந்தவன்எனக்கொண்டு மிகவும் இரஹஸ்யமான இப்பொருள் உனக்கு உரைக்கப்பட்டது. இதனுல் எல்லாப்பேற்றையும் தருவது புருஷோத்தமன் என்பதைப்பற்றிய ஞானமேயன்றி கேவல ஞானமாத்திரமன்று என்று தெளியப்படும்.

பதினைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

பதினாறும் அத்தியாயம்.

தெய்வாஸுர ஸம்பத்விபாக யோகம்.

"தன்மையால் தேவர் அசுரரென்னச் சார்பிறவும்
நன்மைசேர் சாத்திரத்தின் நாடுதலும்—தோன்மைக்
கரைக்கங்கறி வுறைப்புக் காட்டுதற்குக் கீதை
உரைக்கும் பதினாறா மோத்து." (ப. கீ. வெ.)

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ கிருஷ்ணபகவான் வகுத்துரைப்பான்.

1. அபயம் ஸத்வஸம் ஶுத்தி: ஜ்ஞாநயோக வ்யவஸ்திதி:
தாநம் தமஶ்ச யஜ்ஞஶ்ச ஸ்வாத்யாய ஸ்தப ஆர்ஜவம்.

2. அஹிம்ஸா ஸத்ய மக்ரோத: த்யாக ஶ்ஶாந்தி ரபைஶுநம்
தயா பூதே ஷ்வலோலுத்வம் மார்த்தவம் ஹ்ரீ ரசாபலம்.

3. தேஜ: க்ஷமா த்ருதி: ஶௌசம் அத்ரோஹோ நாதிமாநிதா
பவந்தி ஸம்பதம் தைவீம் அபிஜாதஸ்ய பாரத!

பாரத! அச்சம்இன்மை, ஸத்துவகுணத்தூய்மை, ஞானயோகத்தில் ஊன்றியிருத்தல், ஈகை, மனஅடக்கம், யாகம், வேதமோதுதல், தவம், கபடமின்மை, கொல்லாமை, மெய்ம்மை, வெகுளாமை, தியாகம், வெளிஇந்திரியங்களையடக்கல், தீக்குறளைச்சென்றோதாமை, ஜீவகாருண்யம், விஷயவிருப்பமின்மை, மென்மை, நாணம், சபலமின்மை, தேசு, பொறுமை, திண்மை, தூய்மை, துரோகம்செய்யாமை, அதிகர்வமில்லாமை - இக்குணங்கள் தெய்வம் என்னும் சம்பத்தில் சேர்ந்து பிறந்தார்க்குண்டாகும்.

4. தம்போ தர்ப்போபிமாநஶ்ச க்ரோத: பாருஷ்ய மேவச
அஜ்ஞாநம் சாபிஜாதஸ்ய பார்த்த ஸம்பத மாஸுரீம்.

பார்த்த! டம்பம், செருக்கு, அதிகர்வம், கோபம், கொடுந்தன்மை, அஞ்ஞானம் - இக்குணங்கள் அஸுரர்களது ஸம்பத்தைச் சார்ந்து பிறந்தவனுக்கு உண்டாகின்றன.

5. தைவீ ஸம்ப த்விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா

எனது ஆணையை அநுஸரிப்பதாகிய தைவஸம்பத்து ஸம்ஸாரக் கட்டினின்றும் விடுபடுவதற்குக் காரணமாகின்றது; எனது ஆணையை மீறிநடப்பதாகிய அஸுரஸம்பத்து ஸம்ஸாரத்தில் பிணிப்புண்டு தாழ்கதியடையக் காரணமாகின்றது என்று கருதப்பட்டது.

5½. மாஶுசः ஸம்பதம் தைவீம் அபிஜாதோஸி பாண்டவ.

பாண்டவ! நீ தைவிகஸம்பத்தைச்சார்ந்து பிறந்துள்ளாய்; ஆதலின் நீ சோகமடையாதே.

இங்கு 'பாண்டவ' என்றது நீ தருமிஷ்டர்களில் முதல்வனான பாண்டுவின் புத்திரனன்றோ என்றபடி. அருச்சுனன் தான் எவ்வகுப்பைச் சார்ந்தவன்என்று தெளியவுணராததனால்வாயில் பகவான் இங்ஙனம் கூறி அவனது அச்சத்தை நீக்கு கின்றார்.

6. த்வெள பூதஸர்க்கெள லோகேஸ்மிந்
தைவ ஆஸுர ஏவச
தைவோ விஸ்தரஶ: ப்ரோக்த:
ஆஸுரம் பார்த்த மே ஶ்ருணு.

"பூதம் இருவகையாய்ப் போருமே இவ்வுலகில்
ஆதமருந் தெய்வமாங் காசுரமாம்—மீததனில்
தெய்வம் விரித்துரைத்தேன் சேர்ந்துநீ ஆஸுரத்தை
மெய்வகைகேள் பார்த்தா விரித்து." (ப. கீ. வெ. 6).

இறைவன் ஆணையை அநுஸரித்து நடப்பதற்கும், மீறிநடத்தற்கும், பிராணிகள் தத்தம் நல்வினை தீவினைப் பயனுக்கேற்பத் தோன்றும்பொழுதே பிரிக்கப்படுகின்றன என்றபடி. தேவதைகளின் ஸ்வபாவமுடைய படைப்பு விரிவாய் உரைக்கப்பட்டதென்பது, இறைவன் ஆணையை அநுஸரித்து அதற்குஅடங்கி ஒழுகும் பிராணிகளின்படைப்பு அவர்களுக்கேற்ற ஒழுக்கங்களாகிய கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்பவை கீழே விரிவாயுரைக்கப்பட்டன என்றபடி.

7. ப்ரவ்ருத்திஞ்ச நிவ்ருத்திஞ்ச ஜநா ந விதுராஸுரா:
ந ஶௌசம் நாபி சாசார: ந ஸத்யம் தேஷு வித்யதே.

"செய்கின்ற இல்லறமும் செய்யாத் துறவறமும்
நைகின்ற ஆசுரர்கள் நன்கறியார்—மெய்குன்றாத்
தூய்மையுடன் ஆசாரம் சொல்லின் பயனுய
வாய்மையு மற்றில்லையவர் மாட்டு." (ப. கீ. வெ. 7).

புறத்திலும் அகத்திலும் சுத்தியைஉண்டாக்கும் ஸந்த்யாவந்தனம் முதலியவற்றைத் தவறாதுசெய்தலும் அஸுரஇயல்புடையோர்களிடம் இல்லை என்றபடி. தக்ஷஸ்ம்ருதி 2-2-2ல் "ஸந்த்யாவந்தனம் செய்யாதவன் எப்போதும் தூய்மையற்றவன்; அவன் எல்லா நற்

கருமங்களையும்புரிய யோக்யதை இல்லாதவனாகிறான்" என்று கூறியிருப்பதால் ஸந்த்யாவந்தனம்முதலிய நித்தியநைமித்திக கருமங்கள் ப்ரஹ்மதேஜஸை அபிவிர்த்திசெய்து, மேன்மேலும் நற்கருமங்களைப் புரிய ருசியைவிளைவித்து மற்ற வைதிககர்மங்களைச்செய்ய யோக்யதையையும் உண்டுபண்ணும் என்றபடி.

8. அஸத்ய மப்ரதிஷ்டந் தே ஜகதாஹு ரநீஸ்வரம்
அபரஸ்பரஸம்பூதம் கிமந்யத் காமஹைதுகம்.

"இச்சகத்து மெய்யன்று இதற்கோர் நிலைஇல்லை
மிச்சஇறை இல்லென்று மேல்விழுந்து—பிச்சுரைப்பார்
தன்னில்தான் காமத்தால் சார்ந்தே பிறக்குமதென்(று)
என்னில் தான்மற்று ஏதெனல்." (ப. கீ. வெ. 8).

[இ சகத்து - இந்த உலகம், (ஸத்யமான பரப்பிரமத்தின்று தோன்றி அவன் ஸ்வரூபமாயுள்ள இவ்வுலகு என்றபடி); மிச்ச இறை இல் - மேலான கடவுள் இல்லை, (ஸத்யஸங்கல்பனாய் ஸர்வேசுவரனாய் மேலானவனாகிய தன்னாலாளப்படும் இவ்வுலகுக்கு அங்ஙனம் ஆள்பவன் ஒருவனுமில்லை என்றபடி); பிச்சுரைப்பார் - அறிவின்றிப் பிதற்றுவார்.]

9. ஏதாம் த்ருஷ்டி மவஷ்டப்ய நஷ்டாத்மாநோல்பபுத்தய:
ப்ரபவந்த்யுக்ரகர்மாண: க்ஷயாய ஜகதோஹிதா:

இந்த ஞானத்தையடைந்து தேஹத்தில்வேறுபட்ட ஆத்மா உண்டென்று அறியாதவர்களாய், சிற்றறிவினராய், கொடுந்தொழில் புரிவோராய், பாவிகளுமாய், உலகத்தில் நாசத்திற்கே காரணமாக ஆகின்றனர்.

10. காம மாஸ்ரித்ய துஷ்பூரம்
தம்பமாந மதாந்விதா:
மோஹாத்க்ருஹீத்வா ஸத்க்ராஹாந்
ப்ரவர்த்தந்தே ஸுசிவ்ரதா:

பூர்த்தி செய்யக்கூடாத காமத்தை ஆசிரயித்து, அஜ்ஞானத்தால், தீயவழிகளில் ஈட்டப்பட்ட பொருள்களையுடையவர்களாய், சாஸ்திரங்களில் விதிக்கப்படாத தூய்மையற்ற விரதங்களையுடையர்களாய், டம்பம், துரபிமானம், கர்வம் இவற்றையுடையராய்ப் பிரவேசிக்கின்றனர்.

11. சிந்தா மபரிமேயாஞ் ச ப்ரலயாந்தா முபாஸ்ரிதா:
காமோபபோகபரமா: ஏதாவ திதி நிஸ்சிதா:

12. ஆஶாபாஶஶதைர் பத்தா: காமக்ரோத பராயணா:
ஈஹந்தே காமபோகார்த்தம் அந்யாயேநார்த்தஸஞ்சயாந்.

இன்றோ நாளையோ இறக்கப்போமவர்களும் மஹாப்ரளயகாலம் வரை முயன்றுபெறக்கூடிய அளவற்ற செல்வங்களைப்பற்றிய எண்ணம்மேலிட்டவர்களாய், அங்ஙனே காமங்களை நுகர்வதையே சிறந்த புருஷார்த்தமென்று எண்ணங்கொண்டுளோராய், இதனினும் சீரிய புருஷார்த்தம் கிடையாதுஎன்னும் உறுதியுடையவர்களாய் ஆசைகள் என்னும் பலபாசங்களால் கட்டுண்டு, காமம், வெகுளி இவற்றில் ஊன்றியவர்களாய், காமம்நுகரத் தீயவழிகளில் பணத்திரளைக் குவிக்க முற்படுகின்றனர்.

13. இதமத்ய மயாலப்தம் இமம் ப்ராப்ஸ்யே மநோரதம்
இத மஸ்தீதமபி மே பவிஷ்யதி புநர்த்தநம்.

" இது பெற்றேனிப்போ திதுயான் நினைந்த
திது கிட்டுவன் மேலுமின்னே—இதுவென்ன
தாயே யுண்டாகின்ற தாங்கதற்பின் இத்தனமு
மேயே யுண்டாமெனக்கு மிக்கு." (ப. கீ. வெ. 13).

14. அஸௌ மயா ஹதஶ்ஶத்ரு: ஹநிஷ்யே சாபராநபி
ஈஶ்வரோஹ மஹம் போகீ ஸித்தோஹம் பலவாந்ஸுகீ.

" இப்பகைவன் பட்டான்மற்றி யாவரையுங் கொல்வேனுன்
செப்பம்இறை நான்போகி சித்தன்நான்-மெய்ப்பொருளோன்
மேவுவலி யோன்சுகி நான்மேற்குலம் நான்ஆகின்றேன்
ஏவனென்னோ டொப்பான் மற்றிங்கு." (ப. கீ. வெ. 14).

[பட்டான் - ஒழிந்தான், மாண்டான்; போகி - போகம்என்னும் இன்பம் நுகர்பவன்; சித்தன் - தானாகவே இருப்பவன்; ஏவன் - எவன்.]

15. ஆட்யோபிஜநவாநஸ்மி
கோந்யோஸ்தி ஸத்ருஶோ மயா
யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்ய
இத்யஜ்ஞாந விமோஹிதா:

நான் இயல்பாகவே செல்வவந்தன்; நல்லகுடிப்பிறப்புடையவன்; தன்ஸாமர்த்தியத்தினாலேயே எய்தப்பெற்ற எல்லாச்சம்பத்துக்களும் உடைய வேறு எவன் இவ்வுலகில் எனக்கு நிகராவன்? யானாகவே வேள்விகள்புரிவேன்; தானதருமம் செய்வேன்; பெருமகிழ்ச்சி

யடைவேன். ஸர்வேசுவரனுடைய அருள் இல்லாமலே இவையனைத்தும் என்னால் இயற்றக்கூடும் என்று அறிவின்மையினால் மயக்கம் கொண்டு எண்ணமிடுகின்றனர்.

16. அநேகசித்தவிப்ராந்தா: மோஹஜால ஸமாவ்ருதா:
ப்ரஸக்தா: காமபோகேஷு பதந்தி நரகேஸுசௌ.

அதிருஷ்டம், ஈசுவரன்முதலிய துணைக்காரணங்களின் உதவியின்றியே அனைத்தும் தன்னொருவனாலேயே செய்துதலைக்கட்டக் கூடும் என்று அஹங்காரம்கொண்டு இங்ஙனே செய்வோம், அங்ஙனே செய்வோம், வேறொன்றுசெய்யவும்வல்லோம் என்று பலதிறப்பட்ட எண்ணங்களால் மயக்கம்அடைந்து, இத்தகைய பொய்யுணர்வுக்கூட்டங்களால் அறிவுமறைக்கப்பட்டு, காமநுகர்ச்சிகளில் அளவுமீறிய ஆசையுடையராய்ப் பொழுதுகடத்தும்போது இடையே மரணம் அடைந்து தூய்மையேயில்லாத நரகத்தில் விழுகின்றனர்.

17. ஆத்மஸம்பாவிதா ஸ்தப்தா: தநமாநமதாந்விதா:
யஜந்தே நாம யஜ்ஞைஸ்தே தம்பேநாவிதிபூர்வகம்.

தற்புகழ்ச்சி செய்துகொண்டும் தங்களைப் பூர்த்தியுள்ளவர்களாகக்கருதி ஆசார்யஸேவைமுதலிய ஒருநற்செயலுமின்றி, கல்வி, செல்வம், உயர்குடிப்பிறப்பு இவற்றின் அபிமானத்தால் ஏற்படும் செருக்குமிகுந்து, தருமம்முதலிய பயன்களைக்கருதாமல் வேள்வி புரிந்தவன் என்னும் பிரஸித்தியான பெயர்ஒன்றையே கருதி டம்பம் தலையெடுத்து சாஸ்திரங்களில் விதிக்கப்படாமலிருக்கும் யாகங்களைச் செய்கின்றனர்.

அவ [அவர்கள்புரியும் யாகத்தின் முறையை விரித்துரைக்கின்றார்].

18. அஹங்காரம் பலம் தர்ப்பம் காமம் க்ரோதம் ச ஸம்ச்ரிதா:
மாமாத்ம பரதேஹேஷு ப்ரத்விஷந்தோப்யஸூயகா:

பிறர்உதவி ஒருசிறிதுமின்றி யானேஅனைத்தும் இயற்றவல்லேன் என்னும் அஹங்காரமும், எது செய்வதெனினும் எனதுவலிமையே சாலும்என்னும் வன்மையும், ஆதலின் எனக்குநிகராவார் எவருமில்லை என்னும் செருக்கும், எனது இச்சையளவில் எல்லாம் பெறுவேன் என்னும் காமமும், எனதுவிருப்பத்திற்கு இடையூறு செய்வோர்களைக் கொன்றொழிப்பேன் என்னும் கோபமும், இம்முறையேஅடைந்து, தன்தேகத்திலும் பிறர்தேகங்களிலும் உறைபவனும், யாவற்றையும் நியமனம்செய்பவனும், புருஷோத்தமனு

யும் இருக்கும் என்னிடம் பொறாமைமிகுந்து, எனதுபெருமையைப் பொறுக்காதவர்களாய் என்னிடம் குற்றங்கள் இருப்பதாய்ப் பறை யறைந்துகொண்டு வேள்விமுதலிய எல்லாக்கிரியைகளையும் புரிகின் றார்கள்.

19. தா நஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்
க்ஷிபாம்யஜஸ்ர மஶுபாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு.

"ஆங்கு என்னைத்தான் வெறுத்த அந்தநராதமரை
ஈங்கு உழலும் இப்பவத்தில் என்றும்நான்—தீங்குழலும்
ஆசுரமாம் யோனி யவைதன் னிடையெய்த
மாசுறவே தள்ளுவேன் மற்று." (ப. கீ. வெ. 18).

[நராதமர் - மக்களில் கடைப்பட்டோர்; இப்பவத்தில் - இந்தஸம்ஸாரத்தில்].

கீழ் 7-15ல் "நமாம் துஷ்க்ருதிந:" என்றஇடத்தில் கூறப்பட் டுள்ள நால்வகைப்பாவிகளும் இங்கு 'நராதமர்' எனப்பட்டனர். ஸர்வஜன ஸுஹ்ருத்தான பகவானுக்குப் பகைவர் பாகவதஅபசாரம் புரிபவர்களேயாதலின் அத்தகையோரை ஆசுரப்பிறவிகளில் தள்ளு கிறான் என்றநிர்வாஹமும் இங்கு அறியத்தக்கது. பண்டைப்பழ வினையிற்பயனாகவே பகவான் இங்ஙனம் செய்கின்றானாதலின் பகவா னிடம் பக்ஷபாதம், தயையின்மை முதலிய குறைபாடுகள் இல்லை என்க.

20. ஆஸுரீம் யோநி மாபந்நா: மூடா ஜந்மநி ஜந்மநி
மா மப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாங் கதிம்.

"உற்று நிகழ்ந்தாசுரமாம் யோனிகளிற் பல்பிறப்பில்
முற்று மறிவின்றியே மூடராய்க்—கொற்றவனே!
என்னையடையாதே ஈங்கதனில் தாழ்ந்தகதி
தன்னடைவர் என்றும் தளர்ந்து." (ப. கீ. வெ. 19).

அறிவின்றி மூடராய்த் தாழ்ந்தகதியடைவர் என்றது எல்லாவற் றிற்கும் ஈஸ்வரனாகிய பகவான் ஸ்ரீவாஸுதேவன்உளன் என்னும் சாஸ்திரஜந்யஞானமே யில்லாமல் கீழுக்குக்கீழான பிறவிகளில் சேர்ந்துழல்வர் என்றபடி.

அவ [ஆத்மநாசம்விளைக்கும் இவ்வசுர ஸ்வபாவத்திற்கு மூலகாரணம் கூறுகிறார்].

21. த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாஶந மாத்மந:
காமக்ரோதஸ் ததா லோப: தஸ்மாதேதத் த்ரயம் த்யஜேத்.

இவ்வசுரசுபாவமாகும் நரகிற்கு காமம், கோபம், லோபம் என்னுமிவை மூன்றும் வாயில்களாம்; இவை ஆத்மநாசத்தையே விளைவிக்கவல்லவை. மிகபயங்கரமான நரகத்திற்கு இவைமூன்றுமே காரணமாதலின் இவற்றை வெகுதூரத்தே விட்டொழிக்கவேண்டும்.

இம்மூன்று தீக்குணங்களின் விரிவு முன்பேஉரைக்கப்பட்டது. ஆஸுரசுபாவம், நரகம், ஆத்மநாசம் என்னும்இவை வேறுவேறானவையல்ல; பரியாயநாமங்களே. ஆயினும் ஆஸுரசுபாவம் நரகினும் கொடிது; பாபத்தை நரகத்தில் அநுபவித்துப் போக்கிக்கொள்ளலாம்; நரகமே சுவர்க்கமாகும் இடமுமுண்டு. ஆஸுரத்தன்மையோ மேன்மேலும் பாபத்தையே வளர்த்தவல்லது. ஆதலின் இது மிக்க கொடிது என்றபடி.

22. ஏதைர் விமுக்த: கௌந்தேய தமோத்வாரை ஸ்த்ரிபிர்நர:
ஆசரத்யாத்மந: ஶ்ரேய: ததோ யாதி பராங் கதிம்.

கௌந்தேய! விபரீத உணர்வுக்குக் காரணமான இவை மூன்றினின்றும் விடுபட்டமனிதன் தனக்குநன்மையை ஆசரிக்கின்றான்; அதனால் உயர்ந்தகதியை அடைகிறான்.

தனக்குநன்மையை ஆசரித்தலாவது பகவானைப்பற்றிய மெய்யறிவடைந்தவனாய் அவனுக்கு அநுகூலமாய்நடப்பதில் முயல்கின்றான்; அம்முயற்சி நீடிக்க, உயர்ந்தகதியாகிய பகவானையே யடைகிறான் என்றபடி.

அவ [சாஸ்த்திரத்தைப் புறக்கணித்து இகழ்வது இத்தகைய நரகெய்த முதற்காரணம் என்கிறார்].

23. யஶ்ஶாஸ்த்ரவிதி முத்ஸ்ருஜ்ய வர்த்ததே காமகாரத:
ந ஸ ஸித்தி மவாப்நோதி நஸுகம் ந பராங் கதிம்.

சாஸ்திரங்கள்என்பன வேதங்களே; விதிஎன்பது ஆணை; வேதம்என்னும் பெயரையுடைய எனது ஆணையைப் புறக்கணித்து எவன் தன்னிச்சைக்கேற்றபடி யிருக்கின்றானோ அவன் மேலுலகில் உண்டாகும் ஒருவிதஸித்தியும் அடைவதில்லை; ஒருவிதஸுகமும் பெறுவதில்லை; எங்ஙனம் உயர்கதிஎய்துவான்?

24. தஸ்மாத் ஶாஸ்த்ரம் ப்ரமாணம் தே
கார்யாகார்ய வ்யவஸ்திதௌ
ஜ்ஞாத்வா ஶாஸ்த்ரவிதாநோக்தம்
கர்ம கர்த்து மிஹார்ஹஸி.

“ மன்னிச் செயுமதுவும் மற்றதுவு முற்றறிவு
தன்னிற் பிரமாணம் சாத்திரமே—என்னுமதால்
அந்த விதான மறிந்தே கருமத்தை
முந்த இயல்நீ முயன்று.” (ப. கீ. வெ. 23).

[மன்னி - பொருந்தி ; மற்றதுவும் - செய்யத்தகாததுவும் ; விதானம் - விதிக்கப் பட்டுள்ளது ; இயல் - இயற்று].

வேதத்தின் விழுப்பொருள்களை அறுதியிடுவது தருமசாஸ்திரம், இதிஹாஸம், புராணம் என்பன. அவைகளில் தத்வம் புருஷோத்தமனே என்றும், அவனுக்கு ப்ரீதிவிளைவிப்பனவும் அவனை அடைவதற்கு உபாயங்களுமானவை கர்மங்களென்றும் தெளிவிக்கின்றன. ஆதலின் அவற்றை உள்ளவாறுஉணர்ந்து முறைப்படி செய்தற் குரியவனாகிறாய் நீ ; அதையே அங்கீகரிக்கத்தகுந்தவனாயும் உள்ளாய் என உபதேச மாகக் கூறிமுடிக்கின்றான்.

“ இப்படியே தேவாசுரமா மியல்வதனைத்
தப்பறுசீர் ஞானத் தகுநிலைமைக்—கொப்பாப்
பகர்ந்த சீர்க்கீதைப் பதினாறாமோத்தில்
நிகழ்ந்த பொருள்முற்றியது நேர்ந்து.”

பதினாறாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினேழாவது அத்தியாயம்.

சிரத்தாத்ரய விபாகயோகம்.

"ஆசுரமாங் கானமை சாத்திரந்தான் சாத்திரத்தில்
தேசுடைய கன்மம் செறிகுணத்தால்—பேசுநெறி
சேர்ந்தே யிம்முக்குணங்கள் செப்புமே மூவகையா
ஓர்ந்தே பதிநேழா மோத்து." (ப. கீ. வெ.)

அர்ஜுந உவாச – அருச்சுனன் வினவுவான்.

1. யே ஶாஸ்த்ரவிதி முத்ஸ்ருஜ்ய யஜந்தே ஶ்ரத்தயாந்விதா:
தேஷாம் நிஷ்டாது கா க்ருஷ்ண ஸத்வமாஹோ ரஜஸ் தம:

ஸ்ரீ கிருஷ்ணா! சாஸ்திரங்களில் விளக்கியுள்ள விதியை விலக்கி விட்டு சிரத்தையோடு கூடியவர்களாய் எவர்கள் யாகம்புரிகின்றனரோ அவர்களுக்கு நிஷ்டை எது? ஸத்துவமா? ரஜோகுணமா? அல்லது தமோகுணமா?

அவர்களுக்கு இருப்பு என்பது முக்குணங்களில் எக்குணத்தில் என்றபடி.

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ கிருஷ்ணபகவான் விடைதந்தருள்வான்.

2. த்ரிவிதா பவதி ஶ்ரத்தா தேஹிநாம் ஸா ஸ்வபாவஜா
ஸாத்விகீ ராஜஸீ சைவ தாமஸீ சேதி தாம் ஶ்ருணு.

உடலெடுத்த எல்லாப்பிராணிகளின் சிரத்தை மூவகைப்பட்டது; அதுவும் இயற்கையில் எழுந்தது. அது ஸாத்விகீ, ராஜஸீ, தாமஸீ எனப்படும். அந்தசிரத்தையின் இயல்புகள் இன்ன இன்ன வெனக்கூறுவேன் கேள்.

ஸத்வமுதலிய குணங்களின் சேர்க்கையால்விளையும் ஆத்மாவின் இயல்புகள் பழையவாசனையின்பயனாய் ஒரோர் செயல்களில் உண்டாகும் விருப்பங்களே. விருப்பம் சிரத்தையில் மூட்டும். இச்செய்கை நமது இஷ்டத்தை எய்துவிக்கும் என்னும் உறுதியுடன் விரைவு, பற்று, சுவை, சிரத்தைகள் விளையும்.

3. ஸத்வாநுரூபா ஸர்வஸ்ய ஶ்ரத்தா பவதி பாரத
ஶ்ரத்தாமயோயம் புருஷ: யோயச்ரத்த: ஸ ஏவஸ:

பாரத! எல்லாப்புருஷர்கட்கும் தம்மனதிற்கு ஏற்றபடியே சிரத்தையும் உண்டாகிறது. இந்தப்புருஷன் என்னும்ஜீவன் சிரத்தையின்பரிணாமமே. எவன் எத்தகையசிரத்தையுடையவனோ அவன் அந்தசிரத்தையின் பரிணாமமான இயல்பை யுடையனாகிறான்.

இதனுல் புண்யகர்மங்களில் சிரத்தையுடையவன் புண்யகர்மப்பயனை உடையவனுகிருன் என்றுகருத்து. ஆதலின், பயன்பெறுவதற்குத் தலையானகாரணம் சிரத்தையே என்று நாட்டப்பட்டது. ஸத்வம்என்பது எல்லாசிரத்தைகட்கும் பொதுக்காரணமான முக்குணங்களுடன்கூடிய மனம் என்று இங்குபொருள்படும்.

அவ [இன்னும் விரித்துரைக்கின்ருர்.]

4. யஜந்தே ஸாத்விகா தேவாந் யக்ஷரக்ஷாம்ஸி ராஜஸா:
ப்ரேதாந் பூதகணும் ஶ்சாந்யே யஜந்தே தாமஸா ஜநா:

ஸத்வகுணம் மேலிட்டோர் தேவதைகளைப் பூஜிக்கின்றனர்; ரஜோகுணம் மேலிட்டவர்கள் இயக்கர், அரக்கர்களை ஆராதனம்செய்கின்றனர்; தமோகுணம் மேலிட்டஜனங்கள் சவங்களையும் பூதகணங்களையும் வழிபடுகின்றனர்.

ஸாத்விகம்என்பது துக்கம்கலவாத சீரிய இன்பத்திற்குக்காரணமாகிய தேவபூஜையைக்குறித்த சிரத்தை. ரஜோகுணம் மேலிட்டசிரத்தை துக்கம்கலந்த அற்ப இன்பத்தையும், தமோகுணம் மேலிட்டசிரத்தை மிகுந்ததுக்கமும் மிகச்சிறிய இன்பமுமேதரும் என்றபடி.

5. அஶாஸ்த்ரவிஹிதம் கோரம் தப்யந்தே யே தபோஜநா:
தம்பாஹங்கார ஸம்யுக்தா: காமராக பலாந்விதா:

"கோரமாய்ச் சாத்திரத்திற் கூருத் தவந்தன்னைச்
சேரவே யாரியல்வால் டம்பமுடன்—ஈரமிலா
ஆங் காரங்கூடி அதிகாம ராகங்கள்
தீங் காகுந்திண்மை செறிந்து." (ப. கீ. வெ. 5).

[கோரம் - குரூரம், கொடியது; காமராகங்கள் - விருப்பு வெறுப்புகள்.]

6. கர்ஶயந்த: ஶரீரஸ்தம் பூதக்ராம மசேதஸ:
மாம் சைவாந்தஶ்ஶரீரஸ்தம் தாந் வித்யாஸுரநிஶ்சயாந்.

எந்தஜனங்கள் டம்பம், அஹங்காரம், காமம், மோஹம், உடல் வலி இவற்றுடன் கூடியவர்களாய் பஞ்சபூதபரிணுமமான உடலையும், அவ்வுடலுள் உறையும் எனதுஅம்சமான ஜீவாத்மாவையும் சாஸ்திரங்களில் விதிக்கப்படாத கொடியதவத்தால் துன்புறுத்துகின்றனரோ, எந்தஜனங்கள் இந்தமுறைபில் யாகம் முதலியவற்றைச் செய்கின்றனரோ, அவர்களை அஸுரர்களின் உறுதிப்பாடுள்ளவர்கள் என்று உணர்வாயாக.

அஸுரர் என்பார் எனது ஆணையை மீறிநடப்பதால் எள்ளளவு இன்பத்தின் சேர்க்கையும் இல்லாதோர். ஆனுலோ 'பதந்தி நரகேஸுசௌ' என்று முன்னேகூறியுள்ளபடி அநிஷ்டங்களின் திரளில் விழுகின்றனர் என்றபடி.

அவ [இனி கீழேகூறியுள்ள சாஸ்திரவிஹிதமான யஜ்ஞம், தானம், தபஸ்முதலியவற்றில் முக்குணங்களால் நிகழும் வேறுபாடுகளை விரித்துரைக்கின்றார்; அதில் ஸத்வகுணம் வளர்ச்சிபெற உட்கொள்ளும் உணவு முக்ய காரணமாயிருத்தலின் உணவின்வகை மூன்றென்கிறார்].

7. ஆஹார ஸ்த்வபி யர்வஸ்ய த்ரிவிதோ பவதி ப்ரிய:
யஜ்ஞஸ்தப ஸ்ததாதாநம் தேஷாம் பேத மிமம் ஶ்ருணு.

முக்குண இயற்கையால் எல்லாப்பிராணிகட்கும் மூவகை உணவு பிரியமாகஇருக்கிறது. அவ்வாறே யஜ்ஞம், தவம், தானம் மும்மூன்று பிரிவுடையன; மேலேகூறப்படும் இந்த வேறுபாடுகளைக்கேள்.

8. ஆயு ஸ்ஸத்வபலாரோக்ய
ஸுகப்ரீதி விவர்த்தநா:
ரஸ்யா: ஸ்நிக்தா: ஸ்திரா: ஹ்ருத்யா
ஆஹாரா ஸ்ஸாத்விகப்ரியாঃ

"வாணாள் மனந்தெளிவு மன்னுவலி நோயாமை
பூணுஞ் சுகம்உகப்பைப் பொங்குவிக்கும்—மாணார்ந்து
தித்தித்து நெய்த்துத் திரமாய் மனோகரமாய்
ஒத்திடுமே முற்குணத்தின் ஊண்." (ப. கீ. வெ. 8).

[வாணாள் – வாழ்நாள்; நோயாமை – வியாதியில்லாமல் ஆரோக்கியமாயிருத்தல்; உகப்பு - பகவானுக்குப் ப்ரீதிஉண்டாகும் கருமங்களைச்செய்வதில் மகிழ்ச்சி; ஊண் - உணவு.]

ஸத்வம் என்பது மனது; "ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞானம்" (ப. கீ. 14-17) என்றபடி ஸத்வகுணம் அறிவுவளர்ச்சிக்குக் காரணமாதலின் ஸத்வகுணம்நிறைந்த உணவும் அங்ஙனமே யாகின்றது.

9. கட்வம்ல லவணாத்யுஷ்ண தீக்ஷ்ண ரூக்ஷ்ய விதாஹிந:
ஆஹாரா ராஜஸஸ்யேஷ்டா: துக்க ஶோகாமயப்ரதா:

"காழ்த்துப் புளித்து உப்பாய்க் கைக்கொதித்துத் தான்கடிதாய்
ஆழ்ச்சிக் கொடிதாய் அழல்விளைத்து—மூழ்ச்சியினில்
துக்கம் சோகம் பிணியைச்சூழ்க்கும் நடுக்குணத்தின்
ஒக்க உகந்ததுண்ணும் ஊண்." (ப. கீ. வெ. 9).

[காழ்த்து – காரமுள்ளதாய்; அழல்விளைத்து - தாபத்தை உண்டாக்கி; நடுக்குணம் - இராஜஸகுணம்.]

10. யாதயாமம் கதரஸம் பூதி பர்யுஷிதம் ச யத்
உச்சிஷ்ட மபிசாமேத்யம் போஜனம் தாமஸப்ரியம்.

“காலங்கழிந்து கழிந்திரதந்துற் கெந்தித்(து)
ஏலமிகப்பழகி எச்சிலாய்ச்—சாலப்
படைத்த முதுக்காகாத பாவச்சோறுகும்
கடைக்குணத்தான் உண்ணும் கணக்கு.” (ப. கீ. வெ. 10).

இங்கு எச்சில் என்றது ஆசார்யன்முதலிய மஹான்களன்றி மற்றையோர் உண்டு கழித்தது; கணவனுண்டகலத்தில் மனைவி உண்ணும்வழக்கமும் இங்குநோக்கத் தக்கது. எச்சில்பாத்ரஸ்தசேஷம், பாண்டஸ்தசேஷம் என இருவகைப்படும்; முன்னையது இட்டு உண்ணும் இலைமுதலிய பொருள்களில்இருக்கும் மிச்சம்; பின்னையது சமையல்செய்துவைத்திருக்கும் பாண்டத்தில் சிலர் உண்ணப்பரிமாறியபின் இருக்கும் மிச்சம்.

11. அபலாகாங்க்ஷி பிர்யஜ்ஞ: விதி த்ருஷ்டோய இஜ்யதே
யஷ்டவ்யமேவேதி மந: ஸமாதாய ஸ ஸாத்விக:

பயனில் விருப்பின்றிப் புருஷர்களால் சாஸ்திரங்களைக்கொண்டு தெளியப்பட்டனவாய், மந்திரம், பொருள், கிரியை என்பவைமூலமாய் பகவதாராதனரூபமாய் யாகம்புரிதல் வேண்டுமென்று மனதை ஸாவதானமாக்கிக்கொண்டு எந்தயாகம் இயற்றப்படுகின்றதோ அது ஸாத்விகயாகம் எனப்படும்.

இது யஜ்ஞம் என்றது ‘யஜ தேவ பூஜாயாம்’ என்னும் பகுதிப்பொருளுக்கு இணங்கச்செய்யப்படும் பகவதாராதனரூபமான கருமங்களை.

12. அபிஸந்தாய து பலம் தம்பார்த்த மபி சைவயத்
இஜ்யதே பரதஶ்ரேஷ்ட தம் யஜ்ஞம் வித்தி ராஜஸம்.

பரதசிரேஷ்டனே!

பயனில் விருப்பமுடையோரால் டம்பத்தை உள்ளடக்கிக் கொண்டு புகழைக்கருதி எந்தயாகம் இயற்றப்படுகின்றதோ அது ராஜஸயாகம் என்று தெரிந்துகொள்.

இங்கு பரதசிரேஷ்டனே! என்று அருச்சுனனை விளித்ததின் கருத்து நீ உன்குலப்பெருமைக்கேற்றவாறு ஸாத்விகயாகம்செய்தற்கே உரியன்என உணர்த்தற்காகும்.

13. விதிஹீந மஸ்ருஷ்டாந்நம் மந்த்ரஹீந மதக்ஷிணம்
ஶ்ரத்தா விரஹிதம் யஜ்ஞம் தாமஸம் பரிசக்ஷதே.

“விதியற்று அவியற்று மந்திரமும் விட்டே
அதின்மேவு தக்கணையும் அற்றுக்—கதிசேர்ந்த
வேனும் சிரத்தையிலா எச்சம் கடைக்குணத்தால்
கோலும் எனவுரைப்பர் கூர்ந்து.” (ப. கீ. வெ. 13).

[விதியற்று - நல்ல ஆசாரமுடைய வித்வான்களால் அநுமதிசெய்யப்படாததாய்; அவியற்று - அன்னரூபமாய் அக்கினியிலும் அதிதிகட்கும் இடுவது இல்லாமல்; தக்கணை- தக்ஷிணை; எச்சம் - யஜ்ஞம் என்பதன்திரிபு.]

"அறனீனும் இன்பமுமீனும் திறனறிந்து தீதின்றி வந்தபொருள்" என்றூராதலின் வழியல்லாவழியில் ஈட்டியபொருள் நற்கருமம்புரிவதற்கு உதவாது என்றபடி.

அவ [மேல், உள்ளம், உரை, செயல்என்னும் மூன்றாலும் செய்யப்படும் தவமும் முக்குணங்களால் மூன்றுவகைப்படும் என்கிறார்].

14. தேவத்விஜ குரு ப்ராஜ்ஞ பூஜநம் ஶௌசம் ஆர்ஜவம்
ப்ரஹ்மசர்ய மஹிம்ஸா ச ஶாரீரம் தப உச்யதே.

"தேவர் மறையோர் குருக்கள் மிகவுணர்ந்தோர்
மேவ அருச்சித்தல் மெய்தூய்மை—ஓவாத
செவ்வை மகளிரிடைச் செல்லாமை கொல்லாமை
இவ்வகை காயத்தவமாம் இங்கு." (ப. கீ. வெ. 15).

புறந்தூய்மை நீரானமையும் என்று ஸாமாந்யதர்மம் கூறுமாயினும் புண்யதீர்த்த ஸ்நாநம் அகத்தூய்மையையும் தரும் என்க.

15. அநுத்வேககரம் வாக்யம் ஸத்யம் ப்ரியஹிதம் ச யத்
ஸ்வாத்யாயாப்யஸநம் சைவ வாங்மயம் தப உச்யதே.

பிறருக்கு அச்சத்தை விளைவிக்காததும், மெய்யாயும், பிரியமாயும், இதமாயும், இருக்கும் வாசகங்கள் எவையோ அவையும், வேதத்தை உருச்சொல்லிப் பயிற்சிசெய்வதும் வாயினால் செய்யக்கூடிய தவம் என்று சொல்லப்படுகிறது.

கொடுஞ்சொற்கூறல், இரகஸ்யங்களை வெளியிடல், நிந்தனைசெய்தல் முதலியன பிறர்க்கு அச்சம்விளைவிப்பனவாதலின் அவற்றை அற ஒழித்தல்வேண்டும். மெய் என்பது 'வாய்மைஎன்பது யாதெனின் யாதொன்றும் தீமையிலாத சொலல்.' பிரியம் என்பது க்ஷேமத்தை விசாரித்தலும், தருமச்செயல்களை அநுமோதனம்செய்தலும் முதலாயின; இது இதமாகிய நன்மையிலும் மூட்டுதல்வேண்டும். வேத அத்யயனம் செய்தல் ஜபயஜ்ஞம் எனப்படும்.

16. மந: ப்ரஸாத: ஸௌம்யத்வம் மௌநமாத்மவிநிக்ரஹ:
பாவஸம்ஶுத்தி ரித்யேதத் தபோ மாநஸ முச்யதே.

கோபம்முதலியனஇல்லாமல் மனம் தெளிவடைந்திருத்தல்; பிறர் நலம் வளர்தலில் மனம் விருப்புற்றிருத்தல், வாயால் பேசுவதை மனத்தால் அடக்கி மௌனவிரதம் கொள்ளல், மனதின்தொழிலை

தியானம் செய்யத்தக்கஇடத்தில் நிலையாகநிறுத்திக்கொள்ளுதல், ஆத்மசிந்தனம்தவிர மற்ற விஷயங்களில் நினைவற்றிருத்தல், என்கிற இது மனதினுல் செய்யப்படும் தவம் என்று கூறப்படுகிறது.

'பாவஸம்சுத்தி' என்றதில், தனிமையில் அயல்மாதர்பால்செல்லும் மனமும் தடுக்கப்படவேண்டும் என்பதும் போதரும். "நீதியில்நின்றீர் வாய்மையமைந்தீர் நினைவாலும், மாதர் நலம்பேணுது வளர்ந்தீர்" எனச்சாம்பவன் அநுமனைப்புகழ்ந்தமை காண்க.

17. ஶ்ரத்தயா பரயாதப்தம் தபஸ்தத் த்ரிவிதம் நரை:
அபலாகாங்க்ஷிபிர் யுக்தை: ஸாத்விகம் பரிசக்ஷதே.

"முக்கரணம் செய்தவங்கள் மூன்றுவிதம் ஆர்வமுயர்ந்(து)
ஒக்க வருபயனை உள்ளொழித்துத்—தக்தவர்கள்
செய்யுந் தவத்தைச் சிறக்கின்ற முற்குணத்தென்(று)
உய்யு மவருரைப்பர் உற்று." (ப. கீ. வெ. 18).

[முக்கரணம் - மனம், வாக்கு, காயம்; முற்குணம் - முன்குணம், ஸத்வகுணம்.]

18. ஸத்காரமாநபூஜார்த்தம் தபோ தம்பேநசைவயத்
க்ரியதே ததிஹ ப்ரோக்தம் ராஜஸம் சல மத்ருவம்.

"நாடு நலநினைந்து கொண்டாடி நன்குஇறைஞ்சத்
தேடு மனநினைந்து டம்பத்தால்—பீடுறவே
ஏய்ந்த தவநில்லாது இடைக்குணத்த தாய்ச்சலித்து
மாய்ந்தறு மென்றேயுரைப்பர் மற்று." (ப. கீ. வெ. 19).

[நலம் நினைந்து - பயனை எதிர்பார்த்து; பீடு - பெருமை; இடைக்குணம் - இராஜஸகுணம்.]

சுவர்க்கம்முதலிய நிலையில்லாத பயன்கருதிய தவமாதலின் 'சலம்', 'அத்ருவம்' எனப்பட்டது; சஞ்சலமும் அழிவும் உடையது என்றுபொருள். "க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விஸந்தி" என்று தங்கள்புண்யம்பலம் அநுபவித்து ஒழிந்தவாறே பூலோகங்களில் விழுந்துவிடுகின்றனர்" என்றபடி பிறர்விழுவதைக்கண்டாலும் நாமும் இங்ஙனனே விழவேண்டுமே என்றுஎண்ணி மனநடுங்குதல் இயல்பு.

19. மூடக்ராஹேணாத்மநோயத் பீடயாக்ரியதே தப:
பரஸ்யோத்ஸாதநார்த்தம் வா தத் தாமஸ முதாஹ்ருதம்.

"மூட மதியால் முயல்வுற்றுத் தம்முயிர்தான்
பீடை மருவப் பிறர்கேடு—கூடவே
உற்ற தவமான துடனே கடைக்குணத்தைப்
பற்ற வரும்என்பர் பயின்று." (ப. கீ. வெ. 20).

தானும் அறிவின்மையால் பிடிவாதத்தால் தன்சக்தியை ஆராயாமல் கேடுஎய்திப் பிறரையும் கெடுப்பவர் கடைக்குணமாகும் தாமதகுணத்தினர் என்க.

20. தாதவ்ய மிதி யத்தாநம்
தீயதேநுபகாரிணே
தேஶே காலே ச பாத்ரே ச
தத்தாநம் ஸாத்விகம் ஸ்ம்ருதம்.

" வேறு உபகாரத்தை விரும்பாது இயல்வென்று
கூறு இடம்காலம் நலம்கொள்பவனைத்—தேறியே
தான்கொடுக்குந் தானந்தான் சத்துவத்தி னின்றுமேல்
வான்கொடுக்கும் என்பர் மதித்து." (ப. கீ. வெ. 21).

நமக்கு முன்னேஉபகாரம் செய்யாதவனுக்கும் நாம்உபகாரம்புரிந்து பின்னேயும் பிரதிஉபகாரம் எதிர்பாராமலும் செய்யும்உதவியே ஸாத்விகதானம். புண்யகாலத்திலும், புண்யதேசத்திலும் செய்யும்தானம் சிறந்ததென்று சாஸ்திரங்கள் கூறுவதும் அறியத்தக்கது.

21. யத்து ப்ரத்யுபகாரார்த்தம் பல முத்திஶ்ய வா புந:
தீயதே ச பரிக்லிஷ்டம் தத்தாநம் ராஜஸம் ஸ்ம்ருதம்.

" மீண்டு உபகாரங்கொளவும் வேறுபலம் இச்சித்தும்
பூண்டு மிகவருந்திப் புன்பொருள்கள்—வேண்டுநெறி
இட்டியலும் தானம் இடைக்குணத்தின் பாங்கதனில்
பட்டியலும் என்பர் பலர்." (ப. கீ. வெ. 22).

[புன்பொருள்கள் - அற்பதிரவியம், நல்லதும் அல்லாதது.]

'பரிக்லிஷ்டம்' என்றது சிரத்தையில்லாமல் கொடுக்கப்பட்டிருப்பதால் பொருள் உயர்ந்ததல்லாதது என்றபடி. இது இராஜஸ தானம்.

22. அதேஶகாலே யத்தாநம் அபாத்ரேப்யஶ்ச தீயதே
அஸத்க்ருத மவஜ்ஞாதம் தத்தாமஸ முதாஹ்ருதம்.

" தேசகாலம் சிறப்புச் சிந்தியாது ஏற்பவன்பால்
ஆசின்மை பாராது அவமதித்து—நேசஞ்செய்
ஆதரிப்ப தில்லாத அத்தானம் பிற்குணத்தை
மீதரிப்ப தென்றுரைப்பர் மிக்கு." (ப. கீ. வெ. 23).

[ஆசு - குற்றம்; ஆசின்மைபாராது என்றது அதிதிக்குப் பாதசுத்திசெய்வித்தல் முதலிய உபசாரம்செய்யாமல்; பிற்குணம் - கடைக்குணமாகிய தாமஸகுணம்.]

தேசச்சிறப்புச் சிந்தியாமை என்றதில் கலிங்கம்போன்ற ஸங்கடமான இடங்களில்புரியும் தானம் தாமஸமாகும் என்றபடி; காலச்சிறப்பு இல்லாமை என்றது இராப்பொழுது; திருடர், தூர்த்தர், உடன் உண்ணத்தகாதவர், வைதாளிகர் முதலியோர் தானத்திற்கு உரியரல்லாதவராவர்; இவர்களுக்கு இடுவது தாமஸமே.

அவ [இனி, அவ்வேதத்தில் விதிக்கப்பட்ட யஜ்ஞம்முதலியவை பிரணவத்துடன் சேர்ந்திருக்கும்என்றும், 'தத்', 'ஸத்' என்னும் சொற்களால் கூறப்படும்என்றும் விவரிக்கின்றார்.]

23. ஓம் தத்ஸதிதி நிர்தேஶ: ப்ரஹ்மண: த்ரிவித: ஸ்ம்ருத:
ப்ராஹ்மணாஸ்தேந வேதாஶ்ச யஜ்ஞாஶ்ச விஹிதா: புரா.

"ஓம் தத் ஸத் என்னும் உரைமுயன்றும் ஒண்மறையாய்
வாய்ந்த பிரமத்தின் மன்னியவர்—ஏய்ந்திவ்
விலக்கணத்தால் அந்தணர்கள் வேதங்கள் எச்சம்
கலக்கம் அறஉண்டான் காண்." (ப. கீ. வெ. 24).

'ஓம் தத் ஸத்' என்னும் மூவகைசொற்களும் பிரஹ்மத்துடன் சேர்ந்திருக்கின்றன; இங்கு பிரஹ்மம் என்றது வேதத்தை; அதாவது வேதங்களில் ஓதப்பட்டுள்ள கருமங்கள்; எனவே யஜ்யம் என்னும் பகவதாராதனரூபமான வேள்விமுதலியனவேயாம். இம்மூவகைச் சொற்களைச்சேர்த்து வேதத்தில் அதிகாரமுடைய முதல்மூன்று வருணத்தாரும் வேதங்களும் வேள்விகளும் 'சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்' என்றபடி முன்பே தன்னால் படைக்கப்பட்டன என்கிறார். இங்கு 'பிராஹ்மண' என்றது முதல்மூன்று வருணத்தாரையும்.

அவ [இனி இச்சொற்கள் சேர்ந்துள்முறையை விளக்கப்புகுந்து 'ஓம்' என்னும் சொல் சேர்த்தோதப்படும் வகையைக்கூறுகிறார்.]

24. தஸ்மாதோ மித்யுதாஹ்ருத்ய யஜ்ஞதாநதப: க்ரியா:
ப்ரவர்த்தந்தே விதாநோக்தா: ஸததம் ப்ரஹ்மவாதிநாம்.

"ஆதலால் ஓம் என்று அமர்ந்துரைத்தே அந்தணர்க்கு
வேத நின்றோதும் விதிவகையே—போதமுடன்
எச்சந்தானம் தவங்கள் எல்லாம் எக்காலத்தும்
மிச்சந்தன்னால் நடக்கும் மேல்." (ப. கீ. வெ, 25).

முதலில் 'ஓம்' என்று கூறியே வேதம் சொல்லும் முதல்மூன்றுவருணத்தாரும் யாகம், தானம், தவம்என்னும் கிரியைகளைப் புரிவர் என்றபடி.

முதல் பிரபந்தமாகிய திருப்பல்லாண்டைப்பற்றி 'வேதத்திற்கு ஓம் என்னுமது போல் உள்ளதுக்கெல்லாம் சுருக்காய்த் தான்மங்கலமாதலால்.' என்றருளியுள்ளதும் காண்க.

25. ததித்யநபி ஸந்தாய பலம் யஜ்ஞதப: க்ரியா:
தாநக்ரியாஶ்ச விவிதா: க்ரியந்தே மோக்ஷகாங்க்ஷிபி:

"நெஞ்சால் பலத்தை நினையாது எச்சம்தானம்
துஞ்சாத்தவம் முத்தி தொன்மை நினைந்(து)—எஞ்சாமல்
ஓத்தங்கியலும் உயர்ந்ததெனச் சொல்லும்
தத் என்று உரைக்கும் தரம்." (ப. கீ. வெ. 26).

யஜ்ஞ, தான, தவங்கள் பகவதாராதனரூபங்களாய் பகவானை அடைவதற்கு உரியவழிகளாக ஓதப்பட்டுள்ளமையின் பரமாத்மாவைச்சொல்லும் 'தத்' என்னும் சொல்லினால் கூறத்தக்கவைகளேயாம் என்றபடி. பாரதம் - ஆநுசாஸநிகபருவம் 254-93-ல் "ஸவ: க:கிம்யத்தத் பதமநுத்தமம்" என்று தத் என்னும்சொல் பரமாத்மாவைக் குறித்தல் பிரஸித்தமாகவிளங்குகின்றது. வேதகருமங்களைப்பற்றி ஒழுகும் முதல் மூன்றுவருணத்தார்க்கும் இந்த 'தத்' என்னும் சொல்லின்ஸம்பந்தம் ஏற்படுகிறது என்றபடி.

26. ஸத்பாவே ஸாதுபாவே ச ஸதித்யேதத் ப்ரயுஜ்யதே
ப்ரஶஸ்தே கர்மணி ததாஸத் ஶப்த: பார்த்த யுஜ்யதே.

"உண்மையிலும் நன்றான ஒண்மையிலும் 'சத்' என்னும்
வண்மையுரை தன்னை மதித்துரைப்பர்—திண்மையுயர்ந்(து)
ஏலுங் கருமத்தைச் சற்கருமம் என்றுரைப்பர்
மாலும் புகழ்விசயா வாய்ந்து." (ப. கீ. வெ. 27).

[உண்மையிலும் - உள்ளதாம் தன்மையிலும்; ஒண்மையிலும் - ஸாதுத்தன்மையிலும், மங்களகரமான நிலையிலும்.]

27. யஜ்ஞே தபஸி தானே ச ஸ்திதி: ஸதிதி சோச்யதே
கர்மசைவ ததர்த்தீயம் ஸதித்யேவாபிதீயதே.

"ஆங்கதனால் எச்சம் தவம்தான மாமிவற்றில்
ஓங்கமருந்தன் நிலையும் உற்றவற்றில்—பாங்கியலும்
சத் என்றுஉரைக்கத் தகும்என்று வேதியர்கள்
ஓத் தென்றுரைப்பர் உகந்து." (ப. கீ. வெ. 28).

28. அஶ்ரத்தயா ஹுதம் தத்தம் தபஸ்தப்தம் க்ருதம் சயத்
அஸதித்யுச்யதே பார்த்த ந ச தத்ப்ரேத்ய நோ இஹ.

"தான் விருப்பமின்றிச் செய்தானம் தவம்ஓமம்
வான் விருப்பத்தேற வழியாகா—வான்விருப்பாக்
காயத் தினன்காகாக் காரணத்தால் தானசத்தாய்
மாய்த் துறவிக்கு மற்று." (ப. கீ. வெ. 29).

[விருப்பமின்றி - சிரத்தைஇல்லாமல்; ஓமம் - யஜ்ஞம்என்னும் வேள்வி, ஹோமம்; காயத்தின் நன்காகா - சரீரத்துடனுரையும் இல்லறவாழ்க்கையிலும் நலம் தராவாம்; தானசத்தாய் - தான் அசத்தாய், இகம்பரம் இரண்டிற்கும் நலம்பயவாதாதலின் அசத்து எனப்பட்டது.]

பதினேழாம் அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ:

பதினெட்டாவது அத்தியாயம்.

மோக்ஷ ஸந்யாஸ யோகம்.

"செய்கருமத் தீசனே கர்த்தாவாச் சிந்திப்பு
மெய்கருதுஞ் சத்துவத்தின் மெய்ப்பாடும்—உய்கருமம்
சாரும் கதியுமிச் சாரத்தின் சாரமுமுற்
றேரும் பதினெட்டா மோத்து." (ப. கீ. வெ.)

அர்ஜுன உவாச - அருச்சுனன் வினவுவான்.

1. ஸந்யாஸஸ்ய மஹாபாஹோ தத்வமிச்சாமி வேதிதும்
த்யாகஸ்ய ச ஹ்ருஷீகேஶ ப்ருதக் கேஶிநிஷூதந.

கேசிஎன்னும் அஸுரனை நிரஸனம்செய்த தடந்தோளனாகிய ஹ்ருஷீகேச! ஸந்யாஸம், தியாகம் என்பவற்றின் உண்மைநிலையைத் தனித்துஅறிய இச்சைப்படுகின்றேன்.

வேதங்களில் ஸந்யாஸம், தியாகம்என்று இரண்டுசொற்கள்கொண்டு முக்தி எய்தும்முறை கூறப்பட்டுள்ளதே; இச்சொற்கள் வெவ்வேறான இரண்டுபொருள்களை யுடையனவா அல்லது இரண்டும் ஒரேபொருளைத்தருகின்றனவா? இதன் உண்மை நிலையை உறுதியாய் அறியவிரும்புகிறேன்என்று உசாவுகின்றான் அருச்சுனன் என்க.

ஸ்ரீ பகவாநுவாச - ஸ்ரீ கிருஷ்ணபகவான் விடைதந்தருள்கின்றார்.

2. காம்யாநாம் கர்மணாம் ந்யாஸம் ஸந்யாஸம் கவயோ விது:
ஸர்வகர்மபலத்யாகம் ப்ராஹுஸ்த்யாகம் விசக்ஷணா:

காம்யகர்மங்களின் ஸ்வரூபத்தையே விட்டுவிடுவதே ஸந்யாஸம் என்று சிலவித்வான்கள் அறிந்துள்ளனர்; சிலஅறிவாளிகளோ நித்யம், நைமித்திகம், காம்யம் என்னும் கருமங்களின்பயனை முற்றும் விட்டுவிடுவதே தியாகம்என்னும் சொல்லின் பொருள்என்று கூறுகின்றனர்.

இங்கு ஸ்வரூபத்தைவிடுவதா பலத்தைவிடுவதா என விவாதம் ஏற்பட்டுள்ள இரண்டு இடங்களிலும் ஸந்யாஸ, தியாகசப்தங்கள் உபயோகிக்கப்பட்டிருத்தலால் இரண்டுசொற்களுக்கும் பொருள்ஒன்றென்றே ஏற்படுகின்றது என்கிறார்.

3. த்யாஜ்யம் தோஷவதித்யேகே கர்மப்ராஹுர் மநீஷிண:
யஜ்ஞ தாந தப: கர்ம ந த்யாஜ்ய மிதி சாபரே.

சில அறிவாளிகள்—ஸாங்கியர்களும் அவர்களது கொள்கையைத்தழுவிய வைதிகர்களும்— யஜ்ஞம்முதலிய கருமங்கள், ராகம்

முதலிய குற்றத்தொடர்பால் பிறவிப்பிணிக்குக் காரணங்களாதலின், மோக்ஷத்தில் விருப்பமுடையவனால் முற்றும் விட்டுவிடத்தக்கவை என்று விளம்பினர். மற்றும்சில பண்டிதர்கள், யஜ்யம், தானம், தவம் முதலியகருமங்கள் விடத்தக்கன அல்ல என்றுகூறினர்.

இங்கு மற்றும்சில பண்டிதர்கள்என்றதால் பகவான் தனதுகொள்கையைப் பின்பற்றுபவர்களைக் கூறுகின்றான் என்றபடி. "யஜ்ய தான தப: கர்ம நத்யாஜ்யம் கார்யமேவதத்" என்பதே பகவானது கொள்கையாகும்.

4. நிஸ்சயம் ஶ்ருணுமேதத்ர த்யாகே பரதஸத்தம!
த்யாகோஹி புருஷவ்யாக்ர! த்ரிவிதஸ் ஸம்ப்ரகீர்த்திதஃ

பரதஸத்தம! அத்தகை தியாகம் என்பதைக்குறித்து எனது உறுதிப்பாட்டைக்கேட்பாய்; புருஷவ்யாக்ர! தியாகம்என்பது மூவிதமாக முன்னரே விளக்கப்பட்டதல்லவா.!

கீழே III—30-ல் 'மயி ஸர்வஸ்ய கர்மாணி' என்னும்இடத்தில், தியாகம்என்பது வேதவிஹித கருமங்களைப் புரிந்துநின்றே அவற்றின்பயன், அக்கருமங்களின் உடைமை, அக்கருமங்களை இயற்றுவோன்என்னும் மூவகைத்தென ஓதப்பட்டது அன்றோ! என்று நினைப்பூட்டுகின்றார்.

5. யஜ்ஞ தாந தப: கர்ம நத்யாஜ்யம் கார்யமேவ தத்

வேதங்களில் விதிக்கப்பட்ட யஜ்யம், தானம், தவம் முதலிய கருமங்கள் மோக்ஷத்தில் விருப்பம்உடையவனால் ஒருபொழுதும் விடத்தக்கனஅல்ல; உடலில் உயிர் இருக்கும்வரையில் அவை ஒவ்வொருநாளும் செய்தேதீரவேண்டியவை.

இங்கு சிலர் பிரஹ்மஜ்ஞானம் எய்தப்பெறும்வரையில்தான் கருமாநுஷ்டானம் தேவை; எய்தியபின்பு விட்டுவிடலாம் என்கின்றனர். இது உடன்பாடன்று. ப்ரஹ்மஸூத்ரத்தில் "ஆப்ரயாணாத் தத்ராபிஹி த்ருஷ்டம்" (4-1-12). இவ்விஷயத்தில் எக்காரணத்தால் சுருதியுள்ளதோ, பிரயாணம் புறப்படும்வரை கருமங்களைச்செய்ய வேண்டும் என்றிருப்பதை ஒட்டியது இது.

5½. யஜ்ஞோ தானம் தபஶ்சைவ பாவநாநி மநீஷிணாம்.

ஏனென்றால், வர்ணாச்சிரமங்களைப்பற்றிய யஜ்ஞ, தான, தவம் முதலியகருமங்கள் மனனம் புரிவோர்க்கு பரிசுத்தியைக் கொடுக்கத் தக்கவை.

மனனம் என்றது உபாஸனத்தை. மோக்ஷத்தில் இச்சையுடையோராய் உயிருள்ளளவும் உபாஸனம் புரிந்திருப்போர்க்கு அவ்வுபாஸனம் சித்திப்பதற்குத் தடையாகிய பண்டைப்பழவினைகளைப் பற்றறப் போக்கவல்லவை என்றபடி.

6. ஏதாங்யபிது கர்மாணி ஸங்கம் த்யக்த்வா பலாநிச
கர்த்தவ்யா நீதி மே பார்த்த! நிஸ்சிதம் மத முத்தமம்

பார்த்த! இந்த கருமங்கள் தனதுஎன்னும் தொடர்புணர்ச்சியையும், பயன்களையும் அறவிட்டுப் புரியவேண்டியவை என்பது எனது உறுதிப்பாடான உத்தமக்கொள்கை.

இந்த கருமங்கள் பரிசுத்தியைஉண்டுபண்ணத் துணையாவதுபோன்றே இவைகள் பகவதாராதனரூபமானவைகள்; ஆதலின் இவை என்னுடைவையாகமாட்டா; இவற்றின்பலத்திலும் எனக்கு ஸம்பந்தமில்லை என்றஎண்ணத்துடன் இயற்றத்தக்கவை; ஸ்வரூபத்தையேவிடுதல் என்னும்பக்ஷம் ஆதரிக்கத்தக்கதன்று என்று இறைவன் தன் கொள்கையை திடமாய்க் கூறியுள்ளான்.

7. நியதஸ்யது ஸங்யாஸ: கர்மணோ நோபபத்யதே
மோஹாத்தஸ்ய பரித்யாக: தாமஸ: பரிகீர்த்தித:

"என்றும் நியதமாம் இந்தக் கருமங்கள்
ஒன்றும் விடஇவனுக்கு ஒண்ணாதால்—நின்றிவற்றை
மோகத்தால் தான்விடுதல் முக்குணத்தில் பிற்குணத்தில்
ஆகத்தால் வந்த அது." (ப. கீ. வெ. 7).

நியத கருமங்கள் என்றது விடத்தகாதனவாய் செய்தேதீரவேண்டிய நித்ய, நைமித்திகங்களாகிய பஞ்சமஹாயஜ்ஞமுதவிய கருமங்கள். நல்லறிவுபெருவதற்கு நல்லுணவு இன்றியமையாதது; நல்லுணவுஎன்றது பகவதாராதனரூபமான யஜ்ஞத்தில் மிச்சப்பட்டதே. இதையே புஜித்தல்வேண்டும். கருமத்தை அறவே விட்டொழிப்பதென்பது சரீரத்துடன் உலகில் உயிர்வாழுந்தன்யும் கூடாததாகும். யஜ்ஞமிச்சமல்லாதவுணவை உட்கொள்பவன் பாபத்தையேபுசிக்கிறான் என்றே முன்னமேநாட்டப்பட்டது; அன்றியும் இது விபரீதஅறிவையே வளரச்செய்யும். பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிப்பதாகிய ஞானம் உணவில் தூய்மையைப்பற்றியதே; ஆதலின் கருமங்கள் கூடுவிட்டு ஆவிபோம்வரை செய்தேதீரவேண்டும். இவை பந்தத்தைவிளைவிக்கும் என்று விட்டவன் தாமஸனாகிறான் என்றபடி.

8. து:க்கமித்யேவ யத்கர்ம காயக்லேஶ பயாத் த்யஜேத்
ஸ க்ருத்வா ராஜஸம் த்யாகம் நைவ த்யாகபலம் லபேத்.

சரீர ஆயாஸத்திற்கு அஞ்சி, பொருள்ஈட்டல்முதலிய துக்ககரமான தொழில்களால் செய்யத்தகுந்ததுஎன்றே கருதி, எந்தகருமத்தை விட்டுவிடுவானோ, அவன் ராஜஸத்தியாகம் செய்தவனாகின்றான்; அவன் தியாகத்தின் பயனாகிய மெய்யுணர்வை எய்தான்.

கருமங்கள் கண்கூடாகத் தற்போதேகாணத்தகும் பயன்களை விளைத்து இவனுக்கு மனதில் சாந்தியைஉண்டுபண்ணக் காரணங்களாகமாட்டா; ஆனால் பகவானுடைய அநுக்ரஹத்தை உண்டுபண்ணி அவ்வழியால் உதவுவனவாம் என்றும் அறிதல்வேண்டும்.

9. கார்யமித்யேவ யத்கர்ம நியதம் க்ரியதேர்ஜுந!
ஸங்கம் த்யக்த்வா பலம் சைவ ஸத்யாக: ஸாத்விகோ மத:

அருச்சுன! அவசியம் செய்தேதீரவேண்டிய எந்தக்கருமமானது, தனதுஎன்னும் எண்ணத்தையும் பயனில் விருப்பத்தையும் விட்டுவிட்டு, பகவதாராதனரூபங்களாய் ஸ்வயம்பிரயோஜனம் என்றுகருதி, ஆசரிக்கப்படுகின்றதோ அது ஸாத்விகத்யாகம் என்று மதிக்கப்படும்.

10. நத்வேஷ்ட்ய குஶலம் கர்ம குஶலே நாநுஷஜ்ஜதே
த்யாகீ ஸத்வஸமாவிஷ்ட: மேதாவீ சிந்நஸம்ஶய:

ஸத்வகுணத்தினல் மீதூரப்பட்டுத் தத்வஜ்ஞானமுடையவனாய் சந்தேகம்தீர்ந்தவனாய் ஸாத்விகத்யாகம் செய்வோனுயுள்ளவன் அநிஷ்டபலத்தைவிளைவிக்கும் கருமத்தை வெறுப்பதுமில்லை; இஷ்டபலத்தைத்தரும் கருமத்தில் உகப்பதும்இல்லை.

இதில் புத்தித்யாகமே சாஸ்திரம் விதித்துளது என்று ஏற்படுவதால் ஸ்வரூபத்யாகம் சாஸ்திரஸம்மதமல்லாதது என்று ஏற்படும். (கடோபநிஷத் 2-28-ல் காண்க.)

அவ [பின்னும் வற்புறுத்துகிறார்.]

11. நஹி தேஹப்ருதா ஶக்யம் த்யக்தும் கர்மாண்யஶேஷத:
யஸ்து கர்மபலத்யாகீ ஸ த்யாகீ த்யபி தீயதே.

"காய முடையோன் கருமமெல்லாம் கைவிடுதல்
ஆய வகைஅங்கு அரிதாகும்—மேய
பலன்துறந்தோன் நன்றும் படிதுறந்தோன் என்று
நலஞ்சிறந்தோர் சொல்வர் நயந்து." (ப. கீ. வெ. 11).

தைத்ரீயம், நாராயணம் - 10-21-ல் "தியாகத்தினுல் சிலர் மோக்ஷம் அடைந்தனர்" என்று கூறப்பட்டுள்ளதால் பயன்கருதாது விஹிதகருமங்களைப் புரிபவன் சுருதியில் 'தியாகி' என்று கூறப்படுகிறான். உடலில் உயிர்நிற்பதற்கு உணவுஉண்டல், நீர்அருந்துதல் முதலிய இன்றியமையாச்செயல்களும் அவைகளைப்பற்றிய ஏனைய கருமங்களும் புரிதல்வேண்டியிருத்தலாலும் அவை ஒழிக்கக்கூடாதனவாதலாலும் பஞ்சமஹாயஜ்ஞம் முதலிய நற்கருமங்களும் விடமுடியாதனவாம் என்றபடி.

அவ [விதை தவறிவிழுந்தாலும் அதுமுளைக்காது என்பதில்லையே. ஜோதிஷ்டோமாதி கருமங்களும் நித்யநைமித்திகங்களும் இவன் வேண்டாவிடினும் பயன்தந்தேதீருமே. இப்பயன்கள் மோக்ஷவிரோதமான பந்தத்தைத்தானே விளைவிக்கும். ஆதலின் முமுக்ஷுவால் கருமம் அநுஷ்டிக்கத்தக்கதன்றே என்னும் அதிசங்கையை நீக்குகிறார்.]

12. அநிஷ்ட மிஷ்டம் மிஶ்ரம்ச த்ரிவிதம் கர்மண: பலம்
பவத்யத்யாகிநாம் ப்ரேத்ய நது ஸந்ந்யாஸிநாம் க்வசித்.

வேதம்முதலிய சாஸ்திரங்களை ஆராய்ந்து பார்க்குமிடத்து, நரகம், ஸ்வர்க்கம், புத்திரன், என்னும் மூவகைப்பயன்களையும் கருமங்கள் தருகின்றனஎனத் தேறுகின்றது; கருமம்செய்வோனுயிருத்தல், இக்கருமம் என்னுடையது என்னும் எண்ணம், கருமபயன் இவற்றை விடாமல்செய்கின்றவர்களுக்கு, அந்த அந்த கருமத்தையொட்டிய பயன் அதனைச்செய்தபிறகு உண்டாகிறது; இவற்றை விட்டே செய்கின்றவர்களுக்கு அந்தந்தபயன் உண்டாவதில்லை.

ஒருகருமம் செய்தபின்பு அது தன்னையொட்டியபயனைத் தரும்என்பது சாஸ்திரம்கொண்டே உணரத்தக்கது. கருமம்புரிவோனேயிருக்கை முதலியவற்றைவிட்டுச் செய்வோர்க்கு மோக்ஷபலமே ஸித்திக்கும்என்பது ப்ருஹதாரண்யகம் 6-4-22-ல் கூறப்பட்டபடி சாஸ்திரஸித்தம்.

அவ [கருமம்புரிவோனுயிருத்தல், இக்கருமம்என்னுடையது என்னும் எண்ணம், கருமபயன் இம்மூன்றில் கருமம்புரிவோனுயிருத்தல் என்பது தன்பாலில்லை, தன்ஆத்மாவிற்கும் ஆத்மாவாகிய பகவானிடத்திலேயேயுள்ளதுஎன்னும் எண்ணம்உதிக்கவே, எல்லாவற்றையும் விட்டவனுகிறன்என்று விளக்குகிறர்.]

13. பஞ்சைதாநி மஹாபாஹோ காரணாநி நிபோதமே
ஸாங்க்யே க்ருதாந்தே ப்ரோக்தாநி ஸித்தயே ஸர்வகர்மணும்.

மஹாபாஹோ! ஆத்மஜ்ஞானத்தை சொல்லும் எல்லாக்கருமங்களும் உண்டாம்போது ஐந்து காரணங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன; ஆரணங்களில் சொல்லப்பட்ட இவற்றை என்னிடத்தில் கேட்டு அறிவாயாக.

14. அதிஷ்டாநம் ததா கர்த்தா கரணஞ்ச ப்ருதக்விதம்
விவிதாஸ்ச ப்ருதக்சேஷ்டா: தைவம் சைவாத்ர பஞ்சமம்.

15. ஶரீர வாங்மனோபிர்யத் கர்மப்ராரபதே நர:
ந்யாய்யம் வா விபரீதம் வா பஞ்சைதே தஸ்ய ஹேதவ:

வேதம்முதலிய சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டதும் விலக்கப்பட்டதுமான மனமொழிமெய்களால் இயற்றப்படும் எல்லாக்கருமங்களிலும், உடல், உயிர், மனதுடன்சேர்ந்த வாக்குமுதலிய கருமேந்திரியம், பிராணன்முதலிய காற்று, தெய்வம்என்னும் இவ்வைந்தும் காரணங்கள்; இவற்றில் அந்தரியாமியான பகவான் முக்கியகாரணம்.

அந்த பரமபுருஷன் தன்னடிமைப்பொருளாகிய ஜீவாத்மாவைக்கொண்டு தனதாகிய சரீரம் இந்திரியம், பிராணன் இவைகளால் தனதுலீலையாகும் பயனுக்கென்

எல்லாக்கருமங்களையும் ஆரம்பம் செய்கின்றனனுதலின் முக்யகாரணமெனச் சொல்லப் படுகின்றான். ப்ருஹதாரண்யகம் 5-7-22, தைத்ரீயம் - நாராயணம் இவற்றில் இப் பொருளை விளக்கமாய்க்காண்க.

16. தத்ரைவம் ஸதி கர்த்தாரம் ஆத்மாநம் கேவலம்து ய:
பஶ்யத் யக்ருதபுத்தித்வாத் ந ஸ பஶ்யதி துர்மதி:

ஜீவனால் தூண்டப்பட்டு அவன் எண்ணத்தைத்தழுவி ஒரு கருமத்தைச் சரீரம் செய்வதேபோல், ஜீவனும் தனது ஆத்மாவான பரபுருஷனால் தூண்டப்பட்டு அவன் எண்ணத்தின்படியே ஒருகருமத்தைப் புரிவதனால் முக்யகாரணன் பரமாத்மாவெனச் சொல்லப்படுகிறான்; இங்ஙனே இருக்க, ஜீவன் ஒருகருமத்தைச்செய்யுங்கால், பரமபுருஷன் சம்பந்தம்இன்றித் தானேசெய்வதாய் எண்ணுபவன் எவனோ அவன் உள்ளவாறு கருமம்செய்பவனைக் காண்கிறானில்லை; துர்மதி.

17. யஸ்யா நாஹங்க்ருதோ பாவ: புத்திர்யஸ்ய நலிப்யதே
ஹத்வாபி ஸ இமாந் லோகாந் ந ஹந்தி ந நிபத்யதே:

ஒரு கருமம் செயயும்இடத்து எவனுக்கு ' நான் செய்கிறேன் ' என்னும் எண்ணமின்றியே, இதன்பயன் என்னிடம் சேருவதில்லை, ' இக்கருமம் எனதன்று ' என்னும் உணர்வும் ஏற்படுகின்றதோ அவன், இவ்வுலகங்களிலுள்ள எல்லாப்பிராணிகளையும் கொன்றவனாயிருப்பினும், அவற்றை கொல்லுகிறானில்லை,

அவ [ஒருகருமம் புரிவோன் ' நான் இதைச் செய்பவன் அல்லன் ' என்னும் எண்ணமுடையனாக ஆவதென்பது ஸத்வகுணம் தலையெடுத்தபோதேயாம்; ஆதலின், முமுக்ஷு இக்குணத்தைத் தன்னிடம் வளரும்படி செய்துகொள்ளவேண்டியவன்; அதன்பொருட்டு முக்குணங்களால் பிறக்கும் கார்யவேறுபாட்டை விரியஉரைப்பானாய் முதலில் கருமவிதியை வகுத்துப்பேசுகிறார்.]

18. ஜ்ஞாநம் ஜ்ஞேயம் பரிஜ்ஞாதா த்ரிவிதா கர்ம சோதநா
கரணம் கர்மகர்த்தேதி த்ரிவித: கர்ம ஸங்க்ரஹ:

கருமவிதியானது (1) செய்யத்தக்க கருமத்தைப்பற்றிய அறிவு; (2) செய்யத்தக்க கருமம்; (3) அதனை அறிபவன் என மூவகைப்படும்; இவற்றுள் 2-வதாகிய கருமம்என்பது, அதனை இயற்றுதற்கு உதவும்பொருள், இயற்றுபவன், அக்கருமமாகிய தான்என மூன்று உட்பிரிவையுடையது.

19. ஜ்ஞாநம் கர்மச கர்த்தாச த்ரிதைவ குணபேதத:
ப்ரோச்யதே குணஸங்க்யாநே யதாவத் ஶ்ருணு தாந்யபி.

ஸத்வம், ரஜஸ், தமஸ் என்றகுணவேறுபாட்டினல் ஜ்ஞானம், கருமம், கர்த்தா இவை ஒவ்வொன்றும் மூவகைப்படும்; அவற்றையும் கூறுகின்றேன் கேட்பாயாக.

20. ஸர்வபூதேஷு யேநைகம் பாவ மவ்யய மீக்ஷதே
அவிபக்தம் விபக்தேஷு தஜ்ஜ்ஞாநம் வித்தி ஸாத்விகம்.

அந்தணர் முதலிய வருணமும், பிரமசரியம்முதலிய நிலையும் வெவ்வேறுபட்டிருப்பினும் ஜ்ஞானத்தையே வடிவமாய்க்கொண்ட ஆத்மா எங்கும் ஒருபடித்தானவன்என்றும், தேவ, மானிட, விலங்கு, தாவரமாகிய உடலங்கள் நிறம், அளவுமுதலியவற்றால் பலதிறப்பட்டிருப்பினும் எல்லாவிடத்தும் ஆத்மா ஒத்தவன்என்றும், கீழேகூறிய நால்வகைச்சரீரங்கள் நாசம் உடையனவாயிருப்பினும் ஆத்மா அழிவற்றவன் என்றும் கருமபயனில் விருப்பத்தைச்செய்யத் தகுதியுடையவன் அல்லன் என்றும், என்னால் இக்கருமம் செய்யத்தக்கது என்னும் அனுஸந்தானகாலத்தில் எவன் இவ்வாறு அறிகிறானோ அவனது அறிவே ஸாத்விக அறிவாகும்.

21. ப்ருதக்த்வேந து யஜ்ஜ்ஞாநம் நாநாபாவாந் ப்ருதக்விதாந்
வேத்தி ஸர்வேஷு பூதேஷு தஜ்ஜ்ஞாநம் வித்தி ராஜஸம்.

கீழே கூறியவருணம் ஆச்சிரமம் இவற்றின் வேறுபாட்டைப் பற்றி ஆத்மவஸ்துவும் ஆங்காங்கு வேறுபட்டதென்றும், நிறம், அளவு முதலியவற்றால் வெவ்வேறுபட்டிருக்கும் அவ்வச்சரீரங்களில் ஆத்மாவும் வெவ்வேறுபட்டதென்றும், அவ்வக்கருமபயனை அடைந்து அநுபவிக்கத் தகுதியுடையவனென்றும், எவன் அநுஸந்தானவேளையில் இவ்வாறு அறிகின்றானோ அவனது அறிவே ராஜஸ அறிவாகும்.

22. யத்து க்ருத்ஸ்நவ தேகஸ்மின் கார்யே ஸக்தமஹைதுகம்
அதத்வார்த்தவ தல்பஞ்ச தத்தாமஸ முதாஹ்ருதம்.

பிரேதம், பூதகணம் முதலியவை திருப்தி அடையுமாறு செய்யப்படும் கருமங்கள் மிகச்சிறியபயனை யளிப்பனவாகக் காணப்படுகின்றன்; உண்மைநிலையில் பார்க்கும்போது அனைத்துப்பயனையும் தரத்தக்கவையுமல்ல. இங்ஙனேஇருக்க, எந்தஅறிவு, கீழேகூறிய மிகச்சிறியபயனைத் தரத்தக்ககருமங்களில் எல்லாப்பயனையும் தரத்

தக்கவையென அதிகமான பற்றுதலையுடையதோ, வருணம், நிலை, நிறம், அளவு, முதலிய வேறுபாடுகளிருப்பினும் ஜீவன் ஒரே தன்மையுடையனாயிருக்கவும் அதை அங்ஙனம் உணராமல் வெவ்வேறாகவே அறிகின்றதோ, பிரேதம் முதலியவற்றின் ஆராதனத்தை விஷயமாகக் கொண்டிருத்தலின் மிகத்தாழ்ந்ததோ அவ்வறிவு தாமஸம் என்று கூறப்படும்.

23. நியதம் ஸங்கரஹிதம் அராகத்வேஷத: க்ருதம்
அபலப்ரேப்ஸுனா கர்ம யத்தத் ஸாத்விக முச்யதே.

தனது வருணத்திற்கும், நிலைக்கும் ஏற்றதாய் கருமம்புரிவோனாயிருத்தல் முதலியவற்றில் பற்றுதலைத்துறந்து, டம்பமுமின்றி, வேறுபயனையெய்துவதில் ஆசையையொழித்து இயற்றப்படும் கருமம் ஸாத்விககருமம் எனச்சொல்லப்படும்.

24. யத்து காமேப்ஸுனா கர்ம ஸாஹங்காரேண வா புந:
க்ரியதே பஹுளாயாஸம் தத்ராஜஸ முதாஹ்ருதம்.

பயனைவிரும்பி, 'மிக்க ஆயாஸமுள்ள இக்கருமம் என்னாலேயே இயற்றப்படுகின்றது' என்னும் எண்ணத்துடன் செய்யப்படும் கருமம் ராஜஸம் என்று சொல்லப்படும்.

25. அநுபந்தம் க்ஷயம் ஹிம்ஸாம் அநபேக்ஷ்யச பௌருஷம்
மோஹாதாரப்யதே கர்ம யத்தத்தாமஸ முச்யதே.

துன்பத்தொடர்பு, பொருள்நாசம், பிராணிபீடை, செய்வோனது திறமை இவற்றை ஆராயாமல் மெய்யுணர்வின்றிச் செய்யப்படும் கருமம் தாமஸம் எனச் சொல்லப்படும்.

இங்கு மெய்யுணர்வு என்றது - ஒருவன் ஒருகருமம் புரியுங்கால் தன்உயிருக்கும் உயிரான பரமபுருஷனே அக்கருமத்தைச் செய்விக்கச்செய்கிறானேயன்றித் தானாகச் செய்வதில்லை என்னும் அறிவேயாம்.

26. முக்தஸங்கோநஹம்வாதீ த்ருத் யுத்ஸாஹ ஸமந்வித:
ஸித்த்யஸித்த்யோர் நிர்விகார: கர்த்தா ஸாத்விக உச்யதே.

பயனில் ஆசையற்றவனாயும், தன்னைக் கருமம்புரிவோனாகக் கருதாதவனாயும், த்ருதி, உத்சாகம் இவற்றை உடையனாயும், போர் புரிதலும் அதற்குச்சாதனமாகிய பொருளீட்டல் முதலியவற்றைப் பெறுதல் பெறாதொழிதல் என்னும் இரண்டிடத்தும் வேறுபடாத

மனதையுடையவனுயும் இருப்பவன் ஸாத்விக கருத்தாளனச் சொல்லப் படுகிறுன்.

த்ருதி - தொடங்கும் கருமம் முடியும்வரை விலக்கக்கூடாத துக்கங்கள் நேரிடினும் அவற்றைப்பொறுத்தல்; உத்ஸாஹம் - மேன்மேல் முயற்சிசெய்து கொண்டிருக்கும் மனம்உடைமை.

27. ராகீ கர்மபலப்ரேப்ஸு: லுப்தோ ஹிம்ஸாத்மகோऽஶுசி:
ஹர்ஷஶோகாந்வித: கர்த்தா ராஜஸ: பரிகீர்த்தித:

புகழை விரும்புவோனும், கருமபயனை இச்சிப்பவனும் கருமங்கட்கு வேண்டும்பொருளைச் செலவிடும் தன்மையில்லாதவனும், பிறரைநலிந்து அவர்களைக்கொண்டே கருமங்களைச்செய்பவனும், தூய்மைஅற்றவனும், களிப்பும், கவர்வு முடையோனும், ஆகிய கருத்தா ராஜஸன் என்று சொல்லப்படுகிறுன்.

28. அயுக்த: ப்ராக்ருத: ஸ்தப்த: ஶடோ நைஷ்க்ருதிகோலஸ:
விஷாதீ தீர்க்கஸூத்ரீச கர்த்தா தாமஸ உச்யதே.

வேதம்முதலிய சாஸ்திரங்களில் விலக்கப்பட்ட கருமங்களை செய்வோனும், கல்வியுறிவில்லாதானும், ஒரு நற்கருமத்தையும் தொடங்கும் இயல்பற்றவனும், அபிசாரம் முதலியகருமங்களில் ருசியுடையவனும், வஞ்சனையும், சோம்பலும் உடையவனும், மிக்க துக்கப்படுவதையே இயல்பாயுடையவனும், அபிசாரம் முதலிய கருமங்களால் பிறர்க்கு நீண்டகாலம் தொடர்ந்துவரும் துன்பங்களை எண்ணுவதையே இயல்பாக வுடையவனுமாயுள்ள கருத்தா எவனே அவன் தாமஸகருத்தாஎன்று சொல்லப்படுகிறுன்.

அபிசாரம் - துர்தேவதாபூஜை முதலியவற்ருல் தன்பகைவன் வாழலாகாது என்ற எண்ணத்துடன் கொடியகருமம்புரிதல்.

29. புத்தேர்பேதம் த்ருதேஶ்சைவ
குணத ஸ்த்ரிவிதம் ஶ்ருணு
ப்ரோச்யமாந மஶேஷேண
ப்ருதக்த்வேந தநஞ்ஜய.

தநஞ்ஜய! ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்களின் வேறுபாட்டினுல் புத்தியும் த்ருதியும் மும்மூன்றுவகைப்படும் என்பதை முற்றும் சொல்கிறேன் கேள்.

புத்தி - உண்மைப்பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும்பயன்கள் இவைகளைப்பற்றிய நிச்சயஉணர்வு; த்ருதி - இடையூறு எவ்வளவுநேரிடினும் தொடங்கிய கருமத்தை விடாது தலைக்கட்டும் உறுதிப்பாடு.

30. ப்ரவ்ருத்திஞ்ச நிவ்ருத்திஞ்ச கார்யாகார்யே பயாபயே
பந்தம் மோக்ஷஞ்ச யாவேத்தி புத்திஸ்ஸா பார்த்த ஸாத்விகீ.

பார்த்த! அறம், பொருள், இன்பம் என்னும் இம்மைப்பயனை விளைவிக்கும் பிரவிருத்திதருமத்தையும், மறுமைப்பயனாகிய வீட்டை எய்துவிக்கும் நிவிருத்திதருமத்தையும், தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஏற்பச் செயத்தக்ககருமங்களையும், செயத்தகாதகருமங்களையும் வேதம்முதலிய பகவதாஜ்ஞா சாஸ்திரங்களை அநுசரித்து நடத்தலும் நடவாமையும், பந்த மோக்ஷங்களையும் எந்தஅறிவு உள்ளவாறு அறிகின்றதோ அது ஸாத்விக புத்தியாகும்.

31. யயா தர்ம மதர்மஞ்ச கார்யஞ் சாகார்ய மேவச
அயதாவத் ப்ரஜாநாதி புத்தி ஸ்ஸா பார்த்த ராஜஸீ.

பார்த்த! கீழ்ச்சொல்லப்பட்ட பிரவிருத்தி நிவிருத்தி தருமங்களையும், அதருமத்தையும், காரிய அகாரியங்களையும் எந்தஅறிவு உள்ளபடி உணர்வதில்லையோ அது ராஜஸபுத்தி எனப்படும்.

32. அதர்மம் தர்மமிதி யா மந்யதே தமஸாவ்ருதா
ஸர்வார்த்தாந் விபரீதாம்ஸ்ச புத்தி ஸ்ஸா பார்த்த தாமஸீ.

அதருமத்தை தருமமாகவும், தருமத்தை அதருமமாகவும், உள்ளதை இல்லதாகவும், இல்லதை உள்ளதாகவும், உயர்ந்த உண்மைப்பொருளைத் தாழ்ந்ததாகவும், தாழ்ந்த உண்மைப்பொருளை உயர்ந்ததாகவும் இங்ஙனே அனைத்தையும் தமோகுணத்தினால் மறைக்கப்பட்டதாய் திரிபுணர்ச்சியினால் எந்தஅறிவு உணர்கின்றதோ அது தாமஸபுத்தி எனப்படும்.

33. த்ருத்யா யயா தாரயதே மநஃ ப்ராணேந்த்ரியக்ரியா:
யோகே நாவ்யபிசாரிண்யா த்ருதி ஸ்ஸா பார்த்த ஸாத்விகீ.

இங்கு, அறம், பொருள், இன்பம் என்னும் இம்மைப்பயன்களை விலக்கி, வீடெனும் மறுமைப்பயன் ஒன்றையே தரத்தக்கதே யோகமாகிய பகவத்பக்தி எனப்படுகின்றது; இது வேறுபயனைவிரும்பிச்செய்யப்படாமையின் 'அவ்யபிசாரி' என்றும், வேறுதேவதையை குறித்துச் செய்யப்படாமையின் 'அனன்யோபாஸனம்' என்றும் சொல்லப்படுகின்றது; இத்தகைய பக்தி, மனம், பிராணவாயு, புலன்கள் இவற்றின் இயக்கத்தால் உண்டாகும். இந்த இயக்கத்தை எந்த தைரியத்தால் தரிக்கின்றானோ அந்த திண்மை ஸாத்விகதிருதி எனப்படும்.

34. யயாது தர்மகாமார்த்தாந் த்ருத்யா தாரயதேர்ஜுந
ப்ரஸங்கேந பலாகாங்க்ஷீ த்ருதி: ஸா பார்த்த ராஜஸீ.

எந்த புருஷன் மிக்க ஆசையினல் அறம், பொருள், இன்பம் என்னும் இம்மைப்பயனைத்தரத்தக்க மனம் பிராணன் இந்திரியங்களின் இயக்கத்தை எதனுல் தரிக்கின்ருனே அந்தத்திண்மை ராஜஸ் திருதி எனப்படும்.

35. யயா ஸ்வப்நம் பயம் ஶோகம் விஷாதம் மத மேவச
ந விமுஞ்சதி துர்மேதா த்ருதி ஸ்ஸா பார்த்த தாமஸீ.

ஸ்வப்னம், மதம், இவற்றைக்குறித்த, மனம், பிராணன் முதலியவற்றின் செய்கைகளை எந்தத்திண்மையினுல் துர்ப்புத்தியை யுடைய புருஷன் தாங்குகின்றனனே, பயம், சோகம், விசனம் முதலியவற்றைப் பயக்கவல்ல விஷயங்களுக்கு ஸாதனங்களாகிய மனம், பிராணன் முதலியவற்றின் செயல்களை எந்தத்துணிவினுல் தரிக்கின்றனனே அந்தத்திண்மை தாமஸம் எனப்படும்.

இங்கு ஸ்வப்னம் என்றது உறக்கத்தை; மதம் என்பது இன்பப்பொருள்களை நுகருங்கால் விளையும் கொழுப்பு.

36. ஸுகம் த்விதாநீம் த்ரிவிதம் ஶ்ருணு மே பரதர்ஷப
அப்யாஸாத் ரமதே யத்ர து:க்காந்தஞ்ச நிகச்சதி.

37. யத்ததக்ரே விஷமிவ பரிணமேம்ருதோபமம்
தத்ஸுகம் ஸாத்விகம் ப்ரோக்தம் ஆத்மபுத்தி ப்ரஸாதஜம்.

பரதர்ஷப! கீழே அங்கங்களாக உரைக்கப்பட்ட ஞானம், கருமம், கருத்தா முதலியவையெல்லாம் எங்ஙனம் மும்மூன்ருக வகுக்கப்பட்டனவோ அங்ஙனமே அவற்றை நன்குஅறிந்த நீ அவற்றின் பயனுய் விளங்கும் இன்பமும் ஸத்வம்முதலிய முக்குணவேறுபாட்டினுல் முத்திறப்பட்டிருக்கும் என்பதை இப்போதுவிளங்கஉரைப்பேன் கேட்பாயாக. எல்லைகடந்த பூரணதிருப்தியை நீண்டகாலப் பயிற்சியின்பயனுய் முறைப்படி எந்தஸுகத்தினுல் எய்துகின்றனனே, பிறவித்துயரனைத்தின் ஒழிவினையும் எதனுல் எய்துகின்றனனே, எந்தஇன்பம் தொடங்குங்கால் கடுந்துன்பமாய் விஷம்போல் கொடியதாயுள்ளதோ, எந்தஇன்பம் முதிர்ச்சிதசையில் அதாவது பரிசுத்த ஆத்மப்ரகாசத்தை அடைந்தபின்பு அமுதமபோல் இனித்திருக்குமோ, எந்தஇன்பம் ஆத்மாவைப்பற்றிய தெள்ளிய அறிவின்பயனுய் உண்டாகின்றதோ, அந்தஇன்பம் ஸாத்விகஸுகம் எனப்படும்.

தனது ஆத்மஸ்வரூபம் உள்ளபடி விளங்கும்போது அதன் உண்மைநிலையான பகவானுக்கு அடியனுயிருத்தல் ஒன்றேசுவபாவம்என்று விளங்குமாற்ருல் அதற்கு உள்ளடங்கிய பகவதநுபவம் இங்கு பிரித்துக்கூறப்படவில்லையென அறிக.

38. விஷயேந்த்ரிய ஸம்யோகாத் யத்ததக்ரேம்ருதோபமம்
பரிணமே விஷமிவ தத்ஸுகம் ராஜஸம் ஸ்ம்ருதம்.

புலன்கள் பொருள்களை முதலில் நுகருங்கால் எந்தஇன்பம் அமுதம்போல் இனித்தாய், முதிர்ந்தநிலையில் எது நரகம்முதலிய வற்றிற்குக் காரணமாய், அதனுல் விஷம்உண்டதுபோன்றுளதோ, அந்தஇன்பமே ராஜஸ ஸுகம் எனப்படும்.

39. யதக்ரே சாநுபந்தேச ஸுகம் மோஹநமாத்மந:
நித்ராலஸ்ய ப்ரமாதோத்தம் தத்தாமஸ முதாஹ்ருதம்.

எந்த இன்பமானது அநுபவிக்கும்பொழுது தொடங்கியே முதிர்ந்தநிலையிலும் மயக்கத்தை விளைவிக்கின்றதோ, எந்தஇன்பம் உறக்கம், சோம்பல், ஓர்ப்பின்மை இவற்ருல் உண்டாக்கப்பட்டதோ, அந்தஇன்பம் தாமஸ ஸுகம் என்று சொல்லப்பட்டது.

உறக்கம் முதலியவை பொய்யுணர்வையே உண்டுபண்ணுவதல்லாமல் மேன் மேலும் இந்திரியங்களின் செய்கைகளைக்குறைத்து அறிவை மழுங்கச்செய்வனவாம். ஓர்ப்பின்மை - அஜாக்ருதை. இதனுல், மோக்ஷத்தில் விருப்புள்ளவன் ராஜஸ தாமஸ ஸுகங்களை நீக்கி ஸாத்விக ஸுகத்தையே வளர்க்கவேண்டியவனுகிருன் என்பது கருத்தாகின்றது.

40. ந ததஸ்தி ப்ருதிவ்யாம் வா திவி தேவேஷு வா புந:
ஸத்வம் ப்ரக்ருதிஜைர்முக்தம் யதேபி: ஸ்யாத்த்ரிபிர்குணை:

மண்ணுலகில் மனிதர் முதலியோர்க்குள்ளும், விண்ணுலகில் தேவர்கட்குள்ளும் எந்தப்பிராணியும் பிரகிருதியிலுண்டாகிய இந்த முக்குணங்களினுல் விடுபட்டிருத்தல் என்பது இல்லை.

பிரமன்முதல் ஒரு புழு, புல்வரை ஸகல ஜீவராசிகளும் கூட்ட மாகவும் தனித்தும் முக்குண வசப்பட்டனவேயாம் என்றபடி.

பிரகிருதிமண்டலத்தைக் கடந்ததாய் அதனுலேயே பிராகிருத குணங்களின்றியே சுத்தஸத்வமயமான பகவானைக்கிட்டி அநுபவித்தலையே இயல்பாயுடைய மோக்ஷ முண்டாவதற்குமுன், முக்குணங்கள், காலம், இடம் இவைகளையுடைய தாழ்ந்தநிலை யுடைய பிரகிருதிமண்டலத்திலுள்ள உயிர்கள்யாவும் முக்குணவசப்பட்டனவே என்கிருர்.

அவ [முக்குண இயல்புகளை முறையே விரித்துக்கூறி இனி வீடுபேற்றைக் கருதி இயற்றப்படும் கருமம் பகவதாராதனரூபமென்றும், பயனும் அவனை அடைதலேஎன்றும், விளக்குவாராய் நாற்பால்குலங்களும் முக்குணவேறுபாட்டான் பழவினையால் எய்தப்படும்என்றும் வருணந்தோறும் கருமவேறுபாடுகளும் உண்டு என்றும் இயம்புகிறார்.]

41. ப்ராஹ்மண க்ஷத்ரிய விசாம் ஶூத்ராணாஞ்ச பரந்தப!
கர்மாணி ப்ரவிபக்தாநி ஸ்வபாவ ப்ரபவைர்குணை:

பரந்தப!

"மாமறையோர் மன்னவர்கள் வைசியர்கள் சூத்திரர்கள்
ஆமனிசர்க்காகி அமர்தருமே—தாமருவும்
தன்மை யமர்குணத்தின் சார்வுடனே வேறுபடும்
நன்மை யமரும் நயந்து." (ப. கீ. வெ. 41).

42. ஶமோ தம ஸ்தப ஶ்ஶௌசம் க்ஷாந்தி ரார்ஜவமேவச
ஜ்ஞாநம் விஜ்ஞாந மாஸ்திக்யம் ப்ரஹ்ம கர்ம ஸ்வபாவஜம்.

சமம், தமம், தவம், பரிசுத்தி, பொறுமை, செம்மை, ஞானம், விஜ்ஞானம், ஆஸ்திக்யம் ஆகிய இவை பிராஹ்மணர்களுடைய இயல்பான கருமங்கள்.

சமம் - வெளி இந்திரியங்களை யடக்குதல்;

தமம் - மனத்தை அடக்குதல்;

தவம் - விஷய இன்பங்களில் பிரீதி செய்வதைத் தடுத்து சாஸ்திரங்களில் ஓதியுள்ளமுறையில் உடலை யொறுத்தல்;

சௌசம் - சாஸ்திரங்களில் ஓதியுள்ள நற்கருமம்புரியத் தகுதியுடையோனாதல், உள்ளும் புறமும் உரியமுறையில் தூயதாக்கிக்கொள்ளல்;

க்ஷாந்தீ - பொறுமை - பிறரால் இடுக்கண்நேரிடினும் மாறுபடாத மனமுடைமை;

ஆர்ஜவம் - செம்மை - பிறரிடமும் உண்மையாய் நடந்துகொள்ளுதல்;

ஞானம் - பரம், அபரம் என்னும் உயர்ந்ததும் தாழ்ந்ததுமாகிய தத்வங்களை உள்ளபடி அறிதல்;

விஜ்ஞானம் - பரமாத்மாவிற்கே உரித்தாகிய சிறப்பியல்புகளைப்பற்றிய ஞானம்;

ஆஸ்தீக்யம் - வேதம்விளம்பும் பொருள்களனைத்தும் மெய்யென்னும் உறுதிப்பாடு; இது எக்காரணங்கொண்டும் மாற்றவொண்ணாதது; எனவே, பரப்பிரஹ்மம் என்னும்சொல் பகவானும் புருஷோத்தமனுமான ஸ்ரீகிருஷ்ணனையே குறிக்கும் என்றும், அவன் வினைத்தொடர்பற்றவன், இயற்கையாயுள்ள ஞானம், ஆனந்தம், சக்தி முதலிய எண்ணிறந்த கல்யாணகுணங்களின் தொகுதிகளையுடையவன், வேதவேதாந்தங்களாலுணர்தற்குரியன, உலகங்கட்கெல்லாம் முக்கியகாரணம் அவனே, அவனே அனைத்தையும் தரிப்பவன், நியமனம்செய்பவன், எல்லாவைதிககருமங்களும் அவனுக்கு ஆராதனங்கள்என்றும், நால்வகை உறுதிப்பொருள்களையும் அளிப்பவன் அவனே என்றும் உறுதி கொண்டிருத்தல். இக்கீதை 10-15, 10-8, 7-7, 5-29, 10-3-ல் விளங்கக்காண்க.

43. ஶௌர்யம் தேஜோ த்ருதிர் தாக்ஷ்யம்
யுத்தே சாப்யபலாயநம்
தாந மீஶ்வரபாவஶ்ச
க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம்.

சௌர்யம், தேசு, தைரியம், திறமை, போரில்புறங்கொடாமை, கொடை, அடக்கிஆளும்நிலை, இவை க்ஷத்திரியனுடைய இயல்பினுலுண்டான கருமங்களாம்

சௌர்யம் - அச்சம் சிறிதுமின்றிப் போரிடைப்புகுந்து அமர்செய்யும் ஆற்றல்;
தேசு - பகைவரால் எளிவரவுபடாதிருத்தல்;
த்ருதி - தைரியம் - எத்தகைய இடையூறுகள் நேரிடினும் எடுத்தகருமத்தைக் கடைபோகத் தலைக்கட்டும்தன்மை; மற்றவைவெளிப்படை.

44. க்ருஷி கோரக்ஷ்ய வாணிஜ்யம் வைஶ்யகர்ம ஸ்வபாவஜம்
பரிசர்யாத்மகம் கர்ம ஶூத்ரஸ்யாபி ஸ்வபாவஜம்.

"காணி விளைப்பதுவும் காலியவை காப்பதுவும்
வாணியமும் வைசியர்க்கு வாய்த்ததொழில்—பேணியவர்
மூவர்க்கும் ஆளாய் முயலுமதே சூத்திரர்க்கு
மேவப்படுந் தொழிலா மிக்கு." (ப. கீ. வெ. 44).

[காணி - நிலம்; காலி - பசுமுதலியன; வாணியம் - வாணிபம், வியாபாரம்.]

ஈண்டுக்கூறியது ஸாமாந்யசாஸ்த்ரம்; திவ்யசாஸ்த்ரம் என்னும் விசேஷசாஸ்த்ரத்தில் ஞானஜன்மத்தின் பெருமைகள் பரக்கக்கூறப்பட்டுள்ளன.

45. ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர:
ஸ்வகர்மநிரத: ஸித்திம் யதா விந்ததி தச் ச்ருணு.

"தந் தங்கருமத்துச் சார்ந்தே தருமபயன்
வந் தடையலாகும் மனிதர்க்குச்—சந்தமுடன்
தன் கருமநின்றொருவன் தன்சித்திச் சார்வகையை
நன்கு அமரக்கேள் நீநயந்து." (ப. கீ. வெ. 45).

46. யத: ப்ரவ்ருத்திர் பூதாநாம் யேந ஸர்வமிதம் ததம்
ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ:

பிராணிகட்குத் தோற்றம்முதலியன எவனிடமிருந்து உண்டாகின்றதோ, இவ்வெல்லாவற்றிலும் எவன் நியந்தாவாகப் பரந்து நிறைந்துளனோ அத்தகையனைய், இந்திராதி தேவர்கட்கு அந்தரியாமியுமாயிருக்கின்ற என்னைத் தன்கருமங்களால் **ஆராதனம்செய்து**

எனது அநுக்ரஹத்தினாலேயே என்னை அடைவதாகிய பயனை மனிதன் பெறுகின்றான்.

கீழே கீதையில் 7-6, 9-4, 9-10, 10-8 இந்தஇடங்களில் பகவான் தன்னைப்பற்றி விளங்கக்கூறியவற்றை நினைப்பூட்டுதற்கே இங்கு 'தம்' அவனை என்று படர்க்கையாய்ப்பேசுகிறான் என்று உய்த்துணர்க.

47. ஶ்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத்
ஸ்வபாவநியதம் கர்ம குர்வந்நாப்நோதி கில்பிஷம்.

கருமம் புரிவோனாயிருத்தல் முதலியவற்றைவிட்டு, ஸர்வேஶ்வரன் திருவுள்ளம் உகக்கும்படியாகச்செய்யும் தன்வருணம், நிலை இவற்றிற்கு ஏற்றதருமம் 'ஸ்வதர்மம்' எனச் சொல்லப்படுகிறது. கண் முதலிய வெளி இந்திரியங்களை வெளிவிஷயங்களில் செல்லவொட்டாமல் தகைந்து, தன்மனதைத் தன் ஆத்மாவினிடத்தில் நிலைநிறுத்திச்செய்யும் சிந்தனை 'பரதர்தமம்' எனப்படும். செவ்வனே செய்யப்படும் பரதருமத்தைவிட, சிறிது குறைவுபட்டேனும் செய்யப்படும் ஸ்வதருமம் மேம்பட்டது.

எங்ஙனேயென்னில், கருமயோகத்தை ஆராயுமிடத்து அது பொறிகள், புலன்கள் இவற்றின்செயல்களாகவே பார்க்கப்படுகின்றது. தேகஸம்பந்தம்பெற்ற மனிதன் ஒருவன் பகவன்முகஉல்லாசத்திற்கு உறுப்பாகத் தன்புலன்பொறிகளை மிகுத்து உபயோகிக்காவிடினும், அவற்றை லௌகிககருமங்களில் விநியோகித்துஅம்முறையால் பயிற்சி பெற்றவனாய்க் காணப்படுகிறான்; ஆதலின் கருமயோகத்தைப் புரியுமிடத்து தவறுகள் ஏற்படஇடமில்லை. புறப்பொருள்களில்சேர்ந்தே ஸங்கத்தைச்செய்கின்ற வெளியிந்திரியங்களை அடக்குதல் என்பது பயிற்சியில்வாராத புதுமைச்செயலாதலின் ஞானயோகத்தைச் செய்யுமிடத்து தவறுகள்ஏற்பட இடமுண்டு எனவே, இவ்விரண்டு யோகங்களுள் தவறுகள் ஏற்பட இடமில்லாத கருமயோகத்தைப்புரிபவன் பந்தத்தை அடைவதில்லை; ஆதலின் கருமயோகமே சிறந்தது என்றபடி.

48. ஸஹஜம் கர்ம கௌந்தேய! ஸதோஷமபி ந த்யஜேத்
ஸர்வாரம்பா ஹி தோஷேண தூமேநாக்நி ரிவாவ்ருதா:

கௌந்தேய! அவரவர்களது வாஸனையைப்பற்றி இயற்கையினமைந்துநிற்றலின் எளிதிலியற்றத்தக்கதாய் தவறுஏற்பட இடமில்லாதாயும் இருக்கிற கர்மத்தை அது மெய்வருத்திச் செய்யவேண்டியதாயினும் சோம்பல்பட்டு விட்டுவிடக்கூடாது. ஞானயோகம்செய்யும் திறமையிருப்பினும் கர்மயோகத்தை செய்வாய் என்றபடி. நெருப்பைப் புகைமூட்டுவதுபோல, இவ்விரண்டுயோகங்களின் தொடக்கங்களையும் துன்பங்கள் சூழும்; எனினும் கருமயோகம் எளிதில் இயற்றக்கூடியது, தவறுதல்ஏற்பட இடமில்லாதது; ஞானயோகமோ இதற்கு முற்றிலும் எதிர்த்தட்டானது. இவ்வளவே வேறுபாடு.

49. அஸக்தபுத்தி ஸ்ஸர்வத்ர ஜிதாத்மா விகதஸ்ப்ருஹ:
நைஷ்கர்ம்யஸித்திம் பரமாம் ஸந்யாஸேநாதி கச்சதி.

பயன் முதலியவற்றில் பற்றற்றபுத்தியும், தனதுவசம் செய்யப்பட்ட மனமும் உடையனாய், பகவானையே கருத்தா என்று அநுஸந்திப்பனாதலின் தான்கருத்தா என்னும்விருப்பம் சிறிதும் இலனாய், கீழேகூறியுள்ளபடியே தியாகத்தின் வேறுபட்டதன்று என்னும் உறுதிப்பாட்டுடன்கூடிய ஸந்யாஸத்தோடு கருமங்களைப் புரிந்து கொண்டிருப்போன் மேலானதாயும் ஜ்ஞானயோகத்திலும் மூட்ட வல்ல தியானநிஷ்டையை அடைகிறான். எனவே ஸகலஇந்திரியங்களும் தத்தம்செயல் ஓய்ந்துவிடுவதாகிய மேலேவிளக்கப்போகும் தியானயோகத்தை எய்துகிறான் என்றபடி.

50. ஸித்திம் ப்ராப்தோ யதா ப்ரஹ்ம ததாப்நோதி நிபோதமே
ஸமாஸேநைவ கௌந்தேய நிஷ்டா ஜ்ஞாநஸ்ய யா பரா.

தியானமாகிய ஞானத்திற்கு எய்தலாகும் சிறந்தபயன் ப்ரஹ்மம் அன்றோ! கௌந்தேய! உடலைவிட்டு உயிர் வெளியேபுறப்படும்தனையும் நாள்தோறும் இயற்றப்படும் கருமயோகத்தால் விளையும் தியானமாகிய ஸித்தியைப்பெற்றவன், எவ்வண்ணம்இருந்து ப்ரஹ்மத்தை எய்துகின்றனனோ அவ்வண்ணத்தைச் சுருங்கஉரைக்கின்றேன் என்னிடம் அதன்உண்மையை நிச்சயமாகத் தெரிந்துகொள்.

51. புத்த்யா விசுத்தயா யுக்தோ
த்ருத்யாத்மாநம் நியம்யச
சப்தாதீந் விஷயாம் ஸ்த்யக்த்வா
ராகத்வேஷௌ வ்யுதஸ்யச.

கோதறு சீர்ப்புத்தியுடன் கூடித்தன் திண்மையால்
மீதியலு நெஞ்சை மிகவடக்கித்—தீதமரும்
ஓசை முதற்பொருள்கள் உள்ளுறவிட்டு ஒன்றிவரும்
ஆசை வெறுப்பவையும் அற்று." (ப. கீ. வெ. 51).

52. விவிக்தஸேவீ லக்வாஸீ யதவாக்காயமாநஸ:
த்யாநயோகபரோ நித்யம் வைராக்யம் ஸமுபாச்ரித:

" தக்க தனியாமிடத்துச் சார்ந்தறிவு தான்சிறிதுண்(டு)
ஒக்க உரைகாயம் நெஞ்சுஉள்ளொடுக்கி—மிக்கமர்ந்தே
என்றுந் தியானமாம் யோகஞ்சேர்ந் தெவ்விடத்தும்
ஒன்று நசைவிடுதல் உற்று." (ப. கீ. வெ. 52).

53. அஹங்காரம் பலம் தர்ப்பம் காமம் க்ரோதம் பரிக்ரஹம்
விமுச்ய நிர்மம ஶ்ஶாந்தோ ப்ரஹ்மபூயாய கல்பதே.

"ஆங்காரம் வண்மை அதிற்செருக்குக் காமமுடன்
தீங்கார் வெகுளிதான் சேர்சுற்றம்—தேங்காது
நீந்து மமதை நெகிழ்ந்தே நிகழ்சாந்தின்
வாய்ந்த பிரமத்தனும் வந்து." (ப. கீ. வெ. 53).

54. ப்ரஹ்மபூத: ப்ரஸந்நாத்மா நஶோசதி நகாங்க்ஷதி
ஸம ஸ்ஸர்வேஷு பூதேஷு மத்பக்திம் லபதே பராம்.

55. பக்த்யா மா மபிஜாநாதி யாவாந் ய ஶ்சாஸ்மி தத்வத:
ததோ மாம் தத்வதோஜ்ஞாத்வா விஶதே த தநந்தரம்.

அளவற்ற ஞானமொன்றையே ஸ்வரூபமாகஉடையதாய் எனக்கு அடிமையாயிருப்பதொன்றையே சுபாவமாக உடையதாயுமுள்ள தனது ஆத்மஸ்ரூபத்தை அநுபவிக்கிறவனாய், துக்கம் முதலியவை இல்லாதவனாய் உள்ளவன் என்னையன்றி வேறு ஒரு பிராணியையும் பற்றிக் கவலைப்படுவதுமில்லை விரும்புவதுமில்லை; என்னையிட்டுப் பார்க்கும்போது எல்லாப்பிராணிகளிடத்திலும் ஸமமானபுத்தியுடையனாய் மிகஉயர்ந்ததாகிய என்னிடம் உண்டாகும் பக்தியை யடைகின்றான்.

(இதன் பயனைக் கூறுகிறார்).

நான் ஸ்வரூப ஸ்வபாவங்களால் எத்தகையனோ, குணவிபூதிகளால் எவ்வளவு பட்டவனோ அப்படிப்பட்ட என்னை இத்தகைய பக்தியினால் உள்ளவாறு நன்றாக அறிகின்றான்; என்னை உள்ளவாறுஉணர்ந்து அங்ஙனம் அறிந்தபின்பு அந்தபக்தியினாலேயே என்னை அடைகின்றான்.

இங்கு 'மத் பக்திம் லபதேபராம்' என்றதில் 'மத்' என்னும் தன்னைக்குறிக்கும் சொல்லினால், தன்பால் பரமபக்தியுண்டாகி வளர்ச்சிபெறவும் காரணமாய் இந்த கீதா சாஸ்திரத்திலும் மற்றசாஸ்திரங்களிலும் விரித்துரைக்கப்பட்டனவும் உபாஸன வேளைகளில் அநுஸந்தானத்திற்கு உறுப்பான வடிவங்களும் உட்கொள்ளப்படுகின்றன. ஆதலின் இதற்குப்பொருளாவது:—எல்லாவற்றிற்கும் இறைவனும், உலகம்யாவையும் தாம்உளவாக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலாவிளையாட்டுடையனும், தீக்குணத்தொடர்பு அற்றவனும், எண்ணிறந்த கல்யாணகுணஸம்பன்னனும், அழகு நிறைந்த அமுதக்கடலும், இறையும் அகலகில்லாத திருமகளையுடையவனும், தண் பெருநீர்த்தடந்தாமரை மலர்ந்தாலொக்கும் கண்பெருங்கண்ணனும் ஆத்மேஸ்வரனுமாயவன் தான் என்றபடி.

அவ [இனி காமியகருமங்களையும் கீழேகூறியவாறே அநுஷ்டித்தால் அவைகளும் இதேபரிபாகத்தை உண்டாக்கும் என்கிறார்.]

56. ஸர்வகர்மாண்யபி ஸதா குர்வாணோ மத்வ்யபாஶ்ரய:
மத்ப்ரஸாதா தவாப்நோதி ஶாஶ்வதம் பத மவ்யயம்.

நித்ய நைமித்திகங்களேயன்றி காம்யங்களாகிய அனைத்துக்கரு மங்களேயும் 'கருமம் புரிவோனுயிருத்தல்' முதலியவற்றை என்னிடம் ஸமர்ப்பித்துவிட்டு இயற்றுபவன் எனது அனுக்ரஹத்தினல் அழி வற்றதாய்ப் பெறும்பேருகிய என்னைக்குறைவின்றி அடைகின்ருன்.

57. சேதஸா ஸர்வகர்மாணி மயி ஸங்யஸ்ய மத்பர:
புத்தியோக முபாஸ்ரித்ய மச்சித்த ஸ்ஸததம் பவ.

நெஞ்சால் கருமம்என்பால் நேராக என்னிடைவைத்(து)
எஞ்சாமல் ஏற்பரனய் எந்நாளும்—துஞ்சாத
புத்தியோகத்தைப் புணர்ந்து பொருவில் என்தன்
பத்தியோகம் பெறுநீ பார்த்து." (ப. கீ. வெ. 57).

58. மச்சித்த ஸ்ஸர்வதுர்க்காணி மத்ப்ரஸாதாத் தரிஷ்யஸி
அதசேத்த்வ மஹங்காராத் நஸ்ரோஷ்யஸி விநங்க்ஷ்யஸி.

இவ்வாறு என்னிடத்தில் மனதைமுற்றும்செலுத்தி எல்லாக் கருமங்களேயும் முறைதவருமல் இயற்றியவண்ணம் ஸம்ஸாரத்தி லுண்டாகும் எல்லாயிடையூறுகளேயும் எனது அனுக்கிரஹத்தினல் கடக்கப்போகிருய். அங்ஙனின்றி நீ அஹங்காரம்கொண்டு எனது சொற்களை ஏற்றுக்கொள்ளாமல் போவாயாகில் அழிவடைவாய். எல்லாப்பிராணிகளுக்கும் செய்யத்தகுந்தசெயல், செய்யத்தகாத செயல் இன்ன இன்னவென அறிந்து நியமநம்புரிபவன் என்னையன்றி வேறும்ஒருவன் உண்டோ?

59. யதஹங்கார மாஸ்ரித்ய நயோத்ஸ்ய இதி மந்யஸே
மித்யைஷ வ்யவஸாயஸ்தே ப்ரக்ருதி ஸ்த்வாம் நியோக்ஷ்யதி.

எனது நன்மைதீமையை நானேதேடிக்கொள்வேன் என்று அகங் காரம் மிகுந்து எனது இதமான ஆணையைமீறி, 'நான் யுத்தம்செய்யப் போவதில்லை' என்று எண்ணுவாயாகில் இந்தஎண்ணம் பொய்யே யாகும்; ஏனெனில் பிரகிருதி உன்னைப் போர்புரியத்தூண்டும்; நீயே உன்னைக்காப்பவன் என்று எண்ணிஞயானல் உனக்கு அச்சம் விளையும்; அது அறிவின்மையை உண்டாக்கப் பிரகிருதியானது தான்இட்டவழக்காக உன்னை ஆட்டுவிக்கும்.

அவ [இதனையே இன்னும் விளக்குகிருர்.]

60. ஸ்வபாவஜேந கௌந்தேய! நிபத்த: ஸ்வேந கர்மணு
கர்த்தும் நேச்சஸி யந்மோஹாத் கரிஷ்ய ஸ்யவஸோபி தத்.

கௌந்தேய! அரசனுக்கு இயல்பாயகருமம் வீரம்; இவ்வி யற்கையானகருமத்தால் கட்டுண்டு அதற்குப்பரவசனய்ப் பிறர்

செய்யும் அவமானத்தைப்பொருதவனாய் நீயே யுத்தத்தைச்செய்யப் போகிறாய்; அறிவின்மையாலன்றோ அந்தயுத்தத்தை இப்போது செய்ய உடன்படாதிருக்கின்றனை.

அவ [பண்டைப் பழவினைவின்பயனாக பிரகிருதிவசப்பட்டு நடக்கவே இறைவனாகிய என்னால் ஏற்படுத்தப்பட்டுள்ளது; இதைக்கேட்பாய்.]

61. ஈஸ்வர ஸ்ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஸேர்ஜுந திஷ்டதி
ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா.

ஈசன் அவன்ஒருவன் எல்லார் இதையமாம்
தேச மதில்நிற்கும் சீர்விசையா—பாசமுடன்
எல்லா உயிர்களையும் மாயையினாலே திரிக்க
வல்லான் இயந்திரத்தில் வைத்து." (ப. கீ. வெ. 61).

கீழே 15-15, 10-8-ம், ப்ருஹதாரண்யகம் 5-7-12, சுபாலோபநிஷத் முதலிய ஆதாரங்கள் இங்கே அறியத்தக்கவை.

அவ [இம்மாயையைக் கடக்கும் முறையைக் கூறுகின்றார்.]

62. த மேவ ஶரணம் கச்ச
ஸர்வபாவேந பாரத!
தத்ப்ரஸாதாத் பராம் ஶாந்திம்
ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி ஶாஶ்வதம்.

"அந்த அவன்தன்னையே ஆனதவன் சரணைச்
சந்த முடன்அடைநீ தார்விசையா—முந்தஅவன்
தன்னருளால் மேலான சாந்தியையும் சாயாத
வன்பதமும் நீபெறுதி வாய்ந்து." (ப. கீ. வெ. 62).

63. இதி தே ஜ்ஞாநமாக்யாதம் குஹ்யாத்குஹ்யதரம் மயா
விம்ருஶ்யைத தஶேஷேண யதேச்சஸி ததா குரு.

"இவ்வாறு ஞானமுனக் கிங்கே எழில்மறையில்
செவ்வா மறைப்பொருளைச் செப்பினேன்—எவ்வாறு
தன்னியல்வை ஆராய்ந்து சாய்ந்ததனை இச்சித்தாய்
நின்னியல்வால் செய்நீ நிகழ்ந்து." (ப. கீ. வெ. 63).

64. ஸர்வ குஹ்யதமம் பூய: ஶ்ருணு மே பரமம் வச:
இஷ்டோஸி மே த்ருடமிதி ததோ வக்ஷ்யாமி தே ஹிதம்.

"இன்ன மறைப்பொருட் கெல்லா மிகமேலாம்
என்ன மரும்சொல்லின் இறுதிகேள்—முன்னமரும்
இட்டன் திடன்என்னும் இத்தால் உனக்குஇதமாப்
பட்ட தனைச்சொல்வன் பரிந்து." (ப. கீ. வெ. 64).

65. மன்மனா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு
மா மேவைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜாநே ப்ரியோஸிமே.

"என்னை மனனம்பண்ணு என்பத்தனுகியே
என்னை அருச்சி எனைவணங்கு—என்னையே
மேவுதிநீ மெய்யுனக்கு மிக்கறுதி சொன்னேன்நான்
ஓவுதலற்று என்உகப்பால் உற்று." (ப. கீ. வெ. 65).

66. ஸர்வதர்மாந் பரித்யஜ்ய
மா மேகம் ஶரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வபாபேப்ய:
மோக்ஷயிஷ்யாமி மாஶுச:

"எல்லா அறங்களையும் இங்குஅறவிட்டு என்னையே
நல்லார் சரணமா நண்ணியிடு—தொல்லாரும்
பாவங்கள் நின்றுன்னைப் பற்று விடுவிப்பன்நான்
தாவம்தனை யொழிநீ தான்." (ப. கீ. வெ. 66).

இதுவே "சரமஸ்லோகம்" எனச்சிறப்பிக்கப்படும்.
(இதன் விரிவுரையாவும் அநுபந்தம் II-ல் காண்க.)

67. இதந் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசன
நசாஶுஶ்ரூஷவே வாச்யம் நச மாம் யோ ப்யஸூயதி.

மிகவும் இரகஸியமான இந்தகீதாசாஸ்திரம் உனக்கு என்னாலே உபதேசிக்கப்பட்டது. நீ இதை தவம்செய்யாதவனுக்குச் சொல்லாதே; தவம்செய்தவனுயினும், சொன்ன என்னிடத்திலும் உபதேசம்புரியும் உன்னிடத்திலும் பக்திஇல்லாதவனுக்கு ஒருகாலத்திலும் சொல்லாதே; பக்திமானுயினும் கேட்கவேண்டும்என்னும் ஆவலும் சிரத்தையும் இல்லாதவனுக்குச் சொல்லாதே; எனதுஸ்வரூபம், ஐசுவரியம், குணம் இவை கூறப்படும்பொழுது எவன் பொறாமைப் பட்டுக் குற்றத்தை ஆரோபிக்கின்றானே அவனுக்கும் சொல்லாதே.

68. ய இதம் பரமம் குஹ்யம் மத்பக்தேஷ்வபிதாஸ்யதி
பக்திம் மயி பராம் க்ருத்வா மா மேவைஷ்ய த்யஸம்ஶய:

"இத்தகையின் மேலா மறைப்பொருளை எவனென்தன்
பத்தரிடை நின்று பரிந்துரைக்கும்—அத்தகையோன்
அன்பால் பரமமாம் பத்திஎய்தி ஐயமற
இன்பால் எனையடையும் எய்ந்து." (ப. கீ. வெ. 68).

69. நச் தஸ்மாந் மநுஷ்யேஷு கஸ்சிந்மே ப்ரியக்ருத்தம:
பவிதா நச மே தஸ்மாத் அந்ய: ப்ரியதரோபுவி.

"மானிடரில் ஆங்கவனின் மற்ருெருவன் என்உகப்பில்
தானியல்வு மிக்கஅவன் தானில்லை—மேல்நிகழும்
எக்காலும் மேதினியில் இல்லையாம் என்உகப்பில்
தக்கார்வ மிக்கினியோன் தான்." (ப. கீ. வெ. 69).

70. அத்யேஷ்ய தேச இமம் தர்ம்யம் ஸம்வாத மாவயோ:
ஜ்ஞாந யஜ்ஞேந தேநாஹம் இஷ்டஸ்யா மிதி மேமதி:

"நாமிருவர் நின்றியம்பு நல்லறம்சேர் இக்கீதை
பாமருவி ஓதும் பரிவன்எனைத்—தூமருவு
நெஞ்சறிவாம் எச்சத்தால் நேரே இறைஞ்சினன்என்(று)
எஞ்சல்அற யான்மதிப்பன் இங்கு." (ப. கீ. வெ. 70).

[நெஞ்சு அறிவாம் எச்சத்தால் - ஞானயஜ்ஞத்தினுல்; இறைஞ்சினன் - தொழுதனன்; எஞ்சல்அற - குறைவின்றி.]

71. ஸ்ரத்தாவா நநஸூயஸ்ச
ஸ்ருணுயாதபி யோ நர:
ஸோபி முக்தஸ்ஸுபாந் லோகாந்
ப்ராப்நுயாத் புண்யகர்மணும்.

"சேர்ந்து சிரத்தையினைச் சேராது அசூயையினை
ஆர்ந்து இதனைக்கேட்கு நரனுனவனும்—தீர்ந்துதுயர்
அற்றே அறிவெய்தும் அன்புடையோர் தங்கூட்டம்
பெற்றே மகிழும் பெருத்து." (ப. கீ. வெ. 71).

72. கச்சி தேதத் ஸ்ருதம் பார்த்த! த்வயைகாக்ரேண சேதஸா
கச்சி தஜ்ஞாந ஸம்மோஹ: ப்ரணஷ்டஸ்தே தநஞ்ஜய.

"பார்த்தனே நின்ஒருமை பற்றியாம் சித்தத்தால்
சீர்க்க இதுகேட்டுச் சிறந்தாயே—பேர்த்துன்னை
மோகத்தைச் செய்மாயை முற்றும் கழிந்ததே
போகத்தைச் சேர்ப்பான் புணர்ந்து." (ப. கீ. வெ. 72)

அர்ஜுந உவாச - அருச்சுநன் கூறுதல்.

73. நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர் லப்தா
த்வத்ப்ரஸாதாந் மயாச்யுத
ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ:
கரிஷ்யே சவநம் தவ.

"என்று இறையோன் சொல்லஎழில் விசையன்செப்பினன்
இன்று இயலும் மோகம்போய் ஏய்ந்துமதி—நின்றுநான்
உன்அருளினல் மயக்கம் ஒன்றின்றிச் சென்றியல்வன்
சொன்னதெல்லாம் செய்வன் துணிந்து." (ப. கீ. வெ. 73).

ஸஞ்ஜய உவாச - ஸஞ்சயன் கூறுதல்.

74. இத்யஹம் வாஸுதேவஸ்ய பார்த்தஸ்ய ச மஹாத்மந:
ஸம்வாத மிம மஶ்ரௌஷம் அத்புதம் ரோமஹர்ஷணம்.

"இவ்வண்ணம் மாயனுக்கும் ஏந்துயர்சீர்ப் பார்த்தனுக்கும்
மெய்வண்ணம் வார்த்தை விளைந்தபடி—செய்வண்ணம்
ஈண்டே நான்கேட்டேன் இவ்வற்புதத்தை இவ்வுடலில்
பூண்டே மயிரெறிவாம் பூண்டு." (ப. கீ. வெ. 74).

75. வ்யாஸப்ரஸாதாத் ஶ்ருதவாந்
ஏதத் குஹ்யமஹம் பரம்
யோகம் யோகேஶ்வராத் க்ருஷ்ணாத்
ஸாக்ஷாத் கதயத: ஸ்வயம்.

"சீரார் வியாதன் திருவருளால் மிக்குயர்ந்த
ஏரார் மறைப்பொருளா மியோகத்தைப்—பேராண்மைக்
கண்ண னவன்தானே கருத்தோடு உரைத்தருள
எண்ண முடன்கேட்டேன் நான்இங்கு." (ப. கீ. வெ. 75).

76. ராஜந் ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய
ஸம்வாத மிம மத்புதம்
கேஶவார்ஜுநயோ: புண்யம்
ஹ்ருஷ்யாமி ச முஹுர்முஹு:

"மன்னவா கேசவனும் பாண்டவனும் வார்த்தையினைச்
சொன்னவா நான்நினையுந் தோறெல்லாம்—இன்னவா(று)
என்ன ஒண்ணுது அற்புதமாய்எல்கின்ற புண்ணியமாப்
பன்ன உகப்பாவன் பயின்று." (ப. கீ. வெ. 76).

77. தச்ச ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ரூப மத்யத்புதம் ஹரே:
விஸ்மயோ மே மஹாந் ராஜந் ஹ்ருஷ்யாமிச புந: புந:

"ஆங்கு மிகஅற்புதமாம் அண்ணல் வடிவினையும்
ஈங்கு நினைதோறும் எழுவியப்பாய்—ஓங்கும்
உகப்புமிகும் மேன்மேலும் உற்றென்று உரைத்தான்
மிகப்புகழ்சேர் சஞ்சயன்தான் மிக்கு." (ப. கீ. வெ. 77).

அவ [இதைக்குறித்துப் பலபடியாய்ப் பேசியென் ?]

78. யத்ர யோகீஸ்வர: க்ருஷ்ண: யத்ர பார்த்தோ தநுர்த்தர:
தத்ர ஸ்ரீ: விஜயோ பூதி: த்ருவாநீதிர் மதிர்மம.

ஸ்ரீ பகவத்கீதை சுலோகங்கள் முற்றும்.

"எவ்விடத்தான் யோகத்துக்கு ஈசனும் கண்ணன் தான்
எவ்விடத்தான் வில்லேந்து எழில்விசயன்—அவ்விடத்தே
வாய்ந்த திருவிசையம் வாழ்வு வளநீதிதிடம்
ஏய்ந்தன என்றேமதிப்பன் யான்." (ப. கீ. வெ. 78).

இங்கு ஸ்ரீ கிருஷ்ணனை யோகேஸ்வரன்என்று கூறிய ஸஞ்சயன் கருத்து யாதெனில் ;—'ஈஸ்வர:' என்றது எல்லாவற்றையும் தன்னிச்சைப்படி ஆளுந்திறமையுடையவன் ; 'யோக' என்றது அங்ஙனம் ஆளப்படும் சேதன அசேதனங்களான பொருள்கள்யாவும் எனக்கொண்டு.

எனவே, தன்னையொழிந்த எல்லாப்பொருள்களின் ஸ்வரூப, ஸ்திதி, பிரவ்ருத்திகளைத் தன்ஸங்கல்பத்தின்படி நடத்தவல்ல வஸுதேவகுமாரனாகிய ஸ்ரீ கிருஷ்ணன் எவரைச்சார்ந்துள்ளாரோ, அந்த ஸ்ரீ கிருஷ்ணனின் அத்தைமகனும் அவரது உபய பாதங்களையே சரணெனப்பற்றியவனும் சிறந்தவில்லாளியுமாகிய அருச்சுனன் எவரைச் சார்ந்துள்ளானோ அப்பக்ஷத்தில் லக்ஷ்மீ, விஜயம், ஐஸ்வர்யம், நீதி இவை திடமாயிருக்கின்றன என்று எனது எண்ணம் என்றபடி.

கிருஷ்ண: என்றதால் தனது இயற்கையானநிறத்துடனே அவதரித்துள்ளவன் என்பதும் அருச்சுனனுக்கு உள்ள உறவுமுறையும் விளங்கும்; இதைவிளக்கவே பார்தன்என்னும் சொல்லுக்கு அவனது அத்தைமகன்என்று பொருள் கூறியதும்.

இங்கு 'தநுர்த்தர:' என்றது முன்பு 1-47-ல் 'விஸ்ருஜ்ய ஸஶரம் சாபம்' என்று அம்பும் வில்லும் அம்புவியில் விட்டொழிந்து நின்றநிலைதீர்ந்து ஸ்ரீ கிருஷ்ணன் நியமனப்படி வில்லுங்கையுமாய்ப் போர்புரிய ஒருப்பட்டநிலையைக்காட்டும். ஸ்ரீ கிருஷ்ணனை அடுத்தும் உன்மகன் பங்களத்தைக்கொண்டது போலல்லாமல் விவேகியாய் அவனது திருவடிகளே சரணம் எனத்தெளிவெய்தியவன் அருச்சுனன்என்று சுட்டிக்காட்டவே 'பார்த்தன்' எனப்பட்டான். ஸ்ரீ:, என்பது இராச்சியம்முதலிய இன்பநுகர்ச்சிக்கு உரியவையாவும் மிக்கிருத்தல்; விஜயம் என்பது பகையொழித்து வெற்றிபெற்றிருத்தல்; பூதி என்றது ஐஸ்வரியத்தை, இதனால் இவனுக்கு நியமனம்செய்யும் ஆற்றல் கூறப்படுகின்றது. நீதி என்பது அரசநீதி - அர்த்தசாஸ்திர பாண்டித்யம். 'த்ருவா' என்பதை 'த்ருவ:' என்றாக்கிப் பொருள்காண்க. திண்மை, திடம் என்றுபொருள். நீங்கள் ஸாம, தான, பேத, தண்டம் என்னும் நால்வகை உபாயங்களை உபயோகம்புரியினும் வெல்லக் கூடாத திண்மை அவர்கள்பால் உண்டுஎன்று இச்சொல்விளக்கும். இது எனது புத்தி- 'மம மதி:' என்றது உனக்கு உண்டாகவில்லையே என்று குறிப்பிட. இவ்விடத்தில்

பாரதம் உத்யோகபருவம் - 68-2-5-ல் "வித்யா ராஜந் நதே வித்யா மமவித்யா நஹீயதே, வித்யா ஹீநஸ்த மோத்வஸ்தோ நாபி ஜாநாஸி கேசவம்; மாயாம் நஸேவே பத்ரந்தே ந வ்ருதா தர்மநாசரே, சுத்த பாவம் கதோ பக்த்யா ஸாஸ்த்ராத்வேத்மி ஜநார்த்தனம்." என்ற சுலோகங்கள் உணரத்தக்கவை.

"தன்மைக் கருமந்தகு குலத்தின் தூய்மையுடன்
நன்மை பயில்சாரம் நன்கறியத்—தொன்மைப்
பரமன் அருள்கீதை பதினெட்டா மோத்தாம்
சரம முரைத்தோர்ந்ததிது தான்."

மூன்றும் ஷட்கப்பொருள்.

"உடலுயிரின் தன்மை உறுகுணத்தின் பன்மை
இடரில்எழில் ஈசன் தன்ஏற்றம்—திடஅசுரர்
தேவர் இயல்வுகுணம் சேர்கருமம் சார்ந்தமர்வும்
ஆவன பின்னாறேத் தமர்ந்து."

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ கீதார்தஸங்க்ரஹப் பாசுரம்.

"சத்துவ வீடுடை நற்கருமந்தான் உகந்தமையும்
சத்துவ முள்ளதுதான் குறிக்கொள்வகை செய்தனவும்
சத்துவ நற்கிரிசைப் பயனும் சரணாகதியும்
சத்துவ மேதருவான் உரைத்தான் தனிப்பார்த்தனுக்கே."

பதினெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ பகவத்கீதையும் செம்பொருளுரையும் முற்றுப்பெற்றன.

ஸ்ரீ கிருஷ்ணாய பரப்ரஹ்மனே நம:

ஸ்ரீ பகவத்கீதைப் பயன்.

1. "தூய கருமங்களினால் சத்வமிக வுண்டாக்கி
ஏய வுணர்வால் உயிரின் ஈறறிந்து—மாயனிடை
முத்தி யுறும்சிந்தை முயலாசை முன்பணிவால்
பத்தி யுறல்கீதைப் பயன்."

2. "எவ்வறமும் சொல்லி இறுவாஞ் சுலோகத்தால்
செவ்வறமாந் தன்சரணச் செப்புதலால்—அவ்வறத்தும்
தான்துணையா மாயன் தனித்துத் தனையளிக்கும்
வான்துணையாம் என்றிருத்தல் வாய்ப்பு."

(கீதார்த்தஸங்கிரஹப் பாசுரம்.)

3. "வன்பற்றறுக்கு மருந்தென்று மாயவன் தானுரைத்த
இன்பக்கடல் அமுதாம் எனநின்ற இக்கீதைதன்னை
அன்பர்க் குரைப்பவர் கேட்பவர் ஆதரித்தோதுமவர்
துன்பக்கடலில் துளங்குகைநீங்கித் துலங்குவரே."

"கண்ணன் கழலிணை, நண்ணும் மனமுடையீர்
எண்ணுந் திருநாமம் திண்ணம் நாரணமே."

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

சுபம்! சுபம்!! சுபம்!!!

திருவாய்மொழி—

1. கடல்வண்ணன் கண்ணன் விண்ணவர்
கருமாணிக்கம் எனதாருயிர்
படவரவினணைக்கிடந்த பரஞ்சுடர்
பண்டு நூற்றுவர்
அடவரும் படைமங்க ஐவர்கட்காகி
வெஞ்சமத்து அன்றுதேர்
கடவிய பெருமான் கனைகழல்
காண்பது என்றுகொல் கண்களே? III-6-10

சடகோபரந்தாதி—

2. மூர்த்தத்தினை இம்முழுவேழுலகு முழுகுகின்ற
தீர்த்தத்தினைச் செய்ய வேதத்தினைத் திருமால்பெருமை
பார்த்தற்கருளிய பாரதத்தைப் பணித்தானுநின்ற
வார்த்தைக் குருகைப்பிரானுங் கண்டான் அம்மறைப்பொ
[ருளே. 41

வில்லிபுத்தூராழ்வார் பாரதம்—காப்பு.

3. பேர்படைத்த விசயனுடன் மும்மை
நெடும்பிறவியினும் பிரியானாகிச்
சீர்படைத்த கேண்மையினால் தேரூர்தற்
கிசைந்தருளும் செங்கண்மாலைப்
பார்படைத்த சுயோதனற்குப் படையெடேன்
அமரில் எனப்பணித்தகோவைக்
கார்படைத்த நிறத்தோனைக் கைதொழுவார்
பிறவாழிக் கரைகண்டாரே.

ஸ்ரீ:

பிறகுறிப்புகள்.

அத். 9. சு. 13.

ஈண்டுக்கூறியுள்ள முறையில் பகவானைப் பஜித்தோர் பாசுரங்கள் சில.

திருச்சந்தவிருத்தம்—

அம்புலாவு மீனுமாகி யாமையாகி யாழியார்
தம்பிரானு மாகிமிக்க தன்புமிக்க தன்றியும்
கொம்பராவு நுண்மருங்கு லாயர்மாதர் பிள்ளையாய்
எம்பிரானு மாயவண்ணம் என்கொலோ? எம்மீசனே! 35

காய்த்தநீள் விளங்கனி யுதிர்த்தெதிர்ந்த பூங்குருந்தம்
சாய்த்துமா பிளந்தகைத் தலத்தகண்ண னென்பரால்
ஆய்ச்சிபாலை யுண்டுமண்ணை யுண்டுவெண்ணை யுண்டுபின்
பேய்ச்சிபாலை யுண்டுபண்டொ ரேனமாய வாமனா! 37

ஆனைகாத்தொ ரானைகொன்ற தன்றியாயர் பிள்ளையாய்
ஆனைமேய்த்தி யானெயுண்டி யன்றுகுன்ற மொன்றினால்
ஆனைகாத்து மையரிக்கண் மாதரார் திறத்துமுன்
ஆனையன்று சென்றடர்த்த மாயமென்ன மாயமே? 40

இன்றுசாதல் நின்றுசாதல் அன்றியாரும் வையகத்து
ஒன்றிநின்று வாழ்தலின்மை கண்டும்நீச ரென்கொலோ
அன்றுபா ரளந்தபாத போதையொன்றி வானின்மேல்
சென்றுசென்று தேவரா யிருக்கிலாத வண்ணமே? 66

திருமாலை—

பச்சைமா மலைபோல்மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தங் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிரயான்போய் இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே. 2

புலையற மாகிநின்ற புத்தொடு சமணமெல்லாம்
கலையறக் கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோதாம்?
தலையறுப் புண்டும்சாகேன் சத்தியம் காண்மினையா!
சிலையினா லிலங்கைசெற்ற தேவனே தேவனாவான். 7

மற்றுமோர் தெய்வமுண்டோ? மதியிலா மானிடங்காள்!
உற்றபோ தன்றிநீங்கள் ஒருவனென் றுணரமாட்டீர்
அற்றமே லொன்றறியீர் அவனல்லால் தெய்வமில்லை
கற்றினம் மேய்த்தவெந்தை கழலிணை பணிமினீரே. 9

மழைக்கன்று வரைமுன்னேந்தும் மைந்தனே! மதுரவாறே!
உழைக்கன்றே போலநோக்க முடையவர் வலையுட்பட்டு
உழைக்கின்றேற் கென்னைநோக்கா தொழிவதே! உன்னையன்றே
அழைக்கின்றேன் ஆதிமூர்த்தீ! அரங்கமா நகருளானே! 36

பெரியதிருமொழி—

வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை
விழுமிய முனிவர் விழுங்கும்
கோதிலின் கனியை நந்தனார் களிற்றைக்
குவலயத்தோர் தொழுதேத்தும்
ஆதியை யமுதை யென்னை யாளுடை
யப்பனை யொப்பவரில்லா
மாதர்கள்வாழும் மாடமாமயிலைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே. II-3-2

திருவாய்மொழி—

மூவராகிய மூர்த்தியை முதன் மூவர்க்கும் முதல்வன் தன்னைச்
சாவமுள்ளன நீக்குவானைத் தடங்கடற் கிடந்தான் தன்னைத
தேவதேவனைத் தென்னிலங்கை யெரியெழச்செற்ற வில்லியைப்
பாவநாசனைப் பங்கயத் தடங்கண்ணனைப் பரவுமினோ. III-6-2

அழகிய மணவாளதாஸர்—திருவேங்கடத்தந்தாதி.

திருமந்திரமில்லை சங்காழியில்லை திருமணில்லை
தருமந்திரம் ஒன்றுஞ்செய்தறியீர் செம்பொன் தானவனை
மருமந்திரங்கப் பிளந்தான் வடமலை வாரஞ்செல்லீர்
கருமந்திரண்டதை யெத்தாற்களையக் கருதுதிரே?

இளங்கோவடிகள்—சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை—

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் மாயமோ மருட்கைத்தே, 1

அறுபொருளிவனென்றே யமரர்கணந் தொழுதேத்த
உறுபசி யொன்றின்றியே யுலகடைய வுண்டனையே
உண்டவாய் களவினுல் உறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே. 2

திரண்டமரர் தொழுதேத்துந் திருமால் நின்செங்கமல
இரண்டடியால் மூவுலகும் இருள்தீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே. 3

மூவுலகு மீரடியான் முறைதிறம்பா வகைமுடியத்
தாவிய சேவடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன் சீர்கேளாத செவியென்ன செவியே
திருமால் சீர்கேளாத செவியென்ன செவியே. 4

பெரியவனை மாயவனைப் பேருலகமெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருமுடியும் கையுங் கனிவாயும் செய்ய
கரியவனைக் காணுத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார் தங்கண்ணென்ன கண்ணே. 5

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனர் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்
தொடர்ந் தாரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்னநாவே
நாராயணு வென்னு நாவென்னநாவே. 6

அத். 9. சு. 14.

கீர்த்தனம் நமஸ்காரங்களால் எம்பெருமானை அனுபவித்த ஆழ்வார்களின் அமுதப்பாசுரங்கள் சில.

பெரியதிருமொழி—

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயரிடும்பையிற் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோ
டவர்தருங் கலவியே கருதி

ஓடினேன் ஓடி யுய்வதோர்பொருளால்
உணர்வெனும் பெரும்பதந் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். I-1-1

கள்வனேனானேன் படிறு செய்திருப்பேன்
கண்டவா திரிதந்தேனேலும்
தெள்ளியேனானேன் செல்கதிக்கமைந்தேன்
சிக்கெனத்திருவருள் பெற்றேன்
உள்ளெலாமுருகிக் குரல்தழுத்தொழிந்தேன்
உடம்பெலாங் கண்ணநீர்சோர
நள்ளிருளளவும் பகலும் நானழைப்பன்
நாராயணா வென்னு நாமம். 5

குலந்தருஞ் செல்வந் தந்திடும்
அடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினுமாயின செய்யும்
நலந்தருஞ்சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். 9

திருவாய்மொழி—

கேசவன் தமர்கீழ் மேலெமரேழெழு பிறப்பும்
மாசதிரிது பெற்று நம்முடைய வாழ்வு வாய்க்கின்றவா
ஈசனென் கருமாணிக்கமென் செங்கோலக்கண்ணன் விண்ணோர்
நாயக னெம்பிரா னெம்மான் நாராயணனாலே. II-7-1

சிரீதரன்செய்யதாமரைக் கண்ணனென்றென் றிராப்பகல்வாய்
வெரீஇயலமந்து கண்கள் நீர்மல்கி வெவ்வுயிர்த்துயிர்த்து
மரீஇயதீவினைமாள இன்பம்வளர வைகல்வைகல்
இரீஇயுன்னை யென்னுள்வைத்தனை யென்னிருடீகேசனே 9

திருமாலை—

நமனும் முற்கலனும்பேச நரகில்நின்றார்கள் கேட்க
நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி

அவனதூ ரரங்கமென்னு தயர்த்து வீழ்ந்தளியமாந்தர்
கவலையுட் படுகின்றுரென்றதனுக்கே கவல்கின்றேனே. 12

எறியுநீர் வெறிகொள்வேலை மாநிலத்துயிர்களெல்லாம்
வெறிகொள் பூந்துளபமாலை விண்ணவர்கோனை ஏத்த
அறிவிலா மனிசரெல்லா மரங்கமென்றழைப்பராகில்
பொறியில்வாழ் நரகமெல்லாம் புல்லெழுந் தொழியுமன்றே. 13

அத். 9. சு. 17.

வேதம் முதலிய அனைத்துமாயுளன் பகவான் என்பதற்குச் சிலபாசுரங்கள்.

திருச்சந்தவிருத்தம்—

ஆதியாதி யாதிநீ யொரண்டமாதி யாதலால்
சோதியாத சோதிநீ யதுண்மையில் விளங்கினுய்
வேதமாகி வேள்வியாகி விண்ணினேடு மண்ணுமாய்
ஆதியாகி யாயனுய மாயமென்ன மாயமே. 34

பெரியதிருமொழி—

பண்டை நான்மறையும் வேள்வியும் கேள்விப்
 பதங்களும் பதங்களின் பொருளும்
பிண்டமாய் விரிந்த பிறங்கொளி யனலும்
 பெருகிய புனலொடு நிலனும்
கொண்டல் மாருதமும் குரைகடலேழும்
 ஏழுமாமலைகளும் விசும்பும்
அண்டமும் தானுய்நின்ற வெம்பெருமான்
 அரங்கமாநகா ரமர்ந்தானே. V-7-1

அத். 9. சு. 18.

ஈண்டு எம்பெருமான் தன்னிலை விரித்துரைத்தமைக்கு ஏற்றபாசுரங்கள்.

பெரியதிருமொழி—

இந்திரன் பிரமன் னீசனென் றிவர்கள்
 எண்ணில் பல்குணங்களே யியற்றத்
தந்தையுந் தாயும் மக்களும் மிக்க
 சுற்றமும் சுற்றி நின்றகலாப்
பந்தமும் பந்த மறுப்பதோர் மருந்தும்
 பான்மையும் பல்லுயிர்க்கெல்லாம்
அந்தமும் வாழ்வு மாய வெம்பெருமான்
 அரங்கமாநகா ரமர்ந்தானே. V-7-2

கம்பராமாயணம்-யுத்தகாண்டம்-மீட்சிப்படலம்.

பிரமன்துதித்தது—

என்னுருக்கொண் டிவ்வுலகினைப் பூணுதி யிடையே
உன்னுருக்கொண்டு புகுந்து நின்றோம்புதி யுமையோன்
தன்னுருக்கொண்டு துடைத்தி மற்றிது தனியருக்கன்
முன்னுருக்கொடு பகற்செய்யுந் தரத்தது முதலோய். 109

பெரியதிருவந்தாதி—

தாம்பாலாப் புண்டாலு மத்தழும்பு தானிளகப்
பாம்பாலாப் புண்டு பாடுற்றாலும்—சோம்பாதிப்
பல்லுருவை யெல்லாம் படர்வித்த வித்தா! உன்
தொல்லுருவை யாரறிவார் சொல்லு. 18

திருவாய்மொழி—

தானோருருவே தனிவித்தாய் தன்னின் மூவர் முதலாய
வானோர் பலரும் முனிவரும் மற்றும்மற்றும் முற்றுமாய்த்
தானோர் பெருநீர் தன்னுள்ளே தோற்றி யதனுட்கண்வளரும்
வானோர் பெருமான் மாமாயன் வைகுந்தனெம்பெருமானே. I-5-4

அத். 9. சு. 23.

இதன் கருத்தடங்கிய பாசுரங்கள் சில.

முதல் திருவந்தாதி—

தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவந்தானே
தமருகந்த தெப்பேர் மற்றப்பேர்—தமருகந்த
தெவ்வண்ணஞ் சிந்தித்திமையா திருப்பரேல்
அவ்வண்ண மாழியானும். 44

அவரவர் தாந்தாமறிந்தவா றேத்தி
இவரிவ ரெம்பெருமா னென்று—சுவர்மிசைச்
சாத்தியும் வைத்துந் தொழுவருலகளந்த
மூர்த்தி யுருவே முதல். 14

முதலாவார் மூவ ரம்மூவருள்ளும்
முதலாவான் மூரி நீர்வண்ணன்—முதலாய
நல்லானருளால் நாமநீர் வையகத்துப்
பல்லாரருளும் பழுது. 15

நான்காந்திருவந்தாதி—

தேருங்கால் தேவனொருவனே யென்றுரைப்பன்
ஆருமறியா ரவன்பெருமை—ஓரும்
பொருள்முடிவு மித்தனையே எத்தவம் செய்தார்க்கும்
அருள்முடிவ தாழியான் பால். 2

பெரியதிருவந்தாதி—

அவனு மிவ்னு முவனு மற்றும்பர்
அவனு மவனென் றிராதே—அவனும்
அவனே யெனத்தெளிந்து கண்ணனுக்கே தீர்ந்தால்
அவனே யவனேனு மாம். 36

பெரியதிருமொழி—

மைந்நின்ற கருங்கடல் வாயுலகின்றி
வானவரும் யாமுமெல்லாம்
நெய்ந்நின்ற சக்கரத்தன் திருவயிற்றில்
நெடுங்காலம் கிடந்த தோரீர்
எந்நன்றி செய்தாரா ஏதிலோர்
தெய்வத்தை ஏத்துகின்றீர்
செய்ந்நன்றி குன்றேன்மின் தொண்டர்காள்
அண்டனையே ஏத்தீர்களே. XI-6-1

திருவாய்மொழி—

வம்மின் புலவீர்!...............
நும்இன்கவி கொண்டு நும்நும் இட்டா தெய்வமேத்தினல்
செம்மின் சுடர்முடி என்திருமாலுக்குச் சேருமே. III-6-6

அத். 9. சு. 24.

இக்கருத்துடைய செய்யுள்.

கம்பராமாயணம் - ஆரணியகாண்டம் - கவந்தன்துதித்தல்.

"மண்பால் அமரர் வரம்பாரும் காணாத
எண்பால் உயர்ந்த எரிஓங்கு நல்வேள்வி
உண்பாய் நீஊட்டுவாய் நீஇரண்டு மொக்கின்ற
பண்பார் அறிவார் பகராய் பரமேட்டி."

அத். 9. சு. 29.

இதன் கருத்துக்கு ஏற்ற பாசுரங்கள்.

பெரியாழ்வார் திருமொழி—

பொன்னைக்கொண்டு உரைகல்மீதே
நிறமெழ உரைத்தாற்போல்
உன்னைக்கொண்டு என்நாவகம்பால்
மாற்றின்றி உரைத்துக்கொண்டேன்
உன்னைக்கொண்டு என்னுள்வைத்தேன்
என்னையும் உன்னிலிட்டேன்
என்னப்பா! என் இருடீகேசா!
என்னுயிர்க் காவலனே! V-4-5

நான்முகன் திருவந்தாதி—

இன்றாக நாளையே யாக இனிச்சிறிதும்
நின்றாக நின்னருளின் பாலதே—நன்றாக
நானுன்னை யன்றி யிலேன்கண்டாய் நாரணனே!
நீஎன்னை யன்றி இலை. 7

திருவாய்மொழி—

கோவைவாயாள் ....
பூவைவீயா நீர்தூவிப் போதால் வணங்கேனேலுநின்
பூவைவீயா மேனிக்குப் பூசுஞ்சாந்து என் நெஞ்சமே IV-3-1

யானுந் தானா யொழிந்தானை
யாது மெவர்க்கு முன்னோனைத்
தானும் சிவனும் பிரமனு
மாகிப் பணைத்த தனிமுதலைத்
தேனும் பாலும் கன்னலும்
அமுது மாகித் தித்தித்தென்
ஊனில் உயிரில் உணர்வினில்
நின்ற ஒன்றை உணர்ந்தேனே. VIII-8-8

என்னெஞ்சத் துள்ளிருந்திங் கிருந்தமிழ்நூ லிவைமொழிந்து
வன்னெஞ்சத் திரணியனை மார்பிடந்த வாட்டாற்றான்
மன்னஞ்சப் பாரதத்துட் பாண்டவர்க்காய்ப் படைதொட்டான்
நன்னெஞ்சே நம்பெருமான் நமக்கருள்தான் செய்வானே. X-9-6

அத். 9. சு. 30.

இங்கு ஏற்கும் பாசுரங்கள்.

திருமாலை—

அடிமையிற் குடிமையில்லா அயல்சதுப் பேதிமாரில்
குடிமையிற் கடைமைப்பட்ட குக்கரில் பிறப்பரேலும்
முடியினில் துளபம்வைத்தாய் மொய்கழற்கு அன்புசெய்யும்
அடியரை உகத்திபோலும் அரங்கமா நகருளானே. 39

பழுதிலா ஒழுகலாற்றுப் பலசதுப்பேதிமார்கள்
இழிகுலத்தவர்களேலும் எம்மடியார்களாகில்
தொழுமினீர் கொடுமின் கொண்மின் என்று நின்னோடுமொக்க
வழிபட அருளினாய்போல் மதிள் திருவரங்கத்தானே. 42

அழகிய மணவாளதாஸர் திருவரங்கக்கலம்பகம்.

பாதியாய் அழுகியகால் கையரேனும்
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தாரேனும்
ஆதியாய் அரவணையாய் என்பராகில்
அவரன்றோ யாம்வணங்கும் அடிகளாவார்
சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோரேனும்
சதுமறையால் வேள்வியால் தக்கோரேனும்
போதில் நான்முகன் பணியப் பள்ளிகொள்வான்
பொன்னரங்கம் போற்றாதார் புலையர்தாமே.

அத். 9. சு. 31.

பகவத்பக்தன் துராசாரமுடையவனாயினும் கெடாமலிருத்தற்குக் காரணம்.

பெரியாழ்வார் திருமொழி—

தன்னடியார் திறத்தகத்துத் தாமரை
யாளாகிலும் சிதகுரைக்குமேல்
என்அடியார் அதுசெய்யார்
செய்தாரேல் நன்றுசெய்தார் என்பர்போலும்
மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத்
திசைநோக்கி மலர்க்கண்வைத்த
என்னுடைய திருவரங்கர்க்கு அன்றியும்
மற்றொருவர்க்கு ஆளாவரே. 9-3

அத். 10. சு.

இதனை விருத்தவிபூதி ஐஸ்வர்யமென்பர் “ நல்குரவும் செல்வும் நரகும் சுவர்க்கமுமாய், வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமுமாய்ப், பல்வகையும் பரந்தபெருமானார்” என்ற திருவாய்மொழியுள். கம்பநாடரும் இந்திரன்வாயிலாகப் பகவானையே இவ்வாறுவினவினர்.

கம்பராமாயணம் - ஆரண்யகாண்டம் - சரபங்கர் பிறப்புநீங்குபடலம்.

ஒன்றாகி மூலத்துருவம் பலவாகி
உணர்வும் உயிரும் பிறிதாகி யூழி
சென்று சுருங்காலத் தங்கிலைய தாகித்
திறத்துலகந் தானாகிச் செஞ்செவேநின்ற
நன்றாய ஞானத்தனிக்கொழுந்தே எங்கள்
நவைதீர்க்கும் நாயகமே நல்வினையே நோக்கி
நின்றுரைக்காத்தி அயற்பேரைக்காய்தி
நிலையில்லாத் தீவினையும் நீதந்ததன்றே. 30

அத். 10. சு. 9.

பகவத்குணங்களை உள்ளவாறு அநுபவித்துப் பிறர்க்கும் போதிக்கவல்லவர் சுகமுனிவராதியோரே ; சுகர் போதித்தது.

பாகவதம் - சிறப்புப்பாயிரம்—

சுழித்து நல்லமுதொழுகி யஞ்சுகமுகம் சேர்ந்து
தழைத்த நான்மறைத் தடஞ்சினைக் கற்பகத்தருவில்
பழுத்துதிர்ந்தது பரமபாகவத மென்றிசைக்கும்
விழுப்பெருங்கனி நுகர்ச்சியே விரும்புவர் மேலோர்.

பகவத்குணங்களை இசையுடன் கீர்த்தனம்செய்யவல்லோர் நாரதாதி முனிவர்களே; நாரதர் கீர்த்தனம் செய்தது.

சிலப்பதிகாரம் - ஆய்ச்சியர்குரவை—

கதிர்த்திகிரியான் மறைத்த கடல்வண்ணன் இடத்துளான்
மதிபுரையு நறுமேனித் தன்முன்னோன் வலத்துளான்
பொதியவிழ் மலர்க்கூந்தல் பிஞ்ஞைசீர் புறங்காப்பார்
முதுமறைதேர் நாரதனார் முந்தை முறைநரம்புளர்வார். 1

மயிலெருத் துறழ்மேனி மாயவன் வலத்துளான்
பயிலிதழ் மலர்மேனித் தம்முன்னோ னிடத்துளான்
கயிலெருத் தங்கோட்டியநம் பின்னை சீர் புறங்காப்பார்
குயிலுவருள் நாரதனார் கொளைபுணர்சீர் நரம்புளர்வார். 2

அத். 10 சு. 10—இங்குஇயைபுடைய பாசுரம்.

பெரியதிருமொழி—

தாயை நினைந்த கன்றேயொக்க வென்னையும்
 தன்னையே நினைக்கச்செய்து தானெனக்
காயநினைந் தருள்செய்யு மப்பனை
 அன்றிவ்வையக முண்டுமிழ்ந்திட்ட
வாயனை மகரக் குழைக்காதனை
 மைந்தனை மதிட்கோவலிடைகழி
ஆயனை அமரர்க் கரியேற்றை யென்
 அன்பனை யன்றி யாதரியேனே. VII-3-2

அத். 10. சு. 11—இங்கு ஏற்கும் பாசுரம்.

திருமாலை—

சூதனாய்க் கள்வனாகித் தூர்த்தரோ டிசைந்தகாலம்
மாதரார் கயற்கண்என்னும் வலையுட்பட் டழுந்துவேனை
போதரே என்றுசொல்லிப் புந்தியிற்புகுந்து தன்பால்
ஆதரம் பெருகவைத்த அழகனூர் அரங்கமன்றே. 16

அத். 10. சு. 20—இங்கு அநுஸந்திக்கத்தக்க பாசுரம்.

முதல்திருவந்தாதி—

உளன்கண்டாய் நல்நெஞ்சே உத்தமனென்றும்
உளன்கண்டாய் உள்ளுவாருள்ளத்—துளன்கண்டாய்
வெள்ளத்தி னுள்ளானும் வேங்கடத்தின் மேயானும்
உள்ளத்தி னுள்ளா னென்றோர். 96

மூன்றாந்திருவந்தாதி—

இறையாய் நிலனாகி எண்டிசையுந் தானாய்
மறையாய் மறைப்பொருளாய் வானாய்ப்—பிறைவாய்ந்த
வெள்ளத் தருவி விளக்கொலிநீர் வேங்கடத்தான்
உள்ளத்தி னுள்ளே யுளன். 39

அத். 10. சு. 21.

சூரியசந்திரர்களும் தானே என்றருளியதற்கேற்ற பாசுரம்.

திருநெடுந்தாண்டகம்—

இந்திரர்க்கும் பிரமற்கும் முதல்வன்தன்னை
 இருநிலங்கால் தீநீர்விண் பூதமைந்தாய்ச்

செந்திறத்த தமிழோசை வடசொல்லாகித்
திசை நான்குமாய்த் திங்கள் ஞாயிறாகி
அந்தரத்தில் தேவர்க்கும் அறியலாகா
அந்தணனை அந்தணர் மாட்டந்திவைத்த
மந்திரத்தை மந்திரத்தால் மறவாதென்றும் 4
வாழுதியேல் வாழலாம் மடநெஞ்சமே.

அத். 10. சு. 24.

இறைவன் கடலென்றதற்கு ஏற்ற பாசுரம்.

முதல் திருவந்தாதி—

வானாகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய்த்
தேனாகிப் பாலாம் திருமாலே—ஆனாய்ச்சி
வெண்ணெய் விழுங்க நிறையுமே முன்னொருநாள்
மண்ணை யுமிழ்ந்த வயிறு. 92

அத். 10. சு. 26, 27—மேற்கோள்.

பாகவதம்—மாயவன் அமிசாவதாரம் உரைத்த அத்தியாயம் 25.

இறைவனான மால் ஏனமாய் இருநிலமெடுத்தான்
மறைசொல் நாரதனாய்ப் பாஞ்சராத்திரம் வகுத்தான்
விறல்செய் நரநாரணராய்த் தவம்விரித்தான்
உறையுந் தாய்க்கு நற்கபிலனாயத் தத்துவமுரைத்தான்.

அத். 10. சு. 31.

எம்பிரான் தானே கங்கை என்றதற்குப் பாசுரம்.

பெரியாழ்வார் திருமொழி—

ஆமையாய்க் கங்கையாய் ஆழ்
கடலாய் அவனியாய் அருவரைகளாய்
நான்முகனாய் நான்மறையாய் வேள்வியாய்த்
தக்கணையாய்த் தானுமானான்
சேமமுடை நாரதனார் சென்றுசென்று
துதித்திறைஞ்சக் கிடந்தான்கோயில்
பூமருவிப் புள்ளினங்கள் புள்ளரையன்
புகழ்குழறும் புனலரங்கமே. 95

அத். 10. சு. 33.

எழுத்துக்களில் அகரம்தானே என்றதற்கு ஏற்ப,

"அகரமுதல் எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு."

எனத்திருவள்ளுவர் தமது அருமைத் திருக்குறளின் முதற்பாவாக ஓதினர்; தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், மொழிமரபியல் 13-ம் சூத்திரவுரையில் நச்சினர்க்கினியர், "இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவ்வவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்பமுடிந்தாற்போல, அகரம் உயிர்க்கண்ணும் தனிமெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்குமென்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்பமுடிந்தது." "அகரமுதல்" என்னுங்குறளான் அகரமாகிய முதலையுடைய எழுத்துக்களெல்லாம்; அதுபோல, இறைவனாகிய முதலையுடைத்து உலகம் என வள்ளுவனர் உவமை கூறியவாற்றானும் கண்ணன் எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே எனக்கூறியவாற்றானும் பிறநூல்களானும் உணர்க" என விரித்துரைத்துள்ளனர்.

அத். 10. சு. 38.

தண்டனையும் ஞானமும் தானேஎன்றதற்குப் பாசுரம்.

திருவாய்மொழி—

கண்ட இன்பம் துன்பம் கலக்கங்களும் தேற்றமுமாய்த்
தண்டமும் தண்மையும் தழலும் நிழலுமாய்க்
கண்டுகொள்வதற்கரிய பெருமான் என்னையாள்வானூர்
தெண்டிரைப் புனல்சூழ் திருவிண்ணகர் நன்னகரே. V-3-2

அத். 10. சு. 39.

இதன் கருத்துடைய பாசுரங்கள்.

திருச்சந்தவிருத்தம்—

நின்றியங்கும் ஒன்றலா உருக்கள் தோறும் ஆவியாய்
ஒன்றியுட் கலந்துநின்ற நின்னதன்மை இன்னதென்று
என்றும் யார்க்கும் எண்ணிறந்த ஆதியாய் நின்உந்திவாய்
அன்று நான்முகற்பயந்த ஆதிதேவன் அல்லையே! 5

கம்பராமாயணம் - யுத்தகாண்டம் - இரணியன்வதைப்படலம்.

"உலகு தந்தானும் பல்வேறுயிர்கள் தந்தானும் உள்ளுற்(று)
அலைவிலா உயிர்கள்தோறும் அங்கங்கே உரைக்கின்றானும்
மலரினில் வெறியும் எள்ளில் நெய்யுமாய் வழுத்தல் ஒல்லா
அலகில் தொல்புகழும்பற்றி முற்றிய அரிகரண் அத்தா! 120

சாணினுமுளன் ஓர்பெற்றி யணுவினைச் சதகூறிட்ட
கோணினுமுளன் மாமேருக்குன்றினுமுளன் இந்நின்ற
தூணினுமுளன் முன்சொன்ன சொல்லினுமுளன் இத்தன்மை
காணுதி விரைவினென்றான் நன்றெனக்கனகன் சொன்னான். 124

அத். 11. சு. 34.

பாரதப்போர் எம்பெருமானாலேயே புரியப்பட்டது என்றதற்கு ஏற்றபாசுரங்கள்.

திருச்சந்தவிருத்தம்—

பார்மிகுத்த பாரமுன் னொழிச்சுவான் அருச்சுனன்
தேர்மிகுத்து மாயமாக்கி நின்றுகொன்று வென்றிசேர்
மாரதர்க்கு வான்கொடுத்து வையம்ஐவர் பாலதாம்
சீர்மிகுத்த நின்னலாலோர் தெய்வநான் மதிப்பனே! 89

பெரியதிருமொழி—

பாரேறு பெரும்பாரந்தீரப் பண்டு
பாரதத்துத் தூதியங்கப் பார்த்தன்செல்வத்
தேரேறு சாரதியா யெதிர்ந்தார்சேனை
செருக்களத்துத் திறலழியச் செற்றான்தன்னைப்
போரேற்றொன் றுடையானும் அளகைக்கோனும்
புரந்தரனும் நான்முகனும் பொருந்துமூர்போல்
சீரேறு மறையாளர் நிறைந்த செல்வத்
திருக்கோவலூ ரதனுட் கண்டேன்நானே. II-10-8

திருவாய்மொழி—

“மாறுசேர் படைநூற்றுவர் மங்க ஓரைவர்க்கா
யன்று மாயப்போர்பண்ணி
நீறுசெய்த எந்தாய் நிலங்கீண்ட அம்மானே!
தேறு ஞானத்தர் வேதவேள்வியராய்ச் சிரீவரமங்கலநகர்
ஏறி வீற்றிருந்தாய் உன்னை எங்கெய்தக் கூவுவனே.” V-7-4

அத். 11. சு. 38.

பிரளயகாலத்திலும் முத்திதசையிலும் அடையும் ஸ்தானமும் அவனே என்றதற்கு ஏற்ற பாசுரங்கள்.

பெரியதிருமொழி—

மஞ்சாடு வரையேழுங் கடல்களேழும்
வானகமும் மண்ணகமும் மற்றுமெல்லாம்
எஞ்சாமை வயிற்றடக்கி ஆலின்மேலோர்
இளந்தளிரில் கண்வளர்ந்த ஈசன்தன்னைத்

துஞ்சாநீர் வளஞ்சுரக்கும் பெண்ணைத்தென்பால்
தூயநான் மறையாளர் சோமுச்செய்யச்
செஞ்சாலி விளைவயலுள் திகழ்ந்துதோன்றும்
திருக்கோவ லூரதனுள் கண்டேன்நானே. II-10-1

பனிப்பரவைத் திரைததும்பப்
பாரெல்லாம் நெடுங்கடலே யானகாலம்
இனிக்களைகண் இவர்க்கில்லை
என்றுலகம் ஏழினையும் ஊழில்வாங்கி
முனித்தலைவன் முழங்கொளிசேர்
திருவயிற்றில் வைத்தும்மை யுய்யக்கொண்ட
கனிக்களவத் திருவுருவத் தொருவனையே
கழல்தொழுமா கல்லீர்களே. XI-6-4

மண்ணாடும் விண்ணாடும் வானவரும்
தானவரு மற்றுமெல்லாம்
உண்ணாத பெருவெள்ள முண்ணமல்
தான்விழுங்கி யுய்யக்கொண்ட
கண்ணாளன் கண்ணமங்கை நகராளன்
கழல்சூடி யவனை யுள்ளத்
தெண்ணாத மாணிடத்தை யெண்ணாத
போதெல்லாம் இனியவாறே. XI-6-7

திருக்குறுந்தாண்டகம்—

" இம்மையை மறுமைதன்னை எமக்கு வீடாகிநின்ற
மெய்ம்மையை விரிந்தசோலை வியன் திருவரங்கமேய
செம்மையைக் கருமைதன்னைத் திருமலை யொருமையானை
தன்மையை நினைவாரெந்தன் தலைமிசை மன்னுவாரே. 7

திருவாய்மொழி—

வானவ ராதியென்கோ! வானவர் தெய்வமென்கோ!
வானவர் போகமென்கோ! வானவர் முற்றுமென்கோ!
ஊனமில் செல்வமென்கோ! ஊனமில் சுவர்க்கமென்கோ!
ஊனமில் மோக்கமென்கோ! ஒளிமணி வண்ணனையே. III-4-7

அத். 13. சு. 3.

இங்கு தானே க்ஷேத்ரஜ்ஞன் என்று பகவான் கூறியது, ஜீவன் பகவானது சரீரமாதலாலும் தான் சரீரியாதலாலும் என்க. பகவானைவிட்டு ஜீவனும் ஜீவனைவிட்டுப் பகவானும் என்றும் பிரியா திருத்தலாகிய அப்ருதக்ஸித்தத்வத்தாலும், விசேஷண விசேஷ்ய பாவத்தாலுமாம். இக்கருத்துடைய பாசுரங்கள் ;—

திருவாய்மொழி—

எனதாவி யுள்கலந்த பெருநல்லுதவிக் கைம்மாறு
எனதாவி தந்தொழிந்தேன் இனிமீள்வ தென்பதுண்டே
எனதாவி யாவியுநீ பொழிலேழு முண்டவெந்தாய்
எனதாவி யார்யானார் தந்தநீ கொண்டாக்கினையே. II-3-4

அடியேனுள்ளான் உடலுள்ளான்
அண்டத்தகத்தான் புறத்துள்ளான்
படியே இது என்றுரைக்கலாம்
படியனல்லன் பரம்பரன்
கடிசேர் நாற்றத்துள்ளாலை
இன்பத் துன்பக்கழி நேர்மை
ஒடியா இன்பப் பெருமையோன்
உணர்வில் உம்பர் ஒருவனே. VIII-8-2

யானே என்னை அறியகில்லாதே
யானே என்தனதே என்றிருந்தேன்
யானே நீ என்னுடைமையும் நீயே
வானே ஏற்றும் வானவர் ஏறே. II-

தானேயாகி நிறைந்தெல்லா உலகுமுயிருந் தானேயாய்த்
தானேயானென்பானாகித் தன்னைத்தானே துதித்தெனக்குத்
தேனே பாலே கன்னலே அமுதே திருமாலிருஞ்சோலைக்
கோனேயாகி நின்றொழிந்தா னென்னைமுற்றும் உயிருண்டே.
X-7-2

என்னை முற்றும்உயிருண் டென்மாயஆக்கை யதனுட்புகுந்
தென்னை முற்றுந்தானேயாய் நின்றமாய அம்மான்சேர் [யான்
தென்னன் திருமாலிருஞ்சோலைத் திசைகைகூப்பிச் சேர்ந்த
இன்னம்போவேனேகொலோ என்கொலெம்மான் திருவருளே.
X-7-3

அத். 14. சு. 4.

பகவான் தந்தை என்றதற்குப் பாசுரம்.

திருச்சந்தவிருத்தம்—

அத்தனாகி அன்னையாகி ஆளும் எம்பிரானுமாய்
ஒத்தொவ்வாத பல்பிறப்பொழித்து நம்மை ஆட்கொள்வான்
முத்தனார் முகுந்தனார் புகுந்து நம்முள்மேவினார்
எத்தினாலிடர்க் கடல்கிடத்தி ஏழை நெஞ்சமே. 115

திருவாய்மொழி—

ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா
ஒத்தாய் எப்பொருட்கும் உயிராய் என்னைப்பெற்ற
அத்தாயாய்த் தந்தையாய் அறியாதன அறிவித்த
அத்தாநீ செய்தன அடியேன் அறியேனே. II-3-2

அத். 16. சு. 8, 9, 10.

ஆஹாரநியமத்தை வைதிக சாஸ்திரங்கள் பெரிதும் வற்புறுத்தும். சரீரத்தைச் சோற்றுலிட்டசுவர் என்றல் உலகவழக்கு. சரீரமே எல்லாநற்கருமங்களையும் புரிதற்கு உறுதுணையாவது என்பதும் உலகறிந்த உண்மை. நோயற்ற வாழ்க்கையே குறைவற்ற செல்வம். நல்லறிவுக்குக் காரணமாவதும் நல்லுணவே. ராஜபதத்திலிருந்த ஆளவந்தார்க்குத் தூதுவளங்கீரையை உண்பித்துச் சிறந்த அறிவாளராக்கிக் கீதோபதேசஞ்செய்து திருத்தியவர் மணக்கால்நம்பி என்னும் மஹான் என்பது குருபரம்பரையில் கண்ட சரிதம். தேசிகப்பிரபந்தம் - ஆஹாரநியமம் என்னும்பகுதியில் ஆஹாரநியமம் மிகஎளிய தமிழ்நடையில் விரிவாய் விளக்கப்பட்டுள்ளது. உதாரணமாக:—

தேசிகப்பிரபந்தம் - ஆஹாரநியமம்—

“தாதைநல் ஆசிரியன் முதல்தமையன் எச்சில்
தரணி சுரர்சோமத்தில் அருந்தும் எச்சில்
மாதர்கட்குக் கணவன் இதமான எச்சில்
மயிர்புழுநூல் விழுந்தாலும் புனிதமாகும்
மாதவத்துக் கூவிளங்காய் முகவாசத்து
மாதுளங்காய் மரணம்வரின் கழித்தவெல்லாம்
ஓதிவைத்த உண்ணுநாள் உகந்த எட்டும்
உளவன்று கழித்தவற்றி னன்றுமுணே. 12

வாயிலல்லா வாயிலால் வந்தசோறும்
வரகுமுதலாகா தென்றுரைத்தசோறும்
வாயினின்றும் விழுமவைதாம் பட்டசோறும்
வாய்க்கொண்ட கவளத்தின் மிகுந்தசோறும்
தீயவர் கண்படுஞ்சோறும் தீதில்சோறும்
சீரையுரை தும்மலிவை பட்டசோறும்
நாய்முதலானவை பார்க்கும் தீண்டும்சோறும்
நாள்தூய் தல்லாச்சோறும் நண்ணுச்சோறே. 2

பக்திமான்கள் உண்டு கழித்த எச்சில் நன்மைபயக்கும் என்பது இச்செய்யுளால் விசதம்.

வாய்க்குங் குருகைத் திருவீதிஎச்சிலை வாரியுண்ட
நாய்க்கும் பரமபதமளித்தாய் அந்தணாயோடிந்த
பேய்க்கும் பதமளித்தால் பழுதோ பெருமான்மகுடம்
சாய்க்கும்படிக்குக் கவிபாடவல்ல ஞானத்தமிழ்க்கடலே.

அத். 17. சு. 17.

இக்கருத்தமைந்த பாசுரம் - திருமாலை—

திருமறுமார்ப ! நின்னைச் சிந்தையுள் திகழவைத்து
மருவிய மனத்தராகில் மாநிலத்துயிர்களெல்லாம்
வெருவரக்கொன்று சுட்டிட்டீட்டிய வினையரேலும்
அருவினைப் பயனதுய்யார் அரங்கமாநகருளானே. 40

அத். 18. சு. 66.

இதுவே சரமஸ்லோகம் எனப்பெரிதும்போற்றித் தினந்தோறும் அநுஸந்திக்கப்படும். இதற்கு இருவகையாக இராமாநுசர் பாஷ்யம் செய்திருக்கின்றனர். முற்பட்ட உரை:—

"கரும, ஞான, பக்தியோகங்களாகிய தருமங்கள் அனைத்தையும் முன்னே விளக்கியவாறு ஸாத்விகத்யாகம் செய்துவிட்டு, (எனவே அவைகளைப் புரிந்துகொண்டே அவற்றில் கர்த்ருத்வம், பயன் முதலியவற்றை விட்டுவிட்டு), ஒருவனுகிய என்னை ரக்ஷிப்பவனுக (எனவே அக்கருமங்களால் ஆராதிக்கப்பட்டு அவற்றின்பயனைக் கொடுப்பவனுக) அநுஸந்தானம் செய். நான் இவ்வாறு நடந்துவரும் உன்னை எல்லா பாபங்களினின்றும் விடுவிக்கிறேன், சோகப்படாதே.

இரண்டாவது உரை:—

எல்லாத் தருமங்களையும் துறந்திருக்கும் நீ, அல்லது, கீழே கூறியுள்ள கருமயோகம் முதலிய எல்லாத்தருமங்களையும் விட்டு நிற்கும் நீ ஒருவனுகிய என்னை உபாயமாக அடை; நான் உன்னை எல்லாபாவங்களினின்றும் (எனவே, என்னிடம் பக்திசெய்வதற்குத் தடங்கலான எல்லாபாவங்களினின்றும்) விடுவிக்கிறேன்; சோகம் அடையாதே. (விரிவுரை) – கரும, ஞான, பக்தியோகங்களாகிய சிறந்த பிரயோஜனமாகிய வீடுபேற்றிற்குச் சாதனங்களாகிய தருமங்களை எனக்கு ஆராதனமாக பரமப்ரீதியுடன் அவரவர்கள் தத்தம் அதிகார அநுகுணமாக இயற்றிக்கொண்டே முன்னேவிளக்கிய முறையில் அவற்றின் பயன், அக்கருமங்கள், அவற்றை இயற்றுவோனுபிருத்தலாகிய கர்த்ருத்வம் முதலியவற்றை விட்டுவிடுவதனுல் அவற்றைவிட்டு என்னொருவனையே கர்த்தாவாகவும், ஆராதிக்கப்படுகிறவனுகவும், அவற்ருல் எய்தவேண்டும் பயனுகவும், உபாயமாகவும்

அநுஸந்தானம் செய்; இதுவே சாஸ்திரங்களில் விதிக்கப்படுகிற ஸர்வதர்மத்யாகம் என்பது இவ்வத்யாயம் சுலோகம் 4-முதல் 11 வரையிலும் முதலிலேயே நன்கு நிரூபிக்கப்பட்டது. இவ்வாறு நடந்துவரும் உன்னை, என்னை அடைதற்குத் தடங்கலாயும், அநாதி காலமாகத் திரட்டப்பட்டதாயும், எண்ணிறந்தவைகளாயும் இருக்கும் செய்தக்கஅல்லசெய்வதும், செய்தக்கசெய்யாமையும் ஆகிய ஸர்வ பாவங்களினின்றும் விடுவிக்கிறேன்; விசனப்படாதே.

அங்ஙனன்றியே, ஸர்வபாவங்களினின்றும் விடுபட்டவனுயும், பகவானிடத்தில் மிகுந்த பிரீதியுடையவனுயு மிருக்கிற புருஷனுல் பக்தியோகம் இயற்றத்தக்கதாதலின், அதனைத் தொடங்குவதற்குத் தடங்கலான பாவங்கள் கணக்கற்றவைகளாதலாலும் அதற்கு ப்ராயச்சித்தங்களாகிய அற்பகாலங்களில் செய்யப்பட்ட தருமங்களால் அப்பாவங்கள் போக்கக்கூடாதவையாதலாலும், தனக்கு பக்தி யோகத்தை ஆரம்பிப்பதற்குத் தகுதிஇல்லை என்பதை உணர்ந்து துக்கப்படும் அர்ஜுனனுடைய சோகத்தை நீக்கப் பகவான் 'ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம்வ்ரஜ' என்று உபதேசம் செய்கிருர். பக்தியோகத்தைத் தொடங்குவதற்குத் தடங்கலாயும், அநாதிகாலமாகத் திரட்டப்பட்டதாயும், அநேகவிதங்களாயும், கணக்கற்றவைகளாயும் இருக்கிற பாவங்களுக்குத் தக்கபடி அவற்றிற்கு பிராயச்சித்தங்களாகிய க்ருச்ரம், சாந்த்ராயணம், கூச்மாண்ம், வைச்வானரம், வ்ராதபதி, பவித்ரேஷ்டி, த்ரிவ்ருத், அக்னிஷ்டோமம் எனப் பலதிறப்பட்டனவாயும் கணக்கற்றவைகளாயும், சில்வாழ்நாள் உடையோனுகிய உன்னுல்செய்து தலைக்கூட்ட அரியவைகளுமான எல்லாத்தருமங்களையும் விட்டுவிட்டு, பக்தியோக ஆரம்பம் நிலைபெறுவதற்கு கருணை மிக்குடையோனுகவும் வேற்றுமை சிறிதும் கருதாது எல்லாஉலகங்கட்கும் சரண்யனுகவும், தன்னைக் கிட்டியவர்களிடத்து வாத்ஸல்யத்திற்கு ஸமுத்ரமாகவுமிருக்கிற என்னொருவனையே சரணமாக அடை; நான் உன்னைக் கீழேகூறிய பக்தியோக ஆரம்பத்திற்குத் தடங்களாகிய எல்லாபாவங்களினின்றும் விடுவிக்கிறேன்; நீசோகப்படாதே.

பிறகுறிப்புகள் முற்றும்.

அநுபந்தம் 1.

பரமகாருணிகரான ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த நிகமனப்படி.

“ஸ்ரீமத் க்ருஷ்ண ஸமாஹ்வாய
நமோ யாமுன ஸூநவே
யத்கடாக்ஷைக லக்ஷ்யாணாம்
ஸுலபஶ் ஸ்ரீதரஸ்ஸதா.”

சரமஶ்லோக ப்ரகரணம்.

சரமஶ்லோகம் இரண்டுவாக்யமாய் பதினொருபதமாய் முப்பத்திரண்டு திருவக்ஷரமாயிருக்கும்; எங்ஙனேயென்னில்?

“ஸர்வதர்மாந் பரித்யஜ்ய
மாம் ஏகம் சரணம் வ்ரஜ,
அஹம் த்வா ஸர்வபாபேப்ய:
மோக்ஷயிஷ்யாமி மாஶுச:”

என்று இரண்டுவாக்யமாயிருக்கும்; ‘ஸர்வதர்மாந்’ என்றும், ‘பரித்யஜ்ய’ என்றும், ‘மாம்’ என்றும், ‘ஏகம்’ என்றும், ‘சரணம்’ என்றும், ‘வ்ரஜ’ என்றும், ‘அஹம்’ என்றும், ‘த்வா’ என்றும், ‘ஸர்வபாபேப்ய’ என்றும், ‘மோக்ஷயிஷ்யாமி’ என்றும், ‘மாஶுச:’ என்றும் பதினொருபதமாயிருக்கும்.

‘ஸர்வதர்மாந்’ என்கையாலே, இதர உபாயங்களைச்சொல்லி,

‘பரித்யஜ்ய’ என்கையாலே, இதரோபாய நிவ்ருத்தியைச் சொல்லி,

‘மாம்’ என்கையாலே, ஸம்யக்கான உபாயம்சொல்லி,

‘ஏகம்’ என்கையாலே, உபாய நைரபேக்ஷ்யம்சொல்லி,

‘சரணம்’ என்கையாலே, உபாயத்வம்சொல்லி,

‘வ்ரஜ’ என்கையாலே, உபாய ஸ்வீகாரம்சொல்லி,

‘அஹம்’ என்கையாலே, தன்னுடைய ஸர்வசக்தித்வம் சொல்லி,

‘த்வா’ என்கையாலே, உபாய ஸ்வீகாரம்பண்ணின அதிகாரி ஸ்வரூபம்சொல்லி,

‘ஸர்வபாபேப்ய:’ என்கையாலே, ப்ராப்ய ப்ரதிபந்தகங்களைச் சொல்லி,

‘மோக்ஷயிஷ்யாமி’ என்கையாலே ப்ராப்ய ப்ரதிபந்தக நிவ்ருத்தியைச்சொல்லி,

‘மாஶுச:’ என்கையாலே, நிர்பரத்வாநுஸந்தானம்சொல்லித் தலைக்கட்டுகிறது.

சரமஶ்லோகத்துக்குத் தாத்பர்யார்த்தம் எது? வாக்யார்த்தம் எது? ப்ரதானார்த்தம் எது? அநுஸந்தானார்த்தம் எது? என்னில்,

தாத்பர்யார்த்தம் :—சரண்யருசி பரிக்ரிஹீத்வம்;

வாக்யார்த்தம் :—ப்ராபக ஸ்வரூப நிரூபணம்;

ப்ரதானார்த்தம் :—ஈஶ்வர ஸ்வரூப நிரூபணம்;

அநுஸந்தானார்த்தம் :—நிர்பரத்வாநுஸந்தானம்சொல்லித் தலைக் கட்டுகிறது.

ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அநுபந்தம் 2.

ஸ்ரீ உலகாரியன் அருளிச்செய்த முமுக்ஷுப்படி.

" லோகாசார்யாய குரவே
க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே
ஸம்ஸாரபோகி ஸந்தஷ்ட
ஜீவ ஜீவாதவே நம: "

" வாழி யுலகாசிரியன் வாழியவன் மன்னுகுலம்
வாழி முடும்பையென்னு மாநகரம்—வாழி
